தரம்

# 12

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)




சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**தேசிய கல்வி நிறுவகம்**

மஹரகம, ஸ்ரீ லங்கா

**Web**| www.nie.lk **Email**| info@nie.lk

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 12

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

கிறிஸ்தவம்

தரம் 12

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2017

தேசிய கல்வி நிறுவகம்

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி மாபுல்கொட சுமனரதன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனை** : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாளர்** : அருட்பணி. N. காமினி பெரேரா இ.ச.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.
அருட்பணி. எஸ். அந்திரியாஸ் ஏ. பர்ணாந்து அ.ம.தி.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாளர் குழு** :

- திருமதி. எஸ்தர் பத்மினி பெரேரா, முதுமாணி,
  ஆசிரிய ஆலோசகர், களனி வலயம்.
- திரு. எஸ். ஜீ. கே. டி. எல். சீ. பிரசாத். முதுமாணி
  உப அதிபர்,
  தூய ஜோசப் ஆண்கள் பாடசாலை, கொழும்பு -14.
- திரு. டப்ளியு.ஜே.பி.ஜே.எம்.டி. பெரேரா
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம்,
  கொழும்பு - 13.
- அருட்சகோதரி. நிமல்கா
  ஆசிரியர்,
  தூய ஜோசப் ஆண்கள் பாடசாலை, நுகேகொட.
- திருமதி. எல். நிலந்தி டீ சில்வா
  மெதடிஸ் மகா வித்தியாலயம்,
  மொறட்டுவ.
- திருமதி. றாடீகா சமந்தி மென்டிஸ்
  தூய தோமஸ் வித்தியாலயம்,
  மௌண்லவெனியா.
- அருட்பணி. ஜுட் தஸநாயக்க, முதுமாணி
  விரிவுரையாளர்,
  கல்வியியற் கல்லூரி, பிங்கிரியா.
- திருமதி. நிமாலி பெரேரா
  தூய லோறன்ஸ் மடம்,
  கொழும்பு -6.
- செல்வி. டி. ஐ. ஜோசப்,
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், கொழும்பு
- செல்வி. பிரான்சிஸ்கா ராஜயோகினி, முதுமாணி,
  தூய ஜோசப் பெண்கள் பாடசாலை, கொழும்பு – 14.
- செல்வி. ஏஞ்சல் மேரி
  ஆசிரியை, புனித அந்தோனியார் மகளீர் மகா வித்தியாலயம்,
  கொழும்பு 13.

## ஆலோசகர் குழு

- அதிமேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
  தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலியக் கல்வி ஆயர் மன்ற ஆணைக்குழு
- அதிமேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை
  உப தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலியக் கல்வி ஆயர் மன்ற ஆணைக்குழு
- அருட்பணி. ஐவன் பெரேரா
  தேசிய பணிப்பாளர், கத்தோலிக்க பாடசாலைகள்.
- வண. தயா செல்டன் வெலிக்கட ஆராட்சி,
  பணிப்பாளர், தூய யோசேவாஸ் இறையியல் கல்விகம்,
  பொரளை.
- அருட்பணி. ஜோர்ச் எல். பெர்னான்டோ,
  உதவிக் கல்விப் பணிப்பாளர்,
  சமய பிரிவு – கல்வி அமைச்சு.
  இசுருபாய.
- அருட்பணி. கிறிஸ்தோப்பர் பால்ராஜ்
  அதிபர்,
  தூய தோமஸ் கல்லூரி,
  பண்டாரவளை.
- அருட்பணி. டப்லியு. பி. எபநேசர் ஜோசப்
  பொதுச்செயளாலர் - இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்
  கொழும்பு - 07
- பேராசிரியர். சேர்லி லால் விஜேசிங்க,
  விரிவுரையாளர்,
  களனி பல்கலைக்கழகம்
- அருட்பணி. பியல் ஜானக பர்னாந்து
  தேசிய பணிப்பாளர், திருவிவிலிய, மறைக்கல்வி, கல்வி ஆணைக்குழு

**அலுவலக உதவி** திரு. டயஸ் அமரசிங்க. தேசிய கல்வி நிறுவகம்
திருமதி. எஸ். சீ. பிரியதர்சினி. தேசிய கல்வி நிறுவகம்

**கணினி அமைப்பு** செல்வி. தயானா மோசேஸ். தேசிய மறைகல்வி நடுநிலையம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | **iv-v** |
| பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | vi |
| கலைத்திட்டக் குழு | **vii-viii** |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | **x** |
| தேசிய இலக்குகள், அடிப்படைத் தேர்ச்சிகள் | **xi-xii** |
| பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | **xiii** |
| அறிமுகம் | **xiv** |
| பாடத்திட்டம் | **xv-xxiii** |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல் | **1-164** |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுரைகள்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாடப் பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளைப் பயன்படுத்துங்கள்.
- மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரித்து குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினைத் தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும், பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும், பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தைச் செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தைத் தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றிப் பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாகப் பெற்றோர்களுக்கும், முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**சமயத்துறை - கத்தோலிக்க திருமறை**

**தேசிய கல்வி நிறுவகம்.**

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏறபடுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

## 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

## 5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

## 6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

## 7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. தமது வாழ்வை உருவாக்க திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வார்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனைப் படைத்தவரை அறிந்துக் கொள்வார்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வார்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகர்வார்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வார்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வார்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பார்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பைப் பரப்புவார்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனைப் பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவார்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவார்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவார்.
12. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வார்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவார்.
2. இறைவெளிப்பாட்டை தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வார்.
3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வார்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வார்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வார்.

# அறிமுகம்

சிறந்த பண்பாடுள்ள நல்லொழுக்க நெறிகளைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதே ஒவ்வொரு சமுதாயத்தினதும் குறிக்கோளாகும். இக் குறிக்கோளை நிறைவேற்ற ''மறை'' பாரிய பணியினை ஆற்றிவருகின்றது. சமய அடிப்படையில் வாழும் ஒவ்வொருவரும் தனது வாழ்வில் சிறந்த ஒழுக்க விழுமியங்கள் பழக்க வழக்கங்களை தன்னகத்தே கொண்டவராக விளங்குவர். சமய போதனையை வழங்கி அதன் அடிப்படையில் வாழ்க்வைக் கட்டி எழுப்பும் மனித சமூகத்தினை உருவாக்குவதில் மறைக்கல்வியின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

பாடசாலைக் கலைத்திட்டத்தின் படி, உள்ளடக்கப்பட்ட பாடங்களிலே மனித வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்குவது மறைக்கல்வியே ஆகும். ஏனெனில் மறைக் கல்வியில் கற்பிக்கப்படுவது, எவ்வாறு வாழ்வினை வெற்றிக் கொள்வது என்பதை விட எளிமையான வாழ்க்கை முறையினைக் கட்டியெழுப்பி வழக்கப்படுத்திக் கொள்வது எவ்வாறு என்பதனையே ஆகும். அவ்வாறான வாழ்க்கை நெறியின் மூலம் கிடைக்கும் பலன்கள் இவ்வுலக வாழ்வை விட நாம் நம்பியிருக்கும் நித்திய வாழ்விற்கான தேவையாக அமையும்.

கத்தோலிக்கரான எமது மறையானது கத்தோலிக்க மறையாகும். இம் மறையினை 11 வருடங்கள் கற்று 12ம் தரத்திலே கிறிஸ்தவ நெறியினை கற்பதற்கு பிரவேசிக்கும் மாணவ மாணவிகளுக்கு இம்மறை தொடர்பாக மேலும் பல விடயங்களை கற்பதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இங்கே கிறிஸ்தவ மறையானது முதல் 11 ஆண்டுகளாக கற்றதனை விட ஆழமான முறையில் கற்பதற்கு க.பொ.த உயர்தர கற்கை நெறிக்கு உட்பிரவேசிக்கும் மாணவ மாணவிகளுக்கு அரிய வாய்ப்பாக அமைகிறது.

இக் குறிக்கோளினை நிறைவு செய்யும் நோக்கோடு இப் பாடநெறியானது அமைக்கப்பட்டுள்ளது. இப் பாடப் பரப்பினூடாக 10 தேர்ச்சிகளின் கீழ் 30 தேர்ச்சி மட்டங்கள் நிரல் படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 15 தேர்ச்சி மட்டங்கள் 5 தேர்ச்சிகளின் கீழ் 12ஆம் தரத்திலும் ஏனைய 15 தேர்ச்சி மட்டங்கள் 5 தேர்ச்சிகளின் கீழ் 13ம் தரத்திலும் கற்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

க.பொ.த உயர் தர வகுப்புகளுக்கு உட்பிரவேசிக்கும் கட்டிளமைப் பருவத்தில் இருக்கும் மாணவ மாணவிகள் தமது வாழ்க்கையின் ஊடாக கிறிஸ்துவிற்கு சான்று பகர, சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி கொண்டு, கிறிஸ்து மைய வாழ்வினை வாழ்வதற்கு உயர்தர மறைக்கற்கை நெறியின் ஊடாக வழி சமைக்கப்படுகின்றது.

**பாடத்திட்டம்**

**1.** 1.0 **:** திருவிவிலிய மதிப்பீடுகளைத் தமதாக்கிக் கொள்வரர்.

1.1 : திருவிவிலியத்தின் மேன்மையை உணர்ந்து இனங்கண்டு உரிய மரியாதையோடு பயன்படுத்துவார்.

1.2 : புவியியல் வரலாற்றுப் பின்னணிகள் திருவிவிலியத்தை மொழிபெயர்க்க உதவின என்பதை ஏற்றுக்கொள்வார்.

2. 2.0 : இறை வெளிப்பாட்டிற்கேற்ப வாழ்வார்.

2:1 **:** பாரம்பரியங்கள் ஐந்நூலை மொழிபெயர்க்க பயன்பட்டன என்பதை விளங்கிக் கொள்வர்.

2.2 : வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட இறையியல் படிப்பினைகளை வாழ்க்கைக்கு உரியதாக்கிக் கொள்வார்.

2:3 : குலமுதுவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி வாழ்வர்

2:4 : அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிப்பதற்கு விடுதலைப் பயண நிகழ்வை ஆதாரமாகக் கொள்வர்.

2.5 : சீனாய் உடன்படிக்கையின் படி வாழ்வர்.

**3.** 3.0 **:** ஞானத்தில் நிறைவுபெற்று இறைவாக்கினராக சான்று பகர்வரர்.

3.1 : பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் என்ற எண்ணக் கருவினூடாக தமது வாழ்வில் ஒளி ஏற்றுவார்.

3.2 : இறைவாக்கினர் அழைப்பினை மறுப்பின்றி ஏற்று வாழ்வார்.

3.3 : வாழ்வைச் சீரிய முறையில் நெறிப்படுத்துவதற்கு ஞான இலக்கியங்களின் வழிகாட்டலைப் பெறுவார்.

**4.** 4.0 : கிறிஸதுவே உலகிற்கு விடுதலை அளிப்பவர் என்பதை ஏற்று, அவருக்குச் சான்று பகர்வார்.

4:1 **:** புதிய ஏற்பாட்டுப் பின்னணியூடாக நற்செய்தி நூல்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.

4.2 **:** நற்செய்தி, திருத்தூதர் பணி நூல்களைப் பற்றி அறிந்து கிறிஸ்தவ விழுமியங்களை பரப்புவதில் பங்கேற்பார்.

4:3 : தூய பவுல் அடியாரைப் பின்பற்றி மறைதூதுப் பணியில் ஈடுபடுவார்.

**5.** 5.0 **:** கிறிஸ்தவ படிப்பினைகளால் ஊட்டம் பெற்று இறையாட்சியில் பங்குதாரர் ஆவார்.

5.1 : இறையாட்சியின் விழுமியங்களை தமதாக்கிக் கொள்வர்.

5:2 : தூய பவுல் அடியாரின் இறையியல் படிப்பினைகளுக்கமைய வாழ்வைக் கட்டியெழுப்புவார்.

கிறிஸ்தவ மறை - தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 திருவிவிலிய மதிப்பீடுகளை தமதாக்கிக் கொள்வார் | 1.1 திருவிவிலியத்தின் மேன்மையை உணர்ந்து இனங்கண்டு உரிய மரியாதையோடு பயன்படுத்துவார். | • அறிமுகம்<br>• திருவிவிலியத்தின் பெயர்களைப் பற்றிய விளக்கம்.<br>• எழுதப்பட்ட மொழிகள்<br>• நூல்களின் முக்கியத்துவம்<br>• மசோரடிக், செப்துவாஜின்ற், வல்கேற்.<br>• இறைவெளிப்பாடு<br>• இறை ஊக்கம்<br>• ஆசிரியத்துவம் | • திருவிவிலியம் தொடர்பான பிரதான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• திருவிவிலியம் இறைவார்த்தை என்பதனை ஏற்றுக் கொள்வார்.<br>• திருவிவிலியம் தொடர்பாகத் திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• திருவிவிலியத்தை மரியாதையுடன் பயன்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• ஒற்றுமையாக இறைவார்த்தையினை கற்றுக்கொள்வார். | 15 |
| | 1.2 புவியியல், வரலாற்றுப் பின்னணிகள் திருவிவிலியத்தை மொழி பெயர்க்க உதவின என்பதை விளங்கிக் கொள்வார். | • புவியியல் பின்னணி (பாலஸ்தீனா)<br>• வரலாற்று பின்னணி<br>விடுதலைப் பயணம்,<br>நீதித்தலைவர்கள்<br>அரசர்கள்<br>இரு அரசாக பிரிதல்<br>அசீரியா அடிமைத்தனம்<br>பபிலோனியா அடிமைத்தனம்<br>பேர்சியா யுகம்<br>கிரேக்கம் யுகம்<br>உரோமைப் பேரரசு | • திருவிவிலியத்தின் புவியியல், வரலாற்றுப் பின்னணி தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• நம்பிக்கையுடன் திருவிவிலியத்தைக் கற்க வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்வார்.<br>• திருவிவிலியத்தின் புவியியல், வரலாற்றுப் பின்னணி தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• வரலாற்றில் செயற்பட்ட இறைவன் இன்றும் எதிர்காலத்திலும் உடன் இருந்து செயலாற்றுவார் என்பதை நம்புவார்.<br>• ஒருவர் ஒருவருடைய வாழ்வில் இறைவன் செயலாற்றுவதை இனங்காண பிறரைத் தூண்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 இறை வெளிப்பாட்டிற்-கேற்ப வாழ்வார். | 2.1 பாரம்பரியங்கள் ஐந்நூலை மொழிபெயர்க்க பயன்பட்டன என்பதை விளங்கிக் கொள்வார். | • JEDP பாரம்பரியங்கள்<br>• பாரம்பரியங்களின் அறிமுகம்<br>• ஐந்நூல்களின் உள்ளடக்கம்<br>• முக்கிய பண்புகள் முன்வைக்கும் அறநெறி கோட்பாடுகள் | • ஐந்நூலில் அடங்கியுள்ள 4 பாரம்பரியங்கள் தொடர்பான தகவல்களைக் கோவைப் படுத்துவார்.<br>• இறைவனைப் பல்வேறு வழிகளினூடாக அனுபவிக்க முடியும் என்பதனை ஏற்றுக் கொள்வார்.<br>• ஐந்நூலின் 4 பாரம்பரியங்கள் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• அன்றாட வாழ்வில் இறை சட்டங்களைக் கடைப்பிடிக்கத் முயற்சிப்பார்.<br>• நேர்மையான வாழ்வு வாழ பிறருக்கு வழிகாட்டுவார். | 15 |
| | 2.2 வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட இறையியல் படிப்பினைகளை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்வார். | • வரலாற்றுக்கு முற்பட்ட காலம் அறிமுகம்<br>• உலகப் படைப்பு, மனித படைப்பு தொடர்பான இரு கதைகள்.<br>(தொநூ 1: 1- 2: 4அ - 2: 4ஆ- 2:5)<br>மனிதனின் வீழ்ச்சி - 4 கதைகள்<br>(தொநூ. 3, 4 , 6: 1-9 17, 11: 1-9) | • வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• சோதனைகளை வெற்றிகொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• உலகின் தொடக்கம், அதன் பரிணாம வளர்ச்சியினூடாக பிரதிபலிக்கும் இறை அன்பை உணர்வார்.<br>• தீய சக்திகளை வெற்றி கொள்ள ஏனையோருக்கு வழிகாட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.3 குலமுதுவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி வாழ்வார். | • குலமுதுவர் காலம்<br>• ஆபிரகாமின் அழைப்பு தொநூ 12:1-6<br>• உடன்படிக்கை தொநூ 15:1-21 - 17:1-14<br>• நம்பிக்கை தொநூ 12:24<br>• ஈசாக்கின் அழைப்பு தொநூ 21:2-5<br>• உடன்படிக்கை புதுப்பிக்கப்படல் தொநூ 26:19-25<br>• யாக்கோப்பின் அழைப்பு<br>• உடன்படிக்கை புதுப்பிக்கப்படல் தொநூ 28:10-22<br>• வாழ்க்கை மாற்றம் தொநூ 32:22-30 தொநூ 33:3 | • குலமுதுவர்கள் காலம் தொடர்பான தகவல்களை கோவைப்படுத்துவார்.<br>• குலமுதுவர்களின் வாழ்வினை முன்மாதிரியாக கொண்டு, வாழ வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• குலமுதுவர்கள் காலம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• இறை அழைப்பிற்கு ஏற்ப பதில் அளிப்பார்.<br>• இறைதிட்டத்தினூடாக வாழ்க்கை மாற்றத்தினை உணர பிறருடன் ஒத்துழைப்பார். | 20 |
| | 2.4 அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிப்பதற்கு விடுதலைப் பயண நிகழ்வை ஆதாரமாகக் கொள்வார். | • எகிப்திய அடிமைத்தனமும் மோசேயின் பிறப்பும் விப அதி 1, 2<br>• மோசேயின் அழைப்பு விப 3:1-4: 17<br>• பத்து வாதைகள் விப 7:14-10:29, 12:29-36<br>• யூத பாஸ்கா விழா விப 12:1-28<br>• செங்கடலைக் கடத்தல் விப 14:1-31<br>• மேகத்தூண்,நெருப்புத்தூண்விப 13:21-22<br>• பாலைவனத்தில் பயணம்<br>• மாரா - விப 15:22-25,<br>• சின் பாலைவனம் விப அதி 16<br>• மாசா மெரிபா விப 17:1-7 எண்20:1-13<br>• வெண்கலப்பாம்பு எண் 21:4-5<br>• படையெடுப்புகளில் இருந்து பாதுகாப்பு பெறல் விப 17:8-13 | • விடுதலைப் பயணம் தொடர்பான தகவல்களை கோவைப்படுத்துவார்.<br>• நம்பிக்கையினூடாக இறை அன்பு, அரவணைப்பினை உணர முடியும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• விடுதலைப் பயணம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• அன்றாட வாழ்வினூடாக இறை பராமரிப்பினை உணருவார்.<br>• பிறரின் பாதுகாப்பிற்காகப் பாடுபடுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.5 சீனாய் உடன்படிக்கையின் படி வாழ்வார் | • சீனாய் உடன்படிக்கை விப அதி 20-24<br>• அறிமுகம்<br>• முக்கியத்துவம்<br>• உறுதிப்படுத்துதல்<br>• பத்துக்கட்டளைகளின் பண்புகள் | • சீனாய் உடன்படிக்கை தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• ஒரே இறைவனை மட்டும் ஆராதிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• சீனாய் உடன்படிக்கை தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• பத்துக் கட்டளைகளின்படி வாழ்வார்.<br>• பத்துக்கட்டளைகளின் படிப்பினையின்படி சகோதர அன்புடன் வாழ்வார். | 15 |
| 3.0 ஞானத்தில் நிறைவு பெற்று இறைவாக்கினராக சான்று பகர்வார். | 3.1 பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் என்ற சிந்தனையின் ஒளியில் தமது வாழ்வில் ஒளி ஏற்றுவார். | • அறிமுகம் (இறைவாக்கினர் என்பவர் யார்?)<br>• வகைப்படுத்தல்<br>• முக்கிய 3 கருப்பொருள்கள்<br>– ஒரே கடவுள் கொள்கை<br>– ஒழுக்கம்<br>– மெசியா பற்றிய எண்ணக்கரு<br>(2 சாமு 7:10-17, எசா 7:10-17, 9:1-17 , 11:1-9, மீக் 5:1-4, செக் 9:9-15) | • இறைவாக்கினரின் போதனை தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• இறைவாக்கினரைப்போல செயல்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• இறைவாக்கினர்களின் போதனைகள் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• இறைவாக்கினர்களின் பிரதான படிப்பினைகளை தமது வாழ்வாக்கிக் கொள்வார்.<br>• நன்நெறிமிக்க வாழ்க்கைக்கு பிறருடைய எடுத்துக்காட்டுக்களை முன்வைப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.2 இறைவாக்கினர் அழைப்பினை மறுப்பின்றி ஏற்று வாழ்வார். | • இறைவாக்கினர் எசாயா<br>• அறிமுகம்<br>• அழைப்பு<br>• முக்கிய படிப்பினை<br>• இறைவாக்கினர் எரேமியா<br>• அறிமுகம்<br>• அழைப்பு<br>• முக்கிய படிப்பினை<br>• இறைவாக்கினர் எசேக்கியேல்<br>• அறிமுகம்<br>• அழைப்பு<br>• முக்கிய படிப்பினை<br>• இறைவாக்கினர் ஆமோஸ், ஒசேயா<br>• அறிமுகம்<br>• முக்கிய படிப்பினைகள் | • இறைவாக்கினர் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br>• இன்றைய சமுதாயத்தில் இறைவாக்கினர்களாக இறைவார்த்தையைப் போதிக்கவேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• இறைவாக்கினர் தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• இறைவாக்கினரின் போதனைகளினூடாக தமது வாழ்வினை அமைத்துக் கொள்வார்.<br>• இறைவாக்கினர்களின் வழிகாட்டலின் படி ஏனையோரை நெறிப்படுத்துவார். | 20 |
| | 3.3 வாழ்வைச் சீரிய முறையில் நெறிப்படுத்து-வதற்கு ஞான இலக்கியங்களின் வழிகாட்டலைப் பெறுவார். | • ஞான இலக்கியம் அறிமுகம்<br>• திருப்பாடல்<br>– அறிமுகம்<br>– திருப்பாடலின் வகைகள்<br>– வழிபாட்டில் பயன்பாடு | • ஞான இலக்கியம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br>• நன்மை தீமையைப் பகுத்தறிந்து நன்மையை மாத்திரம் செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• ஞான இலக்கியம் தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• திருப்பாடல்களை அடிப்படையாகக் கொண்ட செபத்தினால் வாழ்வைப் வளமாக்கிக் கொள்வார்.<br>• ஞானம் நிறை சமூகத்தினைக் கட்டி-யெழுப்ப ஒத்துழைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
| --- | --- | --- | --- | --- |
| 4.0 கிறிஸ்துவே உலகிற்கு விடுதலை அளிப்பவர் என்பதை ஏற்று, அவருக்குச் சான்று பகர்வார். | 4.1 புதிய ஏற்பாட்டுப் பின்னணியினூடாக நற்செய்தி நூல்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார். | • புதிய ஏற்பாட்டின் அரசியல் பின்னணி<br>• புதிய ஏற்பாட்டின் சமூக பின்னணி<br>• புதிய ஏற்பாட்டின் சமய பின்னணி | • புதிய ஏற்பாட்டின், அரசியல், சமூக, சமய பின்னணி தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• புதிய ஏற்பாட்டில் அரசியல், சமூக, சமய பின்னணி தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• புதிய ஏற்பாட்டின் அரசியல், சமூக, சமய பின்னணியயினூடாக புதிய ஏற்பாட்டிற்கு வரைவிலக்கணம் கொடுப்பார்.<br>• தனது பதவியினை பிறரின் நலனுக்காக பயன்படுத்துவார். | 20 |
| | 4.2 நற்செய்தி, திருத்தூதர் பணி நூல்களைப் பற்றி அறிந்து கிறிஸ்தவ விழுமியங்களைப் பரப்புவதில் பங்கேற்பார். | • நற்செய்தி நூல்கள் எழுத்துரு பெற்றமை தொடர்பான சுருக்கமான அறிமுகம் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்).<br>  • ஆசிரியத்துவம்<br>  • காலம், இடம்<br>  • நோக்கம்<br>  • சமகால பிரச்சினைகள்<br>• சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகள் | • நற்செய்தி, திருத்தூதர்பணி தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• நற்செய்தியை போதிக்க அயராது பாடுபட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• நற்செய்தி, திருத்தூதர்பணி தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • திருத்தூதர்பணி அறிமுகம்<br>• ஆசிரியத்துவம்<br>• காலம், இடம்<br>• முக்கிய பண்புகள் | • நற்செய்தி ஒளியில் தமது வாழ்வை அமைத்துக்கொள்வார்.<br>• தமது வாழ்வை பிறருக்கு நற்செய்தி யாக்குவார். | |
| | 4.3 தூய பவுல் அடியாரைப் பின்பற்றி மறைத்தூதுப் பணியில் ஈடுபடுவார். | • தூய பவுல் பற்றிய அறிமுகம்<br>• தூய பவுலின் மறைத்தூதுப் பயணங்கள்<br>• தூய பவுலின் திருமுகங்களின் வகைகள் | • தூய பவுலின் மறைத்தூதுப் பணி பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• தூய பவுலின் வாழ்க்கை முன்மாதிரிகையினூடாக மறைத் தூதுப்பணிக்கு அயராது உழைக்க வேண்டும் என உணர்வார்.<br>• தூய பவுலின் மறைத்தூதுப் பணி பற்றி சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• தமது வாழ்வுச் சான்றினூடாக மறைப்போதகராக திகழ்வார்.<br>• மறை பகிர்வினூடாக ஏனையோரை இறையாட்சிக்கு அழைத்துச் செல்வார். | 20 |
| 5.0 கிறிஸ்தவ படிப்பிகைளினால் ஊட்டம் பெற்று இறையாட்சியில் பங்குதாரர் ஆவார். | 5.1 இறையாட்சியின் விழுமியங்களை தமதாக்கிக் கொள்வார். | • மத்தேயு நற்செய்தி பற்றிக் கற்றல்.<br>• இயேசுவின் போதனைகள் ஐந்து<br>- மத் அதி 5-7, 10, 13, 18, 24-25)<br>- மத் 13, 24-25 (விரிவாக) | • மத்தேயு நற்செய்தி தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.<br>• இறையாட்சி மதிப்பீடுகளுக்கு ஏற்ப வாழ வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்வார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • இயேசு ஆற்றிய புதுமைகளின் வகைகள்<br>• குணமளித்தல்.<br>- மத் 8:14-17<br>• அசுத்த ஆவிகளை விரட்டுதல்<br>- மத் 8:28-34<br>• இயற்கையைக் கட்டுப்படுத்தல்<br>- மத் 8:23-27<br>• இறந்தோரை உயிர்ப்பித்தல்<br>- மத். 9:18-19, 23-26<br>• கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, காட்சி கொடுத்தல்<br>மத் 26, 27, 28 | • மத்தேயு நற்செய்தி தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• இறையாட்சி மதிப்பீடுகளை அடை-வதற்காக எதிர்கொள்ளும் துன்ப வேதனைகளை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொள்வார்.<br>• இறையாட்சிப் பேறுகளை அடைவதற்கு பிறருடன் ஒத்துழைப்பார். | |
| | 5.2 தூய பவுலின் இறையியல் படிப்பினைகளுக் - கமைய வாழ்வைக் கட்டியெழுப்புவார் | • தூய பவுலின் முக்கிய படிப்பினைகள்<br>• அன்பு 1கொரி 13<br>• தாழ்மை பிலி 2: 5-11<br>• குடும்ப வாழ்வு எபே 5:22-6:4 | • தூய பவுலின் முக்கிய படிப்பினை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br>• தாழ்மையாக வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• தூய பவுலின் முக்கிய படிப்பினைகள் தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• அன்பின் பண்புகளில் தமது வாழ்வை அமைத்துக் கொள்வார்.<br>• குடும்பத்தில் அன்பு, ஒற்றுமையுடன் வாழ்வார். | 20 |

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**தேர்ச்சி 1.0 :** திருவிவிலிய மதிப்பீடுகளைத் தமதாக்கிக் கொள்வரர்.

**தேர்ச்சி மட்டம் 1.1 :** திருவிவிலியத்தின் மேன்மையை உணர்ந்து இனங்கண்டு உரிய மரியாதையோடு பயன்படுத்துவார்.

**பாடவேளை : 15**

**கற்றல் பேறுகள் :**

- திருவிவிலியம் தொடர்பான பிரதான தகவல்களைக் கோவைப்படுத்துவார்
- திருவிவிலிய இறைவார்த்தையில் நம்பிக்கை வைப்பார்.
- திருவிவிலியம் தொடர்பாக திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- திருவிவிலியத்தை மரியாதையுடன் பயன்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஒற்றுமையுடன் இறைவார்த்தையினை ஆய்வு செய்வார்.

### 1.1. 1 திருவிவிலியம் என்ற சொல் பற்றிய விளக்கம்

- 'பைபிள்'' என்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கிரேக்க சொல் ''பிபிளூஸ்''
- முதலில் பபிறஸ் எனும் ஒரு வகை நாணல் புல்லைப் பண்படுத்திச் செய்யப்பட்ட நூல்களுக்கு பிபிளோஸ் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.
- ஆரம்ப காலத்தில் பபிறஸ்சைப் பண்படுத்தி செய்யப்பட்ட ஏட்டுச்சுருள்கள் திருமறை நூல்கள் என நூல் வடிவம் பெற்றன.
- அதனால் திருவிவிலியத்திற்கு பிபிளோஸ் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.
- ''வுல்காத்தா'' (வல்கேட்) திருவிவிலியத்திற்காக பயன்படுத்தப்படும் இலத்தின் சொல்
- ''டா பிபிலியா'' என்பது ''நூல்கள்'' எனப் பொருள்படும்.
- இலத்தீன் மொழி திருச்சபையின் அதிகார மொழியான பின்பு ''டா பிபிலியா'' என்பது ''பிபிலியா'' என மாற்றமடைந்தது.
    - பொருள்''பிபிலியா'' என்பது ''நூல்களின் தாய்''
    - ''தாய்'' என்ற சொல் மரியாதைக்காகப் பயன்படுத்தப்படுகிறது.
      உ-ம் பாடசாலைத் தாய்
- திருவிவியியமும் எம்மைத் தாயைத் போன்று வழிநடத்துகின்றது.
- திருவிவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு உன்னதமான நூலாகும்.
    - காரணம் அதற்குள் இறைவார்த்தை உள்ளடக்கப்பட்டுள்ளது.
- திருவிவிலியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபடுவதற்கான காரணம்
    1. இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட இறைவார்த்தை மட்டும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
    2. இது மட்டுமே இறை ஏவுதலால் எழுதப்பட்டுள்ளது.

### 1.1.2 திருவிவிலியம் எழுதப்பட்ட மொழிகள்

- பழைய ஏற்பாடு எபிரேய, அரமேய மொழிகளில் எழுதப்பட்டது.
    - பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்ட பின்னர் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் சில நூல்கள் அரமயிக் மொழியில் எழுதப்பட்டன.
    - காரணம் - பபிலோனியாவில் நாடுகடத்தப்பட்ட காலத்தில் யூத மக்கள் அரமயிக் மொழிக்குப் பழக்கப்பட்டிருந்தமையே
- புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது

- கி.மு 333.ல் கிரேக்க பேரரசனாகிய மகா அலெக்சாந்தரினால் பாலஸ்தீனா ஆக்கிரமிக்கப்பட்டகாலத்திலிருந்து கிரேக்க மொழி முக்கியத்துவம் பெற்றது.
- கி.மு 63இல் பாலஸ்தீனா உரோமைப் பிராந்தியமாக்கப்பட்ட போதிலும் கிரேக்க மொழியே நடைமுறையிலிருந்தது.

### 1.1.3 திருவிவிலியத்தின் நூல்கள்

#### 1.1.3.1 பழைய எற்பாட்டின் நூல்கள்

- பழைய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட நூல்களின் பெயர்பட்டியல் தொடர்பான முரண்பாடுகள் உள்ளன.
  - யூத மற்றும் கிறிஸ்தவர்களுக்கு பழைய ஏற்பாட்டு நூல்கள் 39 ஆகும்.
  - கத்தோலிக்கர்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்ட46 நூல்கள் என ஏற்றுக் கொண்டுள்ளனர்.
  - இவ் வேறுபாட்டிற்கான காரணங்கள்:
    - யூதர்களும் கிறிஸ்தவர்களும் மசரொட்டிக் பிரதியை பயன்படுத்தியமை
    - கத்தோலிக்கர்கள் செப்துவாஜிந்தைப் பயன்படுத்தியமை
- இணைத் திருமுறை நூல்கள் 7னால் பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை பற்றிய முரண்பாடு
- ''இணைத்திருமுறை நூல்கள்'' என்பதன் பொருள் இரண்டாவதாக அங்கீகரிக்கப்பட்டவை என்பதாகும்.
- இவை இரண்டாவதாக அங்கீகரிக்கப்பட்டவை என கூறியபோதிலும் மசோரெட்டிக் பிரதிக்கு முன்னரே பயன்படுத்தப்பட்டு வந்த செப்துவாஜிந்த் பிரதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
- புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இணைத்திருமுறை நூல்களில் 350 மேற்கொள்களிலிருந்து 300 மேற்கோள்களை எடுத்துள்ளதால் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் செப்துவாஜிந்த் பிரதியை ஏற்றுக்கொண்டுள்ளமை தெளிவாகின்றது.
- செப்துவாஜிந்த் பிரதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ள மேற்கோள்களில் 18 இணைத்திருமுறை நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.
- யூதர்களின் திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை 39 ஆகும்.
- கிறிஸ்தவர்களாகிய எமக்கு பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்டதே திருவிவிலியமாகும்.
- யூத இனத்தவர் இணைத்திருமுறை நூல்களைத் தமது திருமறை நூலிலிருந்து அகற்றுவதற்கு முக்கிய காரணம்: அதாவது யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களினது தர்க்கவிவாதங்களின் போது, ஆரம்பகால கிறிஸ்தவ சபை கிறிஸ்துவின் இறைதன்மை மற்றும் மெசியா பற்றிய உண்மைகளை உறுதி செய்வதற்காக இணைத்திருமுறை நூல்களை உபயோகித்தமையேயாகும்.
- இதனால் 400 வருடங்கள் மட்டில் யூதர்கள் பயன்படுத்திய திருமுறை நூல்களோடு செப்துவாஜிந்த் பிரதியையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.
- உ+ம்: கி.பி 150ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட யூதரோடுடனான உரையாடல் எனும் நூலில் யூதர்கள் திருமறை நூலைத் தவிர்த்து விட்டதாக தூய ஜஸ்டின் குற்றம் சாட்டுகிறார்.
- கத்தோலிக்க திருச்சபையானது திரிதெந்து பொதுச்சங்கத்தின்போது விசுவாச அடிப்படையில் பழைய ஏறபாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 39 நூல்களுக்குப் பதிலாக 46 நூல்களுக்கான வெளியீடொன்றை முன்வைத்தது.

- இது தன்னிச்சையான வெளியீடு அல்ல. கி.பி 393இல் ஹிப்போவிலும் 397இல் காத்தேஜிலும் 419இல் காத்தேஜிலும் 1441இல் புளோரன்ஸ்ஸிலும் நடாத்தப்பட்ட பொதுச் சங்கங்களில் வெளியிடப்பட்ட படிப்பினைகளிலிருந்து உறுதி செய்யப்பட்டுள்ளன.

### 1.1.3.2 புதிய ஏற்பாட்டின் நூல்கள்

- புதிய ஏற்பாட்டு நூல்கள் 27 ஆகும்.
- நற்செய்தி நூல்கள் 4 (மத்தேயு மாற்கு லூக்கா யோவான்)
  - இயேசுவின் வாழ்க்கையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வுகள் சிலவற்றின் வழியாக எழுதப்பட்ட இறையியல் செய்திகளை உள்ளடக்கியதே நற்செய்தி நூல்களாகும். மாறாக இயேசுவின் வாழ்க்கை கதையை (சுயசரிதை) எடுத்துக்காட்டவதல்ல.

- திருத்தூதர்பணி நூல்

  ○ இயேசு விண்ணேற்றம் அடையும் போது திருத்தூதர்களுக்குக் கொடுத்த செய்தி நடைமுறைப்படுத்தப்படுவதை (திப 1:8) திருத்தூதர் பணி நூல் நிரூபிக்கின்றது.

- திருமுகங்கள் 21
  - 13 திருமுகங்களின் ஆசிரியத்துவம் தூய பவுலுடையதாகும். (உரோமையர், 1கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர், 1 தெசலோனிக்கர், 2 தெசலோனிக்கர், 1 திமொத்தேயு, 2 திமொத்தேயு, தீத்து, பிலமோன்)
  - இவற்றின் ஆசிரியத்துவத்திற்கு தூய பவுல் உரித்துடையவராயினும், இவை பவுலினாலேயே எழுதப்பட்டவையல்ல, இவற்றிற்கும் பவுலுக்கும் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புண்டு என்பது இதனால் கருதப்படுகின்றது.
  - ஏனைய திருமுகங்கள் 8 (எபிரேயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான் யாக்கோபு)
  - வேறு பெயர்கள்: பொதுத்திருமுகங்கள், அனைத்துலக கடிதம், கத்தோலிக்க சுற்றுமடல் எனவும் அழைக்கப்படுகின்றன.
  - எபிரேய திருமுகத்தினது ஆசிரியர் யார் என்பது குறிப்பிடப்படவில்லை.
  - மீதி 7 இன் ஆசிரியத்துவம் இயேசுவின் திருத்தூதர் 4 பேருக்கு உரித்துடையது. (பேதுரு, யோவான். சிறிய யாக்கோபு, யூதா ததேயு)

- புதிய ஏற்பாட்டின் இறுதி நூல் திருவெளிப்பாடு
  - பாரம்பரியமாக அதன் ஆசிரியர் திருத்தூதர் யோவான் எனக் குறிப்பிடப்படுகின்றது.
  - புதிய ஏற்பாட்டின் 5 நூல்களுக்கு திருத்தூதுர் யோவானே ஆசிரியர் எனக் கூறப்படுகிறது. (யோவான் நற்செய்தி, 1 யோவான், 2 யோவான், 3 யோவான் மற்றும் திருவெளிப்பாட்டு நூல்)
  - இந்நூல்கள் ‘‘யோவானின் உடல்’’ என அழைக்கப்படுகிறது.
  - இவற்றின் ஆசிரியத்துவம் பற்றிய பல்வேறு மறைவல்லுனர்களின் கருத்துக்களும் உள்ளன.

### 1.1.4 திருவிவிலியத்தின் பிரதிகள்

1.1..4.1 **செப்துவாஜிந்த் (கிரேக்கம்) பிரதி**

- புலம் பெயர்ந்து வாழ்ந்த (சிதறிப்போன) யூதர்கள் எபிரேய மொழியை அறிந்திருக்கவில்லை.
- அவர்களும் இறைவார்த்தையின் ஒளியில் தமது வாழ்வை கட்டியெழுப்ப எதிர்பார்த்திருந்தார்கள்.
- அதற்காக திருவிவிலியத்தை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது.
- கிரேக்க பேரரசனின் அனுசரணையில் எபிரேய திருவிவிலியம் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.
- பலஸ்தீன மக்களின் பாவனையில் இருந்த திருவிவிலியம் அல்ல, புலம் பெயர்ந்த மக்களிடம் காணப்பட்ட திருவிவிலியமே மொழிபெயர்க்கப்பட்டது.
- பலஸ்தீனர்களிடம் இருந்த நூல்களை விட 7 நூல்கள் செப்துவாஜிந்த் நூல்களில் காணப்பட்டன.
- அவையாவன: தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாருக்கு, 1,2 மக்கபேயர்
- இதற்கு மேலதிகமாக எஸ்தர் 10:4 – 16:24

  தானியேல் 3:24 – 90, அதி.13, 14
- செப்துவாஜிந்த் பிரதி எபிரேயப் பிரதியை விடவும் பழமையானது.
- எபிரேய திருமறை நூல் பலஸ்தீன யூதர்களிடையே பயன்படுத்தப்பட்டிருப்பினும் இவற்றில் அங்கீகரிக்கப்பட்ட நூல்கள் எவையென்பது கி.பி 90ம் ஆண்டளவில் ம்ததியதரைக் கடலை அண்மித்துள்ள ஜனேயாவில் றாபிக்களின் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமையேயாகும். (எவ்வாறாயினும் கி.பி 2ம் 3ம் நூற்றாண்டுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட நூல்கள் பற்றிய கருத் முரண்பாடுகள் நிலவின).

1.1.4.2 **மசரோட்டிக் பிரதி**

- எபிரேய முதல் பிரதி மெய்யெழுத்துக்களால் எழுதப்பட்டது
- மசரோட்டிக் என அழைக்கப்படுகின்ற யூத ஆசிரிய குலத்தவர் கி.பி 6ம் நூற்றாண்டில் இதற்கு உயிர் எழுத்துக்களைச் சேர்த்தனர்.
- இதனால் இந்த எபிரேயப் பிரதி மசரோட்டிக் பிரதி என அழைக்கப்படுகிறது.

**1.1.4.3 வுல்காத்தா (இலத்தீன்) வல்கேற் பிரதி**

- திருத்தந்தை டமாஸ்ஸஸ் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தூய ஜெரோம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
- இத் திருவிவிலியத்தை மொழிபெயர்க்க 24 ஆண்டுகள் எடுத்தன.
- கி.பி 406இல் இது நிறைவு செய்யப்பட்டது.
- வுல்காத்தா - வல்கேற் என்பதன் பொருள் பொது மக்களின் பிரதி என்பதாகும்.

### 1.1.5 இறைவெளிப்பாடு

- திருவிவிலியத்திற்கும் மற்றும் இறைவெளிப்பாட்டிற்கும் இடையே பிரிக்க முடியாத தொடர்பு உள்ளது.
- மீட்பு வரலாற்றிலுள்ள இறைவனின் செய்திகள் யாவும் திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- ‘‘வெளிப்பாடு’’ என்பதற்கான கிரேக்க சொல் ‘‘அபோகளிப்ஸ்’’ எனப்படும்.
- இது இரு கருத்துக்களைக் கொண்டுள்ளது.

  1. மறைக்கப்பட்டிருக்கும் ஒன்றை வெளிப்படுத்துவது.

2. மறைந்துள்ள ஒன்றை வெளிப்படுத்துவது.

- ''இறைவெளிப்பாடு'' என்பதன் கருத்து யாதெனில் மறைபொருளான பிரபஞ்சத்தின் படைப்பாளரான கண்ணுக்குப் புலப்படாத இறைவன் அவரது படைப்பான மனிதனுக்கு வெளிப்படுத்தப்படுவதாகும்.
- இறைவெளிப்பாடு இரு தன்மைகளைக் கொண்டுள்ளது.

1. இயற்கையின் வழியாக
2. இயற்கை திட்டத்திற்கு அப்பால் இடம்பெறுகின்ற விசேட வெளிப்பாடு.

### 1. இயற்கையின் வழியாக

- ஓர் சித்திரத்தின் நோக்கம் அச்சித்திரக் கலைஞனைப் பற்றி எடுத்துரைப்பதல்ல. எனினும் அதனை ஆக்கியோனைப் பற்றிய அனேக விடயங்களை வெளிப்படுத்துகிறது.
- அவ்வாறே பிரபஞ்சம் மற்றும் மனிதனின் வழியாக அவற்றைப் படைத்தவரைப் பற்றிய விடயங்களை வெளிப்படுத்துகின்றது.
- இந்தளவு சிக்கலான மற்றும் முறையான பிரபஞ்சம் தானாக உண்டாக முடியாது என்பதை தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஒரு நபருக்கு நன்றாக விளங்கக் கூடியதாயுள்ளது.
- மிகச் சிறியதொரு பொருளுக்குக் கூட தானகவே உண்டாக முடியாதெனில், மிகவும் நுட்பமான செயற்பாடுள்ள மனிதன் தானாகவே உருவாக முடியாது என்பதை விளக்குதல்
- இதற்கமைய இயற்கையின் செயற்பாடு பற்றித் தர்க்கிக்க நினைக்கும் நபருக்கு இதனை உண்டாக்கிய ஒருவர் இருக்க வேண்டுமென்பதும் அந்த படைப்பாளி மிக உன்னதமான ஒருவராக இருக்க வேண்டுமென்பதும் மிக நன்றாக விளங்குகிறது (திபா 19:1-6).

- இறைவன் தாம் தேர்ந்தெடுத்த மக்களுக்கு இயற்கையின் வழியாக வெளிப்படுத்துகிறார். உ-ம்
  - மன்னா எனும் உணவினாலும் மற்றும் காடைகளினால் போஷிப்பதும் (விப. 16)
  - மலையிலிருந்து நீர் வழங்குவது (விப. 17:1-7)

### 2. இயற்கை நியதிக்கு அப்பால் இடம்பெறுகின்ற விசேட வெளிப்பாடு.

- இறைவன் பற்றிய இயல்பான செய்திகளை வெளிப்படுத்துவது இயற்கைக்குஅப்பால் இடம்பெறுகின்ற வெளிப்பாட்டினாலேயாகும்.

  உ-ம்
  - குலமுதுவர்கள், மோசே, நீதித்தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் வழியாக
  - மிக விசேட விதமாக தமது திருமகன் வழியாக (எபி. 1:1-2)
- இறை வெளிப்பாடானது இரு அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. சுய வெளிப்பாடு : தம்மைப் பற்றிய வெளிப்பாடு
2. அவருடைய மீட்புத் திட்டம் பற்றிய வெளிப்பாடு.

### 1.1.6 இறைஏவுதல்

- இறைஏவுதல் என்பதற்கான கிரேக்க சொல் ''தியோப்னெட்டோஸ்'' என்பதாகும் (2 திமொ. 3:16).
  - ''தியோ'' எனப்படுவது இறைவனாகும்.
  - ''னெட்மா'' எனப்படுவது மூச்சாகும்.

- இதனடிப்படையில் ‘‘தியோப்னெட்டோஸ்’’ எனப்படுவது ‘‘இறைவனால் மூச்சு விடப்பட்டது என்பதாகும்.

- ஏதோவொன்றுக்கு இறைவன் மூச்சு விடுகின்றாரெனில் அது முழுமையானது ஆகின்றது. (தொநூ. 2:7).
- இதே போன்று இறைவார்த்தையை நூல் வடிவில் எழுதிய மனித ஆசிரியர்கள் மீது இறை மூச்சை ஊதுவதனால் அவர்களின் பணியை உன்னதமான செயலாக்கினார்.
  - திருமறை நூல்களை எழுதிய ஆசிரியர்களின் உள்ளங்களில் திருமறையை எழுதும் வேளையில் தூய ஆவியானவர் ஊடுருவிச் சென்றுள்ளார்.
  - தூய ஆவியானவரின் பலத்தால் திருமறை நூல்கள் நூல்வடிவம் பெற்றன.

**இறைஏவுதலின் வகைகள்**

**1. ஆயத்துவ இறை ஏவுதல்.**

- ஆயத்துவ இறைஏவுதல் எனப்படுவது செயலாற்றுவதற்காகப் (தலைமைத்துவத்திற்கான) பெற்றக் கொள்ளும் இறை ஏவுதலாகும்.
- இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதித்தலைவர்களுக்கு இந்த இறைஏவுதல் வழங்கப்பட்டது.
- இது திருவிவிலியத்தில் அவர்க்ள மேல் ‘‘இறைவனின் ஆவியின் அருள் பொழிவு’’ பெறப்பட்டது என்பதாகும். உதாரணமாக: சிம்சோன் (நீமொ. 14:19), தாவீது (1சாமு. 16:13), மோசே (எசா. 63:11) மற்றும் மெசியா (எசா. 11:2, 61:1), (லூக் 4: 18-19)

**2. போதனைக்கான இறைஏவுதல்.**

- போதனைக்குரிய இறைஏவுதலானது இறை செய்தியை வெளியிடுவதற்காக வழங்கப்படுவதாகும்.
- இறைஏவுதலைப் பெற்றவர்கள்: இறைவாக்கினர், இயேசுக்கிறிஸ்து, திருத்தூதர்கள் (உ-ம்: 2 பேதுரு 1:21, லூக் 4:18, 12:11-12)

**3. எழுத்தாக்கத்துக்கான இறைஏவுதல்.**

- எழுதுவதற்காக வழங்கப்படுகின்ற கட்டளை (விப. 17:14, இச. 5:22, 31:24, எசா. 30:8, எரே. 30:2)
- திருமறை நூல்கள் அனைத்தும் இறை ஏவுதலால் எழுதப்பட்டன. (2 திமொ. 3:16)
- இறை ஏவுதலால் நூல்களாக எழுதப்பட்ட திருமறை நூல்களின் நோக்கங்கள் 4 என 2 திமொ. 3:16 எடுத்துக்காட்டுகின்றது.
  1. கற்பித்தல்.
  2. தீய எண்ணங்களை அகற்றுதல். (தண்டித்தல்)
  3. சீராக்குதல்.
  4. நேர்மையாக வாழ்வதற்கான பயிற்சி அறிவை வழங்குதல்.

### 1.1.7 திருவிவிலியத்தின் ஆசிரியத்துவம்

- திருச்சபைத் தந்தையர்களின் காலம் தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
  - திருமறை நூல்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்டவையெனவும்

- ○ அதன் ஆசிரியர் இறைவனே என்பதுமாகும்.

- 1893இல் திருத்தந்தை 13ஆம் லியோ அவர்கள் வெளியிட்ட ''இறை பராமரிப்பு'' (Providentissimus Deus) சுற்றுமடலின் படி
  - ○ திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியர் (Principal Cause) இறைவன் அதன் துணை (கருவி) ஆசிரியர் (Instrumental Cause) மனிதன்.

- இறைவன் திருவிவிலியத்தின் பிரதம ஆசிரியராவார். எனவே அதிலிருப்பது இறைவனின் வெளிப்பாடாகும், இறைவனது செய்தியாகும்.

- இச்செய்தி எக்காலத்துக்கும் உரியது, எவ்விடத்துக்கும் உரியதாகும். அதன் வெளிப்பாடானது நிலையானதும் நித்தியமானதுமாகும்.

- மனிதன் தனது ஆக்கபூர்வமான செயற்பாட்டினால் திருவிவிலியத்தின் துணை ஆசிரியராகையால் திருவிவிலியத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பக்கமும் உண்டு. உதாரணமாக திருவிவிலியத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்தும் வரலாறு மற்றும் விஞ்ஞான பூர்வமாக இல்லாது இருப்பது மனிதன் ஒரு வரையறைக்குட்பட்டவனாக இருப்பதனாலேயாகும்.

- மனிதன் தனது அறிவு சுதந்திரம் என்பவற்றைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான ஒரு செயற்பாட்டில் ஈடுபடுவதோடு அதற்குத் தேவையான இறை செய்தி இறைவனால் அருளப்படுகிறது. அச் செய்தி நிலையானதாக இருப்பினும் அதிலுள்ள கதைகள் யாவும் முழுமையானவைகள் அல்ல.

- இறைவனின் கரங்களில் மனிதன் ஒரு துணைக் கருவியாய் இருப்பினும், மனிதனுக்கும் வேறு ஒரு கருவிக்கும் இடையே வேறுபாடு உண்டு.
  - ○ வேறு ஓர் கருவிக்கு அறிவு, சுதந்திரவிருப்பம் இல்லாதிருப்பினும் மனிதனுக்கு அவை உள்ளன.
  - ○ இறைவன் பிரபஞ்சத்தையும் மனிதனையும் படைத்த விதத்தினை தேடியறிய மனிதனுக்கு அறிவு கொடுக்கப்பட்டுள்ளது.
  - ○ அச் செயற்பாட்டிற்கு முக்கியமாக அமைவது இறை செய்தியாகும்.

**தேர்ச்சி 1.0 :** திருவிவிலிய மதிப்பீடுகளைத் தமதாக்கிக் கொள்வரர்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** புவியியல் வரலாற்றுப் பின்னணிகள் திருவிவிலியத்தை மொழிபெயர்க்க உதவின என்பதை ஏற்றுக்கொள்வார்.

**பாடவேளை : 20**

**கற்றல் பேறுகள் :**

- திருவிவிலியத்தின் புவியியல் வரலாற்றுப் பின்னணி தொடர்பான பிரதான தகவல்களைக் கோவைப்படுத்துவார்
- நம்பிக்கையுடன் திருவிவிலியத்தைக் கற்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- திருவிவிலியத்தின் புவியியல் வரலாற்றுப் பின்னணி தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- வரலாற்றில் செயற்பட்ட இறைவன் இன்றும் எதிர்காலத்திலும் உடன் இருக்கிறார் என்பதை நம்புவார்.
- தாம் பெற்றுக் கொண்ட வாழ்க்கையினூடாக இறை செயற்பாட்டின் அனுபவத்தை பிறரும் அறியத் தூண்டுவார்.

## 1.2. பாஸ்தீனாவின் புவியியல் பின்னணி

### 1.2.0 அறிமுகம்

- இறைனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடன் தொடர்புடைய நாடுகள் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன: பாலஸ்தீனா, கானான், இஸ்ராயேல், வாக்களிக்கப்பட்ட நாடு, பரிசுத்த பூமி (புண்ணிய பூமி)
- கிழக்கே பாரசீக வளைகுடாவிலிருந்து ஆரம்பமாகி ஈராக்கின் குறுக்கே மத்திய தரைக் கடலை எல்லையாகக் கொண்டு மேற்கில் நைல் நதி வரை பரம்பிச் செல்கின்ற அரை வட்டவடிவமான நிலம்: ''செழும்பிறை''
- இச் செழிப்புள்ள பிறை வட்டத்தில் செழிப்பு குறைந்த மிகச் சிறிய பிரதேசம் பாலஸ்தீனாவாகும்.
    - இது வறண்ட பிரதேசமாகும்.
    - வருடத்தில் இருமுறை மட்டுமே மழை பெய்கின்றது.
- இச் செழும்பிறையுள்ளே பழைமையான முக்கிய மூன்று நாகரீகங்க்ள நிலவின: அசீரியா, பபிலோனியா, எகிப்து
- எனவே பல்வேறு யுகங்களில் இம் மூன்று பேரரசுகளினதும் தாக்கங்களுக்கு பலஸ்தீனா அடிமையானது.
- இந்த பேரரசுகளுக்கு இடையே பயணம் செய்யும்போது இரு வழிகளை உபயோகித்தனர்.
    i. கடல் (வியாபாரம்) வழி: இது எகிப்திலிருந்து காசா தீவின் குறுக்கே கடற்கரை வழியாக கலிலேயாவையும் தமஸ்குவையும் கடந்து மொசபத்தேமியா வரையுள்ளது.
    ii. அரச (யுத்த) வழி: இது சீனாய் பாலைநிலத்துக்குக் குறுக்கே கிழக்கே மலைகளின் வழியாக தமஸ்குவையும் கடந்து மொசபத்தேமியா வரையுள்ளது.
- பாலஸ்தீனாவின் அமைவிடம்
    - மத்திய தரைக்கடலின் கிழக்கேயுள்ள கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது.
    - இது மேற்கு ஆசியாவைச் சேர்ந்ததாகும்.

- புராதன பாலஸ்தீனாவின் எல்லைகள்
    - வடக்கில் தாண்
    - தெற்கில் பெயர்செபா
- பாலஸ்தீனாவின் நிலப்பரப்பு
    - அதன் நீளம் 150 மைல்களாகும்.
    - மத்திய தரைக் கடலிலிருந்து யோர்தான் ஆற்றுப் பள்ளத்தாக்கு வரையான அகலம் வடக்கில் 30 மைல்கள் வரை தெற்கில் 50 மைல்கள் அளவில் உள்ளது.
    - நிலப்பரப்பு 7000 சதுர அடிகளாகும்.
- தரைத்தோற்ற அமைப்பு: இயற்கையான பகுதிகள், கடற்கரைச் சமவெளி, மேற்கிலுள்ள மலை, யோர்தான் பள்ளத்தாக்குகள், கிழக்கு மலை

### 1.2.1.1 கடற்கரைச் சமவெளி

இதில் மூன்று சமவெளிகள் உள்ளடங்குகின்றன.

#### 1. அக்கோ சமவெளி

- கார்மேல் மலையடிவாரத்திலிருந்து வடக்கே பரந்துள்ளது.
- சனநெரிசல் உடைய செழுமைமிக்க பிரதேசமாகும்.
- எலியா இறைவாக்கினர், பால் வழிபாட்டு குருக்கள் பற்றிய சம்பவம் இடம்பெற்ற கார்மேல் மலையடிவாரம் இங்குள்ளது. (1அர.18)

#### 2. சாரோன் சமவெளி

- யோப்பா தொடக்கம் செசரியா வரை பரந்துள்ளது.
- பேதுரு பல்வேறு உயிரினங்கள் உள்ள கப்பற்பாய் பற்றிய காட்சியினைக் கண்டதும் யோப்பாவிலாகும்.
- யூதேயா, சமாரியா, இதுமேயா போன்ற பிரதேசங்களின் ஆளுநர் செசரியாவிலே வசித்து வந்தார்.
- பவுல் கி.பி. 58-60 காலப்பகுதியில் செசாரியாவில் சிறைப்பட்டிருந்தார்.

#### 3. பெலிஸ்தியச் சமவெளி

- பெலிஸ்தியச் சமவெளி யோப்பாவுக்குத் தெற்கில் ஆரம்பமாவதோடு அது தெற்குத் திசை வரை பரவியுள்ளது.

### 1.2.1.2. மேற்கு மலைத்தொடர்

- மலைப் பகுதிகள் பாலஸ்தீனா நாட்டிற்கு முதுகெலும்புபோல் அமைந்துள்ளது.
- இந்த மலைத்தொடர்களை ஜெஸ்ரோல் (ஜெஸ்ரில்) சமவெளி இரண்டாகப் பிரிக்கின்றது.
- இச்சமவெளிக்கு குறுக்கே எகிப்து மற்றும் சிரியாவை இணைக்கின்ற (கடல்) பாதை அமைந்துள்ளது.
- நெக்கோ பார்வோன் மன்னால் யோசியா மன்னன் கி.மு 609 இல் கொலை செய்யப்பட்ட மெகிதோ புல்வெளி இச்சமவெளியில் உள்ளது.

- ஜெஸ்ரேல் சமவெளி இயேசுவின் பகிரங்க வாழ்வின் முக்கிய நிகழ்வுகளோடு தொடர்புடையது.
    - நயீன் ஊர்க் கைம் பெண்ணின் மகனை உயிர்ப்பித்தமை (லூக். 7:11-17)
    - தபோர் மலை இச்சமவெளியில் அமைந்துள்ளது.

- மேற்கு மலைப் பகுதிகள் 4

**i. கலிலேய மலைப் பிரதேசம்**

- கலிலேய மலைப் பிரதேசத்தின் பிரிவுகள் 2: வடக்கு அல்லது மேல் கலிலேயா மற்றும் தெற்கு அல்லது கீழ் கலிலேயா என்பனவாகும்.
- தெற்கு கலிலேயா
    - இயேசு வளர்ந்த இடமாகிய நசரேத் இங்குள்ளது (லூக். 4:16).
    - இயேசுவின் முதல் அரும் அடையாளம் நிகழ்ந்த கானா ஊர் இங்கு உள்ளது (யோவான் 2:11).

**ii. சமாரியாவின் மத்திய மலைப் பிரதேசம்**

- இங்குள்ள முக்கிய இடங்கள்
    - பெத்தேல், சீலோ, செக்கேம்
    - சமாரியர் தமக்கென கோயில் ஒன்றைக் கட்டிய கெரிசிம்
    - குலமுதுவர் யாக்கோப்பின் புதல்வன் யோசேப்பு இஸ்மயேலருக்கு விற்கப்பட்ட தோத்தான் (தொநூ. 37:17).
    - சமாரியா என்னும் ஊர்

**iii. யூதா மலைப்பிரதேசம்**

- கிழக்குப் பிரதேசம் பாலைவனமாகும்.
- எபிரோன் பலஸ்தீனாவிலுள்ள மிக உயரமான நகரமாகும்.
    - எபிரோனை அண்டிய பகுதியில் ஆபிரகாம் நீண்ட காலம் வாழ்ந்துள்ளார்.
    - இங்கு தாவீது அரசன் யூதாவின் அரசனாக திருப்பொழிவு செய்யப்பட்டுள்ளார் (2சாமு. 2:3-4).
- எபிரோன் நகருக்கு வடக்கில் அமைந்துள்ள பெத்லகேம் நகரில் இயேசுவின் பிறப்பு நிகழ்ந்துள்ளது.
- பெத்லகேமுக்கு வடக்கில் அமைந்துள்ள எருசலேம் நகரில் எருசலேம் கோவில் கட்டப்பட்டுள்ளது.
- எருசலேமுக்கு கிழக்கில் ஒலிவ மலை அமைந்துள்ளது.
- எருசலேம் மற்றும் ஒலிவ மலையின் இடையில் கெதரோன் கால்வாய் அமைந்துள்ளது. (மத். 26:36, யோவா. 18:1)
- எருசலேமுக்கு தென் கிழக்கில் கெஹென்னா ஆற்றுப்பள்ளத்தாக்கு அமைந்துள்ளது.
- திருமுழுக்கு யோவான் யூதா மலைப் பிரதேசத்தில் பிறந்துள்ளார் (லூக்.1:39).
- எருசலேமிற்கு கிழக்கே இலாசர், மார்த்தா மற்றும் மரியா ஆகியோரின் ஊர் பெத்தானியா இருந்தது.

**iv. நெகேபு**

- நெகேபு என்பதன் பொருள் ''வறட்சி'' என்பதாகும்.
- திருவிவிலியத்தில் இது ''தெற்கு'' எனப் பொருள்படுகிறது.

**1.2.1.3. யோர்தான் சமவெளி**

- மேற்கு மலைகளுக்கும் கிழக்கு மலைகளுக்குமிடையே உள்ள தாழ்ந்த நிலப்பரப்பு
- இச்சமவெளிக்குக் குறுக்கே யோர்தான் ஆறு ஓடுகிறது.
- யோர்தான் ஆறு ஆரம்பிப்பது லெபனான் மலைகளிலிருந்து

**i. கலிலேயக்கடல்**

- கடல் மட்டத்தைவிட 675 அடி கீழே அமைந்துள்ளது.
- இதயத்தின் வடிவைக் கொண்டுள்ளது.
- வேறு பெயர்கள்:
  - ''கினரோத்துக் கடல்'' (யோசு. 12:3:, 13:27).
  - கெனசரேத் ஏரி (லூக். 5:1, மத். 14:34).
  - திபேரியா கடல் (ஏரி) (யோவா. 6:1, 21:1)
- இக்கடலில் திடீரென புயல் ஏற்படும்.
- இது இயேசுவின் மறை பணியின் கேந்திர நிலையமும் ஆகும்.
- கலிலேயாக் கடலைச் சுற்றியுள்ள முக்கிய நகர்கள்:
  - கப்பர்நாகும் (மாற். 1:21-29, லூக். 4:31, 7:5, யோவா. 6:59),
  - பெத்சாய்தா (லூக். 9:10, மாற். 6:45, யோவா. 1:44, 12:21).
  - மகதலா (லூக். 8:2, மாற். 16:9)
  - திபேரியா

**ii. சாக்கடல்**

- கடல் மட்டத்திலிருந்து 1300 அடி கீழே அமைந்துள்ளது.
- 27% உப்பு செறிந்துள்ளமையால் இங்கு மீன்களோ எந்தவொரு உயிரினமோ இல்லை.
- சாக்கடலின் மேற்பரப்பில் எந்த மனிதனும் மூழ்காமல் மிதக்க முடியும்.
- இயேசு கலிலேயக் கடல் மீதே நடந்ததாரே அன்றி சாக்கடலில் அல்ல.
- சாக்கடலின் வட மேற்குத்திசை கடற்கரையிலே கும்ரான் சுருளேடுகள் காணப்பட்டன.

**1.2.1.4. யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கே உள்ள மலைத்தொடர்கள்**

- இம் மலைகள் யோர்தான் ஆற்றுப் பள்ளத்தாக்கிற்கும் சிரியா பாலைவனத்துக்கும் இடையே அமைந்துள்ளன.
- இம்மலைகளிலிருந்து ஆரம்பமாகும் ஆறுகள்: யாபோக்கு, ஜபொக் அர்னோன், சேரெத்

**1.2.2 இஸ்ரயேலின் வரலாற்றுப் பின்னணி**

### 1.2.2.1 விடுதலைப் பயணமும் நாட்டை உரிமையாக்கலும்

- கி.மு 1767 இல் கைக்கோசு என்ற வேற்றினத்தினர் எகிப்தைக் கைப்பற்றினர்.
- செமித்திய பிரிவினரை சேர்ந்த ஆபிரகாமின் பரம்பரையைச் சேர்ந்த உறவினர்களே இக்கைக்கோசராவர்.
- எபிரேயரும் செமித்திய இனத்தைக் சேர்ந்தவர்களாகையால் யோசேப்பு எகிப்தில் ஆளுநர் பதவியை வகிக்கக் கூடியதாயிருந்தது.
- கைக்கோசு இனத்து பார்வோனின் அழைப்பின் பேரில் யாக்கோபின் பரம்பரை எகிப்துக்குச் சென்று வளர்ச்சியடைந்தது.
- இஸ்ரயேல் இனத்தவர் எகிப்தில் 430 வருடங்கள் வாழ்ந்தனர். (விப12:40)
- கி.மு 1559இல் எகிப்திய இன முதலாவது அமோசிசு இராணுவ நடவடிக்கையால் கைக்கோசரை எகிப்திலிருந்து துரத்திவிட்டான்.
- எகிப்திய இனத்தவரான பார்வோன் மன்னர்கள் கைக்கோசு இனத்தவர் மட்டில் பகையுடனும் பயத்துடனும் இருந்தனர் (விப. 1:10).
- இதனால் கைக்கோசியரின் நிர்வாகத்தை நினைவுபடுத்தும் அனைத்தும் எகிப்திய பார்வோன் மன்னர்களினால் அழிக்கப்பட்டன.
- இப்பயத்தினால் களஞ்சிய நகர் கட்டுவதற்கு அடிமைகள் தேவைப்பட்டதால் இரண்டாவது இராம்சேஸ் (கி.மு 1290-1224) இஸ்ரயேலரை அடிமைகளாக்கினான் (விப. 1:11-12).
- இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகள் 2.
  1. அவரிடமிருந்து பெரிய இனத்தை உருவாக்குதல்.
  2. இவ்வினத்துக்கு நிலையான ஒரு நாட்டைக் கொடுத்தல்.
- முதலாம் வாக்குறுதி நிறைவேறியுள்ளது (விப 1:7)
- 2வது வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததால் இஸ்ரயேல் மக்கள் அந்நாட்டிலிருந்து வெளியேற வேண்டியிருந்தது.
- இந்தப் பின்னணிக்கான சான்று: விடுதலைப்பயணம் 1ம் அதிகாரத்தில் உள்ளது.
- இஸ்ரயேலர் கி.மு 1280 இன் அளவில் எகிப்திலிருந்து புறப்பட வேண்டியிருந்தது.
- இஸ்ரயேல் மக்கள் 40 வருடங்கள் பாலைவனத்தில் பயணித்தனர்.
- கி.மு 1250-1225 இற்கு இடைப்பட்ட காலத்தில் (பெரும்பாலும் கி.மு 1240 அளவில்) இஸ்ரயேல் மக்கள் பலஸ்தீனாவில் குடியேறியும் இருக்கலாம்.

### 1.2.2.2 நீதித்தலைவர்களின் காலம் (கி.மு 1225-1050)

- 150 வருடங்கள்
- அரசியல் சமய மற்றும் கலாசார மாற்றங்களைக் கொண்ட காலமாக கருதக் கூடியதாயுள்ளது.
- பலஸ்தீனாவில் குடியேறிய பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள்
  - நிரந்தரமாக விவசாயத்தில் ஈடுபட்டனர்.
  - நிலபுலன்களை உரிமையாக்கிக் கொண்டனர்.
  - தற்காலிக கூடாரங்களுக்குப் பதிலாக நிரந்தர வீடுகளைக் கட்டுவதற்கு முயன்றனர்.
  - அத்துடன் வீடுகளை அலங்காரமாக வைத்திருத்தல், அதற்கடுத்த படியாக கலாசார ஆரம்பத்துக்கான அடித்தளமொன்றை இட்டனர்.

- எனினும் அவர்களுக்கு பொது அரச முறையொன்றோ முடியாட்சியொன்றோ இன்னும் இருக்கவில்லை.
- அதனால் புதிய நாட்டினுள் ஒருவிதமான தெளிவற்ற மற்றும் அமைதியற்ற தன்மையைக் காணக்கூடியதாயிருந்தது.
- நாட்டைச் சுற்றி இருந்த பல்வேறு இனத்தவரின் ஆக்கிரமிப்புகளுக்கு அவர்கள் உள்ளாக வேண்டியேற்பட்டது.
- நீதித்தலைவர்களின் கடமைகள்: வெளிவாரியான சக்திகளுக்கு எதிராகப் போராடியதோடு யூத மக்களை ஒன்றிணைத்து ஓர் இனத்தைக் கட்டியெழுப்புவது.
- இவர்கள் ஒருவகையில் இறையருள் பெற்ற போர்வீரர்களாவர்.
- நீதித்தலைவர்கள் 12: ஒத்னியேல் (நீத 3:7-11), ஏகூது (நீத 3:12-30), சம்கார் (நீத 3:31), தெபோரா (நீத 4:1-5:31), கிதியோன் (நீத 6:11-8:35), தோலா (நீத 10:1), யாயிர் (நீத 10:3), இப்தா (நீத 11), இப்சான் (நீத 12:8), ஏலோன் (நீத 12:11), அப்தோன் (நீத 12:13), சிம்சோன் (நீத 13:1 - 16:31)

### 1.2.2.3 அரசர்கள் காலம்

- நீதித்ததலைவர்கள் ஆட்சியின் பலவீனம்:
  - அவர்களது ஆட்சி நாடு முழுவதும் பரந்துபடாதிருந்தமை
  - யூத குலத்தவர் அனைவரையும் ஒன்றிணைக்க முடியாமற் போனமை
- இப்பலவீனத்தினால் அயல் அரசுகள் பலமடையும்போது இஸ்ரயேலர் ஆக்கிரமிப்புக்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது.
- இதனால் ஓர் அரசனுக்குக் கீழ் அனைத்து குலத்தவரும் ஒன்றிணைந்து அரசியல், பொருளாதார சமூக ரீதியாக எல்லாப் பிரிவுகளிலிருந்தும் ஒருங்கிணைந்த அமைப்பாக செயற்படுதல் பயனளிக்கும் என்பதனை அவர்கள் விளங்கிக் கொண்டனர்.
- இத்தலைமைத்துவம் யுத்த காலங்களில் போன்றே அமைதி நிலவும் காலங்களில் தொடர்ச்சியாக அனைத்து அரசுக்கும் வழிகாட்டியாக அமைந்தது என்பதை விளங்கிக் கொண்டனர்.
- இவ்வாறான ஒரு நிலையை இஸ்ராயேல் இனத்தினுள் உருவாக்குவதற்காக நிரந்தரமாக இயங்கக் கூடிய அரச தலைமைத்துவத்தின் தேவையை அவர்கள் புரிந்துகொண்டனர்.
- அயலிலுள்ள நாட்டு அரசர்களினது ஆட்சி வெற்றிகரமாக செயற்படுகின்ற விதம் பற்றி அவர்கள் விளங்கிக் கொண்டனர்.
- சாமுவேலிடம் அரசன் ஒருவரைக் கேட்பதற்கு ஏதுவான 3 முக்கிய காரணங்கள்.
  i. சாமுவேல் வயது முதிர்ந்து பலவீனமடைந்திருந்தமை.
  ii. சாமுவேலின் புதல்வர்கள் தந்தையின் வழிமுறைகளில் நடவாமல் பொருளாசைக்கு உட்பட்டு கையூட்டு வாங்கியமை.
  iii. நீதித்தலைவர்களால் ஏனைய நாடுகளின் அரசர்களைப் போன்று மக்களை ஒன்று கூட்டுவதற்கும், மக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கும், நாட்டை அபிவிருத்தி செய்யவும் முடியாதிருந்தமை. (1 சாமு. 8:1-20)

#### 1.2.2.3.1 சவுல் அரசன் (கி.மு 1020-1000)

- பெஞ்சமின் குலத்தைச் சேர்ந்த கிபியாவில் உள்ள செல்வந்த குடும்பத்தில் கீசு என்பவரின் மகன். (1சாமு.10:26)

- தந்தையின் காணாமற்போன கழுதைகளைத் தேடிச் சென்ற சவுல் சாமுவேலை சந்தித்தார். (1 சாமு. 9:11-27).
- இறைவனின் திட்டத்தின்படி சாமுவேல் சவுலை அருள் பொழிவு செய்தார் (1சாமு 10:1).
- அப்பொழுது சவுலுக்கு வயது 30 ஆகும் (1சாமு.13:1).
- மிஸ்பாவில் மக்களுக்கு சவுலை அரசனாக சாமுவேல் அறிமுகப்படுத்துதல் (1 சாமு. 10:17-27).
- அம்மோனியரின் அரசனாக இருந்த நாகசுவையும் தோற்கடித்தான் (1சாமு.11).
- பாரிய படையுடன் இருந்த பெலிஸ்தியர் சவுலின் அரசுக்கு எதிராக மிக்மாசிலில் பாளையம் அமைத்து போருக்கு ஆயத்தமாக இருந்ததால் சவுலின் படையினர் சிதறிப்போயினர். (1சாமு. 13:1-14).
- சவுலின் மகன் யோனாத்தானின் தந்திரமான செயற்பாட்டினால் பெலிஸ்தியரின் படைகள் இங்கு தோற்கடிக்கப்பட்டாலும் சவுலின் முழு ஆட்சிக் காலமும் பிலிஸ்தியருடன் போராட வேண்டியநிலை ஏற்பட்டது (1சாமு.14).
- அமலேக்கியரை அவர்கள் தோற்கடித்தனர் (1 சாமு.15:1-9).
- சவுலுடைய உடல் அமைப்பும், உள அமைதியின்மையும், பகிரங்க பாவ விளைவுகளும் (1 சாமு 13:8-14, 15:10-33) நிரந்தரமற்ற வெற்றிகள், குருக்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் (1 சாமு. 22:17-18)
- அவர் அரசனாக இருந்தபோதிலும் மிக எளிமையான கிராம வாழ்க்கையை விரும்பினார்.
- அரச மாளிகையொன்று அவருக்கு இருக்கவில்லை.
- அவரது குடும்ப வாழ்வு முன்மாதிரிகையாக இருந்தது.
- இஸ்ராயேலுக்கு நிரந்தரமான படையொன்றினை வழங்கிய பெருமையும் அவருக்கே உரித்துடையதாகும்.

#### 1.2.2.3.2 தாவீது அரசன் (கி.மு 1000-961)

- தாவீது அரசன் அரசமாளிகையை வந்தடைந்த விதத்தினைப் பற்றி இரண்டு மரபுகள் உள.
    1. வீணை வாசிப்பவராக (1 சாமு. 16:14-23, 17:1-11, 17:32-53)
    2. போருக்குச் சென்றிருந்த சகோதரர்களுக்கு உணவு கொண்டு சென்ற ஒருவராக (1சாமு. 17:12-30, 17:55-18:2)
- கோலியத்தை தேற்கடித்தமையால் தாவீது பிரசித்தி பெற்றார்.
- மனைவி: சவுலின் மகள் (மீக்கா)
- சவுல் அரசன் தாவீதை கொலை செய்ய முயற்சித்தமையால் அவர் யூத பாலைவனத்துக்குத் தப்பி ஓடினார்.
- சவுல் அரசனின் மகனும் (யோனத்தான்) மகள் (மீக்கா) தாவீதை பாதுகாத்தனர்.
- சவுலின் இறப்புக்கு முன் அபிஷேகம் பண்ணப்பட்டு சவுலின் இறப்போடு எபிரோனின் அரசனானார் (2சாமு.2:1-11).
- சவுலின் படைத் தலைவனான அப்னேரின் உதவியோடு சவுலின் மகன் இஸ்பொசே 7 வருடங்கள் ஆட்சி செய்தார் (2 சாமு. 2:8-11).
- தாவீது அரசனின் காலத்தின் ஆரம்பத்திலேயே இரட்டை ஆட்சி நிலவியது.

- இஸ்போசேத்து கொலை செய்யப்பட்ட பின்னர் தாவீது யூதாவின் அரசனானார் (2 சாமு. 5:1-5).
- எபூசியரின் நகரமாகிய எருசலேமைத் தலைநகர் ஆக்கிக் கொண்டார்.
- தாவீது அரசன் உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்கு கொண்டு வந்தமையினால் எருசலேம் அரசியல் ரீதியாக மட்டுமல்லாது சமய ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றது.
- இத்தோடு நிறுத்திக் கொள்ளாத அவர் கோவிலைக் கட்டுவதற்காகத் திட்டமிட்டார்.
- இறுதியாக அவரின் மகன் சாலமோன் அரசரே அதனை நிறைவேற்றினார்.
- தாவீது அரசனைத் தொடர்ந்து தந்தைக்குப் பின் தனயனுக்கு ஆட்சி உரித்தாகுகின்ற முறை தென்னரசில் ஆரம்பமாகியது.
- முதலாவது அரசர்கள் இருவருக்கும் அரசாட்சியின் உரிமை இறை ஏவுதலின் காரணமகவே கிடைத்தது.
- சாலமோனுக்கு அது உரிமையாக வரக் காரணம் தாவீதின் மகன் என்பதாலும் அரச மாளிகையில் நடந்த சூழ்ச்சியின் பிரதி பலனும் ஆகும்.

#### 1.2.2.3.3 சாலமோன் அரசன் (கி.மு 961-922)

- எகிப்திய மன்னனின் மகளை மணந்து கொண்ட சாலமோன் அரசன் எகிப்திய அரசனுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்.
- தீர் மன்னனுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார்.
- யூப்பிரதீஸ் நதியிலிருந்து ஆரம்பமாகி பெலிஸ்தியரின் நாடு மற்றம் எகிப்து வரையான பிரதேசம் அவரின் ஆணைக்கு உட்பட்டது.
- முழு நாட்டையும் ஒன்று சேர்த்தது நிலையான அரசொன்றை அமைத்தார்.
- சாலமோன் அரசனின் ஆட்சிக் காலம் அமைதியின் கால மாக இருந்தபோதிலும் முன்னைய அரசர்கள் போர்ச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டியேற்பட்டது.
- கோவிலைக் கட்டுவதற்காக 7 வருடங்களும் அரண்மனையைக் கட்டுவதற்காக 13 வருடங்களும் எடுத்தன (1 அர. 5:7).
- யூத அரச பரம்பரையில் சிறந்ததோர் அரசன்.
- அவரது ஆட்சிக் காலத்தில் இஸ்ரயேலின் பொருளாதார முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.
  - இடையர்களாகவும் மற்றும் விவசாயிகளாகவும் வாழ்ந்த மக்கள் மிகவும் பாரியளவிலான வியாபாரங்களில் ஈடுபட்டனர்.
  - கப்பல்களைச் சொந்தமாக்குவதிலும் சர்வதேச வியாபாரத்திலும் ஈடுபட்டனர் (1 அர 9:26, 10:22).
  - நகரமயமாக்கலை நோக்கிச் செல்வது பாரிய சமூக சமநிலையற்ற தன்மையை உருவாக்கியது.
- தனது அரசை 12 மாவட்டங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பழைய பன்னிரு குலத்தினரின் முறைகளுக்கேற்ப அரச அதிகார முறையொன்றினை ஏற்படுத்தினார்.
- அரசனின் செலவுகளை ஈடுசெய்வதற்கும் அதிக வரியினை வசூலித்தார்.
- தாவீதின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அரச சேவை முறை அல்லது ஏழைகளிடம் கட்டாயமாக வேலை வாங்குவது, சாலமோனின் ஆட்சிக் காலத்தில் மிகக் கடினமான கொள்கையாகி மக்களை பாதிப்புக்குள்ளாக்கியது.
- படிப்படியாக சாலமோன் அரசனின் ஆட்சி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது.

### 1.2.2.4 வடக்கு தெற்கு என அரசு பிரிதல்.

- சாலமோன் அரசனின் ஆட்சியில் மக்கள் விரக்தியடைவதற்கான காரணங்கள்.
    1. சாலமோன் அரசனால் ஆணையிடப்பட்ட வரியின் சுமை அதிகரிக்கப்பட்டமை.
    2. அவரது கட்டடம் கட்டும் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்ட மக்களின் தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டமை.
    3. எருசலேம் ஆட்சி முறையில் யூதா குலத்தினருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டமை.
- சாலமோன் அரசனின் இறப்பின் பின்னர் மக்கள் சாலமோன் அரசனின் மகன் ரெகபெயாமிடமிருந்து ஆறுதல் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். (1 அர. 12).
- அது நிறைவேறாமை (1அர. 12:!0-11).
- இதனால் கோபங் கொண்ட துன்பப்பட்ட மக்கள் கிளர்ச்சி செய்தனர்.
- இக்கிளர்ச்சிக்காரருக்குத் தலைமை தாங்க எரொபவாம் என்பவர் நியமிக்கப்பட்டார்.
- விளைவு: வடக்கு – தெற்கு நாடு பிரிதல் (கி.மு 922)
- தென் (யூதா) அரசு
    - இரு கோத்திரங்கள் யூதா மற்றும் பெஞ்சமின்
    - தலைநகரம்: எருசலேம்
- வட அரசு (இஸ்ரயேல்)
    - பத்து கோத்திரங்கள்
    - தலைநகரம்: செக்கேம்

### 1.2.2.5 அசீரியாவுக்கு நாடுகடத்தப்படல்.

- வட அரசின் யாத்திரைத் தலங்கள்: பெத்தெல், தாண் (1 அர. 12:29).
- அந்த யாத்திரைத் தலங்களைக் கட்டியதன் நோக்கம்: மக்கள் எருசலேம் ஆலயங்களுக்குச் செல்லுவதைத் தடை செய்தல் (1 அர. 12:32).
- இந்த இரு ஆலயங்களிலும் யாவே இறைவனை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக பொன்னாலான இரு கன்றுக்குட்டிகளை செய்தார்.
- எவ்வாராயினும் கன்றுக்குட்டி என்பது ஓர் உருவம்; சிலை; வழிபாடு பால் தெய்வ அடையாளம் ஆகையால் சிலை வழிபாடு, பல தெய்வ வழிபாடு.
- மேலும் எரோபவாம் அரசன் லேவியரல்லாதவர்களை பலிசெலுத்துவதற்காக குருக்களாக நியமித்தார்.
- வழிபாடு செலுத்தும் நாட்காட்டியையும் மாற்றினார் (1அர. 12:25-33).
- கி.மு 722 இல் அசீரியப் பேரரசு வட அரசு அல்லது இஸ்ரயேலை ஆக்கிரமித்து. 27,290 பேரளவில் அசீரியாவுக்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டமை.
- வட அரசில் வெறுமையான நகரங்களில் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறைக் கைதிகள் பலவந்தமாக குடியமர்த்தப்பட்டனர்.
- இஸ்ரயேல் 10 குலங்களிலிருந்தும் எஞ்சியவர்களுக்குமிடையே நடைபெற்ற கலப்புத் திருமணத்தின் பிரதிபலனாக அப்பிரதேசங்களில் கலப்பு மக்களினமொன்று உருவாகியது.
- இம் மக்கள் பிரிவினர் இஸ்ரயேலரின் இறைவனையும் அவர்கள் முதலில் பிறந்த இடங்களிலிருந்து கொண்டு வந்த வேற்றுத் தெய்வங்களையும் வழிபட்டனர். இவ்வாறான கலப்புச் சமய வழிபாட்டாளர்களை ''சமாரியர்கள்'' எனும் கௌரவமற்ற பெயரில் தென் அரசின் தூய யூத இனத்தவர் அழைத்தனர்.

- பபிலோனியாவுக்குச் சென்ற தென் பகுதி மக்கள் மீண்டும் வந்தமையானது அசீரியாவுக்கு கொண்டுசெல்லபட்ட வடக்கில் வாழ்ந்தவர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு வராமையினாலும் வட அரசின் வரலாறு அழியும் நிலைக்குள்ளானது.

### 1.2.2.6 பபிலோனிய பேரரசு (கி.மு 612-538)

- கி.மு 7வது நூற்றாண்டில் முதல் மூன்று காலாண்டுகளில் வலிமைமிக்க பேரரசு: அசீரியா
- இறுதிக்காலாண்டில் பலம்மிக்க பேரரசு: பபிலோனியா

**யூதாவின் இறுதி அரசர்கள்**

- **யோசியா அரசன் (கி.மு 639-609)**
  - தாவீது, சாலமோன் ஆகிய அரசர்களின் பின்னர் யூதா தேசத்தை ஆண்ட மிகவும் உத்தமமான அரசன்
  - இவரது முப்பது வருட கால ஆட்சியில் நல்லவற்றையே செய்தார்.
  - சமூக மற்றும் சமய ரீதியான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.
  - இதற்காக இறைவாக்கினர் குல்தாவும் நாகூம், செப்பனியா, அபகூக்கு, எரேமியா ஆகிய இறைவாக்கினர்களதும் உதவி கிடைத்தது.
  - இந்த சமய சீர்திருத்தங்கள் அசீரியாவில் உள்ளூர் போர் நடந்துகொண்டிருந்த பொழுது மிகவும் பலவீனமாக இருந்த காலகட்டத்தில் சமய திருத்தங்களை வட அரசின் வட பிரதேசத்தின் எல்லை வரையும் கொண்டு செல்லப்பட்டமை.
  - எரொபாவாம் அரசனால் வட அரசில் பெத்தேலில் கட்டப்பட்ட தொழுகைக் கூடங்களையும் வேறு தொழுகை கூடங்களையும் யோசியா அரசன் அழித்து விட்டான்.
  - வடக்கேயும் தெற்கேயும் வழிபாடுகள் எருசலேம் கோவிலை மையமாக வைத்து நடத்தப்பட்டன.
  - முழு பலஸ்தீனாவும் மறுபடியும் தாவீதின் பாரம்பரையின் ஆட்சிக்கு உரிமையானது.
  - கி.மு 722 இல் வட அரசை அசீரியா ஆக்கிரமித்த சந்தர்ப்பத்தில் லேவியர் சட்ட நூலை எடுத்துக் கொண்டு தென் அரசுக்குத் தப்பி ஓடி மீண்டும் அவை கி.மு 621 ஆம் ஆண்டளவில் யோசியாவின் ஆட்சிக் காலத்தில் கண்டெடுக்கப்பட்டது (2அர. 22:8). யோசியா அரசனால் ஆரம்பிக்கப்பட்ட சமய மற்றும் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும், இச் சட்டநூல் பயன்படுத்தப்பட்டது.
  - யோசியா அரசனின் ஆட்சிக்காலத்தில் சட்ட நூலில் மோசேயின் போதனைகள் மூன்று வடிவத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு இணைச்சட்ட நூலில் உள்ளடக்கப்பட்டது.

**யோயாக்கிம் அரசன் (கி.மு 609 - 598)**

- கி.மு 605 இல் நெபுகத்நேசர் யூதா அரசை பபிலோனியாவுக்கு வரி செலுத்தும் ஓர் அரசாக ஆக்கினார்.
- ஆனால் கி.மு 602 இல் எகிப்தில் பார்வோன் - நெக்கோ அரசனால் தூண்டப்பட யோயாக்கிம் பபிலோனியாவுக்கு கப்பம் செலுத்துவதை நிறுத்தினார்.
- அதனால் கி.மு 598இல் நெபுகத்நேசர் மீண்டும் எருசலேமைச் சுற்றி வளைத்தார்.
- நாட்டில் பஞ்சம் பெருமளவில் அதிகரித்தது. அவ்வேளையில் உள்ளூர் சூழ்ச்சிகள் மற்றும் கிளர்ச்சிகள் மத்தியில் யோயாக்கிம் அரசன் இறந்தார் அல்லது கொல்லப்பட்டார்.

**யோயாக்கின் அரசன் (கி.மு 598 - 597)**

- யோயாக்கிமின் இறப்பின் பின்னர் அரசனானான்.

- இவர் அரசனாக பதவியேற்று மூன்று மாதங்களில் பபிலோனிய படையினர் எருசலேமை முற்றுகையிட்டனர்.
- அதன் விளைவாக கி.மு 597 இல் நெபுகத்நேசரின் படை எருசலேம் ஆலயத்திலிருந்து பொன் மற்றும் ஆண்டவரின் இல்லத்தில் இருந்த விலையுயர்ந்த பாத்திரங்களையும், கடத்திக்கொண்டு அரசனையும், இறைவாக்கினர் எசேக்கியேலையும், அதிகாரிகளையும், போர்த்திறன் கொண்டவர்கள் உட்பட 10000 பேரும் நாடு கடத்தப்பட்டனர்.

**செதெக்கியா அரசன் (கி.மு 597 - 587)**

- தாவீதின் பரம்பரையின் கடைசி அரசனாவார்.
- இவர் மென்மையும் இரக்க குணமும் உள்ள அரசராக இருப்பினும் உறுதியற்ற, பலவீனமுள்ள ஓர் ஆட்சியாளராவார்.
- எரேமியா போன்ற நேர்மையான போதனையாளருக்கு செவி மடுக்காமல் போனதால் நெபுகத்னேசரால் கி.மு 587 இல் எருசலேம் நகர் அழிக்கப்பட்டது
- செதெக்கியாவின் வம்சத்தில் யூதா அரசின் ஆட்சிக்கு உரிமை கோர ஒருவரும் எஞ்சியிருக்கவில்லை. செதெக்கியா அரசன் உட்பட அனேகமானோரை அடிமைகளாக நாடு கடத்தினர்.
- திருக்கோவில் அழிக்கப்பட்டது.

**பபிலோனியாவில் வாழ்ந்த யூதர்கள் (கி.மு 597 - 537)**

- அசீரியா, பபிலோனியா என்பன தமக்குக் கீழ் அடிமையாக்கப்பட்ட நாடுகள் தொடர்பாக இரு வழிகளில் செயற்பட்டன.
- அசீரியா வடக்கே மக்களை பல்வேறு பிரதேசங்களில் குடியமர்த்தி வடக்கில் வெற்றிடமாயிருந்த நகரங்களில் அசீரிய பேரரசன் பல்வேறு பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட மக்களை குடியமர்த்தினாலும், பபிலோனியா தெற்கிலிருந்து நாடுகடத்தி எடுத்துச்செல்லப்பட்ட மக்களை கலப்பில்லாத இனமாக வேறு குடியிருப்புகளில் குடியேற்றியதோடு, தெற்கே வெறுமையான நகரகளில் வேறு மக்களினத்தை குடியமர்த்தவில்லை.
- இதனால் வடக்கேயுள்ள மக்களைப் போன்று தெற்கேயுள்ள மக்களில் கலப்பு இருக்கவில்லை. தெற்கிலுள்ள மக்கள் மீண்டும் நாடுகடத்தலிலிருந்து திரும்பி வருகையில் அவர்களுடைய பிறந்த நாடு அவர்களுக்காக வெறுமையாகக் காணப்பட்டது.
- நாடுகடத்தப்பட்ட காலத்தில் யூதர்கள் நாடுகடத்தப்பட்டமையை தமக்குக் கிடைக்கப்பட வேண்டிய பொருத்தமான தண்டனையாகவே நோக்கினர்.
- இத்தண்டனையின் வழியாக புதியதொரு எதிர்காலத்துக்கு யூத மக்கள் தங்களைத் தூய்மையாக்கலும் மற்றும் ஆயத்தமாக்கலும் என எண்ணினர்.
- நாடுகடத்தப்பட்ட யூத மக்கள் ஆண்டவரின் ஊழியனைப் போன்று இருந்தனர் (எசா 42:1-9, 49: 1-6, 50: 4-11, 52: 13-53: 12).
- இக்காலத்தில் யூதர்களின் நம்பிக்கையை காப்பாற்றிக் கொள்வதற்கு தொழுகைக் கூடங்கள் (சினகொக்) ஆரம்பிக்கப்பட்டன.
- நாடுகடத்தப்பட்டபோது பபிலோனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட திறமையுள்ள கலைஞர்கள், குலத்தலைவர்கள், பிரபுக்கள் மிக விரையில் பொருளாதார மற்றும் சமூக வசதிகளை உரிமையாக்கிக் கொண்டு சொந்த முயற்சியினால் மிக முன்னேற்றகரமான நிலைமையையெய்தினர்.
- மிக வளர்ச்சியடைந்த வங்கிகள் அவர்களுடையதாகும். மிக வளமான செழிப்புள்ள நிலபுலன்களும் அவர்களுடையதாகும்.

- அடிமை வேலைக்காக வந்த யூதர்கள் ஆண், பெண் வேலையாட்கள் ஆயிரக்கணக்கானோராவர்.
- இவர்களுள் சிலர் அரச மாளிகையில் உயர்மட்ட பதவிகளை வகித்தனர்.
  - சிலர் அரசுக்கு வரி தண்டுபவர்களாயினர்.
  - கால்வாய் வழிகளை சோதனைக்குட்டபடுத்தி நிர்வகித்தார்கள்.

### 1.2.2.7 பாரசீகர் காலம் (கி.மு 539 - 333)

- கி.மு 539இல் பபிலோனியா பாரசீக அரசன் சைரசு மன்னனுக்கு (கி.மு 550-530)கீழ் கொண்டுவரப்பட்டது.
- பலவந்தமாக வேலை வாங்குதல் வேரோடு இல்லாதொழிக்கப்பட்டது.
- வீடுகளின் அமைப்புக்கள் அதிக முன்னேற்றமடைந்தன.
- அதே போன்று பொதுமக்களின் அன்பையும் பெற்றுக்கொண்டார்.
- இதைத் தவிர மக்களினால் கடத்திச்செல்லப்பட்ட ஆலய பொருள்கள் அவர்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டமை.
- அவர்களது சமய தொழுகைக் கூடங்கள் மீளக் கட்டியெழுப்ப உதவியமை.
- நாடுகடத்தப்பட்ட மக்களை மீண்டும் அவரவர் நாடுகளுக்கு செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.
- பபிலோனியாவில் வாழ்ந்த யூதர்கள் மூன்று கட்டங்களின் கீழ் தமது தாய்நாட்டை நோக்கி வருகை தந்தனர்.

1. செருபாபேலின் தலைமைத்துவத்தின் கீழ் கி.மு 538 இல் ஐம்பதாயிரம் பேரைக்கொண்ட முதலாவது குழு பபிலோனியாவிலிருந்து புறப்பட்டு கி.மு 536ஆம் ஆண்டளவில் எருசலேமை அண்மித்தனர்.
   - திருக்கோவிலை கட்டும் பணி கி.மு 536 ஆம் ஆண்டளவில் அத்திவாரம் இடப்பட்டு கி.மு 515இல் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.
2. கி.மு 458 இல் எஸ்ராவோடு பன்னிரண்டாயிரம் பேரைக் கொண்ட இரண்டாம் குழு எருசலேமுக்கு வருகை தந்தது.
   - எஸ்ரா என்பவர் ஒரு குரு
   - திருச்சட வல்லுநர் ஆவார் (எஸ். 7: 12).
   - அவரின் பணிகளாவன:
     - உடன்படிக்கையைப் வாசித்தல் (நெகே. 8).
     - வெளிநாட்டு மனைவியரை வெளியேற்றல் (எஸ் 10).
     - உடன்படிக்கையைப் புதுப்பித்தல்
     - ஓய்வு நாள் விடுமுறையை நடைமுறைப்படுத்தல்

3. மூன்றாவது குழு கி.மு 444இல் நெகேமியாவின் கீழ் எருசலேமை வந்தடைந்தது.
   - நெகேமியா எருசலேமை வந்தடைந்த பின்னர்
     - யூதா நாட்டின் ஆளுநராகப் (கி.மு 444-432) பணியாற்றினார் (நெகேமியா 5:14, 5:18).
     - எருசலேம் மக்களைத் தைரியப்படுத்தினார்
     - எருசலேம் நகரில் உடைந்து தகர்ந்து இருந்த மதில்களை மீண்டும் கட்டியெழுப்பியதோடு கதவுகளுக்குத் தாழிட்டும், அழிந்திருந்த வீடுகளையும் கட்டியெழுப்பினார் (சீரா.9:13).

    - கி.மு 432 பாரசீகத்துக்கு மீண்டும் சென்று நெகேமியா கி.மு 425 இல் எருசலேமுக்கு வந்தார்.
    - இரண்டாம் முறை ஆளுநராக பணியாற்றிய காலத்தில் (கி.மு 425-410) பத்திலொரு பங்கை லேவியருக்குக் கிடைக்கச்செய்தல், ஓய்வு நாளில் வியாபாரம் செய்வதை நிறுத்துதல், கலப்புத் திருமணத்தைத் தடை செய்தல் போன்ற சமூக சீர்திருத்தங்களை செயற்படுத்தினார் (நெகே 13).

- பாரசீகர் காலத்தில்
    - கோவிலில் வழிபாடுகள் பொதுவாக நடைபெற்றது.
    - பாஸ்கா - புளியாத அப்பத் திருவிழா, பெந்தக்கோஸ்து, திருவிழா கூடாரத்திருவிழா போன்ற முக்கிய திருவிழாக்கள் மூன்றும், பாவமன்னிப்புத் திருவிழாவும் நிறை-வேற்றப்பட்டன.
    - யூதா மக்கள் சட்டத்துக்கு மதிப்பளிப்பதும் இக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.
    - தலைமைக் குரு நாட்டை ஆட்சி செய்தார்.
    - தலைமைக் குருக்களாக இருந்தவர்கள் தாவீதின் ஆட்சிக் காலத்திலிருந்த குரு சாதோக்கின் பரம்பரையைச் சேர்ந்தவராவர்.

### 1.2.2.8 கிரேக்க காலம் (கி.மு 333 - 175)

- மாமன்னர் அலக்சாண்டர் (கி.மு 336-323) கி.மு 333 இல் பலஸ்தினாவைக் கைப்பற்றியது தொடக்கம் கி.மு 63 இல் உரோமைய படைத்தளபதியான பொம்பேயின் ஆக்கிரமிப்பு வரையான இரண்டரை நூற்றாண்டு கிரேக்க காலத்தைச் சேர்ந்ததாகும்.
- தாலமி மன்னனின் பரம்பரையின் கீழ் (கி.மு 301-198) பலஸ்தீனாவுக்குகடினமான சட்டதிட்டங்களோ மற்றும் பொருளாதாரத் தடையோ இருக்கவில்லை.
- பாரசீக காலத்தைப் போன்றே சட்ட ஒழுங்குகள் சிக்கல்களின்றியும் குறிக்கப்பட்ட வரியினைச் செலுத்தியும் மக்கள் வாழ்க்கையை நடாத்திச் செல்லக் கூடியதாயிருந்தது.
- அங்கு தலைமைக் குருக்களினால் மக்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டு குறிக்கப்பட்ட வரித்தொகை தாலமி மன்னர்களுக்குச் செலுத்தப்பட்டது.
- அவ்வாறே இக் காலத்தில் தலைமைக் குருக்கள் ஆன்மீக ஆட்சியாளர்களாக மட்டுமல்லாது படிப்படியாக அரசியல் ஆட்சியாளர்களாகவும் திகழ்ந்தனர்.
- செப்துவாஜிந்த் பிரதி உருவாக்கப்பட்டது.
- ஏழாவது அந்தியோக்கு எப்பிபான் மன்னன் (கி.மு 175-153)
    - பல்வேறு இனத்தவர்களும் பல்வேறு சமயத்தவர்களும் வாழ்ந்த தனது அரசில் கலாசார ஒருமைப்பாட்டுக்காக எலேனிசம் அல்லது கிரேக்க கலாசாரம் மற்றும் நம்பிக்கை முறைகளை ஏனைய இனத்தவருக்குப் பலவந்தமாக திணித்தார்.
    - அவர் கோவில் திரு உறைவிடத்திற்குள் புகுந்து, பொற்பீடம், விளக்குத் தண்டு, காணிக்கை அப்ப மேசை, நீர்மப் படையலுக்கான குவளைகள், கிண்ணங்கள் ,பொன் தூபக் கிண்ணங்கள், திரை, பொன் முடிகள், கோவில் முகப்பில் இருந்த பொன் அணிகலன்கள் அனைத்தையும் சூறையாடினார்.
    - திருச்சட்டத்தினை மறப்பதற்கும், கிரேக்க வழிபாட்டு முறைகளுக்கு சொந்தமற்றவைகளை செய்யாதிருப்பதற்கும், திரு உறைவிடத்தில் எரிபலிகள், பலிகள், காணிக்கை மற்றும் நீர்மப் படையல் செய்வதைத் தடுக்கவும், ஓய்வுநாளையும், திருவிழாக்களையும், தீட்டுப்படுத்துவதற்கும், திரு உறைவிடத்தையும் குருக்களையும் அழிக்கவும், சிலை வழிபாட்டுபீடம், கூடாரங்கள், பலி பீடங்கள் கட்டுவதற்கும், பன்றிகளையும் வேறு தீட்டுப்பட்ட விலங்குகளை பலியிடவும், விருத்த சேதனம் செய்யாதிருக்கவும் அரச கட்டளையால் தனது மக்களுக்கு ஆணை பிறப்பித்தார்.

- ○ இந்த அரச கட்டளையை கடைப்பிடிக்காதவர்களுக்கு மரண தண்டனை விதித்தார்.
- ○ இஸ்ரயேலில் அனேகர் சிலை வழிபாட்டுக்கு காணிக்கை செலுத்தி, ஓய்வு நாளைத் தீட்டுப்படுத்தி அரசனின் சமயத்தைப் பின்பற்றினார்கள். (1 மக்கபேயர் 1: 41-61). எனினும் அரச ஆணைக்கு எதிராக தமது உயிரையும் பொருட்படுத்தாமல் தங்களது நம்பிக்கைக்கு சான்று பகர்ந்தவர்கள் பலர் இருந்தனர் (1 மக்கபேயர் 1: 62-64).
- ○ கி.மு 167 கிஸ்லோவு (நவம்பர் - டிசெம்பர்) மாதம் 15 ஆம் நாள் யுப்பீட்டர் ஒலிம்பு கடவுளின் சிலையை எருசலேம் கோவிலின் திரு உறைவிடத்திற்கு மேல் வைத்து கிஸ்லோவு மாதம் 25ஆம் திகதி யுப்பீடர் கடவுளின் திருவிழாவை நடாத்தினர்.
- ○ இத்துன்புறுத்தல்களினால் கி.மு 167 இல் மக்கபே கிளர்ச்சி ஆரம்பமானது.
- ○ கிளர்ச்சி வெற்றியடைந்தது.
- ○ பிற இன வழிபாடுகளுடன் தொடர்புடைய பலிபீடம் உட்பட எல்லாப் பொருள்களையும் கோவிலிலிருந்து வெளியேற்றினார்.
- ○ புதியதொரு பலிபீடம் எழுப்பப்பட்டு கி.மு 164 கிஸ்லோவு மாதம் 25 ஆம் நாள் கோவில் தூய்மைப்படுத்தல் விழா நடைபெற்றது.
- ○ நான்காவது அந்தியோக்கு எப்பிபானசினால் பலவந்தமாக யூதர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளச் செய்த ஹெலனிஸம் ஒழிக்கப்பட்டது.

### 1.2.2.9 உரோமையர் காலம்

- கி.மு 63 இல் பொம்பேயின் உரோமைப் படை, இஸ்ரயேலைக் கைப்பற்றியமை.
- மக்கபேயரின் காலத்தில் பெற்றுக் கொண்ட சுதந்திரம் முடிவுற்றது.
- இலத்தின் மொழி அங்கு அரச மொழியாக்கப்பட்டது.
- உரோமைய அதிகாரிகள் கிரேக்க மொழியைக் கற்றவராயிருந்தனர்.
- எல்லா உரோமைய உத்தியோக பூர்வ அறிவித்தல்களிலும் கிரேக்க மொழிபெயர்ப்பு ஒன்றும் காணப்பட்டது.

**பெரிய ஏரோது அரசன் (கி.மு 37 - 4)**

- கி.மு 40 இல் பாரசீகத்தினர் பலஸ்தீனாவையும் எருசலேமையும் தமக்குக் கீழ் கொண்டு வந்தனர்.
- கி.மு 37 இல் அப்போதிருந்த உரோமைய படைவீரனான இதுமேய இனத்தைச் சேர்ந்த ஏரோது என்பவரை எருசலேமை அடிமைப்படுத்திக் கொள்வதற்காக அனுப்பினர்.
- கி.மு 37 இல் இருந்து மீண்டும் உரோமையப் பேரரசு பலஸ்தீனாவை அடிமையாக்கியது.
- கைப்பொம்மை அரசனாக பெரிய ஏரோதுவை நியமித்தது.
- யூத சமயத்தைத் தழுவினார்.
- இவர் 10 திருமணங்கள் செய்துள்ளார்.
- இவர் குரூரமான ஆட்சியாளராவார்.
- இவருடைய இருகைகளும் இரத்தத்தில் தோய்ந்தவையாகும்.
- தனது மனைவியையும் பிள்ளைகளையும் கொலை செய்தவர்.
- இயேசுவின் பிறப்பைத் தொடர்ந்து பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொலை செய்யும்படி கட்டளை பிறப்பித்தவரும் இவரேயாவார் (மத். 2: 16-17).
- புதிய நகர் ஒன்றை நிறுவுவதற்கும் பழைய நகரத்தை சீர்திருத்துவதற்கும் முயற்சி செய்தார்.
- எருசலேமில் கோட்டை ஒன்றைக் கட்டினார்.
- சமாரிய நகரத்தையும் புனருத்தாரணம் செய்தார்.

- மத்திய தரைக் கடலுக்கு அண்மையில் செசாரியா எனும் நகரத்தைக் கட்டியெழுப்பி அங்கு துறைமுகமொன்றையும் கட்டியெழுப்பினார்.
- எருசலேம் கோவிலுக்கருகே அன்றோனியா எனும் மாளிகையை தனது வாசஸ்தலமாக அமைத்துக் கொண்டார்.
- அவரது விசேட ஆக்கம்: எருசலேம் கோவிலை புதுப்பித்தல்
    - கட்டியெழுப்பும் ஆரம்பப்பணி: கி.மு 19
    - இச் சீர்திருத்ததின் முதலாவது கட்டம் ஒன்பது வருடங்களில் நிறைவுற்றது.
    - அதிலிருந்து ஏரோதின் கோவில் என இது அழைக்கப்பட்டது.
    - ஆயினும் இச்சீர்திருத்த வேலைகள் கி.பி 64 இல் முழுமை பெற்றது.
    - இயேசு கோவிலைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வு (கி.பி 28 இல் பாஸ்கா விழாவின்போது)
    - இதனால் கோவிலைக் கட்டி முடிப்பதற்கு நாற்பத்து ஆறு ஆண்டுகள் செலவிடப்பட்டதாக யோவான் 2: 20இல் கூறப்பட்டுள்ளது.
- ஏரோதின் வாழ்வின் இறுதிக்காலத்தில் அவரது மூன்று புதல்வர்களுக்கும் அவரது அரசு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

### 1. ஆளுநர் ஆர்க்கலாவு (கி.மு 4 - கி.பி 6)

- இவர் பெரிய ஏரோதுவின் மூத்த மகனாவார்.
- அரசின் அரைப்பகுதி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (யூதேயா, சமாரியா, இதுமேயா)
- இவருடைய தந்தை பெரிய ஏரோதைப் போன்று இவரும் குரூரமானவராயிருந்தார் (மத்தேயு 2:22).
- இவரது குரூரமான செயல்களைக் கண்ட யூதர்கள் உரோமைக்குச் சென்று பேரரசனுக்கு முறைப்பாடு செய்தனர்.
- பேரரசன் கி.பி 6இல் இவரை நாட்டிலிருந்து வெளியேற்றி வியன்னாவுக்கு அனுப்பினார்.

### 2. ஆளுநர் ஏரோது அந்திபாஸ் (கி.மு 4-கி.பி 39)

- இவர் கலிலேயா மற்றும் பெரேயா என்பவற்றின் இளவரசராக நியமிக்கப்பட்டார்.
- தந்தையைப்போல இவரும் கொடூரமானவராயிருந்தார்.
- ஏரோது அந்திபாஸ் முதலில் அரேபியப் பெண்ணை திருமணம் முடித்தான்.
- பின்னர் தனது சகோதரரான பிலிப்பின் மனைவியாகிய ஏரோதியாவை வைப்பாட்டியாக திருமணம் முடித்தார்.
- ஏரோதியாவை திருமணம் முடிப்பதற்காக அரேபியப் பெண்ணை கொலை செய்தார்.
- ஏரோதியா ஏரோது அந்திபாஸ் மூலம் திருமுழுக்கு யோவானை கொலை செய்வித்தார்.
- கி.பி 18-22 காலப்பகுதியிலே திபேரியு (அகுஸ்து) பேரரசனின் பெயரில் பாரிய நகரொன்றை தனக்கென அவர் கட்டிக் கொண்டார்.

### 3. ஆளுநர் இரண்டாவது ஏரோது பிலிப்பு (கி.மு 4-கி.பி 34)

- நேர்மையுள்ள மற்றும் இரக்கமுள்ள நபராவார்
- முதலாவது ஏரோது பிலிப்புவுக்கும் ஏரோதியாவுக்கும் பிறந்த சலோமியைத் திருமணம் முடித்தார்.
- தலைநகரம்: பெத்சாய்தா
- ‘‘பிலிப்புச் செசரியா’’ நகரையும் கட்டினார் (மத். 16: 13).

- இவர் இந்நகரத்துக்குப் பெயரிடும் போது தனது பெயரையும் அதில் சேர்த்து கொண்டமை மத்திய தரைக் கடலுக்கு அயலில் உள்ள பலஸ்தீனாவின் முக்கிய ஆட்சி மையமான செசரியா நகரத்தை தெளிவாக பிரித்து இனங்கண்டு கொள்வதற்காகவேயாகும்.

### 4. ஆளுநர் பொந்தியு பிலாத்து (கி.பி 26-36)

- யூதேய, சமாரியா, இதுமேயா பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்ட ஐந்தாவது ஆளுநர் ஆவார்.
- ஆட்சி மத்திய பீடம்: செசரியா
- பெருமளவிலான யூதர்கள் எருசலேமில் பாஸ்கா விழாவுக்காக ஒன்ற கூடுவதால், அங்கு கலவரம் ஏற்படுவதற்கான நிலைமைகள் அதிகம் இருந்தமையால், அவ்வாறான சந்தர்ப்பத்தைத் தடுக்கும் நோக்கத்தின் நிமித்தம் அக்காலகட்டத்தில் அவர் அங்கு வாழ்ந்தார். இதன் பொருட்டு அவர் ஏரோதின் அரண்மனையை உபயோகித்தார்.
- யூதர்கள் இயேசுவை அங்கு தான் கொண்டு வந்தனர்.

**தேர்ச்சி** 2.0 : இறை வெளிப்பாட்டிற்கேற்ப வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம்** 2:1 : பாரம்பரியங்கள் ஐந்நூலை மொழிபெயர்க்க பயன்பட்டன என்பதை விளங்கிக் கொள்வர்.

**பாடவேளை** : 15

**கற்றல் பேறுகள்** :

- ஐந்நூலில் அடங்கியுள்ள நான்கு பாரம்பரியங்கள் தொடர்பான தகவல்களைக் கோவைப் படுத்துவார்.
- இறைவனைப் பல்வேறு வழிகளினூடாக அனுபவிக்க முடியும் என்பதனை ஏற்றுக்கொள்வார்.
- ஐந்நூலின் நான்கு பாரம்பரியங்கள் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- அன்றாட வாழ்வில் இறைசட்டங்களைக் கடைப்பிடிக்க முயற்சிப்பார்.
- நேர்மையான வாழ்வு வாழ பிறருக்கு வழிகாட்டுவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :

### 2.1.1 ஐந்நூல் தொடர்பான பொது அறிமுகம்:

- ஐந்நூல் என்பது திருவிவிலியத்திலுள்ள முதல் ஐந்து நூல்களாகும். அவை தொடக்கநூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம் என்ற நூல்களாகும்.
- இந்நூல்கள் கிரேக்க மொழியில் தோரா என அழைக்கப்படுகிறது. அதன் கருத்து சட்டம் அல்லது படிப்பினைகள் எனப்படும்.
- ஐந்நூலுக்கு கூறப்படும் வேறு பெயர்கள்: பஞ்சாகமம், நீதிச்சட்டம், மோசேயின் சட்டம், மோசேயின் நீதி, மோசேயின் நீதி நூல்.
- 19ம் நூற்றாண்டு வரை ஐந்நூலின் ஆசிரியர் மோசே என அறிமுகம் செய்யப்பட்டது. இதை திருவிவிலியத்தில் (விப 34:27) பகுதியில் காணலாம். ஆனால் ஐந்நூல் மோசே அல்லது வேறொரு ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்டிருந்தால் அதன் அமைப்பு, மொழிநடை, எண்ணக்கரு என்பன ஒரே விதமாக அமைந்திருக்க வேண்டும்.
- திருவிவிலியத்தின் பின்னணியை ஆழமாக ஆராச்சி செய்த லூதரன் சபையைச் சேர்ந்த ஜேர்மன் இனத்தவரான எச்.கிராப், ஜூலியஸ் வேல்ஹவுசன், த வெற்ற, எச் இக்வென் போன்றோர் இதற்கு முரண்பாடான கருத்துக்களை முன்வைத்தனர்.
    1. ஐந்நூலை எழுதியவர் மோசே என்றால் அவரின் இறப்பைப் பற்றி ஐந்நூலில் எழுதியவர் யார்?
    2. மோசேக்கு ஆசிரியத்துவம் வழங்கப்படாத நூல்களில் ஐந்நூலுக்குரிய மொழிநடை காணக்கூடியதாக இருப்பது ஏன்? (யோசுவா தொடக்கம் நீதிபதிகள் வரையுள்ள நூல்களில் இணைச்சட்ட நூலிலுள்ள பண்புகள் உள்ளன.)
    3. ஒரே ஆசிரியரால் ஐந்நூல் எழுதப்பட்டிருந்தால், ஒரே செய்தியை மீண்டும் மீண்டும் கருத்துக்கள் கூறுதல் மற்றும் பயன் படுத்தும் மொழியில் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் காணப்படுவது ஏன்?
        i. படைப்புப் பற்றிய இரண்டு கதைகள் (தொ.நூல் 1:1-2, 4அ, 2:4ஆ-25)
        ii. இறை கட்டளையைப் பற்றி இரண்டு குறிப்புகள் (வி.ப. 20:2-17, இ.ச. 5:6-21)
        iii. நோவாவின் பேழையில் இருந்த விலங்குகளின் எண்ணிக்கை(தொ.நூ 7:2, 7:8)
        iv. ஒருவருக்கு, ஒரு இடத்துக்கு இரண்டு பெயர்கள்.

உ+ம்: • மோசேயின் மாமனாருக்கு றகுவேல் மற்றும் இத்திரோ
- இறைவனுக்கு, யாவே மற்றும் எலோகிம்
- சீனாய் மலை: சீனாய், ஒரேபு

- இவ்வாறான கருத்துக்கள் பலவற்றினால் ஐந்நூல் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்ட நூல் அல்ல என்பது தெளிவாகின்றது. ஐந்நூல் எழுதுவதற்கு நான்கு வாய்மொழிப் பாரம்பரிய மரபுகள் உதவின என்பது விவிலிய வல்லுநர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அவை யாதெனில்: யாவே (J), ஏலோகிம் (E), இணைச்சட்டம் (D), குரு (P) என்பனவாகும். ஐந்நூல் எழுதப்பட்ட இம்மரபுகள் ஒரே காலகட்டத்தில் தோன்றியவை அல்ல. பலநூற்றாண்டு காலங்களாக படிப்படியாக உருவானவையே.

| மரபுகள் | | வாய்மொழி | எழுத்து வடிவம் |
|---|---|---|---|
| யாவே | (J) | கி.மு 950 | 900 |
| எலோகிம் | (E) | கி.மு 750 | 722 |
| இணைச்சட்டம் | (D) | கி.மு 700 | 621 |
| குரு | (P) | கி.மு 587-400 | 400 |

### 2.1.2 யாவே (J) மரபு :-

- இம்மரபில் இறைவனுக்கு பயன்படுத்தப்பட்ட பெயர் யாவே ஆகும். உ + ம் படைப்புப் பற்றிய இரண்டாம் கதையில் (தொ.நூ 2:4a-25) படைப்பாளராக இறைவனை ''யாவே'' என்ற தூய நான்கு எழுத்துக்களால் (YHWH) பெயரிடப்பட்டுள்ளது. இது தமிழ் திருவிவிலியத்தில் ஆண்டவர் என் மொழிப்பெயர்க்கப் பட்டுள்ளது.
- இம் மரபு Y க்குப் பதிலாக J எழுதக் காரணம் ஜேர்மன் மொழியில் இறைவனின் பெயரை எழுதும்போது J என்ற எழுத்தைப் பயன்படுத்தியமையும், எபிரேய மொழியில் Y க்கும் J க்கும் எவ்வித வித்தியாசம் இல்லாதிருப்பதாகும். .

### மொழிநடையும் இலக்கியப் பண்பும்

- J மரபில் கதைகள் திறமையாக சொல்லப்பட்டுள்ளன.
- அக்கதைகள் இலகுவானவை, தெளிவானவை, வித்தியாசமானவை, நாடக அமைப்பைக் கொண்டவை, இயற்கையானவை, உயிருள்ளவை. உருவக அமைப்பிற்கு இடமளிக்கின்றன.

  உ + ம்:- படைப்பின் இரண்டாம் கதை (தொ.நூ 2:4a-25)
  மனிதனின் கீழ்ப் படியாமையும் தண்டனையும் (தொ.நூ 3 அதி)
  காயீனும் ஆபேலும் (தொ.நூ 4 அதி)
  நோவா (தொ.நூ 6-9 அதி)
  பாபேல் கோபுரம் (தொ.நூ 11:1-9)

- அக்கதைகள் வாசகர்களின் ஆர்வத்தை தூண்டச் செய்கின்றன.

  உ + ம்: ஆபிரகாமை சந்திக்க வந்த விருந்தினர் (தொ.நூ 18:1-15)

- யாவே மரபு மிகப் பழமையான சட்டங்களையும் சமய சடங்குகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

### கருப்பொருளுடாக வெளிக்கொணரும் மறையுண்மை

- இறை நம்பிக்கைக்கு முதலிடம் வழங்குவது இம்மரபின் முக்கிய பண்பாகும்.

உ + ம்:- ‘‘கில்கமேஸ்’’ என்ற பபிலோனிய வீர காவியமும் நோவாவின் கால வெள்ளப் பெருக்கு கதையும் ஒத்ததாக இருந்தாலும் ‘‘கில்கமேஸ்’’ கதையிலுள்ள பல்தெய்வ கொள்கையை நீக்கி ஒரே இறைவன் எனும் கொள்கையூடாக நோவாவின் கதை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

- மனிதனின் வாய், தலை, கை போன்ற மனித உடலின் உறுப்புக்களை இறைவனோடு தொடர்புபடுத்தி, மனித பண்புகள், செயல்கள், உணர்வுகள் என்பவற்றினால் இறைவன் மனிதனோடு மிக நெருங்கியவராகவும் மனிதத் தன்மை உள்ளவராகவும் எடுத்துக்காட்டப்படுகிறார்.
- இம்மரபில் இப்பண்புகள் காணப்படுவதால் இறைவன் மனிதரிடையே மேன்மையான மனிதராகக் கருதப்படுகின்றார்.
- மனிதரைச் சித்தரிக்கும் வகையில் இறைவனை சித்தரித்து மனிதன் செயற்படும் விதத்தில் செயற்படுகின்றார் என்பதனை எடுத்துக்காட்டுகின்றனர்.

இறைவன் ஆதாம் ஏவாளுக்கு ஆடையமைத்து கொடுக்கின்றார் (தொ.நூ 3:21)

இறைவன் நோவாவின் பேழையின் நுழைவாயிலை அடைக்கின்றார்.(தொ.நூ 7:16)

இறைவன் குயவன் (தொ.நூ 2:7): விவசாயி (தொ.நூ 2:8)

தோட்டக்காரன் (தொ.நூ 2:8-9) அறுவைசிகிச்சையாளர் (தொ.நூ 2:21)

பாவம் என்பது, இறைவனுக்குரியதை மனிதன் தனதாக்கிக் கொள்வதற்காக எடுக்கும் முயற்சியாகும்.

உ+ம் இறைவனுக்குரிய விழுமியங்களை தமதாக்கிக் கொள்வதற்கு ஆதாமும் ஏவாளும் (தொ.நூ3:4), வாழ்வின் அதிகாரத்தின் உரிமையைப்பெற்றுக் கொள்ள காயீனும் (தொ.நூ 4:8), சகாவரத்தைப் பெறுவதற்கு நோவாவின் கால மக்களும் (தொ.நூ 6:1-5) முயன்றனர்.

- அதன் பிரதிபலனாக மனிதன் துன்பம், வேதனை, மரணத்திற்கு ஆளானான். உ+ம் ஆதாம் ஏவாள் பெற்ற தண்டனை (தொ.நூ 4:16-19) காயீன் பெற்ற தண்டனை (தொ.நூ 4:10-12) பெருவெள்ளம் (தொ.நூ அதி 6-9).
- மனிதன் இறைவனுக்கு எதிராக பாவம் செய்து தண்டனை பெற்றாலும் இறைவன் அவனை கைவிடுவதில்லை.

உ + ம் மீட்பரை அனுப்ப வாக்குறுதி அளித்தல் (தொ.நூ 3:13)

இறைவன் காயீனுக்கு இரக்கம் காட்டுதல். (தொ.நூ 4:13-16)

நோவாவின் குடும்பத்தையும் விலங்குகளின் இருபாற் சோடிகளையும் காப்பாற்றுதல் (6:13-22)

### 2.1.3 எலோகிம் (E) மரபு :-

- இம்மரபில் இறைவனுக்கு ‘‘எலோகிம்’’ என்ற எபிரேய சொல் பயன்படுத்தப்படுகின்றது. அதனால் இம் மரபு எலோகிம் என அழைக்கப்படுகின்றது.
- இம்மரபில் சீனாய்க்கு ‘‘ஒரேபு’’ எனும் பெயரையும், மோசேயின் மாமனாருக்கு இத்திரோ எனும் பெயரையும் அறிமுகம் படுத்தப்படுகின்றது.

### மொழிநடையும் இலக்கிய பண்பும்

- மொழிநடை சிறப்பானது, இலகுவானது, உயரிய எபிரேய மொழியாகும். J மரபைப்போல் விபரிக்கும் தன்மையற்றது.
- மோசேயின் புதுமைகள் மிக அழுத்தமாக வர்ணிக்கப்படுகிறது. வரலாறு ஒழுங்குமுறையாகவும் தர்க்கரீதியாகவும் முன்வைக்கப்படுகின்றது.

## கருப்பொருளூடாக வெளிக்கொணரும் மறையுண்மை

- யாவே மரபினால் முன்வைக்கப்பட்ட வரலாறு இங்கும் காணப்படுகின்றது. ஆனால் எலோகிம் மரபில் காணப்படும் கருப்பொருளும் இறையியலும் யாவே மரபிலிருந்து வேறுபடுகின்றது.
- வட அரசில் இருந்த பயங்கரமான நிலை என்னவென்றால், பாகாலின் வழிபாட்டை ஒரே கடவுளின் வழிபாட்டுடன் தொடர்புபடுத்துவதாகும்.
- தாணிலும் பெத்தேலிலும் பொன்னாலான கன்று குட்டிகளை ஸ்தாபித்து தொழுகைக் கூடங்களை கட்டியமையால், ஒரே கடவுள் எனும் கொள்கையை பாதுகாக்கும் செயலில் முதலாம் எரோபோவாம் அரசன் ஈடுபடவில்லை.
- ஆதலால் ஒரே கடவுள் எனும் கொள்கையை பாதுகாக்க முன்நின்றவர் இறைவாக்கினரேயன்றி அரசர் அல்ல. இதனால் E மரபில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது இறைவாக்கினரின் இலக்கியமே.
- ஒரே கடவுள் எனும் கொள்கையை மக்களுக்கு எடுத்துரைக்கும்போது, இறைவாக்கினர் சீனாய் உடன்படிக்கையையே வலியுறுத்தினர்.
- உடன்படிக்கை வாழ்வு முக்கியத்துவத்தினால் இறைவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையுடன் இம்மரபு ஆரம்பமாகிறது. (தொ.நூ 15:1-6). இதனால் மனிதன் இறை பக்தியுடன் உடன்படிக்கைக்கேற்ப வாழ வேண்டுமென எடுத்துரைக்கின்றனர்..
- இஸ்ரயேல் மக்களோடு எகிப்திலிருந்து கானான் நாட்டுக்குப் போகும்வரை ஆயனாக வழிக்காட்டுவதே மோசேயின் பணியாக யாவே மரபு கூறுகிறது. ஆனால் எலோகிம் மரபில் அரசரை விட இறைவாக்கினர் முக்கிய இடத்தை வகிப்பதால் மோசே இறைவாக்கினராவார். பல புதுமைகளைச் செய்த இறைவாக்கினர்.

  உ+ம் கடலை பின்வாங்க வைத்தல் (வி.ப 14:21). மோசேயின் அழைப்பையும் இறைவாக்கினரின் அழைப்பாக முன்வைக்கப்படுகின்றது (வி.ப 3:1-4:17). அது மட்டுமல்ல ஆபிரகாம் கூட இறைவாக்கினராவார் (தொ.நூ 20:7), இறைவாக்கினராக அழைக்கப்பெற்றவர் மோசே மாத்திரமல்ல. ஆரோன் (வி.ப 15:20), மிரியம் (எண். 12:2-6). இவர்களும் இறைவாக்கினர்களே.
- யாவே மரபில் இறைவனை மனித உருவில் எடுத்துரைத்தாலும், ஏலோகிம் மரபில் இறைவன் மனித உருவில் எடுத்துரைக்கப்படவில்லை. ஆதலால் இறைவன் காட்சி, கனவு (தொ.நூ 20:3, 20:6, 28:12). வானதூதர் (தொ.நூ 31:11) வழியாக மனிதரோடு உரையாடுகின்றார்.
- இறைவன் மனிதனைவிட மிகத் தொலைவில் வீற்றிருப்பவர். மனிதனுக்கு அவரிடத்திற்கு நெருங்க முடியாது (வி.ப 3:5). இறைவனின் முகத்தை எவராலும் தரிசிக்க முடியாது. அதை காண்பது மரணத்திற்கு ஏதுவாக அமையும்.(வி.ப 3:6, 20:19, 33:20).
- இதனூடாக இறைவனின் மகிமை, கம்பீரம், மேன்மை, முதன்மை, அதி உன்னத தன்மை ஆகியன எடுத்துக்காட்டுகின்றன. பல தெய்வ கொள்கையுடைய வட அரசின் வேறு தெய்வங்களை விட இறைவன் மேன்மையானவர்.
- இறைவனைத் தவிர வேறு தெய்வங்களை வழிபடுவது மறுக்கப்படுகின்றது. இறைவன் வேறு தெய்வங்களை வழிபடுவதை சகித்துக்கொள்ள மாட்டார் (வி.ப 20:1-6).
- உண்மையான வழிபாடு என்பது இறைவனுக்குக் கீழ்ப்படிதலும், இறைவனுடனான உடன்படிக்கையின் படி செயற்படுவதாகும் (வி.ப அதி 19-23). நேர்மை, உடன்பாடு, மீட்பு, பாவம் போன்றவை உடன்படிக்கை நிபந்தனையில் அடங்குகிறன.
- கி.மு 700 J, E மரபுகள் ஒன்றிணைந்துள்ளன. J, E மரபுகள் இரண்டிற்கும் பொதுவான கருப் பொருளாவது இறைவன் மக்களுக்கு ஒரு நாட்டை வழங்குவதாக அளித்த வாக்குறுதி, எகிப்தில் அனுபவித்த துன்ப துயரங்கள், விடுதலைப்பயணமும் உடன்படிக்கை நாட்டை உரிமையாக்கிக் கொள்வதுமாகும்.

- இறைவன் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் எம்மோடு பேசுகின்றார். அவரின் குரலுக்கு செவிசாய்க்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

### 2.1.4 இணைச்சட்ட (D) மரபு

- கி.மு 722ல் வட அரசை அசீரியர் கைப்பற்றியதோடு தென்னரசுக்குத் தப்பியோடிய லேவியர் தங்களிடமிருந்த இணைச்சட்டங்களை தென்னரசுக்கு எடுத்து வந்தாலும், அவை யூதாவை ஆட்சி செய்த மனாசே காலத்தில் (கி.மு 689-641) மறைந்து அல்லது காணாமற் போன இணைச்சட்டங்கள் மீண்டும் யோசியா அரசர் காலத்தில் (கி.மு 639-609) எருசலேம் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டன (2அரசர் 22:3-16).

- யோசியா அரசர் இம்மரபின்படி மனாசே காலத்தில் அழிவுற்ற யூத அரசை, சமூக சமய ரீதியாக புனரமைத்தார்.
- யோசியா அரசர் காலத்தில் இம்மரபு மோசேயின் மூன்று மறையுரைகளுக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டது என்பது மறை வல்லுநர்களின் கருத்தாகும். (இ.ச 1:6, 4:40, 4:44, 28:68, 29:1-30:20).

#### மொழிநடையும் இலக்கியப்பண்பும்

- இம்மரபு அறிவுரையாக அமைந்து இருப்பதே இதன் விசேட பண்பாகும்.
- மோசேயின் போதனைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.
  (உ+ம்: மூன்று மறையுரைகள்)
- ஒரே விடயத்தினை மீண்டும் மீண்டும் கூறுவது இதன் இன்னுமொரு விசேட பண்பாகும். (உ+ம் ''உன் கடவுளாகிய ஆண்டவர்'', ''இஸ்ரயேலரே கேளுங்கள்'', ''கட்டளைகளைக் கடைப்பிடியுங்கள்''.

#### கருப்பொருளுடாக வெளிக்கொணரும் மறையுண்மை

- இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள். உடன்படிக்கை வாழ்வு வாழ கட்டளைகளை அனுசரிக்க வேண்டும். உ+ம்: இ.ச 11:8-32 வரையுள்ள பகுதியில் கட்டளைகளை அனுசரித்தல் அல்லது மீறுதலினால் ஏற்படும் விளைவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
- உடன்படிக்கையை மீறுதல் மீளவும் நாடு கடத்தப்படுவதற்கு காரணமாகும் என இ.ச 29:22-28 ஊடாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- இந்த இணைச்சட்ட கோட்பாடுகள் அனுசரிக்க முடியாத சட்ட நிபந்தனைகளுக்கு உட்டபட்டவை அல்ல. அவை இஸ்யேலரின் வாழ்க்கைக்கு மிக நெருங்கியவை.
- ஆதலால் அவைகளை அனுசரிக்க ஊக்குவிக்கப்பட்டுள்ளனர் (இ.ச 30:11-14). அவ்வாறே கட்டளைகளை அனுசரிப்பது இறை வழிபாடாகும் (இ.ச 28 அதி). கட்டளைகளை அனுசரித்தல் எவ்வேளையும் நடைபெற வேண்டும் (இ.ச 6:6-8, 28:15).
- எருசலேம் தேவாலயத்தில் மாத்திரமே இறைவனை வழிபட முடியும். (இ.ச 12:5, 12:12, 14:24-25).
- பாஸ்கா திருவிழா, அறுவடை விழா, கூடார விழா எல்லாம் எருசலேம் தேவாலயத்திலேயே நடாத்தப்பட வேண்டும் (இ.ச 16:16).
- எருசலேமுக்குச் செல்லும் திருயாத்திரையின் பின்னணியில் இவ்விழாக்கள் நவீன முறையில் கொண்டாடப்படுகிறத (இ.ச 16:1-17).

- இவ்வாறு ஒரே கடவுள், ஒரே ஆலயம், ஒரே அரசு ஆகியவற்றிற்கு விசேட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.
- நாம் எமது புனித நூலான திருவிவிலியத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். அன்றாட வாழ்க்கையில் இறை கட்டளைகனை அனுசரிக்க முயல வேண்டும்.

### 2.1.5 குரு மரபு (P)

- கி.மு 500ல் எழுதப்பட்டு கி.மு 422 அளவில் "J", "E", "D" மரபுகளோடு சேர்க்கப்பட்டது. பபிலோனிய அடிமைத்தனத்தின் பின் இஸ்ரயேல் மக்களின் விசுவாசத்தைப் பாதுகாக்கும் விதத்தில் வரலாற்று நிகழ்வுகளை புதியதொரு பார்வையில் விளக்க வேண்டிய தேவை இருந்தது. இதற்காக குருக்கள் "P" மரபு உருவானது.
- தொடக்கநூலில் முதலாம் அதிகாரம் தொடக்கம் மோசேயின் இறப்பு வரையுள்ள பகுதி இம்மரபிற்குரியது (இ.ச 34:1-9).
- விடுதலைப்பயண நூலில் கடைசி ஆறு அதிகாரங்களும் இம்மரபிற்குரிய பெரும் பகுதியாகும்.
- திருவழிபாடுகளும் குருத்துவ சடங்குகளும் முக்கிய இடம் வகிக்கின்றன.

#### மொழிநடையும் இலக்கியப் பண்பும்

- பயன்படுத்தும் மொழிநடை ஒழுங்கான முறையிலும் நீதியானதுமாய் உள்ளதுடன், மேலதிக விபரங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.
- மீண்டும் மீண்டும் கூறுதல் அதிகமாக உள்ளன. ஆகையால் மொழிநடை ஒரே மாதிரியாக உள்ளது. உ + ம்: படைப்பின் முதற் கதையில் மாலையும் காலையும் நிறைவுற்று........................ நாள் முடிந்தது.

#### கருப்பொருளுடாக வெளிக்கொணரும் மறையுண்மை

- இறைசாயலுடன் மனிதனைப் படைத்த இறைவன் எல்லாப் படைப்புக்களை ஆளவும், அதிகாரம் செலுத்தவும், அதை விருத்தி செய்யவும் அழைப்புவிடுக்கின்றார் (தொ.நூ 1:27-28).
- ஓய்வு நாள் இறைவனை சந்திக்கும் நாள், புனித நாள், வழிபாடுகளில் ஈடுபடும் நாள். வழிபாடுகளுக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படிவது இறைவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவின் அடையாளமாகும். (தொ.நூ 2:1-4அ, வி.ப 31: 12-17)
- திருவழிபாட்டுக்கு முதலிடம் கொடுக்கப்படுகின்றது. அதை ஒழுங்கு செய்பவர் மோசே. ஆரோனும் அவரின் பரம்பரையையும் அச் செயற்பாட்டைத் தொடர்ந்து செய்கின்றனர். அதற்கு திருயாத்திரை, திருவிழாக்கள் மற்றும் யெருசலேம் ஆலயத்தின் ஆராதனைகள் முக்கிய இடம் பெறுகின்றன. (வி.ப அதி 25-31).
- எருசலேம் ஆலயத்தில் இறைவன் பிரசன்னமாய் இருக்கிறார். எனவே குருத்துவம் முக்கியம். அதன் மூலம் எடுத்துக்காட்டப்படுவது குருக்களின் தலைமைத்துவம் ஆகும். (J அரசர்களின் தலைமைத்துவம், E இறைவாக்கினரின் தலைமைத்துவம்)
- தொடக்கத்தில் மனிதன் இறைவனுடனும் உலகத்துடனும் ஒற்றுமையாக வாழ்ந்தான். உம்: தொ.நூ 1:29-30 ல் மனிதனும் விலங்குகளும் மாமிசம் உண்ணாமை படைப்பின் சமாதான தன்மையை வெளிப்படுத்தும் அடையாளமாகும். வெள்ளப்பெருக்குக்குப் பின்னரே மாமிசம் உண்ணும் அனுமதியை மனிதன் பெறுகின்றான். (தொ.நு. 9:2-3)
- மனிதன் பாவத்தின் நிமித்தம் படைப்புடனான ஒற்றுமையை இழந்துள்ளான் என்பதனை இதன் வழியாக அறிந்துக் கொள்ளலாம்.

- சாதாரண மக்களுக்கு இறைவனை அணுகமுடியாது. ஆனால் குருக்களுக்கு இறைவனை அணுக முடியும். ஏனெனில் எல்லாக் குருக்களும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.
- மக்களுக்கு நேரடியாக இறைவனோடு தொடர்பு கொள்ள முடியாததால் குருக்கள் நடுநிலை வகிக்கின்றனர் (லேவி அதி 8-9). கூடாரமும் எருசலேம் தேவாலயமும் இறை வல்லமையை வெளிப்படுத்தும் இடங்களாகின்றன. உடன்படிக்கை பேழை இவ்விடங்களிலேயே வைக்கப்பட்டிருந்தது.
- உடன்படிக்கை பேழை இஸ்ரயேலரின் மிகத் தூய்மையான அடையாளமாகும். இறைவன் தமது விருப்பத்தை மக்களுக்கு இங்குள்ள இரக்கத்தின் இருக்கையில் அமர்ந்து வெளிப்படுத்துகின்றார் என இஸ்ரயேலர் விசுவசித்தனர் (வி.ப 25:10-22)
- இஸ்ரயேல் மக்களின் வாழ்வு முழுவதும் இறை ஆராதனை என்பது சட்டங்கள் வழியாக கூறப்பட்டுள்ளன. இறைவனுக்கு எதிராக பாவம் செய்தால் வழக்கப்படி செலுத்தவேண்டிய அபராதத்தை முறைப்படி நிறைவேற்ற வேண்டும். இறைவனுக்கு ஏற்புடையோர் இறையாசீரைப் பெறுவர்.
- இறைவன் உலகை ஆறு நாட்களில் படைத்து ஏழாம் நாள் ஓய்வு எடுத்ததால் அந்நாளை (சாபாத்து) தூய நாளாக அனுசரிக்க வேண்டுமென அழுத்தமாக வலியுறுத்தப்படுகின்றது. இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஞாயிறு தினத்தை தூயதாக கடைப்பிடிக்க நாமும் முயற்சி செய்வோம்.

## மோசேயும் ஐந்நூலும்

- கி.மு 10ம் நூற்றாண்டளவில் ஐந்நூல் எழுத்து வடிவம் பெற ஆரம்பித்தது. தற்போதைய மறைவல்லுனரின் கருத்துப்படி கி.மு 400 ஆண்டளவில் ஐந்நூல் எழுத்துவடிவம் நிறைவு பெற்றது என ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் மோசே கி.மு 13ம் நூற்றாண்டில் வாழ்ந்ததால் மோசே ஐந்நூலின் ஆசிரியத்துவத்திற்கு தொடர்புள்ளவரென ஏற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு கூறுவதற்கு காரணங்கள்:
  - மோசே விடுதலைப் பயணத்தின்போது பாலைநிலத்தில் தலைமைத்துவம் தாங்கி ஆரம்ப நிகழ்வின் முதன்மை வழிகாட்டியாளர்.
  - ஐந்நூலில் அநேகமாக அவரின் படிப்பினைகளே அடங்கியுள்ளன.
  - இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலைசெய்து உடன்படிக்கை நாட்டை நோக்கி அழைத்துச் சென்ற தலைவராக மோசே செயற்பட்டார். வாய்மொழி பாரம்பரியத்திற்கு இவர் செய்த பங்களிப்பை மறுக்க முடியாது. இதனால் மோசே ஐந்நூலின் ஆசிரியரென கூற முடியும்.

### கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 1.

ஐந்நூலை விளக்குவதற்கு இறையியல் மரபுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதனை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலையங்கங்களைப் பயன்படுத்தி உரை ஒன்றினை அமைக்கவும்.

1. ஐந்நூலைப் பற்றிய முன்னுரை
2. J, E, D மற்றும் P மரபுகள்

(ஒவ்வொரு மரபினையும் பற்றிய விளக்கம், ஐந்நூலில் பரவியுள்ள முறை, மொழி மற்றும் இலக்கிய பண்புகளும் வெளிபடுத்தும் முறையும்)

**தேர்ச்சி 2.0** : இறை வெளிப்பாட்டிற்கேற்ப வாழ்வார்

**தேர்ச்சி மட்டம் 2.2** : வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட இறையியல் படிப்பினைகளை வாழ்க்கைக்கு உரியதாக்கிக் கொள்வார்.

**பாடவேளை** : 20

**கற்றல் பேறுகள்** :

- வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.
- சோதனைகளை வெற்றிகொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- உலகின் தொடக்கம் அதன் பரிணாம வளர்ச்சியினூடாகப் பிரதிபலிக்கும் இறை அன்பை உணர்வார்.
- தீய சக்திகளை வெற்றிகொள்ள ஏனையோருக்கு வழிகாட்டுவார்.

### 2.2.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான அறிமுகம்.

திருவிவிலியத்தின் முதல் நூல் தொடக்க நூலாகும். தொடக்க நூல் இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (தொநூ. அதி. 1-11)
2. குலமுதுவர்கள் காலம் (தொநூ. அதி. 12-50)

- தொடக்க நூலின் முதல் பதினொரு அதிகாரங்களில் வரலாறு அல்லது விஞ்ஞான ரீதியான கோட்பாடுகள் அன்றி இறையியல் செய்திகளே அடங்குகின்றன. அதனால் அதில் அடங்கும் கருத்துக்கள் வரலாற்றுக்கு முற்பட்டவையாகும். அவற்றின் முக்கியத்துவம் இறையியலாகும்.
- தொடக்கநூல் 1முதல் 11 அதிகாரங்களில் அடங்கியுள்ள கருத்துக்களை கற்கும்போது அவற்றில் வரலாறு மற்றும் விஞ்ஞானத்திற்குரிய தகவல்களை தேடுவது பயனற்ற செயலாகும். உண்மையாகவே கிறிஸ்துவுக்கு முன் எழுதப்பட்ட தொடக்க நூல் மனிதனுக்கு விஞ்ஞான ரீதியாக உண்மைகளை முன்வைப்பது பயனற்ற செயலாகும்.
- அதே போல் தொடக்க நூல் அடங்கிய திருவிவிலியம் எழுதப்பட்ட இறுதிக்காலத்தில் வாழ்ந்த மனிதன் அக்காலத்தில் காணப்பட்ட விஞ்ஞானக் கருத்துக்களைப் பயன்படுத்தி திருவிவிலியத்தின் ஆசிரியர் இறையியல் உண்மைகளை தெளிவாக்குவதற்கு முயற்சி செய்துள்ளார். ஏனெனில் திருவிவிலியம் என்பது விஞ்ஞான நூல் அல்ல. ஆழமான இறையியல் உண்மைகளை மிக இலகுவாக கற்பிப்பதற்கு எழுதப்பட்டதாகும். இதனால் விஞ்ஞான கருத்துக்கள் உண்மையென நிரூபிக்கப்படவில்லை.
- விஞ்ஞானத்தின் இலக்கு மனிதனின் மீட்புப் பற்றி கற்பிப்பது அல்ல. எனினும் மறையின் நோக்கம் மனிதனின் மீட்பாகும். (2 திமொ. 3:15) திருவிவிலியத்தின நோக்கம் கணிதவியலாளர்களை உருவாக்குவது அல்ல, மாறாக ஒழுக்கமும் நற்பயிற்சியும் கொண்ட கிறிஸ்தவர்களை உருவாக்குவதே என தூய அகுஸ்தீனார் கூறுகிறார்.
- மேலும் உலக ஆரம்பம் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்டதாயின் அதனை அக்கால மனிதனால் விளங்கிக் கொள்ள முடியாமல் போவது மட்டுமல்ல அதன் அர்த்தம் அர்த்தமற்றதாகப் போவதில் சந்தேகமில்லை.
- திருவிவிலியத்தின் இலக்கு படைப்பு நிகழ்ந்த விதத்தை அறிக்கையாக வெளியிடுவது அல்ல படைப்பின் மூலகர்த்தா இறைவனே என்பதை வெளிப்படுத்துவதும் மனிதனின் நீண்டகால வினாக்களுக்கு விடையளிப்பதுமேயாகும். அதற்காக திருவிவிலிய ஆசிரியர் பல்வேறுபட்ட கதைகளை உவமைகளாகப் பயன்படுத்துகிறார்.

- வானத்தையும் பூமியையும் படைத்தல், பாவத்தின் வளர்ச்சி, பாவத்தைக் கடந்து இறையருள் செயற்படுதல், தொடர்பாக தொடக்கநூல் 1 - 11இல் உவமைகள் மற்றும் கதைகளினூடாக திருவிவிலிய ஆசிரியர் இறையியல் உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துள்ளார்.
- விஞ்ஞான தொழினுட்பத்தில் உச்ச நிலையை அடைந்துள்ள இறைய மனிதன் இறைவனின் வல்ல செயல்களை விஞ்ஞான நோக்கோடு அன்றி இறையியல் கோணத்திலேயே நோக்க வேண்டும்.
- மீட்புச் செய்தியே திருவிவிலியத்திலிருந்து மனிதன் பெற்றுக்கொள்ளும் மிகப்பெரிய கொடையாகும். மீட்பின் செய்தி தொடக்க கால மனிதன் முதல் இறுதி மனிதன் வரை ஒன்றே என்பதே இந்த நற்செய்தியாகும்.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் உலகம் மற்றும் மனிதன் படைக்கப்பட்டது தொடர்பான கதைகள் இரண்டு உள்ளன.
    1. தொநூ. 1:1 - 2:4அ படைப்புப் பற்றிய முதலாவது கதை
    2. தொநூ. 2:4ஆ - 25 படைப்புப் பற்றிய இரண்டாவது கதை
- மனித படைப்பும் அதன் விளைவுகளை வெளிப்படுத்தும் கதைகள் நான்கு உள்ளன.
    1. தொநூ. 3:1 - 24 ஆதாம் ஏவாள் கதை
    2. தொநூ. 4:1 - 16 காயீன் ஆபேல் கதை
    3. தொநூ. 6:5 - 9:17 வெள்ளப் பெருக்கும் நோவாவின் உடன்படிக்கையும்.
    4. தொநூ. 11:1 - 9 பாபேல் கோபுரம்
- ஐந்நூல் எழுதப்படும் போது அதற்கு யாவே, ஏலோகிம், இணைச்சட்டம், குருக்கள் ஆகிய இறையியல் பாரம்பரியங்கள் நான்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் யாவே, குரு ஆகிய இரு பாரம்பரியங்களே பயன்படுத்தப்பட்டன.

**படைப்புத் தொடர்பான முதலாவது கதை (தொநூ. 1:1 - 2:4அ)**

- இக்கதையினூடாக படைப்பின் செயற்பாடு ஒரு திட்டமிட்ட ஒழுங்குமுறையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றது என்பது தெரிகிறது. எல்லா நாட்களுக்கும் பொதுவான நான்கு பண்புகள் காணப்படுகின்றன.
    1. இறைவனின் கட்டளை உ-ம் 'ஒளி தோன்றுக'.
    2. இறைவனின் கட்டளை நிறைவேற்றப்படல் - உ-ம் ஒளி தோன்றிற்று.
    3. இறை படைப்பை நல்லதெனக் காணல் - உ-ம் அது நல்லதெனக் கண்டார்.
    4. காலத்தைக் கணித்தல் - உ-ம் மாலையும் காலையும்... ஆயிற்று.
- குருக்கள் பாரம்பரியத்தில் இறைவனை அழைப்பதற்காக 'ஏலோகிம்' என்னும் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. படைப்பாளியாகிய இறைவனின் வல்லமை கதைகளினூடாக வெளிப்படுத்தப்படுகிறது.
- ''உருவமற்று வெறுமையாக இருந்தது'' என ஆரம்பிக்கும் இக்கதை ஓய்வு நாளுடன் நிறைவு பெறுகின்றது. படைப்புச்செயலில் முதல் மூன்று நாட்களில் 'வானத்தையும் பூமியையும்' பற்றிய தகவல்களைக் எடுத்துரைக்கும் ஆசிரியர் எஞ்சிய மூன்று நாட்களில் வானத்தையும் பூமியையும் அலங்கரிக்கும் விதத்தினைப் பற்றிக் கூறுகிறார்.

உருவமற்று வெறுமை

| விண்ணும் மண்ணும் | நாள் | நாள் | விண்ணையும் மண்ணையும் அலங்கரித்தல் |
|---|---|---|---|
| பகல், இரவு | 1 | 4 | சூரியன், சந்திரன், நட்சத்திரம் |
| வானம், நீர் | 2 | 5 | பறவைகள், மீன்கள் |
| தரை | 3 | 6 | மிருகங்கள், மனிதன் |

**ஓய்வு நாள்**

- 'வானம்' என்பது விண்ணகம். 'பூமி' என்பது மண்ணகம். ஆகவே வானமும் பூமியும் என்பது விண்ணும் விண்ணிலுள்ளவையையும் மண்ணும் மண்ணிலுள்ளவை அனைத்தையும் குறிக்கின்றது.
- படைப்புத் தொடர்பான முதல்கதையில் அடங்கும் மூல பிரதியில் சூரியன் சந்திரன் என்பன பெயரிடப்படவில்லை. அதற்குப் பதிலாக பெரிய ஒளிப்பிழம்பு, சிறிய ஒளிப்பிழம்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனெனில் இக்கதை பல தெய்வங்களை வழிப்படும் சூழுலில், பல தெய்வ வழிபாட்டுக்கு எதிராகவே எழுதப்பட்டது.
- அக்காலத்தில் எகிப்திய பேரரசன் சூரியனைக் கடவுளாகவும் பபிலோனிய பேரரசன் சந்திரனைக் கடவுளாகவும் கருதி மிக உயர்ந்த வழிபாடுகளைச் செய்ததனால் சூரிய சந்திரன் எனப் பெயரிட்டால் அக் கடவுள்களின் பெயர்கள் திருவிவிலியத்திற்கு உட்படுத்தப்படுவதால், அவற்றை பெயரிடாமல் அக் கடவுள்களின் பெயர்களை திருவிவிலியத்திற்கப்பால் வைப்பதற்கு திருவிவிலிய ஆசிரியர் புத்திக்கூர்மையுடன் செயற்படுகின்றார்.
- பெரிய ஒளிப்பிழம்பு, சிறிய ஒளிப்பிழம்பு என அவமானம் படுத்தும் வகையில் பயன்படுத்துவதனூடாக வலியுறுத்துவது, தெய்வமாக கணிக்கப்பட்ட இவை ஒரே இறைவனின் படைப்பென்றும், அவற்றை ஒரு போதும் வழிபடாமல் அதன் படைப்பாளரையே வழிபட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றார்.
- படைப்புச் செயலில் உயர்ந்த நிலை ஆணையும் பெண்ணையும் படைத்தமையாகும். 'மானிடரைத் நம் உருவிலும் நம் சாயலிலும் உருவாக்குவோம்', என்பது மதிப்பிற்குரிய பன்மைப் பதமாகும். இத்தகைய பதத்தினை வேறு மிருகங்களையோ அல்லது உயிரினங்களையோ படைக்கும் போது பயன்படுத்தாமையால் ஏனைய படைப்புக்களின் மத்தியில் மனிதன் உயர்ந்தவன் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. இவ்வாறு வெவ்வேறு வகையான உயிரினங்கள் இருப்பினும் மனித குலம் ஒன்று என்பதைப் பற்றியே குறிப்பிடப்படுகின்றது.
- ஏதாவது சிலையையோ உருவத்தையோ இறைவனுக்காக பயன்படுத்த முடியாது என பழைய ஏற்பாட்டில் கூறப்படுகின்றது. இவ்வுலகில் இறைவனின் சாயலுக்கும் உருவத்திற்கும் சமமானதாகக் கருதப்படும் ஒரே படைப்பு ஆணும் பெண்ணும் மட்டுமே. இதனால் இவ்வுலகில் இறைவனின் பிரதிநிதியாக அவருடைய உருவிலும் சாயலிலும் மனிதன் படைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.
- தொநூ. 1:28 இல் கூறப்பட்டுள்ளதன்படி கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, 'பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்: கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்', என்றார். இது அதி சிறப்பான ஆசீர்வாதமாகும். இதன் மூலம் பபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்த குருக்களின் நம்பிக்கை வெளிப்படுகிறது. இறை சித்தத்தின்படி

அடிமைத்தனத்தினால் வரும் எல்லா வகையான துன்பங்களகளுக்கும் முடிவு உண்டு என்பது இந்த ஆசிரினால் தெளிவாகின்றது.

- மனிதன் இறைசாயலாக படைக்கப்பட்டதன் மூலமாக அவன் படைப்புத்தொழிலில் பங்காளியாகவும் படைப்பை விருத்திசெய்து முழு உலகையும் ஆளுவதற்கும் அழைக்கப்பட்டுள்ளான். விவசாய மற்றும் மந்தை மேய்த்தல் பின்னணியில் ‘ஆளுதல்’ (எபிரேய - றதா) எனும் வினைச் சொல்லினால் விளக்குவது ‘‘அரவணைத்துக் கொள்ளல்’’, ‘‘வழிகாட்டல்’’, ‘‘பாதுகாத்துக்கொள்ளல்’’ போன்றவையே அன்றி ‘அடிமைப்படுத்திக் கொள்ளல்’ ‘அதிகாரத்தினூடாக வசப்படுத்திக்கொள்ளல் போன்றவையோ அல்ல. அவை இறை ஆசீரோடு பொழியப்படும் பொறுப்பாகும்.
- அப்பொறுப்பின் தன்மையை தொநூ. 1:27, 1:28 ஆகிய ஆகிய இரண்டினையும் ஒன்றாக வாசிப்பதன் மூலம் விளங்கிக்கொள்ளலாம். தொநூ. 1:27இல் கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் என்பதை இரு தடவைகள் குறிப்பிட்டு, தொநூ. 1:28இல் உலகைத் தமது ஆற்றலுக்கு உட்படுத்தவும் அனைத்து மிருகங்கள், பறவைகள், கடல்வாழ் உயிரினங்கள் மீது தமது ஆளுகையைக் காட்டவும் கட்டளை இடுவதன் மூலமாக கூறப்படுவது முழு உலகையும் அதிலுள்ள உயிரினங்களையும் பாதுகாத்து வழிநடத்தல் வேண்டும் என்பதாகும். அத்துடன் இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதனின் பொறுப்பும் கடமையும் இறைவனின் படைப்புச் செயலுக்கு துணைபுரிவதாகும்.
- படைப்பின்மீது இறைவனுக்குள்ள பொறுப்பை மனிதனோடு பகிர்ந்துகொள்ளல் படைத்தவரின் கட்டளையினால் வெளிப்படுத்தப்படுகிறது. மனிதன் தன் உழைப்பால் படைப்பின் மாண்பை புதுப்பிக்குமுகமாக முன்னெடுத்துச் செல்லவேண்டுமேயொழிய துஷ்பிரயோகம் அல்லது வீணாக்குதல் அல்லது அழித்தல் போன்றவை மனிதனுடைய செயல்கள் அல்ல என்பது இதன்மூலம் நன்கு தெளிவாகின்றது.
- இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதனுக்கு பொறுப்பு ஒன்று உள்ளது. அதாவது படைப்பைப் பாதுகாத்து விருத்திசெய்வதன் ஊடாக இறைபடைப்பின் பயனைப் பெறவேண்டியதாகும்.

**படைப்புத் தொடர்பான இரண்டாவது கதை (தொநூ. 2:4ஆ - 25)**

- விடுதலைப்பயண நிகழ்வு படைத்தல் தொடர்பான இரண்டாவது கதைக்கு பின்னணியாக அமைந்துள்ளது. அதனால் படைத்தலின் இரண்டாவது கதைக்கும் விடுதலைப்பயண நிகழ்வுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டென்பதைக் காட்டுகின்றது. விடுதலைப்பயணத்தின் போது,

    1. ஆண்டவராகிய கடவுள் இஸ்ரயேலரை பாலைவனத்தில் இருந்து காப்பாற்றினார்.
    2. அவர் அவர்களை செழிப்பான நாட்டிற்கு அழைத்துச் சென்றார்.
    3. அப் பயணத்தின் போது அவர் அவர்களுக்கு பத்துக் கட்டளைளைக் கொடுத்தார்.
    4. அவர்கள் அதற்கு மதிப்பளிக்காது அந்நியதிகளை மீறினார்கள்.
    5. ஆகையால் அவர்களுக்குத் தண்டனை கிடைத்தது.

- இவ்வொழுங்குகளை படைப்புப் பற்றிய இரண்டாவது கதையிலும் காணமுடிகிறது.

1. தண்ணீர் குறைந்த பாலைவனப் பகுதியில் மனிதன் படைக்கப்பட்டாலும். (2:4-5)
2. அப் பாலைவனத்தில் ஏதேன் தோட்டத்தை உருவாக்கி ஆண்டவராகிய கடவுள் மனிதனை அத்தோட்டத்தில் வைத்தார். (2:8-9)
3. அங்கு வாழவேண்டிய முறைகளை ஒரு கட்டளையாகக் கொடுத்தார் (2:17).
4. மனிதன் அக்கட்டளையை மீறினான் (3:6)
5. அதனால் அவருக்குத் தண்டனை கிடைத்தது. (3: 14-24)

- புராதன காலத்தின் ஆரம்ப கைத்தொழில் மட்பாண்டத் தொழிலாகும். முதல் தொழிலாளர் குயவனாவார். ஆண்டவராகிய கடவுள் பூமியின் களிமண்ணால் மனிதனைப் படைத்ததிலிருந்து அவருக்குக் குயவனாக மனித உரு அடையாளம் வழங்கப்படுகிறது.
- மனிதன் என்பதற்குரிய எபிரேயச் சொல்லாக அமைவது 'ஆதாமா' என்பதாகும். பூமிக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சொல் 'அதமாஹ்' என்பதாகும்.
- எபிரேய சொற்களின் மாற்றமூடாக மனிதனுக்கும் மண்ணுலகிற்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுவதற்கு திருவிவிலிய ஆசிரியர் இதன் மூலம் முன்வந்துள்ளமை காட்டப்படுகின்றது. அதாவது மண்ணால் ஆக்கப்பட்ட மனிதன் மீண்டும் மண்ணாகவே மாறுவான். மேலும் மண்ணுக்காகப் பயன்படுத்தப்படும் எபிரேயச்சொல் 'ஆபார்' என்பதாகும். இச்சொல்லின் அர்த்தங்கள் இரண்டாகும்.

  1. தூசு / மண்
  2. சாம்பல்

- இறைவன் மனிதனை ஏதேன் தோட்டத்திற்கு வெளியே படைத்து பின் ஏதேன் தோட்டத்திற்குள் வைத்தார். (தொநூ 2:8) மனிதனுக்குக் கிடைக்க வேண்டியதை விட மேலதிகமாக இறைவன் கொடுத்துள்ளார் என்பது இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அதற்கேற்ப இத்தோட்டத்தினூடாக மனிதன் பெற்ற விசேட ஆசீர்வாதம் எடுத்துக்காட்டப்படுகிறது.

- இத்தோட்டத்தில் மனிதனுக்கு இரண்டு பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவையாவன

  1. பயிரிடுதல் - (அபாத்)
  2. பாதுகாத்தல் - (ஷமார்) (தொ.நூ. 2:15)

- இறைவன் மனிதனுடைய உணவுக்காகத்தான் மரங்களைப் படைத்தார். ஆயினும் இம்மரங்களுக்குள் உணவுக்குத் தேவைப்படாத இரண்டு விசேட தன்மையுடைய மரங்கள் இருந்தன.

  1. வாழ்வின் மரம் - வாழ்வு தரும் மரம் (தொநூ. 2:9)
  2. நன்மை தீமையைப் பகுத்தறியும் மரம் (தொநூ 2:9)

- வாழ்வு தரும் மரம் திருவிவிலியத்திற்கு உரியதல்ல. அது சாகா வரத்தைக் குறிக்கும் மத்தியதரைப் பிரதேசங்களின் (பபிலோனிய) ஒரு அடையாளமாகும். (தி.வெ 22:2,14)
- ஆயினும் நன்மை தீமை அறியும் மரம் திருவிவிலியத்திற்கு உரியது.
- நன்மை தீமையை அறியும் மரம் என்பது சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல் ஆகும். மனித ஒழுக்க விழுமிய வாழ்வின் அதிகாரம் இறைவனிடம் உள்ளது. மனிதன் அதிலொரு பங்காளியாக அழைக்கப்பட்டுள்ளான்.
- ஒழுக்க விழுமியங்களின் பங்காளியாக அழைக்கப்பட்டுள்ள மனிதன் அதனை முழுமையாக உரிமையாக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்வது ஓர் அர்த்தமற்ற செயல் மட்டுமல்ல கடவுளுடைய திட்டத்திற்கு முரணான செயலுமாகும்.
- அதனால் நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்ணுதல் என்பது படைப்பாக விளங்குகின்ற மனிதன் படைப்பாளரான இறைவனுக்குரிய அதிகாரத்தை தான் பெற்றுக்கொள்ள எடுக்கின்ற பிரயத்தனமாகும்.
- இக்கருத்து பாம்பினால் பெண்ணுக்கு கூறப்பட்ட வார்த்தைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன. (தொநூ. 3:5) எதுவாயினும் நன்மை தீமை அறிதல் ஒரு பாவமல்ல. அது முதிர்ச்சியடைந்த ஒருவருக்கு அவசியமானது. அதனால் தொடக்க நூல் மூன்றாம் அதிகாரத்தில் மனிதன் தன்னால் பெற்றுக்கொள்ள முடியாத முழுமையான அறிவைப் பெறுவதற்கு எடுக்கும் முயற்சியின் விளைவுகளை விவிலிய ஆசிரியர் நன்கு தெளிவுபடுத்துகிறார்.

- மனிதன் மனிதனாக இருப்பதற்கு காரணம் தீர்மானம் எடுப்பதற்கும் தெரிவு செய்வதற்கும் ஆற்றலும் உரிமையும் இருப்பதேயாகும். இந்த ஆற்றலும் உரிமையும், சுயாதீனமான விருப்பமும், மிருகங்களுக்கோ அடிமைகளுக்கோ இல்லை. மிருகங்கள் செயற்படுவது தமது சொந்த மோப்ப சக்தியால் ஆகும். ஆயினும் கடவுளின் மூச்சு மனிதனுள் இருப்பது சுதந்திரமாக செயற்படுவதற்காகும். (தொநூ. 2:16 -17) அதனால் மனிதன் தான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவனாயுள்ளான்.
- மணமகளின் தந்தை மணமகளை அழைத்துச் செல்வது எமது பாரம்பரியம். இன்றும் மணமகளை அவளின் தந்தை தேவாலயத்துக்கு அழைத்துச் செல்வது வழமை. இறைவன் ஏவாளை ஆதாமிடம் கொண்டுவந்தார். அது இறை அன்பின் அடையாளமாக இருக்கிறது. அதேபோல் ஏவாள் ஆதாமுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட ஒரு கொடை.
- கணவன் மனைவிக்கிடையிலான உறவு இறைவனால் நியமிக்கப்பட்ட கூட்டுறவாகும். மேற்கூறப்பட்ட இக்கருத்தை வலியுறுத்தும் விதத்திலேயே திருவிவிலிய எபிரேய மொழிநடை அமைந்துள்ளது. அதாவது ஏவாளைக் குறிக்கும் எபிரேய வார்த்தை 'ஈஷ்' என்றும் பெண்ணைக் குறிக்க 'ஈஷா' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது இந்த உறவு பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் காணப்படும் உறவினை விடவும் மிகவும் மேலானது.
- தொநூ. 2:19இன் படி ஆதாம் மிருகங்களுக்குப் பெயரிடுகிறான். இது மிருகங்களின் மட்டில் உள்ள அவரது அதிகாரத்தை எடுத்துக்காட்டுகிறது. இதனால் மிருகங்களை ஆளும் உரிமையை உரித்தாக்கிக் கொள்கிறான். எனினும் மனிதன் தனக்குத் தந்த துணைவிக்குப் பெயரிடவில்லை. இவ்வேளையில் இறைவன் ஆதாமை ஆழ்ந்த உறக்கத்திற்கு உட்படுத்தி அவனது எலும்பிலிருந்து ஏவாளைப் படைத்து. (தொநூ 2:23இன்படி) அவளுக்குப் பெண் என பெயரிட்டார். இங்கு ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்பது எடுத்துக்காட்டப்படுகிறது.

## 2.2.4 மனிதன் பாவத்தில் வீழ்தல் (தொநூ. 3:1-24)

- மனிதன் பாவத்தில் விழும் இக்கதை யாவே பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு கி.மு பத்தாம் நூற்றாண்டில் தோன்றியது.
- அந்நாட்களில் கானானியர் பாம்பை வணங்கினார்கள். பாம்பு செழுமையின் அடையாளமாகக் கருதப்பட்டது. அச்செழுமை வழிபாடுகளில் பாகால் தெய்வம் முதன்மை இடம் பெற்றது. அதன் வாழ்க்கைச் சக்கரம் இயற்கையின் கால நியதிகளுக்கு அமைய நடைபெறும்.
- பாகால் தெய்வத்தின் மனைவி அஷேரா. அஷேரா என்பதன் அர்த்தம் பாம்பு என்பதாகும். மேலும் அஷேரா தேவதை காமத்தின் அடையாளமாகச் சித்தரிக்கப்பட்டாள்.
- மேலும் பிறிதொருவழியில் பார்க்கும்போது பாம்பானது ஆசையின் அடையாளமாகவும் உள்ளது. மனிதன் ஆசைக்கு அடிமையானதால் தீமையைத் தழுவினான்.
- மனிதனின் இறைவனிடமிருந்துப் பெற்றபெரும் கொடையான சுதந்திரத்தால் ஆசைக்கு அடிமையாகி பாவத்தை நோக்கிச் சென்றான்.
- ஆதாம், ஏவாளுக்கும் பாம்பிற்கும், ஆசைக்கும் அடிமையானதால் இறைவன் தண்டிக்கப்பட்டனர்.
- **பாம்பு பெற்ற தண்டனை இருவகைப்படும்.**

1. உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய். (தொ.நூ 3:14)
2. உனக்கும் பெண்ணுக்கும், உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய். (தொ.நூ 1:15)

➢ **பெண்ணின் தண்டனை மூவிதமானது. (தொ.நூ 3:16)**

1. பிரசவ வேதனை அதிகரித்தல்.
2. பிரசவ வேதனையோடு பிள்ளைபெறுதல்.
3. பெண் ஆண் மேல் அதிக அன்பாக இருந்தாலும் அவன் அவள்மேல் அதிகாரம் செலுத்துதல்

➢ **ஆணின் தண்டனை இருவிதமானது. (தொ.நூ 3:17-19)**

1. வாழ்நாள் முழுவதும் கடினமாக உழைத்து உணவு தேடவேண்டும்.
2. மரணம்.

**மனிதனுடைய வீழ்ச்சியின் காரணமாக**

1. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவும்
2. மனிதனுக்கும் பெண்ணுக்கும் (இஸ் மற்றும் இஸ்ஹா) இடையில் உறவும்
3. மனிதனும் பூமி என்னும் இயற்கைக்கும் (ஆதாம் - அதமா) இடையில் உறவும் முறிவடைந்தது.

- ஆதாமையும் ஏவாளையும் கடவுள் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தி அனுப்பியது அவர்கள் ஆடையின்றி இருக்கும் போதல்ல. இலைகளினால் ஆடை தயாரித்து அணிந்துகொண்டிருந்த அவர்களுக்கு கடவுள் தோலினால் ஆடைகள் செய்து அணிவித்ததன் பின்னரே அனுப்பப்பட்டனர். இதனால் கடவுள் பாவத்துக்குத் தண்டனைவிதித்தாலும் பாவிகளை அன்பு செய்கிறார் என்பதைக் காட்டுகிறார்.

### 2.2.5 காயீனும் ஆபேலும் (தொநூ. 4: 1-16)

- இந்த இறையியல் கதையாவேமரபுக்குரியது.
- முதலாம் கட்டளையை மீறிய மனிதன் தொடர்ந்து இரண்டாம் கட்டளையை மீறுகிறான் என்பது காட்டப்படுகின்றது.

  அதாவது

- இறை அன்புக்கு எதிராக பாவம் செய்தமனிதன் தொடர்ந்து சகோதர அன்புக்கு எதிராகவும் பாவம் செய்கிறான்.

  1. கடவுள் ஆதாமுக்கு அறிவுரை வழங்கியது போல இங்கு காயினுக்கு அறிவுரை வழங்குகிறார். (தொநூ. 2:17, 4:6-7)
  2. ஆதாமைப் போல காயீனும் இறை அறிவுரையை மறுத்து இறைவனுக்கு எதிராக பாவஞ்செய்கிறார். (தொநூ. 3:6, 4:8) (தொநூ. 3:11, 4:9-12)
  3. இறைவன் ஆதாமைப்போல காயீனிடமும் வினா எழுப்பி தண்டனையை வழங்குகின்றார்.
  4. இறைவன் ஆதாமுக்கும் காயீனுக்கும் இரக்கம் காட்டி அவர்களுக்கு துணையாக இருக்கிறார்.
  5. ஆதாமைப் போல காயீனுக்கும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற நேரிட்டது.

- காயீன் ஒரு விவசாயி. ஆபேல் ஓர் இடையன். காயீன் நிலத்தில் இருந்து பெற்றுக் கொண்டவற்றை காணிக்கையாக ஒப்புக் கொடுத்ததுடன், ஆயனான ஆபேல் தனது மந்தையில் கொழுத்த தலையீறுகளை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தான்.
- ஆபேலின் காணிக்கையை இறைவன் கனிவுடன் கண்ணோக்கினார் என்பதனூடாக இறைவனின் சுயமான தெரிவு காட்டப்படுகின்றது.

- காயீனின் காணிக்கை கனிவுடன் கண்ணோக்கப்படவில்லை. காரணம் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் காயீனிடத்தில் பொறாமை, குரோதம் ஆகிய தீய குணங்கள் உருவாகி, கொலை எனும் பாவத்தில் ஈடுபடுகின்றான்.
- ஆனால் இறைவன் காயீன் மட்டில் வைத்த அடையாளம் தண்டனையல்ல, இறைபாதுகாப்பின் சின்னமாகும்.
- காயீன் ஆபேல் கதையினூடாக கூறப்படுவது, மனந்திரும்பும் பாவிகள் மட்டிலும் இறைவன் கருணைக் காட்டுகின்றார் என்பதாகும்.

### 2.2.6 வெள்ளப் பெருக்கும் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் (தொ.நூ 6:1-9:17)

- இக்கதை யாவே (J) குரு (P) ஆகிய இரு மரபுகளையும் இணைத்து எழுதப்பட்டது. இதனால் இக்கதையில் பின்வரும் இரு பண்புகளைக் காணலாம்.

1. ஒரே கருத்து இரு முறை குறிப்பிடப்பட்டுள்ளமை. உதாரணம் :
   - **i.** நோவாவுக்கு வெள்ளத்தைப் பற்றி அறிவிக்கிறார் (தொ.நூ 6:17, 7:4)
   - **ii.** நோவா பேழைக்குள் நுழைதல் (தொ.நூ 7:7, 7:13)
   - **iii.** வெள்ளப் பெருக்கின் ஆரம்பம் (தொ.நூ 7:10, 7:11)
   - **iv.** உயிரினங்களின் அழிவு (தொ.நூ 7:21, 7:22-23)
   - **v.** வெள்ளம் வற்றுதல் (தொ.நூ 8:1, 8:3அ)
   - **vi.** நீரினால் மீண்டும் அழிக்காமைக்கு அளித்த உறுதி (தொ.நூ 8:21, 9:15)

2. ஒரே நிகழ்வு இரண்டு விதமாக விபரிக்கப்பட்டிருத்தல். உதாரணம்:-
   - **i.** தக்கவிலங்குகள் ஏழு சோடியும் தகாதவிலங்குகள் ஒரு சோடியும். தொ.நூ 7:2-3(J): எல்லா விலங்குகளிலும் ஒரு சோடி வீதம் பேழைக்குள் செல்ல கட்டளையிடுதல். தொ.நூ 6:19-20, 7:8-9, 7:13-16a (P)
   - **ii.** வெள்ளப் பெருக்குக்குக் காரணம் பெருமழை. தொ.நூ 7:4, 7:12, 8:2 (J)
     பேராழத்தின் ஊற்றுக்களினால் வெள்ளம் ஏற்படுதல். தொ.நூ 7:11, 8:2a (P)
   - **iii.** வெள்ளம் 40 நாட்கள் தொ.நூ 7:4, 7:12, (J):
     வெள்ளம் 150 நாட்கள் நீடித்தது. தொ.நூ 7:24, 8:3 (P)

- வெள்ளப் பெருக்கு ஏற்பட காரணம் உலகம் முழுவதும் பரவியுள்ள மனிதனின் பாவச் செயல்கள் என்பது இக்கதையின் மூலம் தெளிவாகிறது.
- யாவே மரபின்படி பாவத்தினால் மாசடைந்த எல்லா படைப்புக்களையும் இறைவன் அழிக்கத் தீர்மானிக்கின்றார். நோவாவின் குடும்பத்தையும் அனைத்து விலங்குகளினது பிரதிநிதிகளையும் காப்பாற்றியதன் மூலம் இறைவனின் இரக்கத்தைக் காணலாம்.
- குரு மரபின்படி நோவாவின் தெரிவு அவரது நேர்மையினால் நடந்ததாகும் (தொ.நூ 6:19).
- மீண்டும் புவியை நீரினால் அழிக்கமாட்டேன் என இறைவன் வாக்குறுதி அளித்து வானவில்லை, வானில் தோன்றச் செய்கிறார் (தொ.நூ 8:21, 9:11). இதனூடாக இறைவார்த்தை மட்டில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றார்.

### 2.2.7 பாபேல் கோபுரம் (தொடக்கநூல் 11:19)

- உலகில் பல இனமாக மக்கள் சிதறி சென்ற முறைமையையும், அவா்களுக்குள் வெவ்வேறான மொழி உருவான முறைமையையும் விளக்க உருவாக்கப்பட்ட கதையே பாபேல் கோபுரம்.
- இதன் கருத்து ‘மொழி குழப்பம்’ என்பதாகும்.
- மனிதனின் அழிவிற்குக் காரணம் அவனது தலைக்கணமாகும். அதாவது இறைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளாமையாகும்.
- இம்மக்கள் தம் பெயரை நிலைநாட்ட, வானளாவிய கோபுரம் ஒன்றுடனான ஒருநகரை தமக்காகக் கட்டத் தொடங்கினார்கள். அதற்காக செங்கல்லைக் கல்லாகவும், கீலைக் காரையாகவும் பயன்படுத்தினா். இவ்வாறான பெரும் கோபுரம் ஒன்றினை கட்டுவதற்கு இவை எவ்விதத்திலும் உகந்தவையல்ல. (தொ.நூ 11:3, 4)
- பாவத்திற்குத் தண்டனை உடனே கிடைக்கிறது. அகங்காரத்தின் பிரதிபலன் பிரிவினை ஏற்படல், மனிதனை ஒன்றிணைக்கும் கருவியான மொழி மக்கள் இடையே புரியாமையை ஏற்படுத்தியது. ஆகையால் அவர்களின் அன்றாட வேலைகள் குழம்பின. மனிதரிடையே இருந்த தொடர்பு முறிவடைந்தது. தங்களிடையே பலத்தில் வளரவேண்டிய மனிதன் பலவீனமானான். இதனால் அவர்கள் சிதறிப்போயினர்.
- இங்கு ஏற்பட்ட குழப்பத்தை விளக்க ‘‘பாபேல்’’ எனும் சொல் பயன்படுத்தப்பட்டது. யாவே மரபு ஆசிரியர் பாபேல் எனக் கூறக் காரணம் இக்கதை ஆணவத்தின் அடையாளமான பபிலோனியாவை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒன்றானதுடன் விவிலியத்தில் ஆணவத்தின் நகரமாக பபிலோனியா அறிமுகப்படுத்தப்படுகிறது (எரேமியா 50:31, எசாயா 14:3-23).

### கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி 1** வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலுள்ள இறையியல் தொடர்பான விடயங்களை பின்வரும் தலைப்புகள் ஊடாக முன்வைக்குக.

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான அறிமுகம்.
2. உலகமும் மனித படைப்பும் தொடர்பான இரண்டு கதைகள்
   (தொடக்கநூல் 1:1-2:4அ, 2:4ஆ-25)
3. மனிதனின் வீழ்ச்சி தொடர்பான நான்கு கதைகள்
   (தொடக்கநூல் 3:4, 6:1-9:17, 11:1-9)

உசாத்துணை நூல்கள்:

திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு)

அருட்பணி பிலிப்ஸ் ஜேசுதாசன் அமதி, மனுவார்த்தையில் இறைவார்த்தை

**தேர்ச்சி** 2:0 : இறைவெளிப்பாட்டிற்கேற்ப வாழ்வர்
**தேர்ச்சிமட்டம் 2**:3 **:** குலமுதுவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி வாழ்வர்
**பாடவேளைகள்** : 20

**கற்றல் பேறுகள்**

- குலமுதுவர்கள் காலம் தொடர்பான தகவல்களை கோவைப்படுத்துவர்.
- குலமுதுவர்களின் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்
- குலமுதுவர்கள் காலம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- இறை அழைப்பிற்கு ஏற்ப பதில் அளிப்பார்
- இறைத்திட்டத்தினூடாக வாழ்க்கை மாற்றத்தினை உணர பிறருடன் ஒத்துழைப்பர்.

**விடய உள்ளடக்கம் :**

**2.3.1 குலமுதுவர் காலம் :**

- குலமுதுவர்கள் என குறிப்பிடப்படுவோர் மீட்பு வரலாற்றின் ஆரம்பகாலத்தில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் ஆவர். அவர்கள் ஆபிரகாம் ஈசாக், யாக்கோபு ஆகியோர் ஆவார். திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இஸ்ரயேல் வரலாறு ஆரம்பமாவது குலமுதுவர்களிலிருந்தே ஆகும். குலமுதுவர் காலம் கி.மு 2000 - 1700 வரையான காலப்பகுதி ஆகும்.

- குலமுதுவர்கள் மந்தை மேய்க்கும் நாடோடிகளாவர். குடும்பத் தலைவர்களாகவும் கோத்திரத் தலைவர்களாகவும் இருந்தனர். மந்தைமேய்க்கும் நாடோடிகளான இவர்கள் இறைவன் தமக்கு முன்னால் வைத்த இலக்கை நோக்கிப் பயணம் செய்தனர். நாடோடி வாழக்கையான இவர்களின் வரலாறு, தமது மந்தைகளுக்கு உணவு தேடும் குறிக்கோளை மட்டும் கொண்டு அமையவில்லை.

- அது வாக்குறுதி ஒன்றின் மூலம் ஆரம்பித்து முன்நோக்கிச் செல்வதாகும். அதலால் குலமுதுவர்கள் இறை அழைத்தலுக்கு, கீழ்ப்படிந்து கஷ்டங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் அச்சமின்றி முகங்கொடுத்தனர். உடன்படிக்கைக்கேற்ப வாழ முடியாத சந்தர்ப்பங்களில் இறைவன் முன்வந்து அவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தி உடன்டிப்படிக்கையைப் புதுப்பித்தார்.

- குலமுதுவர் இஸ்ரயேல் மக்களை இறைமக்களாக கட்டியெழுப்புவதற்கு குலமுதுவர்கள் ஆரம்பகர்த்தாக்கள் ஆவர். அவர்கள் வரலாற்றில் தம் செயற்பாடுகள் மூலம் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தினர். அவ்விசேட பண்புகள் கிறிஸ்தவர்களான எமக்கு இன்றும் பொருந்தக் கூடியதாக உள்ளன.

**2.3.2 ஆபிரகாமின் அழைப்பு (தொ.நூ 12:1-6)**

- ஆபிரகாம் காரான் தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு சென்றமை, உண்மையாகவே இறைவனின் அழைப்பு காரணமாக அவரின் விருப்பபத்திற்கேற்ப நிகழ்ந்தது என்பது உறுதியானது.

- பரம்பரையாக பலதெய்வ வணக்க முறைகளைப் பின்பற்றிய ஆபிரகாமுக்கு இறைவன் தம்மை வெளிப்படுத்தியதும், அழைத்ததும் யூத வரலாற்றின் புதிய யுகமொன்றின் ஆரம்பத்திற்கு வித்திட்டது. அதாவது வரலாற்றிற்கு முன்னைய காலத்தில் மனிதன்

இறைவனைக் கைவிட்டு சென்றமை உச்சக்கட்டத்தை அடைந்த அதேவேளை ஆபிரகாமின் அழைப்புடனும் பதிலுடனும் மீண்டும் மனிதன் அப்பயணத்தை தொடர்வதற்கான செயற்பாட்டை ஆரம்பித்தான்.

- அழைப்பு முழுமையாக வெளிப்படுத்தப்படுவது இறைவனிடமிருந்தே. அழைத்தலைப் பெறும் நபரின் விசேட தகைமையோ அல்லது விசேட குணாதிசயங்களோ திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட வில்லை. இறை விருப்பு இங்கு உறுதியாக வெளிபடுத்தப்பட்டுள்ளது.

- இறைவன் ஆபிரகாமின் மீது கொண்ட அன்பையும் இரக்கத்தையும் முதன்மைப்படுத்தி ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தார். அழைப்பு பெறுபவரின் தனிப்பட்ட குணாதிசயங்களை விட இறைவனின் தெரிவே முக்கிய இடம் பெறுகிறது.

- இறைவனின் தேர்வும் அழைப்பும் அவ் அழைத்தலை ஏற்றுக்கொள்பவர் அதன் விளைவை தம் வாழ்க்கை பூராவும் ஏற்க தயாராய் இருக்க வேண்டும். அவர் தம்மை மறந்து இறைவன் முன்வைக்கும் வாழ்க்கைத் திட்டத்தை ஏற்க ஆயத்தமாய் இருத்தல் வேண்டும்.

- இறைவிருப்பத்தை ஏற்றுக்கொண்டதால் ஆபிரகாமுக்கு தம் வாழ்விலும் தம் வழிமரபினர் இருப்பையும் பாதிக்கின்ற முதன்மையான பிரச்சினைகள் பலவற்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அதனால் அவர் தமது சொந்த நாட்டைக் கூட விட்டு அந்நிய தேசமொன்றுக்கு செல்ல நேரிட்டது. வீடுவாசல், உறவினரைக் கூட கைவிட்டு புதியதொரு சமுதாயத்தை தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

- தமது சொந்த நாட்டிற்கு மீண்டும் திரும்பி வருதல் என்பது மிகக் கடினமான ஒரு விடயம். ஏனெனில் அவர் அறியாத இப்பயணம் 800 மைல்கள் ஆகும். தம் உறவினரோடு அதன்பின் எவ்வித தொடர்பும் ஏற்படுத்திக்கொள்ள முடியாது.

- இன்ப துன்பங்களை, வேதனைகளைப் பகிர்ந்து கொள்ள உற்றார் உறவினர் அவசியமாயினும், உறவினரின் நிழல் சுகமானது என்பதும் தெரிந்திருந்தாலும், இறையழைத்தலை ஏற்றுக்கொள்வதற்கு இவை அனைத்தையும் துறந்து இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து இப்பயணத்தை தொடர வேண்டியது அவசியமாகும்.

- இவ்வழைத்தலின் மூலம் இறைவன் ஆபிரகாமுக்கு நம்ப முடியாத 2 வாக்குறுதிகளை கொடுத்தார்.
  1. ஒரு நாட்டை உரிமையாக்குதல், 2. பெரியதொரு சந்ததி ஆதல்

- தானும் தனது மனைவியும் குழந்தைகளை பெறுவதற்கான வயதைக் கடந்தவர்களாக இருந்தமையாலும், தமது மனைவி கருவுற இயலாதவளாக இருந்தமையாலும் இவ்வெளிப்பாட்டை ஆபிரகாம் விளங்கிக் கொள்ள முடியாதவராக இருந்தார். எனினும் எவ்வித ஐயமின்றி ஆபிரகாம் இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து இறைவனின் குரலுக்கு செவிமடுத்து இறைவன் காட்டிய நாட்டிற்கு செல்ல புறப்பட்டார்.

- அத்துடன் இவ்வாக்குறுதியில் இறைவனால் ‘ஆசீர்வாதம்’ ஆசீர் என்ற சொல் 6 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய உடன்படிக்கையின் இவ்வாறான ஆசீர்வாதம் விசேடமாக வழங்கப்படுவது செழிப்பான விளைச்சல், நீடிய ஆயுள், பிள்ளைச் செல்வங்கள் ஆகியவற்றால் நிறைவு பெறுவதற்காகும்.

- ஆபிரகாமுக்கு இறைவனால் இவ்வாறான ஆசீர்வாதம் கிடைப்பது அவ்வாறான விருத்தியைப் பெறுவதற்கு என்பது தெளிவாகிறது. இங்கு இறைவன் ஆபிரகாம் வழியாக பெரியதொரு சந்ததியை உருவாக்குவேன் என வாக்குறுதி அளித்து தமது ஆசீரை அவருக்கு வழங்கினார்.

- இதன்படி நோக்கும்போது ஆபிரகாம் மீட்பு வரலாற்றுடன் தொடர்புள்ள இறைவனால் தம் சுயவிருப்பத்துடன் தேர்ந்துகொள்ளப்பட்ட முதலாவது நபர் ஆவார்.

- பழைய உடன்படிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் கதை நம்பிக்கையை அடிப்படையாக கொண்டே இவ்வாறு ஆபிரகாமுடன் ஆரம்பமாகிறது. ஆபிரகாம் இறை அழைத்தலின் வழியாக கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை முழுமையாக நம்பினார். அவரின் வார்த்தைகள் மனித விளக்கத்திற்கு அப்பாற்பட்டு இறை நம்பிக்கை மீது கட்டியெழுப்பட்டதை ஆபிரகாம் ஏற்றுக்கொண்டார். அதன்படி மிகுந்த அர்ப்பணத்துடன் செயலாற்றினார். அதனாலேயே ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை ஆனார்.

- இறைவனின் அழைத்தல் எக்காலத்திற்குமுரியது, நிறைவானது. இவ்வழைத்தலும், வெளிப்பாடும் எவ்வழியில் கிடைக்குமென்பது அறியமுடியாததெனினும் அது உண்மையாக நிகழ்வதொன்றாகும். சுயசிந்தனை உடைய மனிதனுக்கு அவ்வழைத்தலை விளங்கிக் கொள்வதற்கான ஆற்றல் செயற்படுவது அவர் இறைவன் மீது வைத்த நம்பிக்கையினால் ஆகும்.

- இதனை விளங்கிக் கொள்வது தர்க்கிப்பதால் அன்றி தியானத்தின் வழியாக அல்லது இறைவனின் குரலுக்கு செவிமடுப்பதால் ஆகும். ஏதாவதொரு விசேட பணிக்காக அழைத்தல் பெறும் நபரிடத்தில் எவ்வகை மனித பலவீனங்கள் காணப்பட்ட போதிலும் அவரிடம் காணப்படும் நம்பிக்கை, அர்ப்பணம், தைரியம், உலக நாட்டங்களிலிருந்து இயன்றளவு விலகி நிற்றல் போன்ற பண்புகள் தொடர்பான முழு நிறைவைப் பெற்றவராக மனிதரிடையே உலக முடிவுவரை வாழ்வார்.

- ஆபிரகாம் இறைவனை முழுமையாக நம்பினார். அந்நம்பிக்கையால் அவர் நீதிமானாக இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

## ஆபிரகாமுடன் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கை

- உடன்படிக்கை செய்துகொள்ளும் சம்பிரதாயம் தொடக்க காலத்தில் இருந்தே மனிதர் மத்தியிலும் குடும்பங்கள் மத்தியிலும் அரசுகள் மத்தியிலும் காணப்பட்ட ஒரு வழக்கமாகும். ஏனைய வரலாறுகளில் மட்டுமன்றி மீட்பு வரலாற்றிலும் அது மிகவும் முக்கியமானதும் அர்த்தமிக்கதுமானதாகும்.

- ஆபிரகாமுடன் இறைவன் செய்துகொண்ட உடன்படிக்கை அவர் மனிதருடன் செய்து கொண்ட மூன்றாவது உடன்படிக்கை ஆகும்.
  1. ஆதாமுடன், 2. நோவாவுடன் 3. ஆபிரகாமுடன்

- இதன்படி யாவே மற்றும் குரு என்ற பாரம்பரியங்கள் இரண்டும் இறைவன் ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை குறிப்பிடுவதுடன் இவ்விரண்டு எழுத்தாளர்களுமே அவ்வுடன்படிக்கையில் இரண்டு முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுள்ளனர்.

1. எண்ணற்ற சந்ததி (தொ.நூ 15:5,17:5)
2. எக்காலத்திற்கும் உரிமையாகும் நாடு (தொ.நூ 15:21, 17:8)

- இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் காட்டும் பிரமாணிக்கத்தை அடையாளப்படுத்த ஆதிமனிதனுக்கு மிக அண்மித்த, பரிச்சயமான ஒரு சடங்கைப் பயன்படுத்தினார். (தொ.நூ 15:9-12) எனவே தேர்ந்தெடுத்த மிருகங்களை இருகூறாக வெட்டி, இவ்வாறு வெட்டப்படட பகுதிகளையும் எதிரெதிராக வைத்து உடன்படிக்கை செய்து கொண்ட இருசாராரும் அதனூடாக நடந்து செல்லல் ஆகும்.

- இவ்வுடன்படிக்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட மிருகங்களாவன, மூன்று வயதுள்ள இளம் பசு, மூன்று வயதுள்ள செம்மறியாடு, மூன்று வயதுள்ள வெள்ளாடும் ஆகும். அதற்கு மேலதிகமாக மாடப்புறா ஒன்றும் காட்டுப்புறா ஒன்றும் எடுத்த அவர் அவற்றை இருகூறாக வெட்டவில்லை. இருசாராருள் ஒருவர் உடன்படிக்கை மீறினால் அவர்களுக்கும் இம்மிருகங்களுக்கும் நேரிட்ட கதி (மரணம்) நேரிடும் என்பது நியமிக்கப்பட்டிருந்தது.

- தொ.நூ 15:17 குறிப்பிடப்பட்டுள்ள 'புகைந்து கொண்டிருந்த தீச்சட்டியும் 'எரிந்து கொண்டிருந்த தீப்பந்தமும்' அடையாளப் படுத்துவது இறைவனையே (வி.ப 19:8) இருகூறாக வெட்டப்பட்ட மிருகங்களிடையே இறைவன் மட்டும் நடந்து சென்றார். ஆபிரகாம் செல்லவில்லை. அதன்படி இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொறுப்பிற்கு கட்டுப்பட்டார். எனினும் ஆபிரகாமின் தரப்பில் எப்பொறுப்புமில்லை.

- யாவே பாரம்பரியத்திற்குரிய தொ.நூ 15ஆம் அதிகாரத்தில் இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் ஆபிரகாம் தரப்பில் எவ்வித நிபந்தனைக்கும் உட்படவில்லை. ஆயினும் குருக்கள் பாரம்பரியம் தொ.நூ 17ஆம் அதிகாரத்தின்படி முன்வைக்கப்படும் உடன்படிக்கையில் புதிய உறவின் அடையாளமாக ஆபிரகாம் சாரா ஆகியோரின் பெயர் மாற்றப்படுகிறது. அத்தோடு ஆபிரகாமுக்கும் அவரிலிருந்து ஆரம்பமாகும் சந்ததிக்கும் நல்லொழுக்கம், பழக்கவழக்கங்கள், சமய சடங்கு முறைகள் ஆகியவற்றை பேணும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது.

- நல்லொழுக்கத்தின்படி இறைவனுக்குக் கீழ்ப்படிந்து குற்றமற்றவராக இருப்பதற்கும், சமய ரீதியல் அவருக்கும் அவரது வழிமரபினருக்கும் இறைவனை ஏற்றுக்கொள்ளவும், அவருடைய சடங்கு முறைபடி எல்லா ஆண்களும் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும் என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- ஆண்கள் விருத்தசேதனம் செய்வது எகிப்தைப்போல பாலஸ்தீனாவிலும் நடைபெற்ற பழைமையான வழக்கமாகும். அது திருமணத்திற்கு முன் நடைபெற்ற சடங்காகவும், பருமடைந்தவரின் சடங்காகவும், சுகாதாரக் காரணங்களையொட்டி நடைபெற்ற சடங்காகவும் இருந்தது. வேதனையால் அழாமல் அதை தாங்கிக் கொள்ளக்கூடிய தைரியத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக எகிப்தியர் இதை கருதினார்கள்.

- ஆனால் இங்கே இந்த சடங்குமுறை முதன்முறையாக மத்திய கிழக்கு நாட்டு வரலாற்றில் சமய ரீதியான அர்த்தத்தைப் பெறுகிறது. இது இறைவனுக்கு அர்ப்பணிக்கும் சடங்காக இருந்தது. ஆதலால் இறைவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையில் நடைபெற்ற உடன்படிக்கையின் அடையாளமாக விருத்தசேதனம் இருக்கிறது.

- ஆபிரகாமின் வழிமரபினரின் ஆண்குழந்தைகள் இதைச் செய்வது கட்டாயமானது. இது திருமுழுக்கின் முன்னடையாளமாகக் கருதப்படுகிறது. அன்று இச்சடங்கை இஸ்ரயேல் மக்கள் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மக்களின் அடையாளமாக கருதினர். அதுமட்டுமின்றி அது இறைவனின் விசேட இறை அழைத்தலின் அடையாளமாகும்.

**ஆபிரகாமின் விசுவாசம்**

- ஆபிரகாமின் விசுவாசப் பயணம் தொடக்க நூல் 12ஆம் அதிகாரத்தில் ஆரம்பித்து 22ஆம் அதிகாரத்தில் உச்சக்கட்டத்தை அடைகிறது. இவ்விரண்டு அதிகாரங்களிலும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

  1. இறைவன் காட்டும் நாட்டிற்கு செல்ல கட்டளை இடப்படுகின்றது. (தொ.நு 12:1) மோரியா நாட்டுக்கு செல்ல கட்டளை இடப்படுகின்றது (தொ.நூ 22:2)
  2. ஆபிரகாமின் நாடு, உறவினர் தந்தையின் வீடு இவற்றை விட்டு செல்லுமாறு கோரிக்கை (தொ.நூ 12:1, ஆபிரகாம் அன்பு செய்த அவரது ஒரே புதல்வரை கைவிடுமாறு (எரிபலியாக ஒப்புக்கொடுப்பதற்கு) கட்டளை (தொ.நூ 22:2)
  3. இறைவன் காட்டிய நாட்டுக்குச் சென்றமை தம் தந்தையை கடைசி முறையாக காண்பதற்கு ஏதுவானது. தன் ஒரே மகனை எரிபலியாக ஒப்புக்கொடுக்கச் சென்றமை அவரை கடைசி முறையாக காண்பதற்கு ஏதுவானது.
  4. இரண்டு சந்தர்ப்பங்களிலும் இறைவன் ஆபிரகாமுக்கு ஆசீர் அளித்ததுடன் ஆபிரகாமுக்கு பெரியதொரு சந்ததி உருவாகுமென்ற வாக்குறுதி தரப்படுகிறது (தொ.நூ 12:2, 22:17)

- இவ்விசுவாச பயணத்தில் ஆபிரகாமுக்கு மிகவும் வேதனையான கடினமான பல தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. எனினும் இறைவனுக்கு சார்பாக நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் ஆபிரகாம் இத்தீர்மானங்களை செயற்படுத்தினார்.

- ஆபிரகாம் காரான் நாட்டிலிருந்து வெளியேறி 25 ஆண்டுகளும் இஸ்மாயேல் பிறந்து 13 ஆண்டுகளும் கழிந்திருந்தன. இறைவன் தம் வாக்குறுதியை நிறைவேற்றி அவரின் முதிர்ந்த வயதில் அவருக்கு ஒரு புதல்வனை அருளினார்.

- எனினும் ஆபிரகாம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அது அவரின் ஒரே மகனான தாம் அன்பு செய்த ஈசாக்கை எரிபலியாக பலியிடுமாறு கட்டளை இடப்படுகிறது. மேலும் ஒரு மகப்பேறு எதிர்பார்ப்பை வைத்துக் கொள்ள முடியாத நிலையிலேயே இவ்வாறான கட்டளை இடப்படுகின்றது.

- இது இறைவன் மீது ஆபிரகாம் வைத்த நம்பிக்கையும் அவரது எதிர்கால எதிர்பார்ப்புகள் அனைத்தையும் வேருடன் அறுக்கும் இறைவனின் ஆணையாக இருந்தது. ஆபிரகாமுக்கு இது முகங்கொடுக்க முடியாதளவு சிக்கலாக வந்தபோதும் இறைவனுக்கு கீழப்படிந்து தன் மகனை பலியாக்க ஆயத்தமானார். (தொ.நு 22:9-22)

- ஆபிரகாமின் விசுவாச வாழ்வை சோதித்த இறைவன் ஈசாக்கை எரிபலியாக்குமாறு பணிக்கின்றார். ஆபிரகாம் இறைசித்தத்தை ஏற்கிறார். ஆயினும் இச்செய்தி முடிவடைவது 'ஆபிரகாம், ஆபிரகாம்... பிள்ளையின் மேல் கை வைக்காதே, அவனுக்கு எதுவும் செய்யாதே, உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்' என்ற இறைவனின் வார்த்தையாலேயே (தொ.நூ 22:11-12) ஆகும்.

- இறைவன் பெரிய ஆபத்திலிருந்து ஈசாக்கை விடுவித்தது மட்டுமல்லாமல் ஆட்டுக்கிடாய் ஒன்றையும் ஆபிரகாமுக்கு வழங்கினார்.

- மொலெக் தெய்வத்துக்கு பிள்ளைகளை பலியிடுவது அக்காலத்தில் இருந்த பழைய வழக்கமாகும். இவ்வாறு பிள்ளைகளை பலியிடுவதை இறைவன் நிராகரிக்கிறார் என்பது தொடக்கநூல் 22ஆம் அதிகாரத்தில் மிகத் தெளிவாக காட்டப்படுகின்றது. உண்மையாகவே ஈசாக்கின் மரணமல்ல, ஆபிரகாமின் நம்பிக்கையே இறைவனுக்கு அவசியமானது.

- ஆபிரகாமிடம் காணப்பட்ட அளப்பரிய விசுவாசம், எதிர்நோக்கு, உண்மை அன்பு பொறுமை, அளப்பரிய கீழ்ப்படிவு, திடமான நம்பிக்கை போன்ற பண்புகளால் அவரது வாழ்க்கைக் காலம் முழுவதும் நிறைந்திருந்தது. இறை சித்திற்கமைய வாழ அவரிடம் காணப்பட்ட இக்குணாதிசயங்களால் அவர் இறைவனின் விசேட கவனிப்பிற்கு பாத்திரமானவரானார்.

- அவரது ஆயுட்காலம் 175வருடங்கள் ஆகும். இவ்வாறு அவர் நீண்ட ஆயுள் பெற்று முதிர்ந்த வயதில் இறுதி மூச்சை விட்டு உயிர்துறந்தார். அவரை ஈசாக்கும் இஸ்மயேலும் மக்பேலா குகையில் அடக்கம் செய்தனர். (தொ.நூ 25:9)

### 2.3.3 ஈசாக்

- இறைவன் தமது வாக்குறுதியை நிறைவேற்றினார். சாரா ஆபிரகாமுக்கு ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அவர் தான் ஈசாக் பிறந்த எட்டாம் நாளன்று ஆபிரகாம் அவருக்கு விருத்தசேதனம் செய்தார். ஈசாக் பிறந்தபோது ஆபிரகாமின் வயது 100. குழந்தை வளர்ந்து பால்குடி மறந்தது. அந்நாளன்று ஆபிரகாம் பெரியதொரு விருந்து அளித்தார் (தொ.நூ 21: 4,5,8)

- ஈசாக் நேர்மையான, கீழ்ப்படிவுள்ள பிள்ளையாகவும், நாட்டின் கலாச்சாரங்களுக்கு மதிப்பளித்து, நம் தந்தை ஆபிரகாமுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தார், என திருவிவிலியம் எடுத்துக் காட்டுகின்றது.

- இளம் வயதிலேயே தன்னை கொல்வதற்கு (பலியாக பலியிடுவதற்கு) ஏற்பாடு செய்த தம் தந்தையை அவர் ஒருபோதும் பழிவாங்கவில்லை. இது ஈசாக்கின் ஒரு நல்ல மனிதப் பண்பாகும். தம் பெற்றோரின் அனுமதியுடன் தம் 40வது வயதில் ரெபேக்கா என்ற பெயருடைய பெண்ணை மனந்து அவருடன் அமைதியாக வாழ்ந்தார் (தொ.நூ 24:67)

- ஈசாக்கிற்கு தாம் வாழ்ந்த பிரதேசத்தில் கானானிய பெண் ஒருவரை மனந்துக் கொள்ள முடியவில்லை. அவ்வாறு செய்தால் ஆபிரகாமின் வழிமரபு இழிநிலைக்குள்ளாகி வாக்குறுதி அர்த்தமின்றி போக இடமுண்டு. அதனால் ஆபிரகாமின் ஊழியரை மெசபொத்தேமியாவுக்கு (காரான் தேசத்துக்கு) அனுப்பி ஆபிரகாமின் சகோதரரின் பேத்தியான ரெபேக்காவை ஈசாக்கிற்கு தேர்ந்து கொடுத்தார்.

- ஈசாக் இயேசுவுக்கு முன்னடையாளம். இயேசு தனது சிலுவையை தானே சுமந்து சென்றதுபோல ஈசாக்கும் எரிபலியாக பலியிடுவதற்கு தேவையான விறகுக் கட்டுகளைத் தாமே சுமந்து மோரியா நிலப்பகுதியில் இறைவன் ஆபிரகாமுக்குக் காட்டிய மலைக்கு ஏறிச் சென்றார். அவரின் கபடற்ற தன்மை, கீழ்ப்படிவு காரணமாக ‘துன்புறும் ஊழியன்’ உருவை எற்கிறார்.

- ஈசாக்கின் மனைவியான ரெபேக்காவும் ஆபிரகாமின் மனைவி சாராவைப் போன்று ஒரு மலடியாவார். ஆயினும் இறைத்திட்டத்திற்கேற்ப இரட்டைக் குழந்தைகளின் தாயானார். இவர்களிடையே மூத்தவன் இளையவனுக்கு பணிந்திருப்பான் என இறைவன் தெரிவித்தார். (தொ.நூ 15:19-26). மூத்தவன் ஏதோம் இனத்தவரின் தந்தையான ஏசா ஆவார். இளையவன் இஸ்ராயேல் இனத்தவரின் தந்தையான யாக்கோபு ஆவார்.

## உடன்படிக்கையை புதுப்பித்தல் (தொ.நூ 26:19-25)

- - ஈசாக்கு கெரார் பள்ளத்தாக்கில் குடியேறி வாழலானார். அங்கு வாழும் போது அவரது ஊழியர்கள் இப்பள்ளத்தாக்கில் கிணறுகளை தோண்டும்போது அங்கு நீருற்றுடன் கூடிய கிணறு ஒன்றை கண்டனர். ஆனால் கெராரில் இருந்த மேய்ப்பர்கள் 'இந்தத் தண்ணீர் எங்களதே' என்று சொல்லிக் கொண்டு ஈசாக்கின் மேய்ப்பர்களோடு வாதாடினர். இவ்வாறு அவர்கள் அவரோடு தகராறு செய்ததால் அந்தக் கிணற்றுக்கு 'ஏசேக்கு' என்று பெயரிட்டார்.

- மீண்டும் அவர்கள் வேறொரு கிணறு தோண்டினர். முன்புபோல அதைப் பற்றியும் வாக்குவாதம் எற்பட்டது. எனவே அதற்கு 'சித்னா' என்று பெயரிட்டார்.

- பின்னர் அவ்விடத்தை விட்டகன்று வேறொரு கிணற்றைத் தோண்டினர். இம்முறை வாக்குவாதம் ஒன்றும் ஏற்படவில்லை. அதனால் அதற்கு 'இரகபோத்து' என்று பெயரிட்டார்.

- கிணற்றை இவ்வாறு பெயரிட்டு 'ஆண்டவர் நம் எல்லையை விரிவுபடுத்தியுள்ளார். நாட்டில் நாம் வளர்ச்சியுறுவோம்' என்று இப்பெயர் குறிக்கிறது. பின் ஈசாக் பெயர்செபாவுக்கு சென்றார். அன்றிரவே ஆண்டவர் அவருக்குத் தோன்றி இவ்வாறு சொன்னார். 'உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே, அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். உனக்கு ஆசி வழங்கி என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உன் வழிமரபைப் பெருகச் செய்வேன்.' தொ.நூ 26:24)

- எனவே ஈசாக்கு அங்கு ஒரு பலிப்பீடம் கட்டி, ஆண்டவரது திருப்பெயரைப் போற்றினார். அங்கே ஒரு கூடாரம் அமைத்தார். (தொ.நூ 26:23-25)

- இவ்வாறு இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை ஈசாக்கூடாக புதுப்பித்துக்கொண்டார். இறைவன் இவர்கள் வழியாக இஸ்ரயேல் மக்களை அழைத்தது அவருடன் நெருங்கி வாழ்வதற்காகவே.

### 2.3.4 யாக்கோபு

- யாக்கோபு மிகவும் தந்திரமானவர். தம் சகோதரனான ஏசாவை விட செயற்திறன் மிக்கவன். தம் வயது முதிர்ந்த தந்தையை ஏமாற்றி, தலைமகன் பெற வேண்டிய ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட முறையினை தொடக்க நூல் 27 ம் அதிகாரம் கூறுகின்றது.

- அது மாத்திரமல்ல தலைமகனான ஏசா தலைமகனுரிமையை விற்று விட்டார் என்பது (தொ.நூா. 25:27) குறிப்பிட்டுள்ளது. ஏசாகுக்குரித்தான ''தந்தையின் ஆசியை'' தான் பெற்றுக்கொண்டமையால், யாக்கோபுக்கு தம் வீட்டைவிட்டுச் செல்ல நேரிட்டது. தம் தாயின் ஆலோசனையின் படி செயற்பட்ட யாக்கோபு காரானில் தம் மாமனாரான லாபானிடம் வந்தடைந்தான்.

- லாபானின் வீட்டில் தங்கிய யாக்கோபு, ஏழு வருடம் அவரின் கீழ் தொழில் புரிந்து, லாபானின் மகளாக லேயாவை மணஞ்செய்தான். பின்னர், மேலும் 7 வருடங்கள் வேலை செய்து வடிவழகும் எழில் தோற்றமும் உள்ள ராகேலையும் மணந்துக் கொண்டான். (தொ.நூா. 29:15 - 30)

- யாக்கோபு பல குழந்தைச் செல்வங்களைப பெற்றார். லேயா எனும் மனைவிக்கு ரூபன், சிமியோன், லேவி, யூதா இசக்கார், செபுலோன் என்ற 6 புதல்வர்களையும் தீனா என்ற புதல்வியையும் பெற்றார்.

- ராகேலின் பணிப்பெண் பில்கா மூலம் தாண், நப்தலி ஆகிய 2 புதல்வர்களை பெற்றார்

- லேயாவின் பணிப்பெண்ணான சில்பா மூலம் காத், ஆசேர் ஆகிய 2 புதல்வர்களை பெற்றார்.

- ராகேல் மூலம் யோசேப்பு, பெஞ்சமின் ஆகிய 2 புதல்வர்களைப் பெற்றார்.

- இவ்வாறு யாக்கோபு 12 புதல்வர்களின் தந்தையானார். இவர்களுள் யாக்கோபு யோசேப்பை அதிகமாக நேசித்தார்

- அதற்கு கீழ்வரும் காரணிகள் ஏதுவாய் அமைந்திருந்தன.

  1. யாக்கோபு மிகவும் அன்பு செய்த மனைவி ராகேலின் புதல்வானாக யோசேப்பு இருந்தமை
  2. முதிர்ந்த வயதில் தமக்கு யோசேப்பு பிறந்தமை
  3. தம் சகோதரைப் பற்றி தேடிப் பார்த்தல்
  4. இறைவனின் விசேட பார்வை யோசேப்புவுக்கு இருந்தமையை யாக்கோபு உணர்ந்தமை.

- யாக்கோபின் 12 புதல்வர்களிலிருந்து தோன்றிய 12 கோத்திரங்களின் இஸ்ரயேல் மக்கள் உருவாகினர். அதனால் மீட்பு வரலாற்றில் யாக்கோபு விசேட இடம் பெறுகிறார்.

## உடன்படிக்கையைப் புதுப்பித்தல் (தொ.நூ 28:10-22)

- பெத்தேல் எனும் இடத்தில் யாக்கோபு ஒரு விந்தைமிகு கனவு கண்டார் (தொ.நூ 28:10-22) ஆபிரகாம் இறைவனைக் கண்டுணர்ந்த இடம் எபிரோன். ஈசாக் அனுபவம் பெற்றது பெயர்செபாவில்.

- அவ்வாறே யாக்கோபு தம் எதிர்காலம் தொடர்பாக இறைத்திட்டத்தை விளங்கிக் கொண்டது பெத்தேலில் ஆகும். இதன் பொருள் 'இறைவனின் இல்லம்' என்பதாகும். இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை பெத்தேலில் யாக்கோபுடன் புதுப்பித்துக் கொண்டார் (தொ.நூ 28: 10-22)

- யாக்கோபு புறப்பட்டுச் சென்ற இரவில் பெத்தேலில் கனவு ஒன்று கண்டது மட்டுமன்றி ஒரு அழைப்பும் பெற்றார். இவ்வழைத்தலில் 2 வாக்குறுதிகள் உண்டு.
  1. இறைவன் இந்நாட்டை உரிமையாக்கித்தரல்
  2. அவரின் வழிமரபைப் பெருகச் செய்தல்

**வாழ்க்கை மாற்றம் (தொ.நூ 32:22-30, 33:3)**

- எதிர்பார்ப்புக்கள் சிதைந்த நிலையில் இருந்த யாக்கோபுக்கு தோன்றி அவரை திடப்படுத்திய இறைவன், இம்முறை செல்வங்களால் நிரம்பிய வேளையில் இரவில் ஒரு விருந்தாளியின் உருவில் அவரிடம் வந்தார்.

- பெனியேல் என்ற இடத்தில் யாக்கோபு இறைவனின் தூதர் ஒருவருடன் மற்போரிட்டார் என்பதை தொ.நூ 32:22-32 பகுதியில் குறிக்கும் விவிலிய ஆசிரியர் யாக்கோபு பெற்ற விசேட தூய ஆவியின் வல்லமையை எடுத்துக் கட்டுகின்றார்.

- இறைவனின் தூதரோடு பொழுது புலரும்வரை மற்போரிட்ட யாக்கோபு ஆசீரை பெற்ற பின்னரே அவரை அங்கிருந்துச் செல்ல அனுமதித்தார். இது வரை யாக்கோபு என்ற பெயரில் தோன்றிய நபர் அதன் பின் 'இஸ்ரயேல்' என்ற பெயரைப் பெற்றார்.

- யாக்கோபு 'இறைவனின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன்' என்று சொல்லி, அந்த இடத்திற்கு 'பெனியேல்' என பெயரிட்டார். இந்நிகழ்வின் பின் யாக்கோபு தம் சகோதரரான ஏசாவுடன் ஒற்றுமையாகிறார்.

- ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு ஆகிய குலமுதுவர்களுடன் மீட்பு வரலாறு ஆரம்பிப்பதுடன், யாவே இறைவனை அறிந்து அவரை மட்டும் வழிபடுவதிலும் ஈடுபட்டனர்.

- பண்பாட்டு ரீதியில் வளர்ச்சி பெறல், மேய்ப்பு வாழ்க்கை முறைக்கு பயிற்சி பெறல், பகைவரிடமிருந்து பாதுகாப்புப் பெறல், கோத்திர சமாதானத்தை ஏற்படுத்தல், சிறிது சிறிதாக இறைமக்களாக மாறுதல் ஆகியன குலமுதுவர் வழியாக மக்கள் பெற்ற சேவைகளாக அறிந்து கொள்ளலாம்.

- இறைவன் ஈசாக் யாக்கோபு போன்ற தலைவர்களை தேர்ந்து கொண்டது அவர்களின் புனிதத்தன்மை காரணமாக அல்ல, இறைவனின் அன்பின் காரணமாகவே ஆகும்.

- அன்பினால் அழைக்கும் இறைவனுக்கு அன்பினால் பதிலளிப்பது இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு சவாலாக அமைந்தது. அதற்கு முகங்கொடுக்கும் ஆற்றலை உருவாக்குவதற்காக குலமுதுவர்கள் அம்மக்களுக்கு அறிவுரை வழங்கினர். அவர்கள் முன்மாதிரியையான வாழ்வு வாழ்ந்தனர். நாமும் குலமுதுவர்களைப்போல் வாழ செயற்படுவோம்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 1**

குலமுதுவர் காலம் தொடர்பாக கீழேயுள்ள தலைப்புகளுடாக உரையொன்றினை ஆயத்தப்படுத்தவும்

1. குலமுதுவர் காலத்தைப் பற்றி சிறு அறிமுகம்
2. ஆபிரகாமின் அழைப்பு (தொ.நூ 12:1-6)
   உடன்படிக்கை (தொ.நூ 15:1-21, 17:1-14)
   நம்பிக்கை (தொ.நூ 12:24)

3. ஈசாக் பற்றி அறிமுகப் (தொ.நூ 21:2-5)
   உடன்படிக்கையை புதுப்பித்தல் (தொ.நூ 28:10-22)
4. யாக்கோபு பற்றிய அறிமுகம்
   வாழ்க்கை மாற்றம் (தொ.நூ 32:22-32, 33:3)

**தேர்ச்சி மட்டம் 2.0** : இறை வெளிப்பாட்டிற்கேற்ப வாழ்வார்

**தேர்ச்சி மட்டம் 2:4** : அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிப்பதற்கு விடுதலைப் பயண நிகழ்வை ஆதாரமாகக் கொள்வார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றல் பேறுகள் :**

- விடுதலைப் பயணம் தொடர்பான தகவல்களை கோவைப்படுத்துவார்
- நம்பிக்கையினூடாக இறை அன்பு, அரவணைப்பினை உணர முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்
- விடுதலைப் பயணம் தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்
- அன்றாட வாழ்வினூடாக இறைபராமரிப்பினை உணர்வார்
- பிறரின் பாதுகாப்பிற்காக பாடுபடுவார்

**எகிப்திய அடிமைத்தனமும் மோசேயின் பிறப்பும் (வி.ப 1,2 அதி)**

யாக்கோபுவின் பரம்பரைக்கு சொந்தமான எழுதபத்திரெண்டுப் பேரே எகிப்துக்கு வந்தனர். ஆசி பெற்ற மக்களாக வாழ்ந்த இவர்கள் காலப்போக்கில் வளமும் பலமும் வாய்ந்த மக்களினமாக அதிகரித்தனர். (வி.ப 1:1-7) இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார் என்பது இதன் வழியாக எடுத்துக் காட்டப்படுகின்றது (வி.ப 12:2)

''அக்காலத்தில் யோசேப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.'' (வி.ப 1:8) இம் மன்னன் கி.மு 1290 - 1224 கால கட்டத்தில் எகிப்தை ஆண்ட 19வது பார்வோன் அரச பரம்பரைக்குரிய இராம்சேஸ் என்பவரென அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு புதிய அரசராக அறிமுகமாகும் இராம்சேஸ் மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இஸ்ரயேல் மக்களுக்குப் பயந்தான்.

1. இஸ்ரயேல் மக்களின் எண்ணிக்கை அதிகரித்தல்
2. யுத்தம் ஏற்பட்டால் இஸ்ரயேலர் எதிரிகளுடன் இணைய வாய்ப்புள்ளமை.
3. தமது புதிய தலைநகரை கட்டியெழுப்ப மனித சக்தியின் தேவை.

**எகிப்தில் அடிமைத்தனம்**

வரலாற்றுக் குறிப்புகளின்படி இக்காலப்பகுதியில் எகிப்தில் மிகவும் திறமை வாய்ந்த கட்டடக்கலை, வாஸ்து சாஸ்திரம், இலக்கியம், வணிகம், கலை, போர்க்கலை போன்ற துறைகள் விருத்தியடைந்திருந்தன. விவசாயம் நீர்ப்பாசனம் என்பவற்றைப் பற்றி உயர் தொழில் நுட்ப அறிவும் வளர்ந்திருந்தது.

துன்பங்கள் மத்தியிலும் இஸ்ரயேல் மக்கள் பெருகினர். மேலும் அரசன் இஸ்ரயேல் மக்களின் எண்ணிக்கை பெருகுவதைக் கட்டுப்படுத்த, முயற்சிகளை மேற்கொண்டமை காண முடிந்தது.

1. மிகக் கடுமையான வேலைகள் செய்ய இஸ்ரயேலர் பணிக்கப்பட்டனர். (வி.ப 1:11-14) இஸ்ரயேல் பார்வோனுக்காக பித்தோம், இராம்சேசு போன்ற நகரங்களைக் கட்டினர். கடினமான சாந்து செங்கல் வேலையாலும், மற்றும் வயல்வெளி வேலைகளாலும், அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள்.

2. அவர்களுக்குப் பிறக்கும் சகல ஆண் குழந்தைகளையும் பிரசவத்திலேயே கொன்றுவிட தாதிமார்கள் நியமிக்கப்பட்டார்கள். (வி.ப 1:15-16)
3. ஆண் குழந்தைகளை நைல் நதியில் தூக்கி எறிந்துவிட கட்டளை பிறப்பிக்கப்பட்டது (வி.ப 1:22)

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் மோசேயின் பிறப்பு நடைபெற்றது.

- மோசே லேவி கோத்திரத்தைச் சார்ந்தவர்.

- தந்தை அம்ரான் தாய் யோக்கபேது ஆவார்

- அவரின் சகோதரர் ஆரோன் ஆவார். அவரும் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர். சகோதரி மிரியம் ஆவார்

- இஸ்ரயேல் மக்களின் விடுதலை வீரனான மோசேயின் பிறப்பில், வளர்ச்சியில் இறை பராமரிப்பை நன்கு அறியலாம்.

- சிறுபிராயத்தில் தனது தாயின் அரவணைப்பில் வளர்ந்த சிறுவன், பார்வோனின் மகள் ‘‘நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்’’ என்று கூறி மோசே என்று பெயரிட்டாள் (வி.ப 2:10) பார்வோனின் மகளின் கண்காணிப்பில் வளர்ந்து வந்த மோசே பார்வோனின் அரண்மனையில் சகல சுகபோகங்களையும் பெற்று அரச தரப்பிலான அனுபவங்களையும் பெற்றிருந்தார்.

- மறைவல்லுனரின் கருத்துப்படி மோசே என்ற பெயர் பழைமை வாய்ந்த எகிப்து நாட்டில் பயன்படுத்தப்பட்ட பெயரென எடுத்துக்காட்டப்படுகிறது.

- அரண்மனையில் மோசேயின் வளர்ச்சி பிற்காலத்தில் பார்வோன் முன்னிலையில் நிற்பதற்கு ஏதுவாக இருந்திருக்கலாம்.

- இந்நிகழ்வின் மூலம் எடுத்துரைக்கப்படும் முக்கிய செய்தியாதெனில் மோசே பார்வோன் முன் நடுநிலை வகிக்க இறைவன் அவரைத் தயார் செய்வது என்பதாகும்.

- மோசே அரண்மனையில் வாழ்ந்தாலும் தம் இரத்த உறவுகளை மறக்கவில்லை. எபிரேய இனத்தவன் ஒருவனை அடித்துத் துன்புறுத்திய எகிப்தியனை கொன்ற நிகழ்வு ஊடாக இதனை அறியக் கூடியதாகவுள்ளது.

- இன்னும் பார்வோனின் கோபத்திற்கு ஆளான மோசே எகிப்திலிருந்து மிதியான் நாட்டிற்கு தப்பியோடினான்.

- மிதியான் நாட்டு அர்ச்சகராகிய இத்திரோவின் மகள் சிப்போராவை திருமணம் செய்து மந்தை மேய்த்து வாழ்ந்து வந்தான். இது அவன் பெறும் அழைப்பிற்கு வழிகாட்டியாகவும், வருங்காலத்தில் தம் மக்களை பாலை நிலத்தினூடாக அழைத்துச் செல்வதற்கு அனுபவமாகவும் இருக்கிறது (வி.ப 2:11-22)

**மோசேயின் அழைப்பு (வி.ப 3:1-4, 17)**

மோசே முதன்மையான இறைவாக்கினராவார் (இச 34:10). ஆதலால் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினரின் அழைப்பின் பின்னணியில் மோசேயின் அழைப்பையும் முன்வைக்கின்றார். இறைவாக்கினர், இறைவாக்கு உரைக்கும் போது பயன்படுத்திய மூன்று வசனங்ககளில் ஒன்றான 'ஆண்டவர் கூறுகிறார்' என்ற வசனத்தை மோசேயும் பயன்படுத்தியுள்ளார். மோசேயின் அழைப்பை இறைவாக்கினரின் அழைப்பின் பண்பு மூலம் முன்வைக்கப்படுகின்றது.

1) இறைவெளிபாடு (வி.ப 3:1-6)
2) இறைவன் தமது பணியை முன்வைத்தல் (வி.ப 3:7-10)
3) மோசே தமது விருப்பமின்மையைத் தெரிவித்தல் (வி.ப 3:11, 3:13, 4:1, 4:10, 4:13)
4) இறைவன் அவரைத் திடப்படுத்தல் (வி.ப 3:12, 3:14, 4:2-9, 4:11-12, 4:14)
5) அனுப்புதல் (வி.ப 4:17)

இறைவனின் அழைப்பிற்கு தமது விருப்பமின்மையை 5 தடவைகள் தெரிவித்தபோதும் இறைவன் அவரை 5 தடவைகள் தைரியப்படுத்தியமையினால் அழைப்பை ஏற்றுக்கொண்டு தம் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றினார்.

| அழைப்பை ஏற்க விருப்பமின்மை | தைரியப்படுத்தல் |
|---|---|
| • வி.ப 3:11<br>பார்வோனிடம் செல்லவும் இஸ்ரயேல் மக்களை எதிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்? என்றார். | • வி.ப 3:13<br>நான் உன்னோடு இருப்பேன். மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்போது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள். நானே உன்னை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம் இதுவே |
| • வி.ப 3:13<br>அவர்கள், அவர் பெயர் என்ன? என்று வினவினால் அவர்களுக்கு என்ன சொல்வேன் என்று கேட்டார். | • விப. 3:14<br>இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே என்றார். இருக்கின்றவர் நானே என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல் என்றார் |
| • வி.ப 4:1<br>ஆண்டவர் உனக்குக் காட்சியளிக்க வில்லை என்று சொல்வார்கள் என்றார். | • விப 4:2-9<br>புதுமை செய்வதற்கான வல்லமையை அளித்தல்.<br>- கோல் பாம்பாதல்.<br>- கையில் தொழுநோய் ஏற்படலும் குணமாதலும்<br>- நைல் நதி தண்ணீர் இரத்தமாதல் |
| • வி.ப 4:10<br>நாவன்மை அற்றவன் நான் ஏனெனில் எனக்கு வாய் திக்கும் நாவும் குழறும் என்றார். | • வி.ப 4:11-12<br>ஆகவே இப்போதே போ, நான் உன் நாவின் இருப்பேன். நீ பேச வேண்டியதை நான் உனக்குக் கற்பிப்பேன். என்றார் |
| • விப. 4:13<br>வேண்டாம் ஆண்டவரே தகுதியுடை வேறொருவரை நீர் இப்போதே அனுப்பி வைப்பீராக என்றார். | • விப 4:14-15<br>லேவியனான ஆரோன் உனக்குச் சகோரன் அல்லவா? அவன் நாவன்மை உடையவன் என்ற எனக்குத் தெரியும் உனக்குப் பதிலாக மக்களிடம் அவன் பேசுவான் |

- இறைவன் தம் மக்களுக்கு மிக நெருக்கமானவர் எனவும், அவர்களின் துன்ப துயரங்களை அறிந்தவர் எனவும், அவர்களுக்கு இரக்கம் காட்டி அவர்களை விடுவிக்கும் முறையை எடுத்துக்காட்டுகின்றது. (வி.ப 3:7-10)

- மேலும் இஸ்ரயேல் மக்களின் துன்ப நிலையிலும் உதவியற்ற நிலையிலும் அவர்களை கைவிடாது அவர்களை காப்பாற்றிய விதத்தையும், தமது பணிக்காக பலவீனர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை பலப்படுத்திய விதத்தையும் விவிலிய எழுத்தாளர்கள் விளக்குவதற்கு முயன்றுள்ளனர்.

- இறை அழைத்தலை புறக்கணிப்பதற்கு முயற்சியெடுக்கக் கூடாதென்றும் தமது அழைத்தலை விளங்கிக் கொள்வதுடன் அதற்கு பதிலளிக்கவும் வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

- இறைவனது அழைத்தல் எம் அனைவருக்கும் தரப்படுகிறது. இறைபராமரிப்பு எம் அனைவரது வாழவுடனும் இணைந்துள்ளது.

- மனித எண்ணங்கள், அபிலாஷைகளுக்கு மேலாக இறைவல்லமை, செயற்படும் விதத்தை காண முடியும்.

- குறைபாடுகளுடன் கூடிய பலவீனமான மனிதரான நாம் இறைவனின் குரலுக்குச் செவிமடுத்து தமது அழைத்தலுக்கு பதிலளித்தல் அவசியம் ஆகும்.

- அதற்காக வழங்கப்படுகின்ற வழிகாட்டலையும் இறைபராமரிப்பையும் விளங்கிக் கொள்ளல் அவசியம் அகும்.

**பத்துப் பெருந் துன்பங்கள் (வி.ப 7:14-10, 29, 12:29-36)**

- ஆரோன் தனது கோலைப் பாம்பாக மாற்றியது இறைவனால் மோயீசனும் ஆரோனும் அனுப்பப்பட்டமைக்கு பார்வோன் முன்னிலையிலான சான்றாகும் (வி.ப 7:8-18). பார்வோனையும் அவன் தேசத்தவரையும் துன்பங்கள் பாதித்தன. எனினும் இஸ்ரயேல் மக்களை பாதிக்கவில்லை. அவ்வாறாயின் இது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல என்பதும், இறைக் கரத்தின் செயல் என்பதும் உறுதியாகியது. பார்வோனும் எகிப்தியரும் இறைவனின் பகைவர்கள் என செயற்படுவதும் எகிப்தின் வல்லமை தோற்கடிக்கப்பட்டமையும் இதனை எடுத்துக்காட்டுகின்றது.

பத்துப் பெருந்துன்பங்கள்

1. தண்ணீர் இரத்தமாதல்
2. தவளைகள் பெருகுதல்
3. கொசுக்களின் தொல்லை
4. ஈக்களின் தொல்லை
5. கால் நடைகளின் சாவு
6. கொப்புளங்கள் வெடித்தல்
7. கல் மழை
8. வெட்டுக்கிளிகளின் தொல்லை
9. காரிருள்
10. தலைமகன் சாவு

- இப் பத்துப் பெரும் துன்பங்களும் முக்கியமாக குரு, யாவே, ஏலோகிம் ஆகிய மரபுகளின் ஒன்றிணைப்பின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ளன.

- இக்கதைகள் முற்காலத்தில் நிகழ்ந்த சில தொல்லைகள் அழிவுகள் பற்றிய சில பின்னணியை கொண்டன எனவும், பாஸ்கா வழிபாட்டு சடங்குகள் வழியாக ஊட்டம் பெறப்பட்டுள்ளதாக சில திருவிவிலிய வல்லுனர்களின் கருத்தாகும்.
உ+ம் பழைய உடன்படிக்கையில் பாஸ்கா உணவு சடங்கின்போது,**''இந்த இரவு ஏனைய இரவுகளைவிட வேறுபடுவது.......''** என கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கொடுக்கப்பட்ட விடையில் பத்து துன்பங்கள் பற்றி கூறப்பட்ட கதைகள் பரம்பரை பரம்பரையாக கூறப்பட்டமையால் இதனை அறிந்து கொண்டனர் (வி.ப 12:26-27)

- இந்த துன்பங்கள் அனுப்பப்பட்டதன் நோக்கமாவது இறைவனின் அதிகாரத்தை பார்வோனும் எகிப்தியரும் வெளிப்படுத்துவதும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளச் செய்வதும் அவ்வாறு செய்வதன் மூலம் இஸ்ரயேல் மக்களின் விடுதலை பயணத்துக்கு ஒரு பின்னணியை ஏற்படுத்துவதற்கும் ஆகும்.

- இத்துன்பங்கள் ஏற்பட்டதன் வழியாக காணக்கூடிய சிறப்பம்சமானது இவை முக்கிய சந்தர்ப்பங்களில் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு தேவையான போது நிகழ்த்துவதிலும் தேவையற்றபோது நிறுத்துவதுமாகும்.

**பத்துப்பெருந்துன்பங்களின் திட்டம்**

இப்பத்துப் பெரும் துன்பங்களை ஒட்டுமொத்தமாகப் நோக்கும்போது, இவற்றிற்குள் ஒரு பொதுத்தன்மையை காண முடியும். இத்துன்பங்களின் விபரணங்களை பார்க்கும்போது மூன்று வகையான அமைப்பினை காணமுடிகிறது.

| | |
|---|---|
| 1,4,7 ஆம் துன்பங்கள் | மோயிசனும் ஆரோனும் பார்வோனை சந்திக்க அதிகாலையில் ஆற்றை நோக்கிச் செல்லும்போது நடந்தது. பார்வோனை சந்தித்து இஸ்ரயேல் மக்களுக்குப் பாலை-நிலத்தில் இறைவனை வழிபட இடமளிக்குமாறு கேட்பார். |
| 2,5.8ஆம் துன்பங்கள் | மோசே பார்வோனை சந்திப்பதுடன் அப்போது மோசே எச்சரித்து எதிர்காலத்தில் நடக்கப்போவதைக் கூறுகிறார். |
| 3,6,9 துன்பங்கள் | மோயீசனும் ஆரோனும் பார்வோனுடன் எவ்வித பேரம் பேசுதல் இன்றி துன்பங்களை ஏற்படுத்தினர். |

இத்துன்பங்கள் படிப்படியாக உச்சநிலையை நோக்கி செல்வதை காணக்கூடியதாக உள்ளது. (துன்பங்களால் ஏற்படும் விளைவுகளில் ஒரு வளர்ச்சியை காணமுடிகிறது) 3 கட்டங்களில் இவ்வுச்ச நிலைவரையிலான வளர்ச்சியை இவ்வாறு காண முடிகிறது.

1. **நைல் நதி நீர் இரத்தமயமாதல்** : மோயீசனைப் போல் எகிப்திய மந்திரவாதிகளும் இப்புதுமையை செய்யக்கூடியதாய் இருந்தமை (வி.ப 7:20-22)
2. **கொசுக்கள் தொல்லை**
மோயீசனுக்கு மட்டுமே இவ்வற்புதத்தை செய்வதற்ககு இயலுமாக இருந்தது (வி.ப 8:17-18).

3. **தலைமகன் சாவு :** இறைவனால் மட்டுமே இதனை நிறைவேற்ற முடியும்(வி.ப 11:4-5)

இத்துன்பங்கள் இயற்கை நியதிகளின் படி நிகழ்ந்தவை எனினும் இவை நிகழ்ந்த சந்தர்ப்பங்களின்படி (இறைவனின் பரிந்துரை, வேண்டுகோள்) இறைவல்லமையின் செயற்பாடுகள் என்பதை காணமுடிகிறது. இதனூடாக பார்வோனும் மந்திர வாதிகளும் இறை ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

**யூதப் பாஸ்கா விழா (வி.ப 12:1-28)**

பாஸ்கா விழா சடங்குகில் உள்ளடங்கிய இரண்டு அம்சங்கள் உள்ளன.

1. பாஸ்கா செம்மறியோடு தொடர்புடைய வழிபாடு
2. புளிப்பற்ற அப்பத்துடன் தொடர்புடைய வழிபாடு

**பாஸ்கா செம்மறியோடு தொடர்புடைய சடங்கு (வி.ப 12:1-14)**

- மேய்ப்பர்களுக்கு இலையுதிர்காலம் (குளிர்காலம்) ஒரு கடினமான காலமாகும். ஏனெனில் தம் மந்தைகளுக்கு உணவளிக்க முடியாதிருந்தது.

- ஆயினும் இலையுதிர்காலத்தின் பின் உதயமாகும் வசந்த காலத்துடன் உஷ்ண கால நிலை தோன்றுவதால் புல்பூண்டுகள் முளைக்க ஆரம்பிக்கும். இக் காலத்தில் மேய்ப்பர்கள் புதிய மேய்ச்சல் நிலத்தை நோக்கிப் பயணிப்பர்.

- இவ்வாறு செல்வதற்கு முன் இறை பாதுகாப்பை வேண்டி மந்தையிலுள்ள குறைபாடற்ற ஆட்டுக் குட்டியொன்றைய கொன்று அதன் இரத்தத்தை கூடாரங்களில் முன்பகுதியில் இருந்து தூண்களில் தெளிப்பது வழக்கமாக இருந்ததுடன், நிசான் மாதம் 14ஆம் நாள் இரவு இவ்விழா இடம் பெற்றது.

- நிசான் மாதம் 14ஆம் திகதி இரவு வருடத்தின் முதற் போயாதின இரவாகும்.

- இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று செல்லுமுன் மோயீசனின் அறிவுரைப்படி குறித்த சடங்குகளை மேற்கொள்ளவும் பிற்காலத்தில் பாஸ்கா விழாவை கொண்டாடவும் ஒன்றுகூடியிருப்பர் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

- இறைவனின் செயற்பாட்டினால் இஸ்ரயேல் மக்கள் அனுபவித்த விடுதலையானது தமது நாட்டை நோக்கி பயணம் செய்தல், அதாவது வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி செல்வதை நினைவு கூறும்போது இந்நிகழ்வை செய்தார்கள் என எண்ணலாம்.

**புளிப்பற்ற அப்பவிழா (வி.ப 12: 15-20)**

- புளிப்பற்ற அப்பத்திற்கான எபிரேயச் சொல் ‘மட்சா’ ஆகும். இச்சடங்கு விவசாய யுகத்தில் இருந்து இடம்பெற்றுள்ளது. விவசாயிகள் செழிப்பான விளைச்சலுக்காக இறைவனுக்கு நன்றி கூற அப்பங்களை செய்தனர்.

- அவர்கள் அறுவடையின் பின், உண்பதற்கு முன், தம் முதல் அறுவடையின் பின் தம் வீடுகளில் இருந்த பழைய புளிக்காரத்தை அகற்றி புதிய புளிக்காரத்தை அமைத்துக்கொள்ளும் வரை புளிப்பற்ற அப்பங்களை உண்டனர்.
- இஸ்ரயேலரின் புளிப்பற்ற அப்பம் தொடர்பான சடங்கு முற்று முழுதாகவே வேறு ஒரு அர்த்தமுடையது.
- அதாவது அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறிய இரவில் அவசரமாக புறப்பட்டமையால்

அப்பங்களுக்கு புளிக்காரத்தை சேர்க்க நேரம் கிடைக்கவில்லை.

- அப்பங்கள் புளிப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை

- எனவே பயணத்தைத் தொடங்கிய முதல் நாளில் அவர்களுக்கு புளிப்பற்ற அப்பங்களை உண்ண நேரிட்டது.

- முற்காலத்தில் மேய்ப்பர்களினதும் விவசாயிகளின் விழாக்களாக இருந்த இவ்விரண்டு விழாக்களும் பிற்காலத்தில் பாஸ்கா விழாவினுள் ஒரு விழாவாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளமை எடுத்துக் காட்டலாம். (இ.ச.16:1-8 லேவி 23:5-8, எண்ணிக்கை 28:16-24) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. • பாஸ்கா விழாவினுள் தலைமகன் அர்ப்பணம் தொடர்பான சடங்கும் சேர்க்கப்பட்டுள்ளது (வி.ப 13:1-6)

- இஸ்ரயேலின் தலைமகன் பிறப்பு தொடர்பான மரபு முக்கியமானது. அத்துடன் தலைமகன் இறைவனுக்கு அர்ப்பணமாக்கப்பட்டு அவருக்கு சொந்தமானவராக கருதப்பட்டது.

- தலைமகன் தொடர்பான சம்பிரதாயம் எகிப்திய தலைமகன் சாவுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.

- இஸ்ரயேல் மக்களின் பாஸ்கா விழா எகிப்திய தலைமகன் சாகடிக்கப்பட்ட இரவில் யாவே இறைவனின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. இஸ்ரயேல் மக்கள் வருடந்தோறும் இந்நிகழ்வை நினைவு கூர்ந்தனர். (வி.ப 13:10)

- அது பழைய உடன்படிக்கையின் பாஸ்காவாக இடம்பெற்றது. இதனை அவர்கள் நிசான் மாதத்தில் (மார்ச் - ஏப்பிரல்) 14ஆம் தினம் மாலையில் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்கள் மட்டுமே பங்குபற்ற முடிந்தது.

- 2அரசர்கள் 22 இன் படி கி.மு 621 இற்கு முன் யோசியா அரசனின் சமய சீர்த்திருத்தத்திற்கு முன் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளன.

- பாஸ்கா செம்மறியை பலியிடுதல் வீட்டில் அல்லது அண்மையிலுள்ள வழிபாட்டுத்தலத்தில் நடைபெற்றது.

- அதாவது கி.மு 621இன் பின் பாஸ்கா விழா போன்று ஏனைய முக்கிய விழாக்களும் பெந்தகோஸ்தே, கூடார விழா எருசலேமில் மட்டுமே நிகழத்தப்பட்டன.

- இதனாலேயே இயேசுவும் பாஸ்கா விழாவிற்காக யெருசலேம் சென்றார்.

- காலை பலியிடும் சடங்கு நேரமான மு.ப 9.00மணி மற்றும் மாலை பலியிடும் நேரமான பி. ப 3.00 மணிவரையுள்ள காலப்பகுதியிலேயே பாஸ்கா செம்மறி கொல்லப்பட்டது.

- பலியிடப்பட்ட செம்மறி நெருப்பில் சுடப்பட்டு கசப்புக்கீரை, புளியாத அப்பங்களுடன் உண்ணப்பட்டது.

**பாஸ்கா உணவு உண்ணும் முறை (வி.ப. 12:1-11, 22-27)**

- வருடத்தின் முதல் மாதமான நிசான் மாதத்தில் பாஸ்கா விழா கொண்டாடப்பட வேண்டும்.

- நிசான் மாதத்தின் பத்தாம் நாள் குடும்பத்துக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக தேர்ந்தெடுக்க வேண்டும். 14 ம் திகதி வரை அதனை வைத்திருந்து, அன்று இரவு அதனை கொலை செய்ய வேண்டும். அதன் ஒரு எலும்பையாவது முறிக்கக் கூடாது

- இவ்வாட்டுக்குட்டி குறைபாடற்ற ஒரு வயதுள்ள ஆணாக இருக்க வேண்டும்.

- இவ்வாட்டை உண்பரின் வீடுகளின் இரு கதவு நிலைகளிலும் மேல் சட்டத்திலும் அதன் இரத்தத்தை பூச வேண்டும்.

- அதன் இறைச்சியை நெருப்பிலிட்டு சுட்டு, புளியாத அப்பங்களோடும் கசப்புக் கீரைகளுடன் இடையில் கச்சைக் கட்டி கால்களில் பாதணிகள் அணிந்து கையில் கோல்பிடித்து விரைவாக உண்ண வேண்டும்.

- உணவில் எதனையும் மிகுதியான வைத்திராமல், காலை ஏதாவது எஞ்சியிருந்தால் அவற்றை நெருப்பில் சுட்டெரிக்க வேண்டும்.

- இச்சடங்கை எல்லாத் தலைமுறையினரும் என்றென்றும் கடைப்பிடிக்க வேண்டியது நியமமாகும்.

- இச்சடங்கின் அர்த்தத்தினை வீட்டுத்தலைவன் தம் பிள்ளைகளுக்குக் கூற வேண்டும்.

**பாஸ்கா வழிபாட்டின் முக்கிய பகுதிகளையும் அதன் கருத்துகளையும் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.**

1. புளிப்பற்ற அப்பத்தின் பயன்பாடு : இறைக்கட்டளையை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்பதை அடையாளப்படுத்துகிறது.

2. கசப்புக்கீரை உண்ணல் : அடிமைத்தனத்திலிருந்தபோது பட்ட கசப்பான துன்பங்களை அடையாளப்படுத்துகிறது

3. பாஸ்கா செம்மறியை உண்ணல் : இறைவனுடன் செய்து கொண்ட உடன் படிக்கையை அடையாளப்படுத்துகிறது

4. இரசம் அருந்துதல் : விழாக்கள், கொண்டாட்டங்கள், வெற்றி ஆகியவற்றின் கொண்டாட்டத்தை அடையாளப்படுத்துகிறது.

**பாலைவனத்தில் இறைபராமரிப்பு**

- பார்வோனின் பிடியிலிருந்து இஸ்ரயேல் மக்கள் இறைவனின் வழிகாட்டுதலின் கீழ் சுற்றி வளைந்து செல்லும் பாதையில் கடல் பக்கமாக அவர்களை நடத்திச் சென்றமை வி.ப.13:18 இல் குறிப்பிடப்படுகின்றது.

- மேலும் யோசேப்பு இஸ்ரயேல் மக்களின் முன் பிரசித்தமாக செய்த சத்தியத்தின்படி

அவரின் எலும்புகள் மோசேயினால் எடுத்துச்செல்லப்பட்டன. (வி.ப 13:19)

- அவர்கள் பாலைவனப் பயணத்தினூடாகவும், இயற்கையின் வழியாகவும் இறைபராமரிப்பை உணர்ந்தனர். இறைவனின் குரலுக்கு செவிமடுத்த இறைத்திட்டத்தின் கீழ் பயணம் செய்த இஸ்ரயேல் மக்களுடன் இறைவன் இருந்து அவர்களுக்கு சக்தியும் பலமும் ஆகிய விதத்தை புரிந்துக்கொள்ள முடியம்.

**செங்கடலைக் கடத்தல் (வி.ப 14:1-31)**

செங்கடலைக் கடத்தல் தொடர்பாக பல்வேறு கருத்துக்களை கூற முடியும்

- விடுதலைப்பயணம் பாதையை கற்பதனூடாக இஸ்ரயேல் மக்கள் செங்கடலின் அருகிற்காவது செல்லவில்லை என்பது புலப்படுகின்றது.

- அவர்கள் ஒருவேளை மத்தியதரைக் கடலுக்கண்மையில் உள்ள கடலேரியான ‘சிறிபோனிய்’ ஏரித் திசையை நோக்கிப் பயணம் செய்திருக்கக்கூடும்.

- இல்லாவிடில் ‘டிம்ஷா’ ஏரிப்பிரதேசத்தில் சதுப்பு நிலப்பகுதிக்கு அவர்கள் வந்திருக்கலாம். வி.ப 14:21-22 அதிகாரங்களின் படி கடலைக் கடந்து செல்லல் பற்றி விளக்கப்பட்டுள்ளன. பாரம்பரியங்கள் இரண்டின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளமை விபரிக்கப்படுகின்றது.

  வி.ப 14:21-22
  - ★ யாவே பாரம்பரியம் (J) - இரவு முழுவதும் கீழைக்காற்றை இறைவன் வீசச் செய்து கடலை வற்றச்செய்து உலர்ந்த தரையாக்கியமை (வரலாற்றின்படியான கருத்து)

  - ★ குருக்கள் (P) பாரம்பரியம் - மோயீசன் கடலை நோக்கி தமது கையை நீட்ட கடல் இரண்டாகப் பிரிந்து உலர்ந்த தரை தோன்றி, இருமருங்கிலும் நீர்த்திரள் சுவராக நின்றமை (நம்பிக்கையின் கருத்து)

- இக்கருத்து எவ்வாறாயினும் இஸ்ரயேல் மக்களைப் பின் தொடர்ந்து பார்வோனிடம் இருந்தும் அவன் படைகளிலிருந்தும் விடுதலை பெற்றதும், பார்வோன் படைகள் கடல் நடுவில் அழிவுக்குட்பட்டதும் உண்மையாகும்.

- பின்தொடர்ந்த பாரவோனின் படைகள் முன்னிலையில் இஸ்ரயேல் மக்கள் மோயீசனுக்கும் இறைவனுக்கும் எதிராக முறையிட்டபோது மோயீசன் அளித்த பதில் எமது வாழ்க்கைக்கும் பெரும் சக்தியையும் தைரியத்தையும் எடுத்துச் காட்டுகின்றது. (வி.ப 14:13-14)

- எமது வாழ்வின் சவால்கள் மத்தியில் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதும் முணுமுணுக்காமல் எமது வாழ்வை நடத்திச் செல்ல இறைவனுக்கு இடமளிப்பது முக்கியமானதாகும்.

- இவ் எல்லா நிகழ்வுகளிலும் வல்லமைமிக்க வகையில் இறைவனின் கரம் வெளிப்படுத்தப்படுகிறது.

- பொழுது புலரும் முன் இஸ்ரயேல் மக்களைப் போல எகிப்திய மக்களும் கடலைக் கடந்து

செல்லும் போராட்டத்தில் இறைவன் எகிப்திய மக்களை அழித்தார்.

- இஸ்ரயேல் மக்கள் இறைவனின் அன்பை அனுபவித்து, இறைவனை மதித்து இறை ஊழியனான மோயீசன் மீதும் நம்பிக்கை வைத்துக் கீழ்ப்படிந்தனர். (வி.ப 14:31)

**மேகத்தூண் நெருப்புத்தூண் (வி.ப 13:21-22)**

- இறைவன் இஸ்ரயேல் மக்களுடன் பிரசன்னமாய் இருப்பதற்கு அடையாளமாகவும் வழிநடத்திச் செல்வதன் அடையாளடமாகவும் பகலில் மேகத்தூண் வடிவிலும் இரவில் நெருப்புத் தூண் வடிவிலும் அவர்கள் முன் சென்றார். நெருப்பும் மேகமுமான தூணிலிருந்து ஆண்டவர் எகிப்திய படையினரை நிலைகுலையச் செய்தார் (வி.ப 14:24)

**பாலைவனப் பயணம்**

- **மாரா என்னுமிடத்தில் தாகம் ஏற்படல் (வி.ப 15:22-25)**

கடலைக் கடந்த மக்கள் மூன்ற நாட்கள் பாலைநிலைத்தில் பயணம் செய்தும் தண்ணீர் எதுவுமே தென்படவில்லை. மாரா என்னுமிடத்தில் தண்ணீர் இருந்தாலும் அது உவர் நீராகையால் அதனை பருக அவர்களால் இயலவில்லை. 'மாரா' என்ற எபிரேயச் சொல்லின் பொருள் 'கசப்பு' என்பதாகும். இறைவன் மோசே வழியாக ஒரு குறிப்பிட்ட மரத்துண்டை அதில் போடவே நீர் சுவையாயிற்று. அவ்வாறு தாகத்தை தணிக்க மோசேயின் ஊடாக இறைவன் செயற்பட்டார்.

**சீனாய் பாலைநிலத்தில் உணவு அளித்தல் (வி.ப 16 அதி)**

- அவர்களுக்கு உண்ண உணவு கிடைக்காமல் பசியெடுத்தால் மோசேக்கும் இறைவனுக்கும் எதிராக முறுமுறுத்தனர்.
- அவர்களின் முறுமுறுப்புக்களைக் கேட்ட ஆண்டவர் அவர்களுக்கு உணவாக மன்னாவையும் காடைகளையும் கொடுத்தார் (வி.ப 16:12)
- பாலைவனப் பயணத்தின்போது ஆதரவற்றவராகும் எல்லா சந்தர்ப்பங்களிலும் முறுமுறுப்பினால் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.
- சவால் நிறைந்த வாழ்க்கையை விட அடிமைத்தனத்தை விரும்பினார்கள்.
- ஆனால் இறைவன் அவர்களின் அவநம்பிக்கையின் மத்தியிலும் தனது வாக்குறுதியை நிறைவேற்றி நம்பிக்கையைக் கொடுத்தார்.

**பாலைவனப் பயணத்தின்போது இஸ்ராயேல் மக்கள் முறுமுறுத்த முக்கிய சந்தர்ப்பங்கள் நான்கினைக் காணலாம்.**

1. செங்கடல் அருகில் பார்வோனும் எகிப்திய படைகளுயும் அவர்களைப் பின் தொடரும் போது (வி.ப 14:11-12)
2. மாரா என்னுமிடத்தில் நீர் இருந்தும் அதை குடிக்க இயலாமற்போனபோது (வி.ப 15:24)

3. சீன் பாலைநிலத்தில் பசித்தபோது (வி.ப 16:1-3)
4. மாசா, மெரியா என்னுமிடத்தில் குடிக்க நீர் இல்லாதபோது (வி.ப 17:1-3)

இவ் எல்லா சந்தர்ப்பங்களிலும் இஸ்ரயேல் மக்களின் நம்பிக்கை குறைவினை காட்டுகிறது. இறைவனிடம் பெற்றுக்கொண்ட கொடைகளையும், ஆசீர்களையும் மறந்து இறைவனுக்கும் அவரின் ஊழியனான மோசேவிற்கும் எதிராக செயற்பட்டனர்.

## ❖ மன்னா பொழிதல் (வி.ப 16:31)

- மன்னா என்பது தாமரிஸ் மனிபெரா என்ற மரத்திலிருந்து வடியும் திரவமாகும்.
- இம் மரங்களின் இளம் கிளைகளை சிறு வண்டுகள் குடையும்போது மரத்திலிருந்து வடியும் சுவையான திரவமாகும்.
- விவிலிய வல்லுநரின் கூற்றுப்படி இவை வெண்ணிறமானவை.
- இனிமையான சுவையுடையது
- கொத்தமல்லி போன்ற அளவுடையது
- சூரியன் எழுவதுடன் இவை உருகிவிடுகின்றன.
- இத்திரவம் காய்ந்து பட்டை போன்று காணப்படும்.
- பாலைநிலத்தில் இவ்வுணவைப் பெற்றுக்கொடுப்பதும் அவர்களுக்குப் போதியளவு பெற்றுக்கொடுப்பதும் முக்கிய காரணியாகும்.
- பாலைநிலத்தில் அவர்கள் பெற்ற இவ்வுணவு மோசேயின் வேண்டுதலால் இறைவனால் கொடுக்கப்பட்ட உணவாக இஸ்ரயேல் மக்கள் ஏற்றுக்கொண்டனர்.
- கானான் தேச எல்லையை அடையும்வரை அவர்கள் மன்னாவையே உண்டனர் (வி.ப 16:35)

## ❖ காடைகளைக் கொடுத்தல் (வி.ப 16:31)

- வசந்த காலங்களில் ஆயிரக்கணக்கான காடைகள் கூட்டமாக இடம்பெயர்ந்து இப்பிரதேசத்தை வந்தடைதல் சாதாரண சம்பவமாகும்.
- சிலவேளைகளில் அதிக களைப்பாக இருப்பதாலும், மண் புயலுக்கு அவை சிக்குவதாலும் இப்பறவைகளைப் பிடிப்பதற்கு இலகுவாக இருந்தது.
- இஸ்ரயேல் மக்கள் இக்காடைகளின் இறைச்சியை இறைவன் தந்த உணவாக ஏற்றுக்கொண்டனர்.
- பாலைநிலத்தில இவ்வுணவு விசேடவிதமாக கிடைத்தன் மூலம் இஸ்ரயேல் மக்கள்

இறையன்பையும் பாதுகாப்பையும் ஆழமாக அனுபவித்தனர்.

- மேலும் இஸ்ரயேல் மக்கள் எப்பொழுதும் இந்த இயற்கையின் நிகழ்வுகளை இறைவன் தங்களிடம் காட்டும் அன்பின் பாதுகாப்பின் அடையாளமாக அறிந்துக் கொண்டனர்.

- தற்கால கிறிஸ்தவர்களும் இறைபராமரிப்பை இயற்கையின் நிகழ்வுகளுடாக அறிந்துக் கொள்ள வேண்டும்.

- இந்நிகழ்வின் மூலம் இஸ்ரயேலின் நம்பிக்கை வளர்ந்தது. இறைவன் தினமும் அவர்களுக்குத் தேவையானதை தருவாரெனவும், பாதுகாப்பாரெனவும் அவர்கள் நம்பினார்கள்.

இந்நிகழ்வினால் எமது வாழ்க்கைக்கு நாம் பெறும் செய்தி எமது அன்றாட உணவை இறைவன் பெற்றுத்தருவார் என்பதாகும். கடினமான வழியில் பயணிக்க நாம் அழைக்கப்பட்டிருப்பதால் எல்லா சந்தர்ப்பங்களிலும் எமக்குத் துணையாயிருந்து வழிநடத்தி எமது அன்றாட தேவைகளை நிறைவேற்றுகின்றார்.

❖ **மாசா, மெரிபா இடங்களில் நீர் கிடைத்தல் (வி.ப 17:1-7)**

- சீன் பாலைநிலத்திலிருந்து வெளியேறிய இஸ்ரயேல் மக்கள் இரபிதிம் என்ற இடத்தில் பாளையம் இறங்கினாலும் அங்கு அவர்களுக்கு குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை.

- இதனால் மக்கள் மோசேயிடம் முறுமுறுத்து குடிக்கத் தண்ணீர் கேட்டார்கள்.

- மோசே இறைவனின் வார்த்தையின்படி கோலினால் பாறையில் அடிக்க அதிலிருந்து தண்ணீர் ஊற்றெடுத்தது.

- இவ்விடங்கள் மாசா, மெரிபா என அழைக்கப்பட்டது. இந்த எபிரேயச் சொல்லின் பொருள்
  மாசா - (சோதித்தல்)
  மெரிபா - (வாதாடுதல்)

- பாறையை அடிக்க நீர் ஊற்றெடுத்த சம்பவம் எண்ணிக்கை 20:1-3 பகுதியில் காணலாம்.

- சீன் பாலைவனத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லாதிருந்தது

- ஆதலால் அவர்கள் மோசேபிடம் முறுமுறுத்தனர். இதனால் அவர்கள் உடன்படிக்கை நாட்டுப் போக முடியாமற்போயிற்று

- பாறைக்குக் கட்டளையிட்டு தண்ணீரைப் பெற்றக்கொள்ளும்படி மோசேவுக்கும் ஆரோனுக்கும் இறைவன் கூறினார்

- ஆனால் மோசேயின் நம்பிக்கைக் குறைவால் கட்டளையிடுவதற்கு பதிலாக இருமுறை பாறையை அடித்தார் (எண்ணிக்கை 20:10-11)

**வெண்கலப் பாம்பு (எண்ணிக்கை 21:4-9)**

- பாலைநிலத்தில் இஸ்ரயேல் மக்கள் தைரியம் இழந்து கைவிட்டப்பட்டவர்களாக இருந்தனர்

- அவர்களை மீண்டும் இறைவனுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினர்

- அப்பொழுது இறைவன் கொள்ளிப் வாய்ப் பாம்புகளை மக்களிடையே அனுப்பினார், அவை கடித்தன.

- இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர்

- மக்கள் மோசேயிடம் பாம்புகளை அகற்றும்படி கேட்டனர்

- மோசே மக்களுக்காக இறைவனிடம் மன்றாடினார். இறைவனின் வார்த்தைப்படி வெண்கலப் பாம்பொன்றை செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்தினார்

- பாம்பு கடிக்கப்பட்டோார் அதை பார்த்து குணமடைந்தனர்

**ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாப்பு (வி.ப 17:8-13)**

- விடுதலைப் பயணத்தின்போது இஸ்ரயேல் மக்கள் அமலேக்கியரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானார்கள்

- அப்போது மோசே யோசுவாவிற்கு அறிவுரை வழங்கி மக்களைத் தெரிவுசெய்து அமலேக்கியருடன் போரிடும்படி கூறினார்.

- மோசே கோலுடன் குன்றின் உச்சிக்கு ஏறிச் சென்று கைகளை உயர்த்தி மன்றாடினார்

- மோசே கைகளை உயர்த்தும்போது இஸ்ரயேலர்களுக்கு வெற்றியும், கையை தளர விடும் போது அமலேக்கியருக்கு வெற்றியும் கிடைத்தது. ஆகையால் ஆரோனும் நூரும் மோசே மன்றாடும் போது அவரின் கையை உயர்த்தி வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர். இதனால் இறுதியில் இஸ்ரயேலர் வெற்றிப் பெற்றனர்.

**தேர்ச்சி 2.0** : இறைவெளிப்பாட்டிற்கேற்ப வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 2.5** : சீனாய் உடன்படிக்கையின் படி வாழ்வர்

**பாட வேளை** : **15**

**கற்றல் பேறுகள்**

- சீனாய் உடன்படிக்கைத் தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்
- ஒரே இறைவனை மட்டும் ஆராதிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்
- சீனாய் உடன்படிக்கை தொடர்பான தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்
- பத்துக் கட்டளைக்கேற்ப வாழ்வர்
- பத்துக் கட்டளைகளின் படிப்பினைகளின்படி சகோதர அன்புடன் வாழ்வர்

**2.5 சீனாய் உடன்படிக்கை (வி.ப 20, 24 அதி)**

- **உடன்படிக்கையின் அறிமுகம்**

'உடன்படிக்கை' என்பதற்கான எபிரேய சொல் 'பெரித்' என்பதாகும். இதன் பொருள் இரு சாரார் தங்களுக்கிடையே செய்துகொள்ளும் ஒப்பந்தமாகும். அது நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட இரு சாராரின் பிணைப்பாகும்.

**பழங்கால உலகின் இருந்த உடன்படிக்கைப் பற்றிய எண்ணக்கரு**

பழமையான கீழைத்தேய நாடுகளில் இருந்த எகிப்தியர், இத்தியர் அமோறியர் போன்றவர்களின் நாகரீகங்களின் இவ்வாறான உடன்படிக்கைகள் காணக் கூடியதாக இருந்தது. பேரரசனுக்கும் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் அரசர்களுக்குமிடையே நிலவிய உடன்படிக்கைகள் என்பன இதற்கு உதாரணங்களாகும். இவ்வாறான அரசியல் சமூகப் பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளின் சிறப்புத் தன்மைகளாவன:

1. இருபாலாரினதும் உடன்பாட்டுடன் நிபந்தனைகளை அமைத்துக் கொள்ளல்
2. நிபந்தனைகளைப் பாதுகாக்கும் பொருட்டு கடவுள் ஒருவர் சான்று பகரல்

**சீனாய் உடன்படிக்கையின் தன்மை**

திருவிவிலியத்தில் குறிப்பிடும் உடன்படிக்கைகளைப் பார்க்கும்போது மேற்கூறப்பட்ட உடன்படிக்கைகளைவிட சிறப்புத்தன்மையையும் அதற்கே உரித்தான தன்மையையும் காணமுடிகிறது.

1. இருசாரார் இருப்பினும் எவ்வேளையும் உடன்படிக்கைக்கு இறைவனே ஆரம்ப கர்த்தாவாக இருக்கிறார்.
2. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் பாரிய இடைவெளி இருப்பினும் இறைவனே அதனை அனுமதிக்கிறார்.

- உடன்படிக்கைக்கு சான்று பகர்வர் இறைவனாக இருப்பதோடு மனிதன் உடன்படிக்கையை மீறினாலும் இறைவன், மன்னித்து கருணையுடன் அவனை அழைத்து உடன்படிக்கைக்கு விவாசமுள்ளவராக திகழ்கின்றார்.
- மேய்ப்பர்களாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் இவ்வுடன்படிக்கையின் வழியாகவே விசேட இறைமக்கள் எனும் நிலையை அடைந்தனர்
- சீனாய் உடன்படிக்கை (பத்துக்கட்டளை) மூலம் இஸ்ரயேல் மக்கள் இறைவனின் சொத்தாகவும் இறைமக்களாகவுமாகினார்.

- கோத்திரமாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கையினால் ஒழுக்கமுள்ள இனமாகினர்.
- இறைமக்கள் (இறைவனுக்கு உரிமை சொத்து) என்று உரிமையைப் பெற்றனர்.
- இறைவனுடன், ஆழமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டாலும் (வி.ப 19:5-6) சீனாய் உடன்படிக்கை மூலம் இஸ்ரயேல் மக்கள் பெற்ற விசேட இறையாசீர்கள் மூவிதமாகும்.

இவ் விசேட தொடர்பு மூவிதமாக செயற்படுகிறது.

அ) இறைவனின தனிச் சொத்து

ஆ) குருத்துவ அரசாக

இ) அர்ப்பணிக்கப்பட்ட (தூய) இனமாதல்

**இறைவனின் தனிச் சொத்து**

- சொத்து என்பதன் எபிரேயச் சொல் 'செகுல்லா' என்பதாகும்.
- இதன் பொருள் விசேட தொடர்பாகும்
- இறைவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்குமிடையேயுள்ள விசேட தொடர்பை அடையாளப்படுத்துவதற்காக இதை பயன்படுத்தியுள்ளனர்
- மிகுந்த செல்வத்தைப் போல் அன்பினாலும் தனது வாழ்வுடன் தொடர்பு கொள்ளும் ஒருவரை செகுல்லா என அழைப்பர் (வி.ப 19:5, இச. 7:6, 14:2, 26:18, மலாக்கி 3:17, திபா 135:4)

**குருத்துவ அரச**

- எபிரேயர் சொல்லில் குருக்களைப் 'கொஹேன்' என அழைப்பர்
- இதன் கருத்து மக்களுக்காக இறைவனிடம் சமூகமளிக்கும் நபராவர்.
- பழைய ஏற்பாட்டில் குருக்கள் விசே வரம் பெற்ற குழுவினராவர்.
- பிறருக்காக இறைவன் முன்னிலையில் பரிந்து பேசுவதற்கு வரம் பெற்றவர்கள்
- இறைவனை நெருங்கவும் யெருசலேம் ஆலயத்தில் (இறைவனின் இல்லம்) தங்கவும் வரம் பெற்ற குழுவினராவர்
- இஸ்ரயேல் மக்களும் இதுபோல் எல்லா மக்களினங்களைவிட இறைவனை அண்மித்துச் செல்ல வரம் பெற்ற குழு, குருத்துவ அரசு (மம்லெகெற் கோஹனீம்) ஆவர்.

**தூய (அர்ப்பணிக்கப்பட்ட) இனம்**

- 'கோய் கடோஷ்' என்ற எபிரேயச் சொலின் பொருள் வேறுபடுத்தப்பட்ட இனம் என்பதாகும். இது திருவிவிலியத்தில் ஒருமுறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது (வி.ப 19:6)
- குலமுதுவர்கள் காலந்தொட்டு இஸ்ரயேல் ஒரு குடும்பமாகியது.
- விடுதலைப் பயணத்திற்கு முன் அடிமைகளாயினர்.
- ஆனால் விடுதலைப் பயணத்தின் பின் அவர்களை விடுதலைப் பெற்ற சுதந்திரமன இனமாகினர்
- அவர்கள் ஒரு இனம் மாத்திரமல்ல தூய இனம் ஆவார் (தூய இனம், இறைவனுக்கு மாத்திரம் அர்ப்பணிக்கப்பட்ட இனம் என்பது இதன் கருத்து)
- ''கோய் கடோஸ்'' போல இஸ்ரயேல் மக்கள் ஏனைய இனங்களுக்கு ஒளியாகவும் அந்நிய இனங்களுக்கு மத்தியில் இறைவனுக்கு சான்று பகரவும் அழைக்கப்பட்டனர்.

**இஸ்ரயேல் மக்கள் இவ்வுடன்படிக்கைக்காக ஆயத்தமான முறை (வி.ப 19:10-14)**

1. தூய்மையாகுதல்

2. மலையிலிருந்து விலகியிருந்தல்
3 பாலுறவு தவிர்த்தல்

**உடன்படிக்கையை வெளிப்படுத்தல்**

1. மோசே சீனாய் மலைக்குச் சென்று 10 கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளல் (வி.ப 19:1020:1)
2. மோசேயும் எழுபது இஸ்ரயேலின் எழுபது பெரியோரும் சீனாய் மலை உச்சியில் அதனை எற்றுக்கொண்டனர் (வி.ப 24:1-2)

(மோசே, ஆரோன், நாதாபு, அபிகூ, இஸ்ரயேலின் பெரியோர் எழுபது பேர் மலையில் ஏறி தூரத்தில் இருந்தனர். மோசே மட்டும் ஆண்டவருக்கு அருகில் சென்ற பத்துக்கட்டளைகளை எழுதப்பட்ட கற்பலகைகளை பெற்றுக்கொண்டார் - வி.ப 24:9-18)

- இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கையில் பெற்ற அழைப்பைப் போல் இன்றைய கிறிஸ்தவர்களும் திருமுழுக்கின் மூலம் அவ்வழைப்பைப் பெறுகின்றனர்

- கிறிஸ்தவர் இறைவனுக்குச் சொந்தமான சொத்தாகும். அவர் பிறருக்காக இறைவன் முன்னிலையில் நடுவராக செயற்படுவார்

- இறைவனை அவர்களை விசேட மறைத்தூதுப்பணிக்காக தெரிவு செய்துள்ளார்

**உடன்படிக்கை உறுதிசெய்தல்**
சீனாய் உடன்படிக்கை இருகட்டங்களில் உறுதிப்படுத்தப்பட்டது.
1. முதலாவது கட்டம் (வி.ப 24:3-4)
2. இரண்டாவது கட்டம் (வி.ப 24:5-8)

**முதலாவது கட்டம்**
- மோசே அனைவருக்கும் கட்டளைகளையும் விதிமுறைகளையும் அறிவித்தார்
- மக்கள் அனைவரும் ஒரே குரலாக அக்கட்டளைகளையும் விதிமுறைகளையும் செயற்படுத்துவோம் என உறுதி மொழி அளித்தனர். (ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் செயற்படுத்துவோம்)
- மோசே அவற்றை எழுதி வைத்தார்.
- மோசேயுடன் மலைக்குச் சென்ற ஆரோன், நாதாபு, அபிகூ இஸ்ரயேல் மக்களின் தலைவர் எழுபது பேர் இவர்கள் மக்கள் அனைவரையும் வழிநடத்தினர்.

**இரண்டாம் கட்டம்**

பலியிடப்பட்ட மிருகத்தின் இரத்தத்தின் ஒரு பகுதியை பீடத்தின் மீது தெளித்தார். பின் உடன்படிக்கையை வாசித்து மக்கள் அதை செயற்படுத்துவோம் என உறுதிமொழி அளித்தபின் மிகுதி இரத்தத்தை மக்கள் மேல் தெளித்தார். இதனூடாக இஸ்ரயேல் மக்கள் இறைவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கை உறுதி செய்யப்பட்டது. (வி.ப 24:5-8)

**சீனாய் உடன்படிக்கையும் பத்துக்கட்டளைகளும்**

- சீனாய் உடன்படிக்கையின் கருப்பொருள் பத்துக்கட்டளைகள மூலம் காட்டப்படுகிறது

- இது இறை கட்டளையின் (நிபந்தனை) சுருக்கமாகும்

- இவ்வுடன்படிக்கை ஒழுக்க விழுமியங்களையும் இயற்கை சட்டங்களையும் சார்ந்தாக இருக்கிறது.

- இஸ்ரயேல் நாடோடி மேய்ப்பர்களாக, தன்னலமுள்ளவர்களாக பண்பற்றவர்களாக இருக்க இஸ்ரயெல் மக்கள் பத்துக்கட்டளைகளை பெற்றபின் ஒழுக்கமுள்ள பிரமாணிக்கமுள்ள மக்களாக மாறினர்

- இதனால் அவர்கள் விடேச தனித்துவத்தைப் பெற்றனர்

- கி.மு 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு 10ஆம் நூற்றாண்டு காலம் வரை பத்துக்கட்டளைகள் வாய்மொழியாக ஒரு பரம்பரையிலிருந்து இன்னொரு பரம்பரைக்கு எடுத்துச்செல்லப்பட்டது

- அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்காக சுருக்கமாக இலகுவான முறையில் அமைக்கப்பட்டது எனக் கொள்ளலாம்.

- பழைய ஏற்பாட்டில் நிறைவேற்று சட்டம் வன்முறைச் செயல்கள் சட்டம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- நிறைவேற்றுச்சட்டங்கள் சாதாரணமாக குறுகியது பண்புள்ளது, முன்னிலையில் ஒருமைச் சொல்லால் முன்வைக்கப்படுகிறது.

- வன்முறைச் செயல்கள் சட்டங்கள் நிபந்தனை உடையன. உ + ம் மனிதரைச் சாகடிப்பவர் எவரும் கொல்லப்பட வேண்டும் (வி.ப 21:12)

- பத்துக்கட்டளைகளில் முக்கியமாக நிறைவேற்று சட்டங்கள் உள்ளன (உ+ம் வி.ப 20:3, 13-18)

- இன்னும் வாய்மொழி மரபில் பத்துக்கட்டளைகள் எல்லாம் நிறைவேற்று சட்டங்களின் அமைப்பைப் பெற்றுள்ளன என்பதற்கு சான்றுகள் உள்ளன.

- பிற்காலத்தில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் சில கட்டளைகள் உ + ம் ஓய்வுநாள் தொடர்பான கட்டளைக்கு விளக்கம் கூறும் தேவை ஏற்பட்டது ஓய்வுநாள் தொடர்பான கட்டளை வி.ப 20:8-11 பகுதியில் விபரமாக முன்வைக்கப்பட்டுள்ளது. பத்துக்கட்டளைகள் வி.ப 20:3-17 இ.ச 5:7-21லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பத்துக்கட்டளைகளின் பண்புகள்**

1. இது நிறைவேற்று சட்ட முறையாகும்
2. செய்ய வேண்டாமென்று சொல்லப்படுகின்ற எதிர்மறையான சட்டங்கள் எட்டு ஆகும்
3. இதில் செய்ய வேண்டும் என்னும் சார்பான கட்டளைகள் இரண்டு உள்ளன
4. இது எக்காலத்துக்குரிய சட்ட முறைமையாகும் (எக்காலத்திற்கும் பொருத்தமானது)
5. இறைவனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் - மனிதனுக்கும் இடையே உறவை வளர்க்க உதவுகிறது

- இஸ்ரயேல் மக்கள் ஒரே கடவுளுக்கு ஆராதனை செலுத்தவும், அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும் வேண்டுமென்பது பத்துக்கட்டளையால் உணர்த்தப்பட்டது.

- இறைவன் அவர்களை இறைமக்களாக ஏற்றுக்கொள்ள உறுதி அளித்தார்.

- பத்துக்கட்டளை அப்பிணைப்பின் அடையாளமாகும்.

- அதற்கு தேவையான நீதி, சட்டத்திட்டங்கள், பழக்க வழக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சமூகமாக வாழும் மக்களாக மேன்மையான ஒழுக்க விழுமியங்களைக் கொண்டு முன்னோக்கிச் செல்ல உதவின.

- இறைவனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்குமிடையில் நடுநிலையாளராகவும், இஸ்ரயேல் மக்களின் விடுதலை தலைவனாகவும், இஸ்ரயேல் மக்களை இறைமக்களாக உருவாக்கும் வழிகாட்டியாகவும் மோசேயை அறிமுகப்படுத்தலாம்.

- இறைவனால் அவருக்கு கொடுக்கப்பட்ட பத்துக்கட்டளைகள் உலகம் முடிவுவரை மாறுபடாமல் நிலைத்திருக்கும்.

- ஏதாவது ஒரு நிறுவனத்தை, நாட்டை, மக்களை நிருவாகம் செய்யும்போது ஒழுக்கம், மற்றும் வளர்ச்சிக்காக, சட்டத்திட்டங்களை அமைத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் முக்கியமானது

- அதுபோல் இஸ்ரயேல் மக்கள் பெற்றுக்கொண்ட பத்துக்கட்டளைகள் இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் முக்கியமானதென அறிந்துக்கொள்ளலாம்

- பத்துக்கட்டளைகளைப் பின்பற்றுவதால் இறை தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்

**தேர்ச்சி 3.0 :** ஞானத்தில் நிறைவுபெற்று இறைவாக்கினராக சான்று பகர்வரர்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் என்ற எண்ணக் கருவினூடாக தமது வாழ்வில் ஒளி ஏற்றுவார்.

**பாடவேளை** : 10

**கற்றல் பேறுகள்** :

- இறைவாக்கினரின் போதனை தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்
- இறைவாக்கினர் போல் செயல்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- இறைவாக்கினர்களின் போதனை தொடர்பாக திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- இறைவாக்கினர்களின் பிரதான கருப்பொருளை தமது வாழ்வாக்கிக் கொள்வார்.
- நன்னெறிமிக்க வாழ்க்கைக்கு பிறருடைய எடுத்துக்காட்டுக்களை முன்வைப்பார்.

## இறைவாக்கினர்கள்

**முன்னுரை**

- இறைவாக்கினர் என்பவர் இறைவனால் அழைக்கப்பெற்று அவரது செய்தியை பயமின்றி பறைசாற்றுபவர். இறைவனுக்காக பேசிய இவர்கள் ஒருவருடைய பதவி, பலம், தகுதி நிலை அல்லது தாம் பெறுகின்ற பிரதிபலன் பார்த்து செயல்பட்டவர்கள் அல்ல.
- எபிரேய மொழியில் இறைவாக்கினர் 'நபி' என்று அழைக்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டில் கிரேக்க பிரதியான செப்டுவாஜிந்தில் நபி என்பதன் எபிரேய மொழிபெயர்ப்பு 'பிறபெற்றஸ்' என்பதாகும். அதன் பொருள் 'ஒருவருக்காகப் பேசுபவர்' என்பதாகும். இறைவாக்கினர் இறைவனுக்காக பேசுபவர். இறைவாக்கினர்கள் இறைவாக்கு உரைக்கும் போது பயன்படுத்திய மூன்று சொற்பதங்கள் ஊடாக அது உறுதி செய்யப்படுகின்றது.
  1. 'ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார்' ஆண்டவரின் செய்தி இதுவே (எசா 1:2, எசே 5:1)
  2. ஆண்டவரின் செய்தி ........ உங்களிடம் வந்துள்ளது (எரே 1:3, எசே 1:3)
  3. 'இவ்வாறு கூறுவது ஆண்டவராகிய நானே' (எரே 31:33, 34:2)

**இஸ்ரயேல் இறைவாக்கினர்களை வகைப்படுத்தல்**

இறைவாக்கினரின் பிரதான இரு பிரிவுகள்

1. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்
2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்

எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் - இவர்களின் பெயரில் திருவிவிலியத்தில் நூல்கள் கிடையாது. ஆயினும் அவர்கள் செய்தவைகள் கூறியவைகளை சாமுவேல் மற்றும் அரசர்கள் நூலில் காணலாம். உ-ம் எலியா - 1அரசர்கள் 17-19, 2 அரசர்கள் 1-2

எலிசா - 2 அரசர்கள் 2-13

நாத்தான் - 2 சாமுவேல் 7-12

குல்தா (இறைவாக்கினள்) - 2 அரசர்கள் 22:14-20

அபியா (1 அரசர் 11:29, 12:15, 14:2)

எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் தூதுப் பணியில் காணப்பட்ட விசேட பண்புகளில் சில தியானத்தில் ஈடுபடல், குழுவாக செயல்படல், தமது தூதுப்பணிக்கு சான்றாக அருங்குறிகள் புரிதல் போன்றவைகளை குறிப்பிடலாம்.

எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் - இவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. பெரிய இறைவாக்கினர்கள்
2. சிறிய இறைவாக்கினர்கள்

பெரிய இறைவாக்கினர்கள் - எசாயா, எரேமியா, எசேக்கியேல்

சிறிய இறைவாக்கினர்கள் - ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபகூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி

ஒருவருடைய நூல்களின் அளவைப் பொறுத்தே, இவர்கள் பெரிய அல்லது சிறிய இறைவாக்கினராக வகைப்படுத்தப்படுகின்றனர்.

இறைவாக்கினர்களின் பிரதான மூன்று படிப்பினைகள்

1. ஒரே கடவுள் கொள்கை
2. ஒழுக்கம்
3. மெசியா பற்றிய சிந்தனை

**ஒரு கடவுள் கொள்கை**

- ஒரே கடவுள் அல்லது ஒரே கடவுள் மீது நம்பிக்கை வைத்தல் பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்களின் முக்கிய படிப்பினையாகும். அதற்கு ஏற்ப வீற்றிருப்பது ஒரே கடவுள் மட்டுமே. மற்ற அனைத்து கடவுள்கள் எனக் கருதப்பட்டவை மண், கல், பலகையினால் செய்யப்பட்ட மனித படைப்பாகும். அவற்றை வழிபடக்கூடாது.
- பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களில் விளங்கிய சிறப்புப் பண்பானது ஒரே கடவுளின் பிரதிநிதியாக இறைவனின் செய்தியை வழங்குவதாகும்.

**ஒழுக்கம்**

- இஸ்ரயேல் மக்கள் சீனாய் மலையின் உடன்படிக்கை ஊடாகவே நீதி, நேர்மையான மக்களாக மாற்றம் பெற்றனர். அவர்களால் ஒழுக்கவியலை கட்டி எழுப்ப பத்து கட்டளை ஊன்றுகோலாக இருந்ததில் எந்த சந்தேகமும் இல்லை. இறைவாக்கினர்கள் இஸ்ரயேல் மக்களை உடன்படிக்கையின் மக்கள் என்று அழைத்தனர். இறைவாக்கினர்கள் ஒரே கடவுள் கொள்கை மற்றும் ஒழுக்கவியலுக்கு இடையே உள்ள தொடர்பை நேர்த்தியாக முன்வைத்தார்கள். ஒழுக்கமிக்க நல்வாழ்வு வாழ இறைவாக்கினர்கள் அழைப்பு விடுத்தனர். (எசா 1:15-17).

  அவர்கள் நம்பிக்கை, கருணை, உறுதியான அன்பு, உடன்படிக்கையின் தொடர்பை எடுத்துக் காட்டுதல். நாட்டில் இருக்க வேண்டிய நம்பிக்கை, பரிவிரக்கம் இல்லாமல் போய் பொய் சொல்லுதல் கொலை செய்தல், களவு செய்தல், விபசாரம் செய்தல், இரத்தம் சிந்துதல் போன்றவை காட்டப்பட்டுள்ளன.

- அயலவர்களுக்கு எதிராக செய்யப்படும் பிழைகளின் விளைவாக, மனிதருக்கு போன்றே இயற்கைக்கும் பாதிப்பு ஏற்படுவதாக காட்டப்படுகின்றது (ஓசியா 4:1-3).

**மெசியா பற்றிய சிந்தனை**

- யூத மக்களின் நம்பிக்கையின் மையமாக இருப்பவர் மெசியாவாகும். எபிரேய மொழியில்

‘மஷியா’ என்றும் கிரேக்க மொழியில் ‘கிறிஸ்டோஸ்’ என்றும் மெசியாவை அழைத்தனர். அதன் பொருள் ‘திருப்பொழிவு செய்யப்பட்டவர் என்பதாகும்.’ பழைய ஏற்பாட்டில் குருக்களும், இறைவாக்கினர்களும், அரசர்களும் திருப்பொழிவு செய்யப்பட்டவர்களாவர். இம்மூவித பணியும் ஒன்றினைக்கப்பட்டு மெசியாவில் வெளிப்படுவதாக அவர்கள் நம்பினார்கள். யூத நம்பிக்கையின்படி மெசியா வருகை தருவது இறைவனின் அரசு எனும் அரசாட்சியை நிலைநாட்டவேயாகும். எனவே எதிர்காலத்தில் பெறவிருக்கும் செழிப்பான வாழ்விற்காக அனைத்து துன்ப துயரங்களையும் அவர் தாங்கி கொண்டார்.

இறைவாக்கினர் நாத்தான் தாவீது அரசருக்கு மெசியா பற்றி இறைவாக்கினை முதற்தடவையாக வெளிப்படுத்துகின்றார். (2சாமு 7:10-17) அங்கு மெசியா பற்றி 3 கருத்துக்களை முன்வைக்கின்றார்.

1. மெசியா தாவீது அரச பரம்பரையில் இருந்து வருவார்
2. அவரது அரசு இறையரசு என்பதால் எக்காலமும் நிலைத்து இருக்கும்
3. இந்த அரசில் நீதி, நேர்மை, சமத்துவம் நிலவுவதால் அது அமைதியின் அரசாகும்.

**இம்மானுவேல் அடையாளம் (எசா 7:10-17)**

- கி.மு 734ல் இருந்து 732 காலத்தில் சீரோ எப்ராயிம் யுத்த காலமாகும். அசீரிய பேரரசுக்கு எதிராக போரிட தமஸ்கு அரசராகிய இரட்சினும் வட அரசின் அரசராகிய பெகாவும் ஒரு குழுவாக ஒன்றிணைந்தனர். இதை ஆகாஸ் மன்னர் எதிர்த்தார். அசீரிய ஆட்சியாளரான 3வது திக்லன் பிலேசர் அந்த இரு ஆட்சிகள் மீது அதிகமான வரிச் சுமையை சுமத்தினார். யுத்த வாகனங்கள் 400 அளவு வைத்திருந்த ஆகாஸ் மன்னரின் உதவியின்றி வடஅரசின் அசீரிய பேரரசோடு போராட இயலவில்லை.
- ஆகாஸ் மன்னரின் உதவி கிடைக்காமையால் அவனுக்கு எதிராக முன்னோக்கி செல்ல இந்த மூன்று அரசர்களும் தீர்மானித்த போது, ஆகாஸ் மன்னருக்கு இறைவாக்கினர் நாத்தான் இறைவனுடைய செய்தியை கொண்டு வந்தார். ‘கன்னி கருவுற்று ஒரு ஆண் மகனை பெற்றெடுப்பாள்’ இம்மானுவேல் என்ற பெயரை அவனுக்கு வைப்பாள். அதன் பொருள் ‘ஆண்டவர் நம்முடன்’ என்பது ஆகும்.

  இம்மானு + ஏல்

  எம்மோடு + இறைவன்

  இறைவனிடமிருந்து பிரிந்திருந்த மக்களோடு இறைவன் உடனிருந்து, தம் வீரமிகு செயற்பாகுளினால் மக்களுக்கு வெற்றி அளித்து, அவர்களுக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் கொணர்வதே இம்மானுவேல் என்ற சொற்பதத்தின் பொருளாகும்.

**வருங்கால அமைதியின் அரசர் (எசா 1-7)**

- நம்பிக்கை சீர்குலைந்து துன்புற்ற மக்களிடம் இறைவாக்கினர் நற்செய்தியை பறைசாற்றுகின்றார்.

  ‘இருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்...’’ இது வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் ஆட்சியின் கீழ் இருந்த பாலஸ்தீன பகுதிகளில் காணப்பட்ட இருள் நிறைந்த நிலை மாறி இஸ்ரயேல் மக்களுக்கு மகிழ்ச்சி மிக்க நம்பிக்கையை உண்டு பண்ணிய இறைவாக்காகும். பகைவரின் ஆக்கிரமிப்புக்களும் முழுமையாக நீங்கி, இவ்வளவு காலம் பகைவர்களின் கீழ் தாங்கள் அனுபவித்த துன்பங்கள் ஏழ்மையிலிருந்து விடுதலை சுதந்திரம் பெறுவதை இவ்வாக்கு சுட்டிக்காட்டுகிறது. ‘எமக்கு குழந்தை பிறந்தது’ இதனூடாக தெளிவுபடுத்தப்படுவது மெசியாவின் பிறப்பு.

மெசியாவின் நான்கு பண்புகள் கூறப்படுகின்றன.

1. வியத்தகு ஆலோசகர் - இறைவனிடமிருந்து அறிவுரைகளை பெறுகின்ற இவர்கள் மனித ஞானத்தின் மீது மட்டும் நம்பிக்கை வைக்காது மனிதனுக்கு வழிகாட்டக்கூடிய இறை ஞானத்தில் நிறைந்தவர் இவர்.
2. வலிமைமிகு இறைவன் - முற்காலத்தில் அரசரிடம் விளங்கிய வியத்தகு அதிகாரத்தை காட்டுவதற்காக இந்த பெயரினால் அழைக்கப்படுகின்றார். இதன் வழியாக அதிகாரத்தை வெளிப்படுத்துகின்றார். மெசியா வலிமைமிகு இறைபலத்தில் நிறைந்தவராக இருப்பார்.
3. என்றுமுள்ள தந்தை - இது இறைவனின் திருப்பெயராகும். மெசியாவின் அரசு நித்தியமானது என்றும் இதனூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. முற்காலத்தில் ஓர் அரசர் தம் மக்களின் தந்தையாவார். எனவே எக்காலத்திற்கும் உரிய தந்தை மெசியா ஆவார்.
4. அமைதியின் அரசர் - அவரின் ஆட்சியில் மக்களுக்கு நீதி, நம்பிக்கை மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படுவதனால் அனுபவிக்கின்ற மகிழ்ச்சி, ஆன்ம திருப்தி மற்றும் நல்லிணக்கம் இதனூடாக வெளிப்படுகின்றது. மெசியாவின் வரவால் அது நிறைவேற்றப்பட்டது. மெசியா தாவீது குலத்தைச் சேர்ந்தவர். அவர் நீதியோடும், நேர்மையோடும் ஆட்சி செய்வார். எனவே அவர் அரசில் நிலையான அமைதி ஏற்படும் என்பதை இறைவாக்கினர் தெளிவுபடுத்துகிறார்.

**அமைதியின் அரசு (எசா 11:1-9)**

தாவீது அரசபரம்பரையில் அரசர்கள் இறைவனுக்கு எதிராக செயற்பட்டுள்ளனர். எனவே தாவீது அரசரின் பரம்பரையில் இருந்து புதிய தளிர் ஒன்று புறப்படும். ''தாவீது அரசு எனும் மரத்தில் அரச தளிர் ஒன்று புறப்படும்…'' அந்த அரச தளிர் என்பது மெசியாவாகும். அவரின் மீது இறைவனின் ஆவி (நிழலிடும்) அல்லது தங்கும். அதனூடாக கிடைக்கும் நன்மைகளை இறைவாக்கினர் தெளிவுபடுத்துகின்றார். அந்த நன்மைகளாவன

| | | |
|---|---|---|
| ஞானம் (ஹொக்மா) | - | நீதியான, தெளிவான வாழ்விற்கு முகம் கொடுக்கும் ஆற்றல் |
| அறிவு | - | இறைவனின் விருப்பத்தை தெரிவு செய்யும் ஆற்றல் |
| புத்தி | - | இன்னொருவரை நல்வழிப்படுத்தும் ஆற்றல் |
| திடம் | - | உடல் பலம் அல்ல. இறைதிட்டத்தை செயற்படுத்த ஆற்றல். |
| புரிந்துகொள்ளுதல் | - | அனுபவங்கள் ஊடாக பெறப்படும் தெளிவு. |
| இறைபயம் | - | இறை கட்டளைகளை பின்பற்றி வாழ கொடுக்கப்படும் ஆற்றல். |

- நீதி மற்றும் நம்பிக்கையில் நிலைபெறும் மெசியாவின் அரசு அமைதியின் அரசாகும். எனவே மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையிலும், மிருகங்களுக்கிடையிலும் தமக்கிடையிலும் அமைதி ஆட்சி செய்யும் ''ஓநாய் செம்மறி ஆட்டுடன் வாழும்.... பால் குடி பிள்ளை பாம்பு புற்றின் மேல் .......... விளையாடும்.''
- இது உலக படைப்பின்போது, இருந்த அமைதியை போல் இருக்கும். பாவத்திற்கு முன்பு இருந்த நல்லிணக்கம் அமைதி மெசியாவின் வருகையோடு உண்டாகும். நல்லிணக்கம் அமைதியின் அரசின் சிறப்பம்சமாகும்.

**இஸ்ரயேலுக்கு அதிபதி (மீக்கா 5:1-4)**

பெத்லகேம் எனும் எப்ராத்தா என அழைக்கும் மீக்கா இறைவாக்கினர் சிதறுண்டுபோன அரசாட்சிக்கு பதிலாக இஸ்ரயேலுக்கு புதிய தலைவராகிய மெசியா ஒரு கிராமத்தில் பிறப்பதாக கூறுகின்றார். எப்ராத்தா என்பது தாவீது பிறந்த ஊராகும். (சாமு 17:12) தாவீது அரசிலிருந்து புதிய தலைவர் உருவாகுவதாக மீக்கா இறைவாக்கினர் உறுதியாக கூறுகின்றார்.

- கி.மு 701 எருசலேமும் அசீரியா செனாகெரீப் அரசின் ஆக்கிரமிப்பிற்கு பின்னர் ஏற்பட்ட ஆதரவற்ற நிலை நம்பிக்கையற்ற நிலை மத்தியில் மீக்கா இவ்வாறு மக்களுள் புதிய நம்பிக்கையை ஊட்டுகின்றார்.
- நாட்டில் சிதறுண்டு இருக்கும் மக்கள் மெசியாவின் வருகையோடு ஒன்றிணைவதாகவும் பிளவுபட்ட அரசுகள் மீண்டும் ஒன்றுபடுவதாகவும் அடிமைப்படுத்தலிலிருந்தும் துன்புறுத்தலிலிருந்தும் மீட்பை வழங்குவதாகவும் கூறும் இறைவாக்கினர் மக்களுள் புதிய நம்பிக்கையை பிறக்கச் செய்து புதிய தலைமைத்துவத்தைப் பற்றிய நம்பிக்கையை உறுதி செய்கின்றார். அவரின் வருகையோடு உலகின் கடை எல்லை வரை அனைவரும் நலனையும் அமைதியையும் அனுபவிப்பதாக மீக்கா வெளிப்படுத்துகின்றார்.

**அமைதியின் அரசரின் வருகை (செக்கரியா 9:9-16)**

- ''மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு…'' இந்த அழைப்பு இறைவனின் ஆட்சியின் வல்லமையையும் மெசியாவின் ஆட்சியின் வருகையையும் கொண்டாடுவதற்காகவே ஆகும். தாவீது குலத்தில் இருந்து வரும் அரசர் இறைவனின் திட்டத்தை நிறைவேற்றி நீதியை உதிக்கச் செய்வார்.
- எபிரேய மரபின் படி அமைதியின் காலத்தில் அரசர்கள் கழுதையின் மீது ஏறி வலம் வந்ததாக சொல்லப்படுகின்றது. மக்களிடம் வருகின்ற மெசியா கழுதையின் மீது வருவதால் அமைதியின் யுகம் உதிப்பதாக தெளிவுபடுத்துகின்றார். அவர் அமைதியை விரும்புவதாகவும் அமைதியான சுபாவம் உடையவராகவும் இருப்பார்.
- மெசியாவின் வருகையினால் யுத்தத்துடன் தொடர்புபட்ட அனைத்தும் நிராகரிக்கப்படுவதோடு செயலிழக்கச் செய்யப்படும். இவ்வாறு நிறுவப்படுகின்ற அரசின் உலகளாவிய தன்மையை வெளிப்படுத்தும் இறைவாக்கினர் அதன் நிலையான தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றார்.

**தேர்ச்சி** **3.0 :** ஞானத்தில் நிறைவுபெற்று இறைவாக்கினராக சான்று பகர்வரர்.

**தேர்ச்சி மட்டம்** **3.2** : இறைவாக்கினர் அழைப்பினை மறுப்பின்றி ஏற்று வாழ்வார்.

**பாடவேளை** **:** 20

**கற்றல் பேறுகள் :**

- இறைவாக்கினர் தொடர்பான தகவல்களைக் சேகரிப்பார்
- இன்றைய சமூகத்தில் இறைவாக்கினர்களாக இறைவார்த்தையைப் போதிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- இறைவாக்கினர் தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- இறைவாக்கினர்களின் போதனைகளினூடாக தமது வாழ்வை அலங்கரித்துக் கொள்வார்.
- இறைவாக்கினர்களின் வழிகாட்டலின்படி ஏனையோரை நெறிப்படுத்துவார்.

**இறைவாக்கினர் எசாயா**

**முன்னுரை**

- எசாயா என்பதன் பொருள் ''யாவே மீட்பர்" என்பதாகும்.

  தென்னரசின் அரசன் உசியா இறந்த ஆண்டில் தனது பணியை யூதாவின் தலைநகரான எருசலேமில் ஆரம்பிக்கின்றார். (எசா 6:1)
- எசாயாவின் இறைவாக்குப் பணி யோத்தாம், செக்கரியா, ஆகாஸ் ஆகிய யூத மன்னர்களின் ஆட்சிக் காலத்தோடு தொடர்புடையது. (கி.மு 742 - 701)
- ஆமோசின் மகன் எசாயா ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் என நம்பப்படுகின்றது. எவ்வாறாயினும் எசாயாவின் பணி இடம்பெற்றது இஸ்ரயேல் வரலாற்றில் அரசியல் குழப்பங்கள் நிறைந்த காலத்திலாகும். கி.மு 735 - 734 காலகட்டத்தில் சிரியா மற்றும் எப்ராயிமில் யுத்தம் இடம்பெற்றது. எசாயா கி.மு 701இல் அசீரிய அரசர் செனகெரீப் யூதா நாட்டை ஆக்கிரமித்ததை அனுபவத்தில் கண்டார். இவ்வாறு தென்னரசு அழிவுற்ற காலத்தில் நம்பிக்கை இழந்த மக்களுக்கு நம்பிக்கையை வழங்க எசாயா அழைக்கப்பட்டார்.
- 66 அதிகாரங்களையுடைய எசாயா நூல் மூன்று ஆசிரியர்களின் நூலென பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதி 1-39 வரையான பகுதிகளுக்கு ஆசிரியர் எசாயா எனவும், அதி 40-55 வரைக்கும் ஆசிரியர் 2ம் எசாயா எனவும், அதி 56-66 வரைக்கும் ஆசிரியர் 3ம் எசாயா எனவும் வேறுபடுத்தப்படுகின்றது.

**அழைப்பு**

இறைவாக்கினரின் அழைப்பு இறைவனால் கொடுக்கப்படும் சிறப்புக் கொடையாகும். இந்த அழைப்பு இறையியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த அழைப்பில் காணப்படும் பொதுப்பண்புகள் 5 ஆகும்.

1. காட்சி அல்லது விசேட அனுபவம்

   இதனூடாக எமக்கு வெளிப்படுத்தப்படுவது இறைவாக்கினரின் அழைப்பு இறைவனால் கொடுக்கப்படுவது என்பதாகும். இறைவனுடைய அதி உன்னதமான தன்மையும் இறைவாக்கைப் பெறும் நபருடைய பலவீனத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய காட்சிகளில் இறைவனுடைய உன்னதமான தன்மையும் மகிமையான பிரசன்னமும் மேகமுழக்கம், மேகம், பனி, புகை, நிலநடுக்கம், காற்று ஆகிய அடையாளங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு அழைக்கப்பட்ட இறைவாக்கினருடைய செய்தியானது வல்லமை மிக்கதாகும். அதிகாரமும் பலமும் மிக்கதாகும். உதாரணம் திருக்கோவிலில் இறைவனின் பிரசன்னத்தை எசாயா காட்சியினூடாக அனுபவித்தார். (எசாயா 6:1-4)

2. பஷியை ஒப்படைத்தல்

ஒவ்வொரு இறைவாக்கினருக்கும் விசேட விதமாக பொறுப்புக் கொடுக்கப்படுகின்றது. இறைவாக்கினரை தெரிவு செய்வதற்காக இறைவனுடைய விருப்பம் என்னவென்று தெளிவுபடுத்துவதற்கு பொறுப்புக் கொடுக்கும் போது வெளிப்படுத்தப்படுகின்றது. அதனூடாக அவர் செய்ய வேண்டிய பணி, செய்ய வேண்டிய செயல் என்பனவற்றை இறைவன் அவர் முன்னிலையில் வெளிப்படுத்துவார். உ-ம்: எசாயாவுக்கு கொடுக்கப்படுவது. கடினமான மனம் கொண்ட இஸ்ரயேல் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதே (எசா 6:9-10)

3. அழைப்பை ஏற்றுக்கொள்ள தயங்குதல்

இறைவாக்கினர் தனக்கு கொடுக்கப்படும் பணியை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றார். அதைத் தட்டிக்கழிக்க முயற்சி செய்கின்றார். இதற்கான காரணம் மக்கள் கேட்க விருப்பமற்றதை இறைவாக்கினர் தெரிவிக்க வேண்டியிருப்பதாலேயே. அதன் பிரதிபலனாக அனேகமான துன்ப துயரங்கள் வேதனைகள் மற்றும் புறக்கணிப்புக்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். உ-ம்: எசாயா தமது விருப்பமின்மையை வெளிப்படுத்துவது தமது தகுதியற்ற தன்மையைக் கூறுவதனாலாகும்.(6:5)

4. தைரியப்படுத்துதல்

துன்பங்கள் , அச்சுறுத்தல்கள் மத்தியில் தமது பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற இறைவாக்கினர்களை இறைவன் தைரியப்படுத்துகின்றார். இறைவன் அவர்களோடு இருப்பதாகவும் துன்ப வேளைகளில் முகங்கொடுக்க தேவையான சக்தியையும் தைரியத்தையும் அளிப்பதாகவும் உறுதியளிக்கின்றார். உ-ம் எசாயாவின் உதடுகளைத் தூய்மைப்படுத்துகின்றார். (6:6-7)

5. அனுப்பப்படல்

எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் அவர்களின் உறுதிமொழியின் அடிப்படையில் செய்தியை வெளிப்படுத்துவதற்கு இறைவாக்கினர் அனுப்பப்படுகின்றார். இவ்வாறு இறைவனின் வல்லமையால் நிரப்பப்பட்ட இறைவாக்கினர் தாம் பெற்ற செய்தியை வெளிப்படுத்துவதற்குச் செல்கின்றார். உ-ம்: எசாயா கடின உள்ளம் கொண்ட மக்களிடையே அதாவது கேட்டும் உணராத மக்களிடையே அனுப்பப்படுகின்றார்.

**பிரதான படிப்பினைகள்**

**ஆண்டவரின் பணியாளர்**

- ஆண்டவரின் பணியாளான் என்ற சிந்தனையில் 2வது எசாயா நூல் எழுதப்பட்டுள்ளது. இவர் துன்புறும் ஊழியர் ஆவார். இவர் துன்பப்படுவது ஏனையவர்களின் நன்மைக்காகவே.
- பணியாளர் பற்றிய 4 பாடல்கள்
- இப்பாடல்களில் துன்புறும் ஊழியன் சில சந்தர்ப்பங்களில் தனியொரு நபராக காட்டப்பட்டுள்ளார்.

இத்தனிநபர் இறைவாக்கினர் அல்லது எசாயா இறைவாக்கினர் ஆக இருக்கலாம். அவர் சிலசந்தர்ப்பங்களில் மக்களின் பிரதிநிதியாகச் செயற்படுகின்றார். அம்மக்கள் பபிலோனியாவில் நாடு கடத்தப்பட்டிருந்த இஸ்ரயேல் மக்களாக இருக்கலாம். இத்துன்புறும் ஊழியன் பற்றிய இறைவாக்கு இயேசுக்கிறிஸ்துவில் நிறைவு பெற்றது.

**முதலாவது பாடல் (எசாயா 42:1-9)**

- இது 'அடிமையின் பாடல்' என்று அழைக்கப்படுகின்றது. இறைவனின் விசேட பணிக்காக பணியாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொடுக்கப்பட்ட பணியை முழுமையாகச் செய்ய இறை ஏவுதல் கொடுக்கப்பட்டுள்ளது.
- பழைய ஏற்பாட்டில் தலைவர்களுக்கு இறை ஊக்கம் கொடுக்கப்பட்டதன் காரணம் இறைவாக்கு மற்றும் ஆட்சிப் பணிகளுக்காகவே ஆகும். (1 சாமு 16:1-3, எசேக் 2:2, யோவே 2: 28) இங்கு பணியாளருக்கு அந்த பணியை முழுமைப்படுத்த இறைவனால் வல்லமை கொடுக்கப்படுகின்றது. "முறிந்த நாணலை மீண்டும் உடைப்பதில்லை. அணைந்து கொண்டிருக்கும திரியை யாரும் அணைத்து விடுவதில்லை..." இது பலவீனமான கைவிடப்பட்ட மக்களை எடுத்துக் காட்டும் அடையாளமாகும். பணியாளன் தம் பணியை ஆற்றுவதற்காக தொல்லை மிக்க நடவடிக்கைகளில் ஈடுபடாதது இங்கு உணர்த்தப்படுகிறது. இனங்களுக்காக நடுநிலை வகிக்கும் அவர் பலத்தை இழக்காததோடு நீதி நிலைநாட்டப்படும் வரை எவ்வித மனத்தளர்ச்சியும் அடையாமல் பொறுமையோடு செயற்படுகின்றார்.

**இரண்டாம் பாடல் (எசா. 49:1-7)**

- எரேமியா இறைவாக்கினர், தெரிவு செய்யப்பட்டதைப் போன்று பிறக்கும் முன்னரே, அந்த தாயின் கருவில் இறைவனுடைய ஊழியர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இஸ்ரயேல் மக்களின் சீர்திருத்தம் காரணமாக ஊழியன் இறைவனில் தங்கியிருத்தல் விடுதலை வீரனின் செயலாகும்.
- அனைத்து மக்களினங்களுக்கும் மீட்பைக் கொணருவது அவருடைய பணியாக இருப்பதோடு மக்களுக்கு ஒளியாக வழிகாட்ட வேண்டியுள்ளது. தம் பணியில் இறைவன் அவரைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் அவனது வெற்றி இறைவனிலேயே தங்கியிருக்கின்றது.

**மூன்றாம் பாடல் (எசா 50:4-11)**

- இறைவனின் பணியாளர் துன்பங்கள் மத்தியிலேனும் இறைவனுக்கு செவிமடுக்க விருப்பத்தோடு கீழ்ப்படிந்து இருக்கின்றார். அவரது முக்கிய பணியாக இருப்பது இறைவனுக்கு வெளிப்படையாக செவிமடுப்பதாகும். அவ்வாறு செவிமடுப்பது தனக்கு வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையினூடாக ஏனையவர்களை கட்டியெழுப்புவதற்காகவே. இது இறைவாக்கினரின் குண இயல்பாகும்.
- தம் பணியில் அவர் வைத்திருக்கும் ஈடுபாட்டினால் தாம் வெளிப்படுத்தும் வார்த்தைகள் காரணமாக பணியாளர் துன்புறுத்தப்படுகின்றார். இவ்வாறு அனைத்தையும் அவர் தாங்கிக் கொள்கின்றார். தம் மாசற்ற தன்மையைப் புலப்படுத்துவதற்காக தன்னை இறைவனுக்குக் கையளிக்கின்றார்.
- பணியாளருள் இருப்பது தளர்வுறாத ஆழமான நம்பிக்கையாகும். தன்னைத் துன்புறுத்தும் மக்கள் மத்தியில் மௌனமாக இருப்பது எவராலும் தன்னை தோல்வியுறச் செய்ய இயலாது என்ற இறைவன் மேல்கொண்ட நம்பிக்கையினாலே ஆகும்.

**நான்காம் பாடல் (எசா 52: 13-53:12)**

- இப்பாடல் ஊழியன் பற்றிய மிகவும் பிரபல்யமான பாடலாகும். இங்கு ஊழியன் முகங்கொடுக்கின்ற உடல் ரீதியான துன்புறுத்தல்கள் நேரடியாக விபரிக்கப்பட்டுள்ளது. பணியாளன் படும் வேதனை எவ்வளவு கொடூரமானது என்பதைக் காட்டுவதற்கு பணியாளனை மனித உருவின் அருவருப்பான நிலையையும் அவலட்சண தன்மையின் காரணமாக மக்கள் ஏற்றுக்கொள்ளாத தன்மையையும் எடுத்துக்காட்டுகிறது.
- பாவிகளுக்காக அவர் தம் வாழ்வைப் பலியாக்குவதால் இறைவன் அவருக்கு வெற்றியளிக்கின்றார்.

- மக்கள் ஆச்சரியப்படும் விதத்தில் இறை ஊழியனின் தூதுப்பணி மற்றும் அவர் உயர்த்தப்படுவது பற்றி கூறப்படுகிறது. இறை ஊழியனுக்காக இறைவன் திட்டம் ஒன்றை செயற்படுத்துவதாக அவர் அறிந்து கொள்கின்றார். விசேடமாக அரசர்கள் மற்றும் மக்கள் மத்தியில் திகில், பயத்தை உண்டாக்கி ஊழியனின் பாடுகளின் ஊடாக இறைவனின் வலிமைமிகு கரத்தால் வெளிப்படுத்தினார்.
- இறைவன் இவ்வாறு ஒரு நபரை உயர்த்துவதை நம்ப முடியாது என சிலர் கூறுகின்றனர். உலர்ந்த தரையில் இருந்து துளிர்விடுவது போல் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நபராக எடுத்துக்காட்டுகின்றார். ஆயினும் நம்பிக்கைகளை தகர்த்தெறிந்து ஊழியன் துன்பத்திற்கு உட்படுகின்றார். அவர் மக்களால் புறக்கணிப்படுகின்றார். துரத்தப்படுகின்றார். இறுதியில் மக்கள், ஊழியன் பற்றிய தவறான எண்ணங்களை மாற்றிக் கொள்கின்றனர். பழைய ஏற்பாட்டில் மன்னிப்புப் பெறும் பொருட்டு நரபலி செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது இங்கு மட்டுமே.
- இவர் அந்தத் துன்பங்களினால் மக்களை இறைவனோடு தொடர்புபடுத்தினார். அங்கு அவர் இவ்வளவு காலம் வழிதவறி இறைவனிடமிருந்து பிரிந்திருந்ததை மக்கள் உணர்ந்து கொள்வர்.
- இப்பாவம் போக்கும் பலியினால் ஊழியன் மகிமைப்படுத்தப்படுகின்றார்.
- இயேசு கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் துன்புறும் ஊழியனின் மறு உரு முழுமையாக உயிர்ப்பிக்கப்பட்டது. ஊழியன் முன்வைக்கின்ற அகிம்சையான வாழ்வு முறையை கிறிஸ்து பின்பற்றினார்.

## இறைவாக்கினர் எரேமியா

### முன்னுரை

- எரேமியா என்பதன் பொருள் ‘‘இறைவன் உயர்த்தினார்’’ அல்லது ‘‘நிறுவினார்’’ என்பதாகும். எரேமியா 1:2-3 க்கேற்ப இறைவாக்கினரின் தூதுப்பணி யோசியா (கி.மு 640 - 609) யோயாக்கிம் (கி.மு 609 - 598) மற்றும் செதேக்கியா (கி.மு 598 - 587) ஆகிய அரசர்களின் கால கட்டத்தோடு தொடர்புடையதாகும்.
- எரேமியா இறைவாக்கினர் தம் தூதுப்பணியை செயற்படுத்தியது பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டதற்கு முன்னாகும். யாவே இறைவனுக்கு சார்பாக அவரின் உடன்படிக்கையின் நியமங்களைப் பின்பற்றுவது இஸ்ரயேல் மக்களின் கடமை என்பதை எரேமியா இறைவாக்கினர் வலியுறுத்திக் கூறுகின்றார்.
- மக்களால் உடன்படிக்கை மீறப்படுவதன் காரணத்தால் இறைவனின் கடுமையான தீர்ப்புக்கு அவர்கள் உள்ளாக்கப்படவிருப்பதாக எரேமியா மிகவும் உறுதியாகக் கூறினார். மக்களை மனமாற்றத்திற்கு அழைக்கும் எரேமியா இறைவன் குறிப்பிட்டுள்ள ஒரு நாளில் அனைத்து மக்களினத்தாரோடு புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதாக கூறிய வார்த்தைகளினால் (31:31-34) அவர்களுள் மீட்புப் பற்றிய புதிய எதிர்நோக்கை உண்டாக்கினார்.

### அழைப்பு

1. காட்சி அல்லது விசேட அனுபவம்

எரேமியா இறைவாக்கினரின் அழைப்பு பற்றிய கதை அவருக்கும் இறைவனுக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் மூலமே ஆரம்பமாகிறது. தாயின் கருவில் உருவாகும் முன்னரே எரேமியா தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது புலனாகின்றது (1:5). இதில் வெளிப்படுவது எரேமியா இறைவாக்கினராக தெரிவு செய்யப்பட்டிருந்தவர் என்பதாகும். இறைவாக்கினரை ஏற்படுத்தும்போது மக்களை மீட்பதற்கான குறிப்பிட்ட திட்டத்தை இறைவன் வகுத்து வைத்திருப்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.

2.பணியை ஒப்படைத்தல்

மக்களினத்தாருக்காக இறைவாக்கினரை ஏற்படுத்துவது பற்றிய பணி (1:1-3) வரலாற்றுப் பின்னணியில் காட்டப்படுள்ளது. அதாவது மூன்று அரசர்களின் கீழ் பணியாற்றுவதற்காகவே.

3.அழைப்பை ஏற்றுக் கொள்ள தயங்குதல்.

இறைவாக்கினர் மறுப்புத் தெரிவிப்பது துன்ப துயரங்களை முகம்கொடுக்க வேண்டும் என்பதனாலே. (1:6)

4.தைரியப்படுத்துதல்

தூதுப்பணியை செயற்படுத்தும்போது இறைவனே தனது உடனிருப்பை உறுதிப்படுத்தி இறைவாக்கினரை தைரியப்படுத்தி அனுப்புகின்றார். (1:7-8). தமது கரத்தை நீட்டி வல்லமையை வழங்குதல், வாயைத் தொடுதலினால் இறைவன் தம்மோடு இருக்கும் உறவை வெளிப்படுத்துகின்றார்.

- எதிரிகள் எவ்வளவு போரிட்டாலும் இவரைத் தோற்கடிக்க இயலாது.
- இறைவன் அவரை திடப்படுத்தி உறுதிப்படுத்துகின்றார்.

5.அனுப்பப்படல்

நன்மையான விடயங்களைக் கட்டியெழுப்பவும் தீமையான விடயங்களை அழித்துவிடவும் எரேமியா அனுப்பபடுகின்றார் (1:9-10). கடினமான மனம் கொண்ட பாவிகளுக்கு தண்டனையோடு கூடிய தீர்ப்பும், மனந்திரும்புவோர்க்கு அமைதி மற்றும் சுபிட்சம் பெற்றுக்கொடுக்க இறைவனின் பலமான கருவியாக இறைவாக்கினர் செயற்பட வேண்டும் என்பதைக் காட்டுகின்றார்.

**பிரதான படிப்பினைகள்**

**உடன்படிக்கை வாழ்வு (31:31-34)**

- சீனாய் உடன்படிக்கை முறிவுபட்டது. மக்களின் தவறுகளினாலாகும். எரேமியா வெளிப்படுத்தும் புதிய உடன்படிக்கை சீனாய் உடன்படிக்கையைவிட மாறுபட்டதாகும். அது பழைய சீனாய் உடன்படிக்கைக்கு மீண்டும் உயிர்கொடுக்கவும் புதுப்பிக்கவும் செய்யப்படுகின்ற முயற்சியல்ல. அது சீனாய் உடன்படிக்கையை விட மாறுபட்ட ஒன்றாகும்.
- சீனாய் உடன்படிக்கை இருபாபலாரிடையேயான உடன்படிக்கையாவதோடு புதிய ஏற்பாட்டு உடன்படிக்கை ஒருதலைப்பட்சமானது. அதாவது மக்களின் அவநம்பிக்கையால் உடைந்து போகாது மன்னிப்பினால் நிலைப்படுத்தப்பட்ட உடன்படிக்கையாகும். மேலும் சட்டம் இதயங்களில் எழுதப்பட்டிருப்பதனால் இறைவனின் விருப்பத்திற்கு உட்பட்ட மக்களோடு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையாகும்.
- இந்தப் புதிய காலகட்டத்தில் இறைவனுக்கும் மக்களுக்கும் இடையில் இடைநிலையாளர் ஒருவர் தேவையில்லை. ஏனெனில் இறைவன் நேரடியாகவே மக்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதனலாகும்.
- இவ்வாறு அவரின் கட்டளைகள் இதயத்தில் எழுதப்படும்போது இறைவனை பற்றி அறிந்து கொள்வது உள்ளார்ந்த செயற்பாடு ஆகும். எனவே இந்த உடன்படிக்கை வெளிவாரியான ஒன்றாக அல்ல நிலைவாழ்வினுள் செயற்படுத்த இதயத்துள் எழுதப்பட்ட புதிய உடன்படிக்கையாகும்.

- சட்டமெனும் கட்டளை ஒருவரின் நன்மையை தீமையை அளவிடும் அளவுகோல் அல்ல. அது இறைவனின் திட்டத்திற்கேற்ப நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதாகும். இறைத்திட்டம் மக்களில் செயற்படுத்தப்படுவதால் இந்த உடன்படிக்கை உறவு ஏற்படுகின்றது. உடன்படிக்கையை முன்னோக்கி எடுத்துச் செல்தவற்காக உண்மையான மனமாற்றத்தின் பின் கிடைக்கும் பாவமன்னிப்பு முக்கியமாகும்.
- இறைவன் மக்களோடு ஏற்படுத்தம் புதிய உடன்படிக்கையால் மக்களின் பாவம் மன்னிக்கப்படுகின்றது.
- பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினரால் வெளிப்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கை கிறிஸ்துவில் முழுமை பெறுவதாக லூக் 22:20 இல் உறுதி செய்யப்படுகின்றது.

### இறைவாக்கினர் எசேக்கியேல்

#### முன்னுரை

- எசேக்கியேல் என்பதன் பொருள் ''ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்'' என்பதாகும். கி.மு 597இல் நெபுகத்நேசரினால் யோவாகீம் அரசர் மற்றும் எசேக்கியேல் உள்ளடங்கிய 10,000 பேர் நாடு கடத்தப்படுவதற்காக பபிலோனியாவிற்கு கொண்டு செல்லப்பட்டனர். (2அர. 24-25 அதிகாரங்கள்) எசேக்கியேல் அங்கு இருக்கும்போது இறைவாக்கினராக அழைக்கப் பெற்றார். (1:1-3) குருக்கள் குலத்தை சேர்ந்த இவர் பூசியின் மகனாவார். தனது தூதுப்பணியை பபிலோனியாவில் மேற்கொண்டார்.
- காட்சிகள், உவமை, அடையாளங்கள் வழியாக இறைவாக்கை அறிவிப்பது எசேக்கியேலின் விசேட பண்பாக விளங்கியது. ஒன்றிப்பின் ஊடாக தனிப்பட்ட தவறுகளை மறைக்க இயலாது அவரவர் தத்தமது தவறுகளுக்கு பொறுப்பு கூற வேண்டும் என கடுமையாக கூறினார். இவ்வாறு கூறியது மக்கள் மத்தியில் மறுவாழ்வு பற்றிய நம்பிக்கையை உண்டாக்குவதற்காகவே. எசேக்கியேல் ஆழமான நம்பிக்கை, உன்னதமான சிந்தனைத் திறன் தூரநோக்குப் பார்வை கொண்ட நபராவார்.

#### அழைப்பு

1. காட்சி அல்லது விசேட அனுபவம்

   இறைவாக்கினர் ஒரு குழப்பமான காட்சியை காணுகின்றார். இதில் இறைவனின் வீற்றிருத்தல் மறைபொருளால் அடையாளப்படுத்தப்படுகின்றது.

2. பணியை ஒப்படைத்தல்

   எசேக்கியேலுக்குள் இறை ஏவுதல் புகுவதன் வழியாக அடையாளப்படுத்தப்படுவது இறைவாக்கினர் பணிக்காகப் பெறும் பலமாகும் (2:1-7)

3. அழைப்பை ஏற்றுக்கொள்ள தயங்குதல்

   நாடு கடத்தப்பட்டு இருக்கும் கடின மனம் கொண்ட மக்களுக்கு போதிக்கவே எசேக்கியேல் அழைக்கப்பட்டார். பிடிவாதமான மக்களுக்கு முகம் கொடுக்க இறைவாக்கினர் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றார் (3:14).

4. தைரியப்படுத்தல்

   இறைவனின் கையிலிருந்த ஒரு ஏட்டுச்சுருளினை உட்கொள்ளுமாறு இறைவாக்கினருக்கு கொடுக்கப்படுகின்றது. பொதுவாக சுருட்டப்பட்ட ஏடுகளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்பட்டிருக்கும் ஆயினும் இந்நூலின் இருபக்கமும் எழுதப்பட்டிருந்தது. இதிலிருந்து வெளிப்படுத்துவது அது இறைவெளிப்பாட்டால் நிறைந்திருப்பதே ஆகும் (2:8-10).

5. அனுப்பப்படல்

மிகவும் பிடிவாதமிக்க கடினமான மனம் கொண்ட குழப்பக்கார மக்களினமாகிய நாடுகடத்தப்பட்ட மக்களின் கடினமான பிடிவாதமான இதயங்களுக்கு பதிலாக மென்மையான இதயத்தை உண்டாக்க எசேக்கியேல் அனுப்பப்படுகிறார். அவர் அனுப்பப்படுவது இறைவனுக்கு எதிராக முறையிட்ட மக்கள் மத்தியிலேயே. அவருடைய முக்கிய பணி இறைவனுடைய செய்தியை மக்களுக்கு பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதாகும். அதன் நிமித்தம் அவர்களின் செயற்பாடுகளுக்கு இறைவாக்கினருக்கு பொறுப்புக் கூறுவதற்கு எந்த கடமையும் இல்லை (3:1-11).

**புதிய வாழ்வு (எசே. 37:1-14)**

- இறைவன் புதுமையான விதத்தில் தம்மக்களுக்கு கொடுக்கும் புதிய வாழ்வினை மனம் கவரும் விதத்தில் எடுத்துக்காட்ட எலும்பு கூடுகளைப் பயன்படுத்துகின்றார்.
- நாடு கடத்தலிலிருந்து மீண்டும் வருதல் பொதுவாக மரித்தோரிடமிருந்து உயிர்ப்பது போன்ற அபூர்வமான நிகழ்வாகும். இஸ்ரயேல் மக்கள் நாடுகடத்தப்பட்டிருகின்றனர். அவர்கள் உலர்ந்த எலும்பை போன்றவர்கள் இறைவன் அவர்கள் வாழும் படியாக உயிர்மூச்சை வழங்குவதாக கூறுகின்றார். அதாவது தங்கள் நாட்டிற்கு மீண்டும் வருவர் என்பதாகும்.

**இறைவாக்கினர் ஆமோஸ்**

எருசலேமிலிருந்து 18 கிலோ மீட்டர் அளவில் தெற்கில் அமைந்துள்ள தெகோவா எனும் கிராமத்தின் கிராம வாசியான ஆமோஸ் (1:1) ஆடு மேய்த்தல் அத்தி வளர்த்தல் போன்றவற்றை தொழிலாக மேற்கொண்டவராவார் (1:1, 7:14). ஆமோஸின் இறைவாக்குப் பணிகள் கி.மு 760 அளவில் 2வது ஜெரபோவாம் ஆட்சி காலத்தில் கி.மு 767 -747 ஆரம்பித்திருக்கலாம்.

- ஆமோஸ் இறைவாக்கினர் செய்தியின் இலக்கு வட அரசை நோக்கியதாக இருந்தது. வடக்கில் வியாபாரம் வளர்ச்சியடைந்ததனால் உயர்ந்த சமூகமொன்று உருவாகியது. அவர்கள் ஏழை எளிய மக்களை சுரண்டுவதில் ஈடுபட்டனர். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு வளர்ச்சி அடைந்தது. உயர்ந்த நிலையில் இருந்தோர் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தனர். ஆயினும் மேய்ப்பவர்கள், தொழிலாளர்கள், உழவர்கள் வறிய நிலையில் வாழ்ந்து வந்தனர். இந்த இரு நிலையாளர்களுக்கிடையே பாரிய ஏற்றத்தாழ்வு காணப்பட்ட நிலையில் சகோதர மக்கள் அநீதியாக துன்புறுத்தப்படுவதால் இறைவனின் கோபத்திற்கு ஆளாகுவதாக ஆமோஸ் பயமின்றி எடுத்துக் கூறினார். இதனால் 'சமூக நீதியின் இறைவாக்கினர்' என அழைக்கப்பட்டார்.
- சமூக, அநீதி, பொருளாதார, வேறுபாடுகளை கடுமையாக எதிர்த்தார். அவர் 2:6-16 மறைக்கப்பட்ட அநீதியை பற்றி கடுமையாக பேசினார். வறியவர்கள் மீதான சுரண்டல் செல்வம் சேகரித்தல் அநீதி மற்றும் வணிக உலகம், உலகில் காணப்படும் அநீதி போன்றவற்றை தெளிவுபடுத்தினார்.(4:1-3, 6:1-7,8:4-8) கொழுத்த பசுமாடு உருவகத்தை பயன்படுத்தி சமாரியாவில் உள்ள உயர் பெண்கள் வாழ்ந்த வாழ்வோடு ஒப்பிட்டு இகழ்ந்து காட்டினார். அவ்வாறு தம் தொழில்துறைகளிலும் இஸ்ரயேல் மக்கள் அதன் தூய்மையை சிதைத்துள்ளதாக மேலும் இறைவாக்கினர் தெளிவுபடுத்துகின்றார்.

**இறைவாக்கினர் ஓசேயா**

- ஓசேயா என்பதன் பொருள் 'இறைவன் மீட்கிறார்' அல்லது ஆண்டவர் உதவி புரிய வருகிறார் என்பதாகும். இவர் வட அரசை சேர்ந்த இஸ்ரயேல் நாட்டவர் ஆவார். ஓசேயா ஆமோஸ் இறைவாக்கினரின் சமகாலத்தவர். வேறு கடவுளை வழிபடுதல் பாவம் பற்றி பேசும் போது அதனை விபசாரத் தொழிலுக்கு ஒப்பிடுகின்றார்.

- இறைவனின் அன்பை பற்றி பேசும்போது அந்த அன்பு, அனைத்துப் பாவத்தையும் மறந்து மன்னிப்பு வழங்குகின்ற கடந்த காலத்தை மறந்து வருங்காலத்திற்கு முகம் கொடுக்க எப்போதும் ஆயத்தமாக இருக்கின்ற கணவனின் எல்லையற்ற அன்புக்கு ஒப்பிடுகின்றார்.
- பிற கடவுள்களை வழிபடுவதை ஓசேயா இறைவாக்கினர் கடுமையாக கண்டிக்கின்றார். தம் நாட்டின் வரலாற்றில் காணப்பட்ட இறைவாக்கினர் பயன்படுத்தும் அலகு இறைவனின் எல்லையற்ற அன்பாகும். இறைவாக்கினர் ஓசேயா மனமாற்றத்திற்காக மக்களை அழைத்ததோடு இறைவனின் நீதி நேர்மையின் பால் அவர்களை திருப்பினார். ‘இறைவனின் அன்பின் இறைவாக்கினர்’ எனவும் ஓசேயா அழைக்கப்பட்டார்.
- ஓசேயாவின் படிப்பினைகளில் அடிப்படையாக இருந்தது அவரது தனிப்பட்ட வாழ்க்கை அனுபவமாகும். ஓசேயாவின் மனைவி கோமேர் பற்றிய பலவிதமான கருத்துக்கள் காணப்பட்டாலும் அவள் தன் கணவருக்கு நம்பிக்கையின்றி அவரை விட்டு பிரிந்து சென்றுள்ளார். இந்த இறுக்கமான அனுபவத்தை இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குவதற்கு ஓசேயா இறைவாக்கினர் கையாளுகின்றார்.
- ஓசேயா இறைவாக்கினரின் படிப்பினைகளில் திருமணம் எனும் சிந்தனையில் இறைவன் மற்றும் தம் மக்களிடையே உடன்படிக்கை உறவை அடையாளப்படுத்துகின்றார். ஓசேயாவின் பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டது அடையாளமான பெயர்களாகும். ஜெஷெரயேல் ‘இறைவன் விதைக்கிறாா’, லோ -ருஹாமா - ‘இரக்கம் பெறாதவள்’, லோ - அம்மி ‘எனது மக்கள் அல்ல’ என்று பெயரிட்டார். மக்கள் இறைவனைவிட்டு பிரிந்தாலும் அவர் அவர்கள் மீது இரக்கம் வைத்து மீண்டும் தொடர்பை ஏற்படுத்த எதிர்பார்த்து இருப்பதாக ஓசேயா கூறுகிறார் (ஓசே. 1:1-11).

**தேர்ச்சி 3.0 :** ஞானத்தில் நிறைவுபெற்று இறைவாக்கினராக சான்று பகர்வரர்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** வாழ்வைச் சீரிய முறையில் நெறிப்படுத்துவதற்கு ஞான இலக்கியங்களின் வழிகாட்டலைப் பெறுவார்.

**பாடவேளை :** 20

**கற்றல் பேறுகள் :**

- ஞான இலக்கியம் தொடர்பான தகவல்களைக் சேகரிப்பார்
- நன்மை தீமையைப் பகுத்தறிந்து நன்மையை மாத்திரம் செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- ஞான இலக்கியம் தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- திருப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு தம் செப வாழ்வை வளமாக்கிக் கொள்வார்.
- ஞானம் நிறை சமூகத்தினைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பார்.

**ஞான இலக்கியம்**

**முன்னுரை**

- ‘ஞானம்’எபிரேய மொழியில் (Hokmah) என்று அழைக்கப்படும். அதன் இலக்கு இந்நேரத்தில், இவ்விடத்தில் நல்வாழ்வு வாழும்போது, இறை அச்சம், ஞானத்தை கொண்டு வரும். சரியானவற்றை செய்து இவ்வுலகில் பாதுகாப்பு மற்றும் மகிழ்ச்சியை உரித்தாக்கிக் கொள்வது இதன் பொருளாகும். அதன் இலக்கு இந்நேரத்தில் இவ்விடத்தில் நல்வாழ்வு வாழும்போது இறையச்சம் ஞானத்தைக் கொண்டுவரும். (யோபு 28:28, திபா 111:10)
- திறன் மிக்க செயற்பாடு ஞானத்தின் வெளிப்பாடாகும். எனவே ஞானம் என்பது சரியானதை திறன் படவும் நேர்மையாகவும் வாழ பெறப்படுகின்ற ஆற்றல் என்று பொருள் கூறலாம்.
- ஞானம் உலகளாவிய சிந்தனையாகும். எனவே ஒரு இனத்திற்கு நாட்டிற்கு இது வரையறுக்கப்படாதது. ஞான இலக்கியம் மனித வாழ்வின் பல்வேறுபட்ட கூறுகளை நோக்குகின்றது. வேறுவகையில் கூறினால் ஞானம் வாழ்விற்கு விளக்கம் அளிக்கின்றது. மேலும் கிரேக்கரைப்போல் மெய்யியலுக்கு மட்டும் மட்டுப்படாமல் வாழ்வின் அனுபவங்களையும் கவனத்தில் கொள்கின்றது.

**ஞான இலக்கியத்தின் ஆரம்பம்**

- பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியத்திற்கும் மத்திய கிழக்கு நாடுகளின் பழைய ஞான இலக்கியத்திற்கும் இடையில் தொடர்பு உண்டு. மத்திய கிழக்கு என்பது யூபிரட்டீஸ் மற்றும் தைகிரீஸ் நதிகளிலிருந்து தண்ணீர் வழங்கப்படுகின்ற பழைய மெசபத்தோமியா மற்றும் நைல் நதி அருகில் எகிப்தை அண்மித்த பகுதியாகும்.

**பழைய மத்திய கிழக்கு ஞான இலக்கியத்தின் மரபுகள் இரண்டு**

1. பழைய உடன்படிக்கையில் செபைற் ஞானம் (Sebayt)
2. மெசபத்தோமிய சட்ட வல்லுனர்களின் ஞானம்

- **எகிப்து ‘செபைற்’ ஞானம்** - இந்த ஞானத்திற்கு அடிப்படையாக இருப்பது எல்லாம் வல்ல இறைவனின் திட்டத்தை வெளிப்படுத்துகின்ற உலகளாவிய குறிப்பிட்ட திட்டம் (Right Order) ‘மேஅட்’ என்பது ஆகும். ‘மேஅட்’ (Maat) என்பதற்கேற்ப ஒருவர் நல்ல ஒழுக்கமுள்ள சீரிய வாழ்வு வாழமுடியும் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆட்சிக்குத் தகுதியானோர் மற்றும் அரச சபை ஊழியர்களை பயிற்றுவிக்க செபைற் எனும் படிப்பினை (Instructions) பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது வாழ்வு மற்றும்

நன்னடத்தைப் பற்றிய அறிவுறுத்தலாகும். இவை ஆசிரியர்களால் சீடர்களுக்கு இடைவிடாது தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களுக்கும் பழைய ஏற்பாட்டு ஆவணங்களுக்கும் இடையில் தொடர்பு உண்டு. செபைற் ஞானம் அரச சபை ஞானத்திற்கு அடித்தளமாக இருந்ததாக

கருதலாம். (நீமொ 31:1-9,. சபை உரை10:1-5, சால ஞா.6:1-11)

- **மெசபத்தோமியா ஞானம் -** நிலபிரபுத்துவ ஆடசிக்குள் உயர்ந்த தரத்தோர் பயிற்றுவிக்கும் வழிமுறை மற்றும் அரச ஆவணங்களை கையாளும் கலை பற்றி கற்பிப்பதாகும்.
- சில விவிலிய அறிஞர்கள் ஞான இலக்கியத்தில் ஆரம்பம் குடும்ப பின்னணியிலிருந்து எழுவதாக குறிப்பிட்டுள்ளனர். அவர்களின் கருத்துப்படி ஞானம் அரச சபையில் ஆரம்பமாகவில்லை மாறாக வாய்மொழி பாரம்பரியம் வழியாக அரச சபைக்கு வருகை தந்ததாக கூறப்படுகின்றது. அதற்கேற்ப ஞான இலக்கியம் ஆரம்பமானது சலமோன் அரசனிடமிருந்தல்ல ஞானம் பற்றிய தெளிவு அதற்கு முன்னதாகவே இருந்துள்ளது என்பதாகும். சாதாரண குடும்பச் சூழலில் இது தோன்றியிருக்கலாம்.
- அன்று இளைஞர்களுக்கு கல்வி வழங்கும் நடவடிக்கை குடும்பங்களில் இடம்பெற்றது. தந்தை ஒருவரால் தமது மகனுக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகள் ஞான இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஞான இலக்கியத்தின் பிறப்பும் அதன் வளர்ச்சியும் குடும்பங்களிலும் அரச மாளிகைகளிலும் இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடியும். மற்றும் நீதிமொழியிலும் சீராக்கின் ஞான நூலிலும் ''பிள்ளாய்'' என்னும் பதம் அதிகளவில் காணக் கூடியதாயுள்ளது. இதனால் காட்டப்படுவது குரு சீடர் உறவு தந்தை மகன் உறவை விட மேலோங்கி நிற்கிறது.
- பழைய எற்பாட்டில் ஞான இலக்கியம் பழைய மத்திய கிழக்கு ஞான இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்பு இருப்பதாக காட்டப்படுகின்றது. அது மட்டுமல்ல பழைய ஏற்பாட்டில் ஞான இலக்கியம் பழைய மத்திய கிழக்கு ஞான இலக்கியத்திற்கு உரிய சிந்தனையை சிறு வேறுபாடுகளுடனேயே பின்பற்றுகின்றனர். விசேடமாக பழைய ஏற்பாட்டில் ஒரே கடவுள் கொள்கை காரணமாக மத்திய கிழக்கு ஞான இலக்கியத்தில் இருந்து இது வேறுபடுகின்றது.
- நாடு கடத்தப்பட்ட காலத்தில் இறைவாக்கினருடைய பணி குறைவடைந்து சென்ற காலத்தில் ஞான இலங்கியங்கள் தோன்றியதாக கருதப்படுகின்றது. எனவே இஸ்ரயேலரின் ஞானம் அவர்களின் நம்பிக்கையோடு சேர்ந்து தொடர்ந்து வருவதாக நம்பப்படுகின்றது.
- திருவிவிலியத்தின் ஏனைய நூல்களைப் போன்று சிலைவழிபாட்டிற்கு எதிராக உடன்படிக்கை பற்றியும் எருசலேம் தேவாலயம் அதன் வழிபாடு பற்றியும் எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை. எனினும் மனிதன் அவனது நடத்தை குணவியல்புகள், எண்ணங்கள், பலவீனங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. ஞான இலக்கியத்தின் மையமான விடயம் மனிதன் மற்றும் நல்வாழ்வு வாழுதல் பற்றியதாகும். இஸ்ரயேலின் ஞானம் உலகியல் சார்ந்தது அல்ல, சமய ஒழுக்கம் மற்றும் ஒழுக்கவியல் மீது கட்டியெழுப்பப்பட்டதாகும்.

**எபிரேய ஞானத்தின் முக்கிய அம்சங்கள்**

1. விடுதலைப்பயணம், உடன்படிக்கை, குலமுதுவர்களுக்கு இறைவன் கொடுத்த வாக்குறுதி போன்ற பிரதான கருப்பொருள்களில் அவதானம் செலுத்தப்படவில்லை.
2. பழைய மத்திய கிழக்கு ஞானத்துடன் (எகிப்திய செபையிட் ஞானம் மற்றும் மெசபத்தோமியா சட்ட வல்லுனர்களின் ஞானம்) நெருங்கிய தொடர்புடையது.

**பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியம்**

பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியத்தினுள் ஏழு நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. யோபு

2. திருப்பாடல்
3. சபை உரையாளர்
4. சீராக்கின் ஞானம்
5. இனிமைமிகு பாடல்கள்
6. சாலமோனின் ஞானம்
7. நீதிமொழிகள்

**எபிரேய ஞானத்தின் பிரிவுகள்**

1. குடும்ப மற்றும் கோத்திர ஞானம் (Family of Tribal Wisdom)

   கோத்திர மற்றும் குடும்பம் பாதுகாக்கப்படுவதற்காக பின்பற்ற வேண்டிய சம்பிரதாயங்கள், அறிவுரை மற்றும் சட்ட திட்டங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட ஞானத்தைப் பாதுகாக்கும் ஓர் அடையாளம் கல்வியாகும்.

   உ-ம் - சீரா 7:23-38, நீமொ 23:13-24. சஉ. 30:1-13

2. அரச சபை ஞானம் (Court Wisdom)

   அரசாட்சி மற்றும் ஏனைய துறைகளின் முகாமைத்துவம் பற்றி இலக்கு வைத்து இளைஞர்களை பயிற்றுவிக்கும் கல்வி நடவடிக்கையாகும்.. இந்த ஞானம் சமூகத்தில் செல்வாக்குமிக்க பிரபுக்களுக்கானதாகும்

   உ-ம் - சாலமோனின் ஞானம் 6:1-11

3. ஆன்மீக ஞானம் (Spritual Wisdom)

   வாழ்வின் பொருளை அதிலுள்ள பிரச்சினைகள் உலகம் பற்றிய சிந்தனையோடு செய்யப்படுகின்ற ஒரு விளக்கம்.

   உ-ம் - யோபு, மற்றும் சபை உரையாளர்

4. அன்றாட வாழ்வு பற்றிய ஞானம் ( Practical Wisdom)

   அன்றாட வாழ்வில் முகம்கொடுக்கின்ற சந்தர்ப்பங்கள் பற்றிய அறிவுரைகள். அதாவது வெற்றிகரமான வாழ்வுக்காக வழங்கப்படும் நடைமுறை அறிவுரைகளாகும்.

   உ-ம் - நீதிமொழிகள் 15:1-33, 23:1-23, 29-35,
   சாலமோனின் ஞானம் 13:1-15,
   சீராக் 10:6-16,23

- இஸ்ரயேலின் ஞானிகள் தங்களுடைய பாதங்களை கீழே ஊன்றக்கூடியவர்களாக இருந்தனர். இதிலிருந்து விளங்குவது மற்றவர்களின் எண்ணங்களை உணர்ந்து கொள்ளக்கூடியவர்கள் என்பதே. இவர்கள் இஸ்ரயேலின் ஆசிரியர்கள். ஆலோசகர்கள் அனுபவம் மிக்க பெரியவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் என்பதாகும். இவர்களின் சிந்தனைகள் மனிதர்களுடைய வாழ்வு செயற்பாடுகளைப் பற்றியதாக இருந்தது. அவர்கள் இவ்வாறு மனிதர்களை அறியக் காரணம் அவர்களின் அனுபவங்களே. இவர்களை தத்துவவியலாளர்கள் எனலாம். இறைவனைப் பற்றியும் மனிதனைப் பற்றியும் அறிவதில் இருந்த ஆர்வமே இத்தகைய அறிவைப் பெறக்காரணமாக இருந்தது.

- இவர்களுடைய மனித இயல்பு அவர்களுடைய நடத்தை மற்றும் இவர்களின் ஆன்மீகம் இவர்களை மானிடரிடையே நட்புக்கொண்டு வாழுபவர்களாக அடையாளப்படுத்தலாம். இவர்கள் இறைவார்த்தையைக் கற்றதோடு இறைவனுடைய வெளிப்பாட்டையும் தியானித்தனர்.

இவர்கள் இறைவனுடைய செயற்பாட்டைத் தியானித்தனர். வெளி உலகைப் போன்று மனிதனுடைய புதுமையான படைப்பு, மனிதனுடைய நடத்தையை பின்பற்றிய அவர்கள் முன்பு இருந்த ஆசிரியர்களின் படிப்பினையை கற்றார்கள். நேர்மையான ஒழுக்கவியலான வாழ்வு இல்லாவிட்டாலும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள இயலுமாக இருந்தது. ஆயினும் இஸ்ரயேல் ஞானம் இத்தகையதாக இருக்கவில்லை.

- இஸ்ரயேல் ஞானம் என்பது இறைவனை அறிந்து கொள்ளுதல் மற்றும் அவரை அதிகமாக அன்பு செய்தலாகும். இறைவனுக்குப் பயப்படுதலாகும். எனவே ஞானம் புனிதமானது, ஆன்மீகமானது, செயற்பாட்டுரீதியானது.

ஞானம் முன்வைத்துள்ள இலக்கிய நடைகள்

1. பழமொழிகள் - Proverbs
2. அறிவுரைகள் - Exhortation
3. கூற்று - Sayings
4. உவமைகள் - Parables
5. உருவகங்கள்
6. கதைகள் - Stories
7. பாடல்கள் - Songs
8. உருவக அணிகள்
9. உரையாடல் (Dialogue)

**ஞான இலக்கியத்தின் நோக்கமும் அதன் ஆன்மீகமும்**

- ஞான இலக்கியத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது மனித வாழ்வை வெற்றிகரமாகவும் நேர்மையாகவும் வாழ மக்களுக்கு வழிகாட்டுவதாகும். சமூகத்தை முகாமைத்துவப்படுத்தவும் மனித வாழ்வின் பொருள் மற்றும் வரையறைகளை விளக்குவதுமாகும். இறைவனுக்குகந்த அர்த்தமிக்க வாழ்வு வாழ ஞானம் உந்து சக்தியாக இருப்பது சந்தேகமற்றதாகும். இதனால் எபிரேய ஞானம், வெறுமனே அறிவு பயிற்சியோ அல்லது கூட்டுப்பயிற்சியோ அல்ல. மாறாக வெற்றிகரமான நடைமுறை வாழ்வு வாழ உருவாக்கப்பட்டது.

## திருப்பாடல்கள்

**அறிமுகம்**

- திருப்பாடல்கள் என்பது வேண்டுதல் செய்யும் 150 பாடல்கள் கொண்ட ஒரு நூலாகும். இங்கு ஒவ்வொரு பாடல்கள் நரம்பு வாத்திய கருவிகளோடு பாடப்பட்டவையாகும். இந்த பாடல்கள் பெரும்பாலும் இறைவனின் நன்மைத்தனத்தினால் நிறைந்து வழிகின்ற மகிழ்ச்சியாலும் புகழ்ச்சியாலும் பாடப்பட்டவையாகும். இன்னும் சில பாடல்கள் துன்பங்களும் புலம்பங்களும் அல்லது பாவ அறிக்கையும் மன்னிப்பும் வேண்டிப் பாடப்பட்டவையாகும். சில கவிதைகள் நோய், துன்பம், வாழ்வின் கசப்பான அனுபவங்களை இலக்காகக் கொண்டு பாடப்பட்டவையாகும். எனினும் இவை அனைத்திலும் நாம் கணக் கூடியது யாதெனில் திருவிவிலியத்தின் ஏனைய நூல்களை விட யாவே இறைவன் மட்டில் இஸ்ரயேல் மக்களின் மனப்பாங்குகளின் விசாலமான தன்மையும் ஆழமான தன்மையுமாகும்.

- எபிரேய மொழியில் இத் திருப்பாடல் நூல் ''தெகிலீம்'' (Tehillim) என அழைக்கப்படுகின்றது. அதாவது புகழ்ச்சி என்பதாகும். இதன் வழியாக ஏனைய சொற்களைவிட திருப்பாடல்களின் உள்ளார்ந்த அர்த்தம் எடுத்துக் காட்டப்படுகின்றது. ''தெகிலீம்'' என்னும் பல்லுள்ள

சங்கீதக் கருவியொன்றைப் பயன்படுத்தி பாடப்படும் பாடலாகும். செப்துவாஜிந்த் பிரதியில் ‘சல்மொல்’ (psalmol) எனக் குறிப்பிடப்படுவதுடன் அதன் விளக்கமும் கூறப்படுகின்றது. திருப்பாடல்களை ஆங்கில மொழியில் சோல்ரர் (psalter) என குறிப்பிடப்படுகின்றது. இது கிரேக்க மொழியில் ‘சல்ரேரியோன்’ (psalterion) என குறிப்பிடப்படுகின்றது.

**பின்னணி**

- திருப்பாடல்களுக்குப் பின்னணியாக அமைந்துள்ளது இஸ்ரயேல் மக்களின் வழிபாடு (ஆராதனை) எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இது தனிப்பட்ட வேண்டுதல் நூலை விட மக்கள் வழிபாட்டின் மேன்மையான நூலுமாகும்.
- திருப்பாடல் தொடர்பாக ஆழமான ஆய்வொன்றை முதன்முதலாகச் செய்தவர் ஹேமன் குண்கள் என்னும் விவிலிய வல்லுநர் ஆவார். புராதன மக்கள் வழிபாட்டில் பாடல்கள் தோன்றின என்பது அவர் ஏற்றுக்கொண்ட கருத்தாகும். ஆத்தர் வைசர் அதனை உடன்படிக்கைத் திருவிழாவோடு கலந்திருப்பதாக உறுதிப்படுத்துகின்றார்.
- சிக்மன் மொவின்களின் படி கடவுளின் அரச முடிசூட்டு விழாவின் பின்னணியில் திருப்பாடல் தோன்றியதாக கூறப்பட்டுள்ளது.
- எவ்வாறாயினும் இவை சிறு பிரிவுகளின் தொகுப்பாக இருப்பதைக் காணலாம். அநேக திருப்பாடல்கள் ‘தாவீதின்’ (Davidic) திருப்பாடல்களாகவும், ‘ஆசாப்’ (Asaph) இன் திருப்பாடல்களாகவும் ‘கொரா (Korah) வின் திருப்பாடல்களாகவும் ஆரம்பத்திலேயே

  அறிமுகமாகியுள்ளது. இதன் வழியாக உணர்த்தப்படுவது யாதெனில் தாவீதினாலும், ஆசாப்பினாலும், கொராவினாலும் இவை எழுதப்படவில்லையென்பதும், அவர்களினால் இவை சேகரிக்கப்பட்டதென்பதுமாகும். அநேகமான திருப்பாடல்கள் தாவீதினதும், அரச திருப்பாடல்களாகவும் அவதானிக்கப்படுவதோடு, ஆசாப்பின் திருப்பாடல்கள் திருக்கோவிலின் பாடல் தொகுப்பின் வழியாக பெற்றவையெனக் கூறலாம். முன்னர் கூறியதைப் போன்று சிறிய பாடல்களின் பகுதிகளினால் அழைக்கப்பட்ட இந்த திருப்பாடல்கள் நூலானது சிறிய 5 நூல்களாகப் பிரிக்கக் கூடியதாயினும் இவை அநேகமாக ஐந்நூலின் வடிவமைப்பைக் கொண்டுள்ளன.

  1. முதலாவது நூல் 1-41 பாடல்கள்.
  2. இரண்டாது நூல் 42-72 பாடல்கள்
  3. மூன்றாவது நூல் 73- 89 பாடல்கள்
  4. நான்காவது நூல் 90-106 பாடல்கள்
  5. ஐந்தாவது நூல் 107 - 150
- இந்த ஒவ்வொரு நூலின் பிரிவின் இறுதியில் உள்ள சொல்லின் வழியாக வேண்டுதலின் சுய வடிவம் பிரதிபலிக்கப்படுகின்றது. எனவே எல்லா நூல்களும் இறை புகழ்ச்சியோடு நிறைவுபெறுகின்றன.
- தெகிலீம் பாடல்களுக்கு தொடரிலக்கத்தை இட்ட போது பழைய ஏற்பாட்டின் எபிரேய பிரதிக்கும் கிரேக்கப் பிரதிக்கும் இடையே ஒரு தெகிலீம் பாடல் வேறுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்குக் காரணம் எபிரேயப் பிரதியில் இலக்கம் ஒன்பதும் பத்தும் ஒரு பாடலாக எடுக்கப்பட்டுள்ளதுடன் கிரேக்கப் பிரதியில் ஒன்பது ஒரு பாடலாகவும் பத்து ஒரு பாடலாகவும் வெவ்வேறாக எடுக்கப்பட்டுள்ளதாகும்.

**திருப்பாடல்களின் ஆசிரியத்துவம்**

- மரபு ரீதியாக தாவீது அரசன் இதன் ஆசிரியர் எனக் கூறப்படினும் திருப்பாடலிலுள்ள பாடல்களில் காணக்கூடிய பொதுத்தன்மையும், அதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியின் பல்வேறுபட்ட தன்மையும் பிற்கால சம்பவங்கள் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள யாவும் ஆசிரியத்துவம் தொடர்பாக முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

- தாவீது அரசனின் பெயரில் வேறுபடுத்தப்பட்டுள்ள திருப்பாடல்களில் பிற்காலத்திலான மொழியின் தன்மைகள் காணக்கூடியதாக இருப்பினும், பிற்காலத்து சம்பவங்கள் குறிப்பால் உணர்த்துவதைக் காணக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக 51வது திருப்பாடலின் 18, 19ஆம் வசனங்களின் வழியாக எருசலேமின் அழிவுக்குப் பிற்காலத்து நிகழ்வை குறிப்பால் உணர்த்துகின்றது. இந்த திருப்பாடலில் காணப்படுகின்ற எபிரேய மொழிநடை, நாடுகடத்தப்பட்ட காலத்தைச் சேர்ந்ததொன்று என அனேகமான அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- அதேபோன்று திருப்பாடல்களில் சில பாடல்கள் மிகவும் பழைமையானவை. (திருப்பாடல் 110) சில திருப்பாடல்கள் தாவீதின் காலத்திலே தயாரிக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளலாம். திருப்பாடல்களின் தொடக்கம் தாவீதின் காலத்திலே என சிலர் பொதுவாக கூறுவர். எனினும் திருப்பாடல்களோடு தொடர்புடைய மேற்கூறப்பட்ட பாடல் விடயங்களை நோக்கும் போது அதன் ஆசிரியத்துவம் பற்றிய வினா எழுகின்றது. இருப்பினும் பலரின் கருத்தின்படி தாவீதுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது தெரிகின்றது.
- இந்நூலின் உள்ளடக்கப்பட்டுள்ள சங்கீதங்களின் அழகைப் பாராட்டுவதற்கு அவ் ஒவ்வொரு பாடலினதும் சங்கீத மொழியையும், அதன் வழியாக உணர்த்தப்படுகின்ற பிரதி உருவத்தையம் அங்குள்ள தனித்துவத்தையும் நாம் பார்த்து திருப்பாடல்களை நாம் வாசிக்க வேண்டும்.

**திருப்பாடல்களை வகைப்படுத்தல்**

தெகிலீப் பாடல்களை வகைப்படுத்தும் போது பல்வேறு கருத்துக்கள் நிலவின.

1. புகழ்ச்சிப் பாடல் - இறைவனால் பெற்றுக்கொடுக்கப்பட்ட படைப்புத் திட்டத்துக்கும், மீட்புத் திட்டத்துக்கும் இறைவனுடைய பண்புகளுக்கும் நன்றி கூறுவதற்காக இவை பாடப்பட்டன. உ-ம்: (8,19,29,93,145-150)
2. புலம்பல் பாடல் - தமக்கு இடையூறான சந்தர்ப்பங்களிலும் துன்ப துயரங்களின் போதும் இறைவனை நோக்கிய விண்ணப்பங்களாக இவை பாடப்பட்டன.

   உ-ம் 1. தனிப்பட்ட புலம்பல் பாடல் (3, 51, 109)

   2. கூட்டு அல்லது தேசிய விண்ணப்பம் (44, 129, 137)
3. நன்றிப்பாடல் - இறைவனால் வழங்கப்பட்ட அனைத்துக் கொடைகளுக்கும் நன்றி கூறுவதற்கும் செய்நன்றி கூறுவதற்கும் இவை பாடப்பட்டன

   உ-ம் (18,30,34,67,107,116)
4. ஞான பாடல் - நீதியோடும், நியாயத்தோடும் வாழ்வதற்காக இறைவனில் நம்பிக்கை வைத்து இப்பாடல்கள் பாடப்பட்டன

   உ-ம் (1, 37, 49, 73, 112, 133)
5. அரச பாடல்கள் - அரச திருமண வைபவங்களின் போதும் அரசர்களுக்கு முடி சூட்டும் போதும் இவை பாடப்பட்டன

   உ-ம் (2, 18, 45, 72, 110)
6. சீயோன் பாடல் அல்லது திருப்பயணப் பாடல் - எருசலேமின் மகிமையை புகழ்வதற்கும், விசேடமாகத் திருப்பயணங்களின் போது இப்பாடல்கள் பாடப்பட்டன.

   உ-ம் (46, 48, 84, 87, 122)
7. நம்பிக்கையின் பாடல் - இறைவனில் நம்பிக்கையும் அடைக்கலமும் வைத்துப் பாடப்பட்டன.

   உ-ம் (11, 23, 27, 62, 63,91)

**திருவழிபாட்டில் திருப்பாடல்களின் பயன்பாடு**

- திருப்பாடல்கள் செபத்தின் புதையலாகும். இஸ்ரயேல் மக்கள் இறைவனின் விசேட செயற்பாடுகளை வெளிப்படுத்துதல் வரலாற்றில் வல்லமையுள்ள நடுவராக இருத்தல், இறைவனின் விசேட தன்மைகளை தமது வாழ்வில் அனுபவித்தல் என்பவற்றின் பிரதிபலனாக கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிய பாடல்களாகும்.

- மனிதனின் பலவீனத்தினால் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளிலும் மரண வேளையிலும் கடவுளை நோக்கிக் கூக்குரலிடுதல், இவை தொடர்பாக வல்லமையுள்ள பிரசன்னத்திற்காக நன்றிகூறுதல் போன்ற பல்வேறு மனித அனுபவங்கள் இப்பாடல்கள் மூலம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் இறைவனை அவர்கள் கண்டுணர்ந்ததற்கு சிறந்த சான்றாகும். வாழ்வின் எல்லா சம்பவங்களிலும் பிணைக்கப்பட்ட அனுபவங்கள் இறைவன்பால் இப்பாடல்கள் மூலம் முன்வைக்கப்படுகின்றன.
- திருப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள இப்பாடல்கள் கிறிஸ்துவின் வாழ்வில் விசேட சந்தர்ப்பங்களிலும், அவரது போதனைகளின் போதும் பயன்படுத்தப்பட்டன.

  உ-ம்: மலைப் பொழிவின்போது - திருப்பாடல் 6:8,24:3-4, 37:11, 48:2

  சிலுவை மரத்தில் திருப்பாடல் 22:1
- தற்கால திருவழிபாட்டில் திருப்பாடல் முக்கிய இடம் பெறுகின்றது. இன்றும் கூட எமது வாழ்வில் செபங்களில் இப்பாடல் எவ்வளவு நெருக்கத்தையும் கொண்டுள்ளது என்பதை நாம் அறிவோம். எமது வாழ்வில் மகிழ்ச்சி வெற்றிக்காக நாம் இறைவனைப் புகழ்வதோடு துன்ப துயரங்களில் இறைவனிடம் மன்றாடுகின்றோம். அவருடைய உதவியை நாடுகின்றோம். பாவத்தில் விழுகின்றபோது மனம் வருந்துகின்றோம். இறைவனைத் தேடி மீண்டும் திரும்புகின்றோம். மன்னிப்புக் கேட்கின்றோம். இவ்வனைத்து அனுபவங்களும் செபத்தோடு சேர்க்கப்படுவது திருப்பாடல்களூடாகவே ஆகும்.
- திருவழிபாட்டின் உன்னத பகுதியாகிய திருப்பலியில் இறைவார்த்தைக்குப் பதிலுரையாக பயன்படுத்தப்படுவது திருப்பாடலில் உள்ள பல பகுதிகளாகும். எனவே அன்றுபோல் இன்றும் சாதாரண மனித வாழ்வோடு தொடர்புடைய இறைவன் பால் மக்களை உயர்த்த உதவும் புத்தகமாகும். மேலும் திருப்புகழ்மாலையில் கட்டாயமான பகுதியாக இருப்பது திருப்பாடலில் உள்ள பாடல்களைப் பயன்படுத்தி இறைவனிடம் மன்றாடுவதாகும்.

**தேர்ச்சி** 4.0 : கிறிஸ்துவே உலகிற்கு விடுதலை அளிப்பவர் என்பதை ஏற்று, அவருக்குச் சான்று பகர்வார்.

**தேர்ச்சி மட்டம்** 4:1 **:** புதிய ஏற்பாட்டுப் பின்னணியூடாக நற்செய்தி நூல்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.

**பாடவேளை : 20**

**கற்றல் பேறுகள் :**

- புதிய ஏற்பாட்டின் அரசியல், சமூக மற்றும் சமய பின்னணி தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்பதை ஏற்றுக்கொள்வர்
- புதிய ஏற்பாட்டின் அரசியல், சமூக மற்றும் சமூக பின்னணி தொடர்பான தகவல்களைக் ஆக்கமாக முன் வைப்பார்.
- புதிய ஏற்பாட்டின் அரசியல், சமூக மற்றும் சமய பின்னணியூடாக புதிய ஏற்பாட்டிற்கு வரைவிலக்கணம் கொடுப்பார்.
- தமது பதவியை பிறர் நலனுக்காக பயன்படுத்துவார்.

**புதிய ஏற்பாட்டுப் பின்னணி**

- மத்திய தரைக்கடல் பிரதேசம் முழுவதையும் அதற்கு மேலாகவும் ஆட்சி செய்த கிரேக்கப் பேரரசு வீழ்ச்சியுற்றதும் உரோமைப் பேரரசு எழுச்சியுற்றது. உரோமைய பேரரசின் நிர்வாக இராணுவம் பாலஸ்தீன நாட்டையும் தமக்குக் கீழ்க் கொண்டு வந்தமையால் பாலஸ்தீன மக்களின் வாழ்க்கையும் உரோமைய ஆட்சிக்கு ஏற்பவே அமைந்திருந்தது.
- கி.மு 63 இல் பாலஸ்தீன நாட்டிற்குள்ளும் அரசியல் பொருளாதார மற்றும் சமூகத்திலும் பல்வேறு தாக்கங்களுக்கு உள்ளாக வேண்டியேற்பட்ட போதிலும் யூத மக்களுக்கு உரோமையரின் கீழ் சமய சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.
- இவ்வாறான பின்னணியிலே பிறந்த இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பாலஸ்தீன மக்களின் வாழ்க்கையிலே அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகள் பற்றி ஆராய்ந்து பார்த்தல் முக்கியமானதாகும்.

## புதிய ஏற்பாட்டின் அரசியல் பின்னணி

**ஆட்சி அதிகாரம்**

- கிறிஸ்துவின் காலத்திலே பாலஸ்தினாவின் ஆட்சியதிகாரம் உரோமையரது உரிமையாயிருந்தது. அடிமையான நாடுகளின் ஆட்சி மற்றும் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் உரோமைய பேரரசனினால் நியமிக்கப்பட்ட ஆளுநருக்கே உரித்தாயிருந்தது.

- யூதேயா, சமாரியா மற்றும் இதுமேயாவைச் சேர்ந்த அரசுகள், ஆளுநர்களின் கீழ் ஒரே பிரதேசமாக நியமிக்கப்பட்டதோடு அதன் ஆட்சியாளராக திபேரியஸ் பேரரசனால் பொந்தியு பிலாத்து 5 வது ஆளுநராக நியமிக்கப்பட்டார். அதற்கமைய பாலஸ்தீன பிரதேசத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக பொந்தியுபிலாத்து செயற்பட்டதோடு கலிலேயா மற்றும் பெரேயா பிரதேசங்களுக்குப் பொறுப்பாக கலிலேயாவின் ஆளுநராக ஏரோது அந்திபஸ் செயலாற்றினார்.

- உரோமைய ஆட்சி அதிகாரத்தின் கீழ் யூதர்கள் இருந்த போதிலும் அவர்கள் தமது சமய சுதந்திரத்தை அனுபவிக்கவும் யூதர்களிகளின் சமய வழிபாடுகள் மற்றும் சமய சட்டங்களைப் பின்பற்றுவதற்கும் செயற்படுவதற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.

- சமய வழிபாட்டு மையமாக எருசலேம் ஆலயம் இருந்ததோடு சமயத் தலைவர்களாக தலைமைக்குருக்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

- சமயச் சட்டக் கோவைக்கேற்ப சமயப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு யூதரின் தலைமைச் சங்கம் அல்லது செனத்திரின் சபை இயங்கியது. குற்றவாளிகளை சிலுவையில் அறைதல் மிகப் பெரிய தண்டனையாக இருந்தது. உரோமைய ஆளுநருக்கே இத் தண்டனை வழங்கும் அதிகாரம் இருந்தது. ஆனாலும் ஓர் உரோமையருக்கு சிலுவை மரணம் விதிக்கப்படமாட்டாது.

- மேலும் அக்காலத்தில் அரசியல் குழுவாகச் செயற்பட்ட ஏரோதியர் உரோமைய பேரரசின் அதிகாரத்தில் அதிக இலாபம் பெறுவதற்காக உரோமை ஆட்சியாளருக்குப் பக்கச்சார்பாக யூத சமூகத்தில் செயலாற்றினர். யூத அரசியல் கட்சியொன்றின் அங்கத்தவர்களாக இருந்த இவர்கள் ஏரோதுவின் பரம்பரையில் வந்தவர் ஒருவரே தமது ஆளுநராக இருக்க வேண்டுமென விரும்பினர். இவர்கள் இயேசுவுக்கு எதிராக ஒரு குழுவாக இருந்தனர். (மாற்கு 3:6, லூக்கா 13: 31-32)

**பொருளாதாரம்**

- பாலஸ்தீனாவில் வாழ்ந்தவர்களின் பொருளாதாரத்தில் தாக்கத்தையும் வாழ்வாதரங்களிடையில் வியாபாரம், விவசாயம், மீன்பிடி மற்றும் மந்தை மேய்த்தல் என்பன தொழில்களாயிருந்தன. அதே போன்று நிலச் சொந்தக்காரர்களாக செல்வந்தரும், விவசாயிகள், மந்தை மேய்ப்போர், தொழிலாளிகள் ஆகிய ஏழைகளும் இருந்தனர்.

- மீனவர்கள் கலிலேயாக் கடலோரப் பகுதிகளில் மீன்பிடித்தனர். பொருளாதாரத்தை சக்தி பெறச் செய்வதற்காக மீனவத்தொழில் மிக உதவியாக இருந்த போதிலும் மீனவர்கள் சமூகத்திலே ஏற்றுக்கொள்ள முடியாத பிரிவினரைச் சார்ந்தவர்களாயிருந்தனர். (மாற்கு 1:16)

- அவ்வாறே மந்தை மேய்ப்புத் தொழிலிலும் பெரும்பாலானோர் ஈடுபட்டனர். ஏழைகளாகக் கருதப்பட்ட இவர்கள் சமூகத்திலே அவ்வளவாக ஏற்றுக் கொள்ள முடியாதவொரு பிரிவினராயிருந்தனர். இவர்கள் இறைவனை வழிபடுவதற்கு பிரபல்யமான இடங்களுக்குச் செல்வதை தவிர்த்ததோடு மலையுச்சிகளிலும், சமதளங்களிலும் வழிபாடு செய்யும் ஒரு பிரிவினராயிருந்தனர். விலங்குகளைப் பாதுகாப்பதிலும் அவற்றைப் போஷிப்பதிலும் விலங்குகளின் மீது இரக்கப்பண்பினையும் கொண்ட இவர்கள் காட்டு விலங்குகளிலிருந்து தமது விலங்குகளைக் காப்பாற்றுவதில் அதிக வலிமையுடையவர்களாகவும் முயற்சியுடைய ஒரு பிரிவினராகவும் காணப்பட்டனர். இயேசுவின் பிறப்பைப் பற்றிய முதலாவது நற்செய்தி இடையர்களுக்குக் கிடைத்தமை அவர்கள் பெற்ற ஒரு வரப்பிரசாதமாகக் கவனத்திற் கொள்ளலாம். (லூக்கா 2:8-20)

- யூத மக்கள் தமது உற்பத்திகளை விற்றெடுத்த வருமானத்தில் உரோமையப் பேரரசுக்கு வரி செலுத்த வேண்டி ஏற்பட்டமையால் பொருளாதாரம் வீழ்ச்சியடையக் காரணமாயிருந்தது.

- மேலும் மக்கள் மீது மட்டும் மேலதிக வரி அறவிடப்பட்டமையினால் அளவுக்கதிக வரிச் சுமையால் மக்கள் கடுமையான சுரண்டுதலுக்குள்ளாயினர்.

- பாலஸ்தீன வாழ் மக்கள் அனைவரும் அதிக வரிச் சுமையினால் துன்பத்திற்குள்ளாயினர். யூத மக்கள் இரு வகையான வரிகளைச் செலுத்த வேண்டியவர்களாயினர்.

1. உரோமையப் பேரரசனுக்குச் செலுத்த வேண்டிய வரி

உரோமையப் பேரரசுக்கு வரி அறவிட்டுக் கொடுப்பதற்காக வரி தண்டுபவர்கள் அல்லது ஆயக்காரர்கள் (சுங்கச் சாவடி) நியமிக்கப்பட்டனர். உரோமையப் பேரரசன் வரி தண்டுபவர்களை நியமித்ததோடு ஒவ்வொரு வரி தண்டுபவருக்கும் உதவியாளர்களும் இருந்தனர். வரி தண்டுபவர்கள் உரோமைய பேரரசுக்குப் பக்கச் சார்பாக நடந்து கொண்டனர். (மாற்கு 2:13-17, லூக்கா 19:1-10)

2. கோவிலுக்கான வரி

கோவிலில் நிதி நிலைமையை அதிகரிக்கச் செய்வதற்கான முக்கிய வருமானமாக ஷெக்கேல் அரைவாசி கோவிலுக்கான வரியாக இருந்தது. ஒரு தொழிலாளியின் இரு நாட்கூலிக்குச் சமமான திராக்மா நாணயம் இரண்டு, கோவில் வரியாகச் செலுத்தப்பட்டது. கோவில் வரி யூதேய நாணயங்களில் செலுத்த வேண்டியிருந்தது. ('ஷெக்கேல்' மற்றும் 'தாலந்து' பாரத்திற்கேற்ப பயன்படுத்தப்பட்டது). உரோமைய நாணயத்தில் சீசரின் உருவம் பாதிக்கப்பட்டிருந்தமையால் யூதமக்கள் இந்த நாணயத்தைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டது. எனவே கோவிலுக்கருகில் நாணயம் மாற்றுவோர் காணப்பட்டனர்.

- அன்றாட வாழ்வில் அவர்கள் உரோமைய தினாரி மற்றும் கிரேக்க திராக்மா எனும் நாணயங்களைப் பயன்படுத்தினர். (மத்தேயு 18:23-32, லூக்கா 15:8-9)

## புதிய ஏற்பாட்டின் சமூகப் பின்னணி

- பாலஸ்தீன மக்கள் மத்தியில் பல்வேறு அந்தஸ்துகளின் அடிப்படையிலான சமூக அமைப்புகள் இருந்தன. சமூகத்துள் ஏற்றுக் கொள்ளப்பட்ட குழுவாக செல்வந்தர், குருமார், பரிசேயர், சதுசேயர் அதே போன்று மறைநூல் அறிஞர்களும் இருந்தனர். மேலும் ஏழைகள், வரி தண்டுபவர்கள் அல்லது சுங்க ஆயக்காரர்கள், பெண்கள், அடிமைகள், இடையர்கள், தொழிலாளர் ஆகியோர் சமூகத்தாலும் அதே போன்று சமயத் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமைக்குள்ளானமை கவலைக்குரிய விடயமாகும். சமூகத்தில் ஒதுக்கப்பட்டோர் மத்தியில் பெண்கள், அடிமைகள், நோயாளர், வரிதண்டுபவர், பாவிகள் மற்றும் சமாரியர் இருந்தனர்.

### பெண்கள்

- ஆணாதிக்கம் நிலவிய யூத சமூகத்தில் பெண்களுக்கு உரிய சமூக உரிமைகளும் இல்லாதிருந்தது.

- இவர்கள் ஆணாதிக்கத்திற்கு அடிமையாகியதோடு கல்வி மற்றும் தொழிற்துறைகளுக்கும் உரிமையற்வர்களாயிருந்தனர்.

- சமய விடயங்களிலும் புறக்கணிக்கபட்டவராயிருந்தனர். மேலும் இவர்களுக்கு ஆண்களைப் போன்ற சம உரிமை இருக்கவில்லை.

- ஏதாவதொரு விதத்தில் பெண்கள் விதவைகளான போது மிகவும் கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனால் ஆரம்ப கிறிஸ்தவ சபைக்குள் விதவைகளைக் கவனிப்பதற்கான முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது (திருத்தூதர்பணி 6:1-6).

- இயேசு இவர்களை ஏற்றுக் கொண்டு இறையாட்சிக்குள் உரிய இடம் பற்றிப் பகிரங்கமாக வெளிப்படுத்தினார், செயற்பட்டார் (லூக்கா 8:1-3). பெத்தானியாவில் மார்த்தா மற்றும் மரியாவின் வீட்டில் மார்த்தாவை நோக்கி ''மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்'' எனக் கூறி அவள் இறை வார்த்தைக்குச் செவிமடுப்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவாகக் கூறினார் (லூக்கா 10: 38-42).

**அடிமைகள்**

- அக்காலத்தில் அடிமை வியாபாரம் நிலவியது. யூத செல்வந்த வகுப்பினருக்கு பணியாற்றிய அடிமைகள் ஆட்சியாளரின் அடிமை வேலைகளை நிறைவேற்றவும் வேண்டியதாயிற்று. விசேடமாக வீட்டுக்கு வருபவர்களின் காலடிகளைக் கழுவுதல் அடிமைகளுக்கான வேலையாகும்.

- எனினும் இயேசு இச்செயற்பாட்டை பின்பற்றியதோடு ஒவ்வொருவருக்கிடையே தாழ்மையை மேலெழச் செய்து தலைவர் பணியாளரைப் போன்றிருக்க வேண்டும் எனக் கற்பிப்பதற்காக தனது சீடர்களின் காலடிகளைக் கழுவி முன்மாதிரிகையொன்றைப் பெற்றுக் கொடுத்தார் (யோவான் 13:1-20).

**நோயாளர்**

- யாராவது ஒருவரோ அல்லது அவருடைய பரம்பரையில் ஒருவரோ தான் செய்யும் பாவத்ததைக் காரணமாகக் கொண்டு அதற்கான தண்டனையாக நோயாளிகளாக்கப்படுவது யூதர்களின் கருத்தாயிருந்தது. நோயாளிகள் சமூகத்திலே சாபத்துக்குள்ளானவர்கள் என ஒதுக்கப்பட்டோராக இருந்தனர்.

- நோயாளிகளுக்கிடையே தொழுநோயாளிகள், குஷ்டரோகிகள் என வேறுபடுத்தப்பட்மையினால் அவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் அதே போன்று ஆன்மீக ரீதியாகவும் துன்பத்துக்குள்ளாயினர் (மாற்கு 1:40-45). இவ்வாறான நோயாளிகளைத் தொட்டால் தாமும் அசுத்தமடைவதாக அவர்கள் உணர்ந்தனர். எனவே அவர்கள் நடமாடும் இடத்திலிருந்தும், அவர்கள் பயன்படுத்தும் அனைத்தையுமே அதிக கவனத்துடன் கையாண்டனர். அவர்கள் பயணம் செய்யும்போது மணியொன்றினால் ஒலி எழுப்புதலின் வழியாக மக்கள் அறிவுறுத்தப்படல் இடம் பெற்றது.

- எனினும் இயேசு அந்நோயாளிகளைத் தொட்டு குணம் பெறச் செய்து மீண்டும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளச் செய்தார். உதாரணமாக தொழுநோயாளர் பத்துப்பேரை குருக்கள் முன்னிலையில் காட்டுதல் தொடர்பான நிகழ்வினை எடுத்துக் கொள்ளலாம் (லூக்கா 17:11-19). இயேசு ஓய்வு நாளில் நோயளரை நலம் பெறச் செய்தல், தொட்டுக் குணம்பெறச் செய்தல் போன்றனவற்றினால் பரிசேயர், மறைநூல் அறிஞர் மற்றும் சதுசேயர் ஆகியோரின் எதிர்ப்புக்கு உள்ளாகினார். (லூக்கா 5:12-14, 6:6-11)

**வரி தண்டுபவர்**

- உரோமையப் பேரரசனுக்கு வரி தண்டுகையில் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட அநீதியான முடிவுகளினால் யூத மக்கள் வரி தண்டுபவர்களை ஏற்றுக்கொள்ளாமலும் நிந்தனைக்-குரியவர்களாகவும் கருதினர். இவர்களை இனத்துரோகிகள் எனவும் கருதினர். ஏனெனில்
    1. தம்மைத் துன்பத்துக்குள்ளாக்கிய உரோமையப் பேரரசுக்கு வரி சேகரித்தல்.
    2. குறிப்பிட்ட தொகைக்கு மேல் வரி சேகரித்தல் (காரணத்தினாலுமேயாகும்.)

- எனினும் அவ்வாறான நிலைமைகளின் போதும் இயேசு அவர்களை ஏற்றுக்கொண்டு செயற்படுவதன் மூலம் அவர் அவர்களை சரியான பண்புள்ள வழிக்குக் கொண்டுவருவதையே விரும்பியுள்ளார். இறையாட்சியின் பங்குதாரர்களாக்குவதற்காகும், சக்கேயு எனும் வரி தண்டுபவரின் வீட்டில் உணவு உண்ணல் (லூக்கா 19:1-10) மத்தேயு அல்லது லேவி எனும் வரி தண்டுபவரை தனது சீடர் குழுவினரோடு சேர்ப்பதனால் அவர்களை நேர்வழிக்குக் கொண்டுவருவதற்காகச் செயற்பட்டார்.

**பாவிகள்**

- யூத சமூகத்திலே பல்வேறு காரணிகளால் கீழ்க் காணப்படுகின்ற குழுவினர் பாவிகள் என அழைக்கப்பட்டனர். நோயாளர், வரி தண்டுபவர் பாவத்துக்குரிய தொழிலாகக் கருதப்பட்ட வேலைகளில் ஈடுபட்ட விபசாரிகள், கள்வர்கள், இடையர்கள், உயர் வட்டி வாங்குவோரைப் போன்றே தமது செல்வத்தில் பத்திலொரு பங்கு செலுத்தாத ஏழைகள் ஆகியோர் பாவிகள் என பகிரங்கமாக முத்திரை குத்தப்பட்டடோராவர்.

- இவர்களின் குறைபாடுகள், பலவீனங்கள் ஆகியவற்றுக்கு யூத சட்டத்தின் முன் இவர்களுக்கு மன்னிப்பு இருக்கவில்லை. விசேடமாக விபசாரிகளை கல்லால் எறிந்து கொல்லுதல் மோசேயின் சட்டத்தின் படி ஓர் எழுத்தும் தவறாமல் நிறை வேற்றுவதற்கு இவர்கள் தூண்டப்பட்டனர் (இணைச்சட்டம் 22:23).

- எனினும் இயேசு சட்டத்தை விட மனிதத்தன்மையைப் பாராட்டுவதோடு பாவிப் பெண்ணை கல்லால் எறிந்து கொல்லும் நிகழ்வின் போது ஒரு பாவமும் செய்யாதவர் முதற்கல்லை எடுத்து எறியும்படி சவால் விடுத்தார்.

- இயேசு ‘பாவத்தை’ வெறுத்துப் பாவிகளை ஏற்றுக் கொள்வது அவர்களை நேர் வழியில் இட்டுச் செல்வதற்காகவேயாகும். பாவிகள் என சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களை இறைவார்த்தையின் படி ஒழுகுவதற்கும், மனம் வருந்தும்படியும் அழைப்பதன் மூலம் மீண்டும் அவர்களைச் சமூகத்தில் ஏற்றுக் கொண்டார். உதாரணமாக சமாரியப் பெண் (யோவான் 4) பாவிப்பெண் (லூக்கா 7:36-50) ஆகியோர் பற்றிய நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

**சமாரியர்**

- கி.மு 722 அசீரியாவின் ஆக்கிரமிப்புக்குப் பின் அவர்களோடு கலந்த யூத இனத்தவரிலிருந்து தோன்றியவர்களெனக் கருதப்படுபவர்களாவர். இவர்கள் பிற இனத்தவரோடு கலந்தமையால் தூய்மையற்ற ஒரு பிரிவினராகக் கருதி அவர்களோடு எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களிலும் யூதர்கள் இணைந்து கொள்ளவில்லை (2 அரசர்கள் 17). சமாரியர்கள் பிரிந்து வாழ்ந்த ஒரு பிரிவினராயினர். இவர்கள் வாழ்ந்த சமாரியா ஊரின் ஊடாக பயணம் செய்வதையும் யூதர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

- இயேசுவின் காலம் வந்தபோது சமாரியர்களுக்கும் மற்றும் யூதர்களுக்கும் இடையில் விரிசல் மிகவும் வலிமையடைந்தது. இந்த முரண்பாடுகளை நீக்குவது இயேசுவின் இலட்சியமானது.

- இயேசு நல்ல சமாரியர் எனும் உவமைகள் வழியாக யூதர் வெறுத்தொதுக்கிய சமாரியரை பாராட்டினார். மேலும் சிக்கார் எனும் ஊரில் யாக்கோபின் கிணற்றடியில் சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கும் நிகழ்வினால் இயேசு அவர்களை ஏற்றுக் கொண்டு செயற்பட்ட விதம் மிகத் தெளிவாக உள்ளது (யோவான் 4:1-42).

## புதிய ஏற்பாட்டின் சமயப் பின்னணி

- ஒரே கடவுள் கொள்கையை முன்னிலைப்படுத்திக் கொண்டு தங்களது வழிபாடுகளில் ஈடுபட்ட யூத மக்களின் மிகமுக்கிய வழிபாட்டுத் தலமாக எருசலேம் கோவில் இருந்தது.

- வருடாந்த பாஸ்கா விழாவைக் கொண்டாடும்போது எருசலேம் ஆலயத்திற்கு செல்லுதல் முக்கியமானதாகும். பொது வழிபாட்டுப் பாரம்பரியங்கள் நிறைவேற்றுவது முக்கியமான செயல்களாகக் கருதப்பட்டன.

**தொழுகைக் கூடங்கள் (சினகொக்)**

- 'சினகொக்' எனும் சொல் கிரேக்க மொழியிலிருநது வந்தசொல்லாகும். 'மக்களை ஒன்று சேர்த்தல்' 'ஒன்றுகூடல்' எனும் பொருள்படுகின்றது.

- யூத மக்கள் பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டு சென்ற காலத்தில் சமய வழிபாடுகளுக்கு ஆலயத்திற்குச் செல்ல முடியாதிருந்தனர். இவ்வாறே பாபிலோனி படையினரால் கோவில் அழிவுக்கு உட்பட்டிருந்தமையால் அவர்கள் வெகுதூரம் சென்றாலும் அங்கு சென்று வழிபடுவதற்கு கோவில் இருக்கவில்லை (திருப்பாடல் 137:3-4). அக்காலத்திலே தான் சினகொக் ஆரம்பிக்கப்பட்டது.

- இவ்வாறாக தொழுகைக் கூடம் அல்லது சினகொக் ஆரம்பிக்கப்பட்ட போதும் இங்கு வழிபாடுகள் நிறைவேற்றப்படவில்லை. கற்பித்தல், செபித்தல் மற்றும் தியானித்தல் என்பன இங்கு நடைபெற்றன. தொழுகைக் கூடங்கள் வழியாக யூதருடைய நம்பிக்கையை நிலைநாட்டுவதற்கு பாரிய பணியாற்றப்பட்டது.

- இயேசுவும் நசரேத், கலிலேயா, கப்பர்நகூம் தொழுகைக் கூடங்களில் கற்பித்தமையும் மற்றும் குணமளித்தமையும் மத்தேயு 4:23, 13:54 மற்றும் லூக்கா 7:5 இலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சமயச்சட்டங்கள்**

- யூத மக்களின் அன்றாட வாழ்வில் சமயச்சட்டங்களைக் கடைப்பிடித்தல் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

- இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களான தாம் செய்ய வேண்டியவை மற்றும் செய்யத்தகாதவை அனைத்தையும் பற்றிய அடிப்படையான விடயங்கள் சட்ட முறைமைக்குள்ளடக்கப்பட்டன.

- சட்டத்தைக் கடைப்பிடித்தல், அவற்றுக்குக் கீழ்ப்படிதல் வழியாக இறைவன் விரும்புகின்ற தூய்மையான வாழ்க்கையை நடாத்த முடியுமென்பது இவர்களது நம்பிக்கையாகும்.

- அவ்வாறே ஓய்வு நாள் (சபத்) அனுசரிப்பிலும் அதிக கவனம் செலுத்தினர். ஓய்வு நாளில் இவ்வுலகைச் சார்ந்த விடயங்களைத் தவிர்த்ததோடு ஆன்மீக வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கு மட்டும் இவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஓய்வு நாளில் நற்காரியங்களை நிறைவேற்றுவதை விட சட்டத்துக்கே முதலிடம் கொடுத்தனர்.

- எனினும் இயேசு சட்டத்தை விட மனிதத் தன்மையை மதித்து ''ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது: மனிதர் ஓய்வு ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை'', என மொழிந்து ஓய்வு நாளின் முக்கியத்துவத்தை சிறந்த முறையில் விளக்குவதற்கேயாகும் (மாற்கு 2:27-28).

**தலைமைச் சங்கம் (செனத்திரின்)**

- யூத சட்டங்கள் 'செனத்திரின் சபை' அல்லது தலைமைச் சங்கத்திலேயே செயற்படுத்தப்பட்டன.

- இச்சங்கத்தில் தலைமைக்குரு உட்பட (71) எழுபத்தொரு அங்கத்தவர்கள் இந்தனர். இச் சங்கத்தில் தலைமைக்குருக்கள், மூப்பர்கள், பரிசேயர், சதுசேயர் மற்றும் கோவில் காவல் தலைவர்கள் 24 பேரும் அங்கத்தவர்களாயிருந்தனர்.

- தலைமைச்சங்கம் எருசலேம் கோவிலில் நடைபெற்றது. யூத சட்டங்களுக்கு ஏற்ப பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் தீர்ப்ப வழங்குதல் என்பன இங்கு இடம்பெற்றன. மரண தண்டனைத்தீர்ப்பு வழங்குதல் தொடர்பாக இச்சங்கத்திற்கு இருந்த அதிகாரம், யூதேயா உரோமைய பிராந்தியமாக நியமிக்கப்பட்ட பின்னர் இரத்துச் செய்யப்பட்டது. ஆதலால் எவருக்கும் மரண தண்டனை வழங்கும் அதிகாரம் தலைமைச் சங்கத்திற்கு இருக்கவில்லை.

- இயேசுவையும் குற்றவாளியாக முறைப்பாடு செய்து முதலாவதாக யூத தலைமைச் சங்கத்துக்கே அழைத்துச் சென்றனர். இதன் தலைவர் தலைமைக்குரு ஆவார்.

- அரிமத்தியா யோசேப்பு, நிக்கோதேமு, தூய பவுலின் ஆசிரியரான கமாலியேல் ஆகியோர் இச்சபையில் அங்கத்துவம் வகித்திருந்தனர்.

**சமயப்பலிகளும் சடங்குகளும்**

- யூதரின் பாஸ்கா கொண்டாட்டம், கூடாரத் திருவிழா நடாத்துதல், பெந்தகோஸ்து திருவிழா நடாத்துதல் என்பன வருடந்தோறும் நடைபெற்ற முக்கிய சமய திருவிழாக்களாகும். இவற்றால் எருசலேம் கோவில் முதன்மையான இடத்தினை வகித்தது.

- இறை ஆராதனைக்கு முன் கை கால்களைக் கழுவி சுத்தமாதல் முக்கியமான ஒரு சடங்காயிருந்தது

- தலைப்பேறான ஆண்குழந்தைகளை அர்ப்பணித்தல், விருத்தசேதனம் செய்தல் ஆகியன கோவிலுக்குள் நிறைவேற்றப்பட்ட சமயச் சடங்குகளாக இருந்தன. அவ்வாறே ஆண் பிள்ளைகளுக்கு 12 வயதானபோது கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டு குருவின் முன்னிலையில் சட்டத்தின் மகனாக்குதல் யூத பழக்கமாயிருந்தது. யூத ஆண் பிள்ளைகள் கோயிலுக்கோ அல்லது தொழுகைக் கூடத்திற்கோ சென்று சட்டங்களைக் கற்றல் அடிப்படையான சமயத் தேவையாயிருந்தது. மோசேயின் சட்டங்களை கடைப்பித்தல் யூத இனத்துக்கு கட்டாயமாக இருந்தது. அத்தோடு சட்டங்கள் பற்றிய அடிப்படைக் காரணங்களை மறைநூல் அறிஞர்கள் கற்றுக்கொடுத்தனர்.

- இயேசுவின் பெற்றோரும் தங்கள் தலைப்பேறான மகனுக்காக மேற்கூறப்பட்ட யூத பழக்க சம்பிரதாயங்களை நிறைவேற்றினர்.

## பாலஸ்தீனாவில் வாழ்ந்த சமயக் குழுக்கள்

**பரிசேயரும் மறைநூல் அறிஞரும்**

- எல்லாப் பரிசேயரும் மறைநூல் அறிஞராக இல்லாவிடினும், மறைநூல் அறிஞரில் பலர் பரிசேயர்களாவர்.

- பரிசேயர் என்பது 'பரிஷ்' என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். பரிசேயர் என்பதன் பொருள் 'பிரிந்திருப்பவர்' 'பிரிந்து' என்பதாகும். இவர்கள் பிற இனத்தவர், பாவிகள், சமாரியர், வரி தண்டுபவர், ஏழைகளான பொது மக்கள் மற்றும் சட்டங்களை கடைப்பிடித்தல் பற்றிய முயற்சி எடுக்காத பிரிவினரிலிருந்து விலகி, பிரிந்து வாழ்ந்தனர்.

- மேலும் தங்கள் பணத்திலிருந்து பத்திலொன்று கொடுக்க முடியாத ஏழைகளும், சமய சட்டங்களை நிறைவேற்றாத மக்களும் பாவிகளெனக் கருதினர்.

- அதே போன்று இவர்கள் யூத மக்கள் மத்தியில் பிரிந்திருந்த விசேட பிரிவினராகக் கருதப்பட்ட குழுவாகும்.

- மக்கள், இறை மக்களாக்கப்படுவதற்கு சட்டங்கள் தேவையற்றவையாகும். அவ்வாறே யூத சமூகத்திலே சட்டங்களை ஆக்குவதற்காக அடிப்படையாக செயலாற்றியவர்களுக்கிடையே, மறைநூல் அறிஞர்களுக்கு (செலாளர்கள் / எழுதுபவர்கள்) முக்கிய இடம் கிடைக்கின்றது. மோசேயின் சட்ங்களை எழுதி வைத்தல், அதற்குப் பொருள் கூறல், பாதுகாத்தல், அவற்றிற்கு விளக்கமளித்தல் இவர்களின் முக்கிய பணியாயிருந்தது. பத்துக் கட்டளைகளுக்கு மேலதிகமாக புதிய சட்டங்கள் மறைநூல் அறிஞரால் முன்வைக்கப்பட்டிருந்தது. அவை 'செய்ய வேண்டிய செயல்கள்' செய்யத் தகாத செயல்கள்' ஆகியன சட்டங்களாக இருந்தன. (மாற்கு 7:1-23, லூக்கா 11:37-54, மத்ததேயு 16:1)

- சமயச் சுதந்திரத்தை அனுபவித்த யூதர்கள் தமது சமய வழிபாடுகளையும் மற்றும் யூத சட்டங்களையும் எழுத்துப் பிசகாது கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்புடன் இருந்த மக்கள் குழுவினராவர். திருமறை நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள இறை விருப்பத்தை தேடிப் பார்ப்பதோடு அதனை நிறைவேற்றுவது அவர்களது விருப்பமாகும்.

- யூத சமய மக்கள் குழுவினருக்கிடையில் பரிசேயர் மிக மதிப்புடன் கவனிக்கப்பட்ட அதிகாரம் நிறைந்த ஒரு குழுவினராவர்.

- பரிசேயர்களால் எழுதப்பட்ட சட்டத்தையும் அதற்கு பொருள் கூறிய வாய்மொழிச் சட்டமான 'மிஷ்ன' என்பதையும் கடைப்பிடித்தனர். இதுவரையில் தோரா அல்லது மோசேயின் சட்டம் எழுத்து வடிவம் பெற்றிருந்தது. தோராவின் உள்ளடக்கத்தின் சுருக்கத்தை ஆழமாகக் கற்றலுக்குப் பதிலாக சட்டதிட்டங்களின் வெளித்தோற்றத்துக்கு முக்கியத்துவம் அளித்து உடனடியாகக் கடைப்பிடிப்பதற்கு பரிசேயர்கள் விரைந்தனர். அவற்றில் ஓர் எழுத்தையும் தவறவிடாமல் அப்படியே கடைப்பிடிக்கும்படி பொதுமக்களை தூண்டி துன்பத்துக்குள்ளாக்கினர். தாங்கள் சமய சடங்குகள் மற்றும் சட்டதிட்டங்களை பாதுகாப்பதாகக் காட்டிய பரிசேயர் தங்களது தார்மீகத் தன்மை பற்றிய அக்கறையும் கொண்டிருந்தனர். இயேசு இதனை எடுத்துக்காட்டவே பரிசேயரும் மற்றும் வரிதண்டுபவர் பற்றிய கதையின் மூலம் முன் வைத்துள்ளார்.
  - பரிசேயரின் வாழ்க்கைமுறையில் விசேடமாக இனங்காணக்கூடிய சில பண்புகள்.

1. இறைதூதர்கள் மற்றும் ஆன்மீகவாழ்வு, உயிர்த்தெழுதல் பற்றி நம்பிக்கை வைத்தல்
2. எழுத்துவடிவத்தைப் போன்று வாய்மொழிப் பாரம்பரியங்களையும் ஏற்றுக் கொள்ளல்.
3. தாவீதின் பரம்பரையிலிருந்து மெசியா வரும்வரை எதிர்பார்த்திருத்தல்.
4. மூதாதையரின் மரபு வழியாக வந்த பாரம்பரியங்களுக்கும் சட்டத்தைப் போன்றே முக்கிய இடமளித்து இவை அனைத்தையும் எழுத்துத் தவறாமல் கடைப்பிடித்தல்.
5. பாரம்பரிய சமய சடங்குகளை மிக முக்கியமெனக் கவனித்தல்.
6. உடைகளை விசேடவிதமாக தயாரித்தக் கொள்ளல்.

- இவர்கள் சந்தை வெளிகளில் பகிரங்கமாகச் செபித்தனர். அவர்களின் அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்கினர். கையிலும் மற்றும் நெற்றியிலும் இறைவார்த்தையை குறித்துக் காட்டி அவர்களுடயை நேர்மைத் தன்மையை வெளிக்காட்டினர். நெற்றியில் குறிப்பதன் மூலம் இறை வார்த்தையை உள்ளத்தில் பதிய வைத்துள்ளதாகவும் கையில் குறித்தலின் வழியாக இறைவார்த்தையை செயலில் காட்டுவதாகவும் அவர்கள் கருதிய போதிலும் அவர்கள் தம்மை நேர்மையானவர்கள் எனக் காட்டிக் கொண்டு மக்கள் முன்னிலையில் துள்ளியமாகத் தெரிவதற்கு முயற்சி செய்தனர்.

- இவர்கள் எப்பொழுதும் இயேசுவின் பணி வாழ்வின் போது ஓய்வுநாளை மீறுதல் பற்றியும், பாவங்களை மன்னிப்பது பற்றியும், நோயாளிகளைத் தொடுதல் பற்றியும் முறைப்பாடுகளை முன் வைப்பதற்கு விரைவாகச் செயற்பட்ட குழுவினராவர்.

- எனினும் ஓய்வுநாள் பற்றிய சரியான அர்த்தத்தை இயேசு மக்களுக்கு வெளிப்படுத்தியதோடு ஓய்வுநாள் மனிதனுக்கேயன்றி மனிதன் ஓய்வு நாளுக்காகவல்ல எனவும் கூறினார். வெளிச் சடங்குகள் பற்றிய தேவைக்கதிகமான கவனத்தைக் காட்டுகிற இவர்கள் ஆன்மீக தூய்மையை பாதுகாப்பது தொடர்பாக உதாசீன வழிபாடுகளையே காட்டினர். வெளிச் சடங்குகளிலும் மற்றும் சுத்தம் பற்றியும் மட்டுமே அதிக கவனத்தைச் செலுத்தினர்.

**சதுசேயர்**

- ‘சாதோக்’ (2 சாமுவேல் 8:17) எனும் குருவின் பரம்பரையில் வந்தவர்களென சதுசேயர் கருதப்பட்டனர்.
- இவர்கள் செல்வந்தர் வகுப்பைச் சேர்ந்தவராவர். இவர்கள் எருசலேமோடு தொடர்புடைய குருக்களோடு நெருங்கிய உறவு வைத்திருந்த உயர்குல பிரிவினராவர்.
- சதுசேயருள் ஒருவரே தலைமைக்குருவாகவும் இருந்தார்.
- யூத சமயத்தின் அதிகார அமைப்பின் செல்வாக்கு நிறைந்த இவர்களுக்கிடையில் சதுசேயர்கள் அனைவரும் குருக்களாக இல்லாததோடு குருக்கள் அனைவரும் சதுசேயருமல்ல.
- சமய சடங்குகளை நிறைவேற்றுவதற்காக எருசலேம் ஆலயம் சதுசேயரின் மத்திய நிலையமானது,
- தங்களது நிலைமையை மற்றும் அதிகாத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மிக முயற்சி செய்த ஒரு குழுவினராயினர். பாரம்பரிய கருத்துகளை மிகக் கடுமையாக பற்றிக் கொண்ட இந்த சமயக் குழுவினர் பரிசேயர்களைப் போன்று அல்லாது,
    1. வாய்மொழி மரபுகளின் (மிஷ்னா) சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளாததோடு எழுத்து வடிவம் பெற்ற சட்டங்களை மட்டும் ஏற்றுக்கொண்ட குழுவினராவர்.
    2. இறைதூதர்கள் மற்றும் தீய ஆவிகள் பற்றிய நம்பிக்கை இல்லாதவர்களாயிருந்தனர்.
    3. மறுபிறவி (உயிர்த்தெழுதல்) பற்றிய கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அழியாத ஆன்மா, மற்றும் மரணத்தின் பின்னரான மகிழ்ச்சி பற்றி நம்பிக்கை அற்றவராயிருந்தனர். (மாற்கு 12:18-23)

- இவர்களுக்கு இருந்த அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான அதிகாரத்தை சமய விடயங்களிலும் பரப்பினர்.

- எப்பொழுதும் தலைமைக்குருவின் பக்கம் சார்ந்தே இருந்தனர்.

- கொள்கையற்ற உரோமைய ஆட்சியாளருக்குப் பக்கச் சார்பாக செயலாற்றிய ஒரு பிரிவினராவர். அரசில் மற்றும் சமய ரீதியாக விசேட செல்வாக்கினை ஏற்படுத்தக் கூடிய சக்தி இவர்களிடம் இருந்தது.

- யூதேயா உரோமைக்கு அடிமையாக வாழ்ந்த உரோமையப் பேரரசனோடு ஒத்துழைப்போடு செயற்பாடுமாறு மக்களுக்கு அறிவுரை வழங்கிய ஒரு குழுவினராவர்.

**செலஸ்தியர்**

- கலிலேயாவின் யூதா செலஸ்தியரின் ஸ்தாபகராவார்.

- தீவிரவாதியாகிய இவர் உரோமைய படைக்கு எதிராக கலகமொன்றை நடாத்தினர்.

- செலஸ்தியர் தங்களது நாட்டை ஆட்சி செய்த உரோமையருக்கு எதிராகச் செயற்பட்டு யூத அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கும் தாய் நாட்டுக்காக அர்ப்பணத்தோடு தீவிரவாதியாக செயலாற்றினர்.

- உரோமையப் பேரரசுக்கு எதிராக இவர்கள் மெசியாவின் வருகை பற்றிய எதிர்பார்ப்போடு இருந்த குழுவினராவர். (லூக்கா 6:15) ஏனெனில் அவர் வந்த காலத்தில் உரோமையப் பேரரரசர்களை விரட்டி அடிக்க முடியுமென இவர்கள் நம்பியிருந்தனர்.

- இவர்கள் இறைவனுக்காகவும் மற்றும் இறைமக்களுக்காகவும் போரிட்டனர்.

- ஆகவே தாம் செய்தது தூய செயலெனவும் மற்றும் தூய கலகமெனவும் இவர்கள் நினைத்தனர். எனவே மெசியாவின் வருகை ஏதோவொரு நாளில் நிகழும் வரை எதிர்பார்த்திராமல் அந்நாளைத் தோன்றச் செய்வதற்கான பங்களிப்பைச் செய்தல் இவர்களின் எதிர்பார்ப்பாகும். இதனால் இவர்கள் பல்வேறு கலகங்களை உண்டாக்கினர்.

- இறைவன் மட்டுமே அரசர் என இவர்கள் நம்பியிருந்தமையால் உரோமைப் பேரரசுக்கு வரி செலுத்துவதிலும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

**எஸ்சேனியர்**

- கி.மு 152 இல் யூதா மக்கபேயுவின் சகோதரர்களான யோனத்தன் சிரியாவின் அரசர்களால் தலைமைக்குருவாக நியமிக்கப்பட்டார்.

- சிரியாவின் ஆட்சியாளரால் சதோக்கின் பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்குத் தலைமைக்குரு பதவியை கொடுக்க மறுத்தமையால் இவ்வாறு செய்தனர்.
  இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து இவர்கள் பாலைவனத்துக்குச் சென்று சாக்கடலின் அயலிலுள்ள குகைகளில் வசித்தனர். இவர்கள் எஸ்சேனியரென அழைக்கப்பட்டனர்.

- இவர்களைப் பற்றித் திருவிவியத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும் பாலஸ்தீனாவின் சாக்கடலின் அயலில் செய்த அகழ்வாராச்சியின்படி கும்ரான் எனும் பிரதேசத்தில் தவம் செய்த மக்கள் வாழ்ந்தனரென்பதற்கான சான்றுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

- சட்டப்படி இல்லாத மற்றும் தகைமையற்ற குருத்துவத்தின் வழியாக ஆலயம் அசுத்தமடைந்துள்ளதாக கூறியதோடு ஆலயம் மற்றும் குருத்துவம் ஆகிய இரண்டையும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இவர்கள் யூத சமயத்தில் பரிசேயருக்கும் மற்றும் சதுசேயருக்கும் மட்டுமே இரண்டாம் தரத்தில் வைக்கப்படுகின்றனர்.

- திருமறைநூலை கையெழுத்துப் பிரதி செய்தலை விசேட பணியாகக் கொண்டது மட்டுமல்லாது அவற்றைப் பாதுகாப்பதனையும் செய்தனர். திருமுழுக்கு யோவான் எஸ்சேனியர் பின்னணியில் வாழ்ந்திருக்கக்கூடுமென சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

- திருமணம் முடிக்காமை, தலைவருக்குக் கீழ்ப்படிதல், வெள்ளை உடை அணிதல், பொது வேண்டல், பொது வேலை செய்தல், பொது அறிவுரையும் பொதுவாக உணவருந்துதல் இவர்களின் வாழ்க்கையில் விசேடமானவையாகும்.

- மேலும் இவர்கள் மோசேயின் போதனைகள் பற்றி அதிக அக்கறை காட்டினர். உலக முடிவில் அனைத்து தீமைகளும் தோல்வியடைந்து நன்மைகள் ஆரம்பமாகுமென்பது இவர்களது எதிர்பார்ப்பாகும். மெசியாவின் வருகைக் காலம் அண்மித்துள்ளதாகவும் எஸ்சேனியரின் எதிரிகளைத் தண்டிப்பாரென்பதும் அவர்களது நம்பிக்கையாகும்.

- யூத உரோமையப் போர் முடிவடைந்ததோடு கிறிஸ்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் செலஸ்தியர், எஸ்சேனியர், சதுசேயர் ஆகியோர் இல்லாமறபோயினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேர்ச்சி** **4**.0 :- கிறிஸ்துவே உலகிற்கு விடுதலை அளிப்பவர் என்பதை ஏற்று, அவருக்குச் சான்றுபகர்வார்.

**தேர்ச்சி மட்டம்** 4.2 **:-** நற்செய்தி, திருத்தூதர் பணி நூல்களைப் பற்றி அறிந்து கிறிஸ்தவ விழுமியங்களை பரப்புவதில் பங்கேற்பார்.

**பாடவேளை :- 25**

**கற்றல் பேறுகள் :-**

- நற்செய்தி மற்றும் திருத்தூதர் பணி பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- நற்செய்தியைப் போதிக்க அயராது பாடுபட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- நற்செய்தி, திருத்தூதர்பணி தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- நற்செய்தியின் ஒளியில் தமது வாழ்வை அமைத்துக் கொள்வார்.
- தமது வாழ்வை பிறருக்கு நற்செய்தியாக்குவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :-**

### 4.2.1 நற்செய்தி என்றால் என்ன?

- நற்செய்தி என்பது ஒருவரை நல்ல செய்தி ஒன்றினை செவிமடுக்கச் செய்வது நல்லதைப் பெறச் செய்வதாகும்.
- ‘‘நற்செய்தி’’ என்பதன் ஆரம்பம் பண்டைய யூத வரலாறு வரை நீடித்து செல்கின்றது. பழைய ஏற்பாட்டின் வளர்ச்சியோடு நல்லதொரு செய்தியினைக் கூறுவதற்காக அங்கு உபயோகிக்கப்பட்ட அடிப்படையான வினைச் சொல் பசார் (Basar) என்பதாகும்.
- அவற்றிலிருந்து எடுத்துக் காட்டப்படுகின்ற கருத்துகள் அந்த வினைச் சொல்லின் ஆரம்பத்தை எடுத்தியம்புகின்றது. அதாவது நல்லதொரு செய்தியினைக் கொண்டு வருதல், நல்லதொரு செய்தியினைக் கூறுவது போன்றவை இவற்றிலிருந்து உணர முடிகிறது.
- ஆரம்ப காலங்களில் இவ்வினைச் சொல்லின் வழியாக போரில் வெற்றிபெற்றமை பற்றிய நற்செய்தி வெளிப்படுத்தப்பட்டது.
- 2சாமுவேல் 4:10 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் இறைவன் இஸ்ரயேல் மக்களின் அன்றாட வாழ்வில் செயலாற்றுவதனால் அவர்கள் போரில் வெற்றியீட்டினர்.
- அவ்வெற்றியினைப் பற்றிய நற்செய்தி ‘பசார்’ எனும் சொல் வழியாகச் கூறப்படுகின்றது.
- அரசமாளிகையோடு தொடர்புடையவர்கள் வழியாக அரசனுக்கு வெளிப்படுத்திய இந்நற்செய்தியை அறிவிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் பசார் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.
- மென்மேலும் இக்கருத்துக்கள் ‘வளர்ச்சியடைந்து எதிரிகளைத் தோல்வியடையச் செய்த இறைவனைப் பற்றிய நற்செய்தி’ என அதன் பொருள் மாற்றமடைந்து, சமயம் சார்ந்த தோற்றத்தைப் பெறுவதன் காரணமாக பசார் என்பது பெசோரா (Besorah) என மாற்றமடயைும் விதத்தினை இங்கு விளக்கமாகக் காணக் கூடியதாயுள்ளது.
- அதாவது ‘‘இறைவனிடமிருந்துகின்ற மீட்பின் நற்செய்தி’’ என்பதாகும் (எசாயா 52:7).
- எசாயா 40:9, 4:27, 52:7 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சீயோன் என்பது, இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுப்பது பற்றிய நற்செய்தியை குறிப்பிடுகிறது.
- எசாயா 61:1இற்கு ஏற்ப ஒடுக்கப்பட்டோர், உள்ளம் உடைந்தோர், கட்டுண்டோர், சிறைப்பட்டோர் ஆகியோருக்கே விடுதலையின் நற்செய்தி உரித்துடையதாகும்.
- புதிய ஏற்பாட்டிலும் பேரரசனின் பிறப்பு, அரியனைக்கு வருகைதரல் போன்ற நிகழ்வுகள் நற்செய்தி என கவனத்தில் கொள்ளப்பட்டன.
- செப்துவாஜிந்தில் நற்செய்தி என்பதற்கு வழங்கப்படுகின்ற எவான்சலியோன் என்ற சொல்லின் வழியாக போரின் பின்னர் பெறுகின்ற வெற்றியை அறிவிக்கும் அல்லது புதியதோர் அரசன் நியமிக்கப்படுதல் என்பதை காட்டுவதாக பொருள் கொள்ளப்படுகிறது.

- பழைய ஆங்கிலச் சொல்லான கொட்ஸ்பெல் (Godspell) என்பது ‘கொஸ்பல்’ என மருவி வந்துள்ளது. நல்லதெனப்பட்ட ஏதேனும் ஒன்றைப் பற்றிய கருத்துக்களைப் பெறல், அறிவித்தல் என்பன இதன் பொருளாகும்.
- இது சமய கருத்தாக மாற்றமடைந்தது கிறிஸ்தவ உலகில் இறைவன் இயேசு கிறிஸ்துவின் மூலம் உலகிற்கு வெளிப்படுத்திய செய்தியை அறிமுகப்படுத்துவதற்கு இந்த கொஸ்பல் (Gospel) எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கைகள், இறைவாக்குகள் என்பன உறுதிசெய்யப்படுவதோடு புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவினால் மீட்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக ‘மனுவுரு எடுத்தல்’ நற்செய்தி என்ற சொல்லின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது.
- இதற்கேற்ப நற்செய்தி என்பது இயேசுவேயாகும்.
- முழு மனித சந்ததியையும் பாவத்திலிருந்து மீட்டெடுப்பதற்காக மனுவுரு எடுத்த இறைமகனின் வாழ்க்கை, செய்தி, பணி, பாடுகள், சிலுவையில் உயிர்ப்பலி மற்றும் உயிர்ப்பு (மறுவாழ்வு) என்பவையூடாக உரிமையாகும் எதிர்நோக்கு நற்செய்தியாக எடுத்துக் காட்டலாம்.
- அவரில் நம்பிக்கை வைத்து அவருடைய விருப்பப்படி வாழ்வது உயிருள்ள ஒரு நற்செய்தியாகும்.

### 4.2.2 நற்செய்தி எழுத்துரு பெற்ற காலம்

- நற்செய்தி எழுத்துரு மரபு சிக்கலான செயற்பாட்டினால் வளர்ச்சியடைந்ததாகும்.
- இச் செயற்பாட்டினை மூன்று கட்டங்களாக ஆக்கிக் கொள்ளலாம். அவர் வெளிப்படுத்திய வார்த்தைகளையும் அவர் செய்த செயல்களையும் கண்டவர்களாக, கேட்டவர்களாக சான்று பகரக் கூடியவர்கள் அவரது திருத்தூதர்களேயாவர்.
- யூத ஆசிரியர்களைப் போன்று அவருடைய போதனைகளை மனனஞ்செய்வதற்கும் நினைவில் வைத்திருப்பதற்கும் திருத்தூதர்களை ஈடுபடுத்தியதாகக் கூறப்படுகிறது.
- இயேசுவின் மரணத்திற்கும் உயிர்ப்புக்கும் பின்னர் அவருடைய தூதுப்பணியை முன்கொண்டு செல்வதற்கான பொறுப்பு திருத்தூதர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
- திருத்தூதர்கள், முதல் கிறிஸ்தவ சபை ஆரம்பமான நாள் அதாவது பெந்தகோஸ்து தினத்தில் தூய ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டு, இயேசுவின் விண்ணேற்றத்தின் போது இயேசு அவர்களிடம் கேட்டுக் கொண்டதற்கமைய உலகின் இறுதி எல்லை வரை இயேசுவுடைய மீட்பின் பாரிய செயற்பாட்டிற்கு சான்று பகர்பவர்களாகத் தம்மை அர்ப்பணித்தனர் (திப 2:32).
- இயேசுவோடு ஒருமித்து பணியாற்றியதன் மூலம் பெற்ற அனுபவங்கள், கற்றவைகளின் மூலம் இயேசு மக்களை பாவத்திலிருந்து மீட்பதற்காக வருகைதந்த மெசியா என்னும் நற்செய்தியை துணிவோடு பரப்புவதற்கும், இயேசுவின் படிப்பினைகளை போதிப்பதிலும் இயேசுவை மையமாகக் கொண்ட வழிபாடுகளை சபையிலே வளர்ச்சி பெறச் செய்வதிலும் செயற்பட்டதன் காரணமாக நற்செய்தி வாய்மொழி மரபு உருவானது என்பது தெளிவாயுள்ளது.
- பழைய ஏற்பாட்டின் நிறைவாகவும் புதிய ஏற்பாட்டில் மனுவுரு எடுத்த இயேசுவைப் பற்றிய நற்செய்தி அவருடைய மரணத்தின் பின் 50 வருடங்களளவில் வாய்மொழி மரபு நிலவியது. இயேசுவோடு ஒருமித்து பணியாற்றிய சீடர்கள் கண்டவை, கேட்டவை, அவருடைய வாழ்வு, தூதுப்பணி, பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றம் ஆகிய எல்லா நிகழ்களும் வாய்மொழி மரபில் உள்ளடக்கப்பட்டன.
- இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் குழுவும், ஆரம்ப கிறிஸ்தவ சபையினரும் இந்நற்செய்தியின் முதலாம் மரபினைப் பாதுகாப்பதற்கு தோள் கொடுத்தனார்.

- எனினும் காலம் செல்ல அந்த வாய்மொழி மரபை இருந்தவாறே செயற்படுத்துவதில் சவால்கள் எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

இதற்கான காரணம்:-

- சபை மிக விரைவில் வளர்ச்சியடைந்தமை.
- வாய்மொழி மரபில் உள்ளடங்கிய சில விடயங்கள் காலத்தோடு நினைவிலிருந்து அழிந்து விட்டமை.
- இந்நிகழ்வுகளின் பங்காளிகளாக சான்று பகர்ந்த சீடர்கள் குழு மரணமடைந்தமை.
- அடிப்படையான உண்மைகளை மாறுபடாமல் கொண்டு செல்வதில் கடினமான சவால்களை எதிர்நோக்க நேரிட்டமை.
- இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகளுக்கும் படிப்பினைகளுக்கும் பொய்யான கருத்துக்களை தொடர்புபடுத்துவதைத் தடுக்க வேண்டியேற்பட்டமை.
- இயேசு மீண்டும் வரப்போவதை ஆவலோடு எதிர்பார்த்திருந்த கிறிஸ்தவர்கள் மத்தியில் அது தாமதமாவதால் ஆன்மீக அமைதியின்மை ஏற்படுதல் போன்றனவாகும்.

ஆகவே நற்செய்தி வாய்மொழி மரபைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான முடிவாக அதனை எழுத்துரு பெறச்செய்ய வேண்டுமென்பது இங்கு தெளிவாகிறது. இந் நோக்கினைப் பிரதானமாகக் கொள்வதற்காக மூன்று காலகட்டங்களின் கீழ் தகவல்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டனர்.

**முதலாவது காலம் / கட்டம் (கி.பி 0-33)**

- இயேசுவின் வாழ்க்கையும் அதனோடு தொடர்புடைய நிகழ்வுகளும் அவர் செய்தவைகளையும், கூறியவைகளையும் இயேசுவின் பிறப்பு தொடக்கம் அவருடைய மிகப் பெரிய தூதுப் பணி பற்றியும், இங்கு அவர் செய்தவை, கூறியவை பற்றியன இந்தக் காலகட்டத்தைச் சார்ந்தவையாகும்.

**இரண்டாவது காலம் / கட்டம் (கி.பி 33-50)**

- இயேசுவின் உயிர்ப்புக்கும் விண்ணேற்புக்கும் பின்னர் தூய ஆவியின் வரங்களைப் பெற்ற திருத்தூதர்கள் அடங்கிய ஆரம்பகால கிறிஸ்வர்களின் சான்றும் வாய்மொழித் தகவல்களும் இக்கட்டத்தைச் சார்ந்தவையாகும்.
- ஆரம்ப கிறிஸ்தவர்கள் பாஸ்காவுக்கு முன்பும் சில நிகழ்வுகள் தொடர்பாக நினைவுகள் மகத்தான நினைவுகள் ஆகும். எனினும் தூய ஆவியைப் பெற்ற பின்னர் அவர்கள் அனுபவித்தவைகள், கண்டவைகள், கேட்டவைகள் திருத்தூதரின் போதனைகளும் படிப்பினைகளும், துன்பங்களும், பிரச்சினைகள், முரண்பாடுகள், சவால்கள் என்பவற்றை சந்தித்தபோது அவர்கள் செயற்பட்ட விதம், நிகழ்ந்த புதுமைகள் ஆகிய வாய்மொழித் தகவல்கள் பல இரண்டாம் கட்டத்தைச் சார்ந்தவையாகும்.

**மூன்றாவது காலம் / கட்டம் (கி.பி 70-100)**

- நற்செய்தி ஆசிரியர்களின் நோக்கங்கள், சிந்தனைகள், கண்ணோட்டம் என்பவற்றோடு தொடர்புடைய நற்செய்தி வாய்மொழி மரபு எழுத்துரு பெறுதல் மூன்றாவது கட்டமாகும்.
- இயேசு கிறிஸ்துவின் மீட்பு மறைபொருள் பற்றிய நற்செய்தி எழுத்துரு பெற்ற வாய்மொழி மரபை நிறைவடையச் செய்வதாகும்.

- இறை ஏவுதலால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் நால்வரும் தமது அறிவுக்கு எட்டியவாறும் தமது இறையியல் கண்ணோட்டத்தை முதன்மையாகக் கொண்டும் நற்செய்தியை எழுத்துரு பெறச் செய்துள்ளனர்.
- நற்செய்தி நூல்கள் குறிப்பிடப்பட்ட மக்கள் குழுக்களின் பின்னணி தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய பரம்பரையான எழுத்து நடையைப் பயன்படுத்தியும் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 4.2.3 நற்செய்தி நூல்கள்

- புதிய ஏற்பாட்டு நூல்கள் 27இல் நற்செய்தி நூல்கள் நான்கும் முதலாவது இடத்தினை வகித்துள்ளது. இயேசுவின் வாழ்க்கை சம்பவங்களும் தூதுப்பணியும் பற்றிய தகவல்களை பெற்றுத் தருகின்ற விசேட நூல் வரிசை இந்நற்செய்தி நூல்களாகும். இதற்கமைய,
  - தூய மத்தேயு நற்செய்தி
  - தூய மாற்கு நற்செய்தி
  - தூய லூக்கா நற்செய்தி
  - தூய யோவான் நற்செய்தி ஆகிய புதிய ஏற்பாட்டு முதல் நான்கு நூல்களும் ஒழுங்கு முறையாக உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் முதல் மூன்று நற்செய்தி நூல்களுக்கிடையில் உள்ள சமமான தன்மையினால் அவை சமநோக்கு நற்செய்தி என அழைக்கப்படுகிறது.

### தூய மத்தேயு நற்செய்தி

- தூய மத்தேயுவின் நற்செய்தி புதிய ஏற்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களிலே முதலாவதாக முன்வைக்கப்பட்டுள்ள நூலாகும்.
- இந்நூல் யூத பின்னணியை அழுத்தமாக விபரித்துள்ளதென்பது இங்கு வெளிப்படையாக உள்ளது. நசரேத்தில் இயேசு, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறை மக்களின் மரபுகளுடன் இணைந்து அவ்வுடன்படிக்கைகளையும், மரபுகளையும் நிறைவடையச் செய்த விதம் பற்றி இந்நற்செய்தியூடாக வெளிப்படுத்தப்படுகிற முயற்சியை இங்கு காணக்கூடியதாக உள்ளது.
- இங்கு ஆரம்ப முதல் இறுதிவரை சம்பிரதாயங்களுக்கும் நெகிழ்ச்சித் தன்மைக்கும் இடையே ஏதேனும் தொடர்பினைக் கட்டி எழுப்புவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ள விதம் தெளிவாகிறது.

### ஆசிரியத்துவம்

- இந்நற்செய்தி ஆசிரியத்துவம் பற்றி விவிலிய அறிஞர்களுக்கிடையே பல்வேறு கருத்துகள் உள்ளன.
- மரபு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாய் அமைவது இந்நற்செய்தியின் ஆசிரியர் யூதராக பிறந்த இவர் ஆரம்ப காலத்தில் வரிதண்டுபவராக உரோமைய அரசில் பணியாற்றிய பின்னர் இயேசுவின் சீடராக லேவி அல்லது மத்தேயு என ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

  (தூய மத்தேயு 9:9)
- எனினும் இந்நூலாசிரியர் இங்கு குறிப்பிடப்படுகின்ற நிகழ்வுகள் தனது கண்களால் கண்ட ஒருவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான போதியளவு சான்றுகள் இருக்கவில்லை.
- ஏனெனில் இந்நற்செய்தியின் ஆசிரியர் யூத படிப்பினைகள் பற்றிய நல்ல அறிவுள்ள கிறிஸ்தவ மறைதூதுவர் என்பது தெளிவாக புலப்படுகிறது.

- மேலும் யூத பின்புலம் கொண்ட சிரியாவில் அல்லது வேறு பிரதேசத்தில் வசித்து வந்தார் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**காலமும் இடமும்**

- சபையின் மிகப் பழைய மரபுக்கமைய மத்தேயுவின் நற்செய்தியானது கி.பி 80-90 களுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- உரோமைய போர்வீரர்களால் கி.பி 70இல் நடந்தேறிய எருசலேமின் அழிவின் காரணமாக அநேக கிறிஸ்தவர்கள் சிரியாவின் அந்தியோக்கியா உள்ளடங்கலாக பல்வேறு பிரதேசங்களுக்கு சிதறியோடினர்.
- இந்நற்செய்தி இதற்கு இடைப்பட்ட காலத்தின் பின்னர் சிரியாவின் அந்தியோக்கியாவில் எழுதப்பட்டுள்ளதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- மத்தேயு தனது நற்செய்தியை முதலில், அக்காலத்திலிருந்த யூதரின் மொழியான அரமெயிக் மொழியில் எழுதியுள்ளதென்பதும் பின்னர் மத்தேயு குழுவினரால் முழுப் பேரரசும் ஏற்றுக் கொண்ட மொழியான கிரேக்க மொழியிலும் முன்வைக்கப்பட்டுள்ளதென்பது அநேகமான மறை அறிஞர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

**நோக்கம்**

- மத்தேயு நற்செய்தியின் முக்கிய நோக்கமாயமைவது, மனுவுரு எடுத்த இயேசு கிறிஸ்து யூத மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மெசியா என்பதை தெளிவாக்குவதாகும்.
- பழைய ஏற்பாட்டில் மெசியா தொடர்பான வாக்குறுதிகள்யாவும் புதிய ஏற்பாட்டில் இயேசுவினால் முழுமையடைந்ததென்பது உறுதி செய்யப்படுவதற்கு மத்தேயு விசேட முயற்சி எடுத்துள்ளார்.
- மத்தேயு இயேவை ஒப்பற்ற ஆசிரியராகவும் (மத்தேயு 5:1) அல்லது மறை பேராசான் எனவும் முன்வைக்கிறார் (மத்தேயு 28:18-20).

**நூலின் இயல்புகள்**

1) பாரம்பரிய ரீதியில் மோசேயின் ஐந்நூல் மத்தேயுவின் நூலாக்கத் தயாரிப்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதென்பதை மறை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள். ஐந்நூலில் 5 நூல்கள் உள்ளனவென்பதோடு அதற்குச் சமமாக மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் போதனைகள் ஐந்து உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அறிமுகம் | - | இயேசுவின் பிள்ளைப் பருவம் (மத் 1-4 அதிகாரங்கள்) |
| முதலாவது நூல் | - | திருமுழுக்கு யோவானின் மனமாற்றத்திற்கான பணியும் மலைப் பொழிவும் (மத் 3-4அதி, 5-7அதி) |
| இரண்டாவது போதனை | - | இயேசுவின் தூதுப்பணியின் சந்தர்ப்பங்களும் பணி பற்றிய போதனைகளும் (மத். 8-9 அதி, 10:1-11:1) |
| மூன்றாவது போதனை | - | இயேசுவின் தூதுப்பணியின் சந்தர்ப்பங்களும், உவமைகளும் (மத். 11-12 அதி, 13:1-52) |
| நான்காவது போதனை | - | இயேசுவின் தூதுப் பணியின் சந்தர்ப்பங்களும், பலி பற்றிய போதனையும் (மத். 13:58, 18 அதி) |
| ஐந்தாவது போதனை | - | இயேசுவின் தூதுப் பணியின் சந்தர்ப்பங்களும் இறுதித்தீர்ப்பு பற்றிய போதனையும் (மத். 19, 25 அதி) |

முடிவு - இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு (மத். 26-28 அதி)

2) விசேடமாக யூத கிறிஸ்தவர்களுக்காககத் தமது நற்செய்தியை முன்வைப்பதோடு யூத இலட்சணங்கள் அனேகம் இதில் பொதிந்துள்ளன.
   - மூதாதையரைப் பற்றிக் காட்டப்படுவதனால் இயேசு ஆபிரகாமின் தாவீதின் மகனென முன்வைத்தல் (மத். 1:1-17)
   - இயேசு பழைய ஏற்பாட்டின் நிறைவு என முன்வைத்தல் (மத். 5:17-48)
   - இயேசு யூத சட்டத்திற்கு புதிய பார்வை முன்வைக்கின்றார்.
   - சில யூத வழிபாடுகளையும் பாரம்பரியங்களையும் முன்வைத்தல் (மத். 5:19, 6:1-6, 12:5, 15, 23, 27)
   - இஸ்ரயேல் மக்களுக்காக இயேசுவின் தனிப்பட்ட பணியை வெளிப்படுத்தல். (மத். 10:15)
   - மலைப் பொழிவின்போது இயேசு புதிய ஒரு சட்டத்தினை வழங்குகின்ற புதிய மோசேயாக முன்வைத்தல்.
   - இயேசுவை யூதரின் அரசனாக முன்வைத்தல். (மத். 2:2)
   - இயேசு, கற்பிக்கும் பணிக்கு முதலிடத்தை வழங்குகின்ற உண்மையான அதிகாரமுள்ள ஆசிரியரென வெளிப்படுத்தல். (மத். 5:21, 27)
   - இயேசு இறைமகன் (மத். 3:17) மானிடமகன் (மத். 8:20) ஆகிய இரு தன்மைகளையும் எண்ணக்கருவாக முன்வைத்தல்.

**இறையாட்சி பற்றிய மறை உண்மைகள் 5 இணை ஏற்றுக்கொள்ளல்**

- இறையாட்சியின் நியதிச் சட்டங்கள் (மத்தேயு 5-7 அதிகாரங்கள்)
- இறையாட்சியின் பரம்பல் (மத்தேயு 10 ஆம் அதிகாரம்)
- இறையாட்சியின் இயல்பு (மத்தேயு 13ஆம் அதிகரம்)
- இறையாட்சியின் அமைப்பு (மத்தேயு 18ஆம் அதிகாரம்)
- இறையாட்சியின் எதிர்காலம் (மத்தேயு 24-25 அதிகாரங்கள்)

## தூய மாற்கு நற்செய்தி

- மாற்கு நற்செய்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களில் புதிய ஏற்பாட்டில் இரண்டாவது நூலாக இருந்தபோதும் முதலாவதாக எழுதப்பட்டதும் மிகச் சுருக்கமான நற்செய்தியாகவும் அநேக விவிலிய அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- இது மத்தேயு, லூக்கா நற்செய்தியின் அடிப்படை மூலமாக இருக்கின்றதென்பது விவிலிய அறிஞர்களின் கருத்தாகும்.
- இயேசுவின் பாடுகள், மரணத்தின் வழியாக வாழ்வு, மரணம் ஆகியன பற்றி பொருளுள்ள முறையில் விளங்கிக் கொள்வதற்கு இந்நற்செய்தி மிகப் பெரிய உதவியினை வழங்குகிறதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### ஆசிரியத்துவம்

- பாப்பியஸ் (கி.பி 135) இரனேயுஸ் (கி.பி 200) ஓரிஜன் (கி.பி 250) ஆகிய திருத் தந்தையர்கள் கூறுவதற்கமைய மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் பேதுருவின் உதவியாளரும் மொழிபெயர்ப்பாளருமாக செயற்பட்ட மாற்கு என்பவராவார்.

- திருத்தூதர் பணி நூலில் யோவான் மாற்கு என்பவருக்கும் பேதுருவின் பணிக்குமிடையே உள்ள தொடர்பினைக் காணக்கூடியயதாகவுள்ளது (திப.12:12). இதன் அடிப்படையில் இவரே ஆசிரியராக இருக்கக்கூடும் என ஊகிக்கலாம்.
- பேதுரு தனது முதலாவது மடலில் 'எனது மகன் மாற்கு' எனக்குறிப்பிட்டுள்ளார் (1 பேதுரு 5:13) எவ்வாறாயினும் இந்த நபரின் வாழ்க்கையில் பேதுருவினால் ஏற்பட்ட செல்வாக்கானது இந் நற்செய்தி முழுவதும் பரந்து காணப்படுகின்றது என்பது விவிலிய அறிஞர் கருத்தாகும்.
- இதன் வழியாக வரலாற்று செல்வாக்கை விட நடைமுறை ரீதியான செல்வாக்கு இந்நற்செய்திக்கு கிடைத்துள்ளதாகவும் இதன் மூலம் அப்போஸ்தலிக்க அதிகாரம் இந்நற்செய்திக்கு உரித்தாயுள்ளதெனவும், திருச்சபையின் பாரம்பரியங்களில் காணக்கூடியதாக உள்ளது.
- இவ்வதிகாரம் ஆரம்ப கிறிஸ்தவ சபையின் முதல் வருடங்களில் மிக முக்கியமானதாக இருந்ததெனவும், இங்கு மேலும் குறிப்பிடப்படுகின்றது.
- எவ்வாறெனினும் மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் ஆரம்ப கிறிஸ்தவ சபையில் நம்பிக்கையுள்ள பக்திமானான இரண்டாவது பரம்பரையின் சபை அங்கத்தவரெனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- இயேசு யாரென்றும் அவரைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் விளங்கிக் கொள்வதற்கு மாற்கு நற்செய்தி கைகொடுக்கிறதென்பதை விவிலிய அறிஞர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- இயேசுவின் தனித்துவத்தை நன்றாக விளங்கிக் கொள்வதற்கும், இயேசுவின் வழி கிறிஸ்தவர்களின் வழி என்பதைக் காட்டுவதற்கும் (மாற்கு 8:34) இந்நற்செய்தி வழியாக முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

**காலமும் இடமும்**

- உரோமைய போர்வீரர்களால் எருசலேமை அழிப்பதற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கு முன் அதாவது கி.பி 65-70 களுக்கிடையிலான காலத்தில் உரோமையிலே இந்நற்செய்தி எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது.
- பேதுருவின் இறப்பின் பின்னர் இது எழுதப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- நீரோ போன்ற கொடூர ஆட்சியாளரின் கொடிய துன்புறுத்தல்களின்போது அநேக கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாக தங்களது உயிரைத் தியாகம் செய்ய நேரிட்ட மிகப்பயங்கரமான காலக்கட்டத்தில் இந்நற்செய்தி எழுதப்பட்டுள்ளது.

**நோக்கம்**

- இதனை முன்வைப்பதற்கான முக்கிய நோக்கமாக அமைவது நீரோ போன்ற கொடூர பேரரசர்களின் துன்புறுத்தல்களின் காலத்தில் உயிர்த்தியாகம் செய்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு ஆன்மீக ரீதியாக ஆறுதலைப் பெற்றுக் கொடுப்பதாகும்.
- இக் கிறிஸ்தவர்களுக்கு காலம் மிக நெருங்கிவிட்டதாகக் காட்டுவதற்கு இதன் வழியாக முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.
- இக்காலமென்பது இயேசுவின் மகிமையுள்ள இரண்டாம் வருகையென்பது விவிலிய அறிஞர்கருத்தாகும். (மாற்கு 9:1, 13:30-31)

**நூலின் இயல்புகள்**

1. இறை மகனாகிய இயேசுவில் நம்பிக்கையை வளர்ப்பதற்கான நம்பிக்கையின் வெளிப்பாடுகளாக இது காணப்படுகிறது. தத்ரூபமாக இரு நம்பிக்கை வெளிப்பாடுகள்

வழியாக இயேசு என்பவர் இறைமகன் என்பது பற்றிய செய்தி கட்டியெழுப்பப்பட்டுள்ளது. (மாற்கு 1:1-15:39) இதில் முதலாவது இயேசுவில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதவாகும். இரண்டாவது அவருடைய பணி, சிலுவையில் உயிர்விடல் என்பன ஊடாக அவர் இறைமகனென வெளிப்படுத்துவதாகும் (மாற்கு 15).

2. மாற்கு மிகச் சுருக்கமாக எளிமையாக முதல்தரமான மொழிநடையைப் பயன்படுத்தியுள்ளார்.
3. அரமெயிக் மொழிச் சொற்களையும் சில வசனங்களையும் பயன்படுத்தியதன் ஊடாக இயேசுவுக்கு பயன்படுத்திய மொழியை முன்வைப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்-காட்டப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.
4. கிறிஸ்துவின் சீடர்களின் உண்மையான வாழ்க்கையின் வழியை மாற்கு தனது நற்செய்தியின் வழியாக முன்வைக்கிறார்.

   3 அடிப்படையான இயல்புகளால் அவர் இதனை விளக்குகிறார். அவரோடு இருத்தல், போதிப்பதற்காக வெளியே அனுப்புதல், தீய ஆவியை விரட்டுபோது அதிகாரத்தோடு இருத்தல் என்பன சீடரொருவரிடம் எதிர்பார்க்கப்படுகிறது (மாற்கு 3:13-19). இது இந்நற்செய்தியில் ஓர் சிறப்பு பண்பாகவுள்ளது.
5. சின்ன ஆசியாவிலும், உரோமையிலும் வசிக்கின்ற யூதரல்லாத மக்களை நோக்கமாகக் கொண்டு நற்செய்தியை முன்வைப்பதற்கு அவர் முயன்றுள்ளார் என்பது விளங்குகிறது (மாற்கு 7:24-30, 3:7-12). இலத்தின் சொற்களின் பயன்பாடு மற்றும் உரோமைய முறையில் கால நேரங்களைக் காட்டுதல் ஆகியவற்றினால் இது உறுதிசெய்யப்படுகிறது.
6. இயேசுவின் வாழ்க்கையில் முக்கிய சந்தர்ப்பங்கள், அவருடைய தூதுப்பணி, பணி பற்றியும் விசேடமாகக் கவனமெடுக்கப்பட்டுள்ளது. மாற்கு விசேடமாக இயேசுவின் வல்லமையான செயல்கள் பற்றி வலியுறுத்துகிறார். கலிலேயா முதல் எருசலேம் வரை இயேசு நிறைவேற்றிய பணியில் புதுமைகள் செய்தல், உவமைகள் வழியாகப் போதித்தல் என்பனவற்றை இங்கு மேலெழச் செய்துள்ளார். இறையாட்சி பற்றிய போதனைகள் (மாற்கு 11:15, 9:4) உலக முடிவு பற்றிய போதனைகளுக்கு (மாற்கு 13:1-3) முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இயேசுவின் வாழ்க்கையில் இறுதி நிகழ்வுகள் மிக விரிவாக முன்வைக்கப்பட்டுள்ளன. பாடுகளின் நிகழ்வுகள், இறப்பு, உயிர்த்தெழுதல் என்பனவற்றிற்கு இங்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.
7. மாற்கு நற்செய்தியின் இன்னுமொரு விசேட தன்மையானது அநேக சந்தர்ப்பங்களில் அவர் 'மெசியாவின் மறை பொருள்' பற்றி அறிமுகப்படுத்துகிறார். இயேசு 'மகிமையுள்ள இறைமகனான மெசியா' என்பதை இரகசியமாக வைத்துப் கொள்வதற்கு எடுத்த முயற்சி மாற்குவின் நற்செய்தி வழியாக பல சந்தர்ப்பங்களில் தெளிவாக காணப்படுகிறது. தீய ஆவிகளை விரட்டிய பல சந்தர்ப்பங்களில் அவர் இந்த இரகசியத்தை வெளிப்படுத்துவதால் அவற்றை விரட்டுகின்ற விதமும் (மாற்கு 1:24, 34, 3:12) தொழுநோயாளியைக் குணப்படுத்திய சந்தர்ப்பத்தில் அதனை யாருக்கும் சொல்ல வேண்டாமெனக் கூறுவதிலிருந்தும் அதனைத் தடுத்த வித்ததிலிருந்தும் (மாற்கு 1:44) விளங்கக்கூடியதாகவுள்ளது.

**தூய லூக்கா நற்செய்தி**

- மானிட குணங்களையும் நடத்தைகளையும் மேலெழச் செய்கின்ற நூலாக்க அணுகு-முறையைப் பின்பற்றுகின்ற ஒரு விசேட நற்செய்தியாக லூக்காவின் நற்செய்தியை அறிமுகப்படுத்தலாம்.
- நற்செய்தி நான்கிலும் கதை வடிவமைப்புப் பாணி அமைந்த நற்செய்தி இதுவாகும்.
- இயேசுவின் வாழ்க்கையோடு தொடர்புடைய அநேக விடயங்கள் பற்றி பல்வேறு துறைகளை ஒட்டியதாக பல அறிக்கைகளை இந்நற்செய்தி உள்ளடக்கியுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

## ஆசிரியத்துவம்

- இங்கு லூக்கா எனும் நூலாசிரியர் அக்காலத்தில் உரோமையப் பேரரசின் மூன்றாவது பெரிய நகரமான சிரியாவின் அந்தியோக்கியாவிலிருந்து வந்த யூதரல்லாத ஒரு வைத்தியர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.
- இரேனியுஸ், தெர்தூலியன், ஓரிஜன், இயூசேபியஸ், ஜெரோம் ஆகிய திருச்சபைத் தந்தையர் இதனை உறுதி செய்துள்ளனர். பவுலின் மறைதூதுப் பணிப் பயணங்களில் இவர் உதவிப் பணியாளராக பங்குபற்றியதற்கு சான்றுகள் உள்ளன.

  (கொலோசையர் 4:14, 2திமொத்தேயு 4:11, பிலமோன் 24)
- ஆரம்ப கிறிஸ்தவ சபையில் முதல் முறையாக 'கிறிஸ்தவம்' என்ற பெயரைப் பெற்ற சிரியாவின் அந்தியோக்கியா சபையின் இறைவாக்கினரும் ஆசிரியருமாகப் பணியாற்றிய சிரேனின் லூக்கியு(திப 13:1) என்பவரோடு லூக்காவும் முக்கிய யூதரல்லாத ஒருவராக இனங்காணப்பட்டுள்ளார். இந்நற்செய்தியையும் திருத்தூதர்பணி நூலையும் லூக்காவே எழுதியதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- பெயர் குறிப்பிடப்படவில்லையெனினும் மொழிநடையைக் கவனத்திற்கொண்டு ஒரே ஆளையே இது குறிக்கின்றதென்பது உறுதிப்படுத்தப்படுகிறது.
- லூக்கா தனது இரு நூல்களையும் மாண்புமிகு தியோப்பில் அவர்களுக்கே அர்ப்பணித்துள்ளார். அக்கால சமூகத்தில் கிறிஸ்தவ சபையில் தலைமைத்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு பிரபுவாக இருக்கலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- மேலும் அவருடைய பெயராகிய திபேரியு (இறைவனால் அன்பு செய்யப்படுபவர்) கூறப்படுவதற்கேற்ப குறியீட்டுரீதியாக தியோப்பில் என்பதற்குப் பொருள் கூறுகிறது.

  (லூக்கா 1:1, 3:1)
- கிறிஸ்தவரல்லாத அறிவுள்ள அதிகாரிகளும் இயேசுவின் மீட்பின் நற்செய்தியை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக லூக்கா எடுத்துள்ள முயற்சியானது இதன் வழியாக வெளிப்படுகிறது.
- பவுலோடு லூக்கா பிற இனத்தவர்களிடையே மறை தூதுப்பணியில் ஈடுபட்டதால் இத்தேவை சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- அக்காலத்தில் உரோமையைப் பேரரசின் கீழ் நிலவிய கிறிஸ்தவ விரோத மனப்பாங்குகளை கைவிடுவதற்கு இம் முயற்சியானது மிகவும் துணையாக இருந்ததென்பதில் ஐயமில்லை.
- இந்நற்செய்தியின் ஆசிரியராக ஏற்றுக்கொள்ளப்பட்ட லூக்கா சிறந்த கல்வியாளராக இருப்பதோடு மொழியை சரளமாகக் கையாளுபவர் என்பது தெளிவாகிறது.
- இவர் தொழில் ரீதியாக ஒரு வைத்தியர் என்பது சிறப்பாக உறுதிப்படுத்தப்படுவது, இயேசு நோயாளர்களைக் குணப்படுத்துதல் தொடர்பாக ஒரு வைத்தியரின் அனுபவத்தின் துணையோடு அறிக்கைகளை முன்வைப்பதன் காரணத்தினாலாகும். (லூக்கா 4:38, 5:12)
- லூக்கா முதல் தரமான வரலாற்றாசிரியர் என்பது தெளிவாகிறது.
- ஏதேனும் ஒரு நிகழ்வை விபரிக்கும்போது வரலாற்றுக் காரணங்களை நன்றாக முன்வைப்பதன் மூலம் இதனை உறுதிசெய்யலாம் (லூக்கா 2:2) (தி.ப 1:1)

## காலம் இடம்

- லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட காலம் பற்றி பல்வேறு கருத்துகள் காணப்படுகின்றன.
- இது கி.பி 70ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டதாக சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

- நீரோ எனும் பேரரசனின் கொடூர துன்புறுத்தல் காலத்தில் இது எழுதப்பட்டதென்பதை உறுதிபடுத்துவதற்கான காரணிகள் காணப்படவில்லை.
- தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரும்பான்மையோரின் கருத்துப்படி லூக்காவின் நற்செய்தி எருசலேமின் அழிவுக்கு (கி.பி 70)ப் பின்னர் கி.பி 80-90 ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் எழுதப்பட்டுள்ளதென்பதாகும்.
- இந்நற்செய்தி அகாயாவில் எழுதப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**நோக்கம்**

- இயேசுவின் வாழ்க்கை பற்றி சரியாகவும் விரிவாகவும் அறிக்கை சமர்ப்பத்தலும் இயேசு இரக்கம் நிறைந்த உன்னத மனிதர் எனக் காட்டவும், இயேசு முழு உலகின் உன்னதர் மீட்பர் என அறிமுகப்படுத்துவதும் லூக்காவின் முக்கிய நோக்கமாகும்.

**நூலின் இயல்புகள்**

1. லூக்கா தனது நற்செய்தியின் வழியாக இயேசுவின் பணியின் நோக்கங்களுக்கேற்ப அவரது பணி நிறைவேற்றப்பட்டதென்பதை காண்பிப்பது. (லூக்கா 4:16-19) லூக்காவில் காணக்கூடிய முக்கிய இயல்பாகும்.

   எசாயா 61:1இல் குறிப்பிடப்பட்டுள்ள மெசியாவின் பணியின் நோக்கமான ஏழைகளுக்கு நற்செய்தியைப் போதித்தல், பார்வையற்றோருக்கு பார்வை அளித்தல்(லூக் 18:35-43) அடிமைகள் வடுதலை பெறல் (லூக் 19:1-10) ஆகியன இயேசுவின் பணியின் வழியாக நிறைவேற்றப்பட்டதென்பதை லூக்கா எடுத்துக்காட்டுகிறார்.
2. மீட்பு என்பது முழு உலகிற்கும் உரித்தானது என்ற எண்ணக்கருவினை லூக்கா தனது ஆக்கத்தின் மூலம் சிறப்பாக முன்வைக்கிறார். அவ்வாறே இயேசுவின் பல்வேறு உணர்வுகளையும் மனப்பாங்குகளையும் வெளிக் கொணர்ந்து அன்றைய யூத சமூகத்தின் புறக்கணிக்கப்பட்ட மக்கள் குழுக்களுக்கு இரக்கம் காட்டிய இயேசு புதிய மனிதத்துவத்கைக் கொண்டுவந்துள்ளதாக தனது நற்செய்தியின் நிகழ்வுகள் வழியாக லூக்கா எடுத்துக்காட்டுகிறார். பெண்கள், பிள்ளைகள் (லூக். 18:15-17) வரிதண்டுவோர் (லூக்கா 19:1-10) தொழுநோயாளர் (லூக் 17:11-19) பாவிகள் (லூக் 7:36-50) ஆகிய அனைவரையும் இயேசு வரவேற்று, மனமாற்றத்தின் மூலம் மீட்பு உரித்தாகுமென தனது நூலின் வழியாக எடுத்துக்காட்டுகிறார்.
3. லூக்கா ஒரு வைத்தியரின் அனுபவத்தோடு குணப்படுத்தல் பற்றி விளக்கங்களை முன்வைக்கின்றார். இவர் இயேசுவால் குணமாக்கப்பட்ட அநேக நோயளர்களின் நிகழ்வுகளை முன்வைக்கின்றார்(லூக் 10:17) (லூக். 14:1-6). அவ்வாறே ஒலிவ மலையில் இறைத்தந்தையை வேண்டுகின்ற இயேசுவினால் இரத்த வியர்வை சிந்தப்பட்டதை கூறுவது நான்கு நற்செய்தியாளரில் லூக்கா மட்டுமேயாவார் (லூக். 22:44).
4. லூக்கா தனது நற்செய்தியை எழுதும்போது செப்துவாஜிந்துவில் காணப்படுகின்ற கிரேக்க மொழி நடையை பயன்படுத்துவது விசேட பண்பாகும். விசேடமாக வைத்தியத் தொழிலில் ஈடுபடுகின்ற ஒருவராக வைத்திய தொழிலோடு தொடர்புடைய பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதெனவும் மத்தேயு, மாற்கு நற்செய்திகளை விட உளம் கவரும் எளிமையான மொழியைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் தெளிவாகிறது.
5. கிரேக்க வரலாற்று அறிஞர்களோடு தொடர்புடைய அறிக்கை வடிவத்தை லூக்கா பயன்படுத்திருப்பது மிக அழகாய் உள்ளதென எடுத்துக்காட்டலாம். அதாவது தனது நற்செய்தியின் ஆரம்பமாக வரலாற்று அறிக்கையொன்றை முன்வைப்பதனால் இதன் சிறப்பை உறுதிப்படுத்தலாம் (லூக். 1:1-4).

### தூய யோவான் நற்செய்தி

- புதிய ஏற்பாட்டிலுள்ள நற்செய்தி நான்கிலும் வேறுவிதமாக முன்வைக்கப்பட்டுள்ள நற்செய்தி இதுவாகும்.
- மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நற்செய்தி மூன்றிலும் சமமான அமைப்பொன்று இருப்பினும், யோவான் நற்செய்தில் வேறொரு முறையையும் அமைப்பையும் பின்பற்றியுள்ளமை தெளிவாகும்.

### ஆசிரியத்துவம்

- உள்ளக சான்றுகளுககேற்ப இந்நற்செய்தியின் ஆசிரியர் யாரென்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள இயலாதுள்ளது.
- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வசன அமைப்புக்கள் வழியாக கூறப்படுவதைப் பார்க்கையில் ‘‘இயேசுவின் அன்புச் சீடன்’’ எனும் அமைப்பில் இந்நூலின் ஆசிரியரும் காட்டப்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது(யோவான் 21:24).
- இப்பெயர் இறையியல் ரீதியாக இந்நற்செய்தியோடு தொடர்புடைய முக்கிய எண்ணக்கருவாக மறை அறிஞர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இவர் செபதேயுவின் மகன் யாக்கோபுவின் சகோதரனான யோவான் எனவும் உணர்த்தப்படுகிறது (யோவான் 19:26, 13:23, 20:2-20) இவர் இயேசுவின் சில நிகழ்வுகளை தனது கண்களினால் பார்த்த சீடனாகவும், நற்செய்தியை எழுதிய ஆசிரியராகவும் குறிப்பிடப்படுகிறது (21:24).
- யோவான் நற்செய்தியிலே அவருடைய பெயர் குறிப்பிடப்படவில்லை.
- கிறிஸ்தவ சபைப் பாரம்பரியங்களால் ஏற்றுக்கொண்டதற்கமைய இயேசுவின் சீடன் யோவான் ஏனைய நற்செய்திகளின் பின்னர் தன்னால் எழுதப்பட்ட நற்செய்தி எபேசில் வெளிப்படுத்தப்பட்டுளதெனக் கூறியுள்ளதை திருச்சபைத் தந்தை இரேனியுஸ் தனது நூலில் குறிப்பிடுகிறார்.
- இரேனியுஸ் போன்ற திருச்சபைத் தந்தையர்கள் இத்தகவல்கள் ஸ்வர்னாவில் பொலிகார்ப்பிடமிருந்து பெற்றுக் கொண்டதாகக் கூறுகின்றனர்.
- இச்சான்றுகளுக்கேற்ப யோவான் நற்செய்தியின் ஆசிரியர் இயேசுவின் சீடனான இயேசுவின் அன்புச் சீடன் என அறிமுகப்பட்டுதப்பட்ட எபேசில் வாழ்ந்துவந்தவரும் தனது வயோதிப காலத்தில் நற்செய்தியொன்றினை வெளிப்படுத்தியவரும் என்பது பல மறை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

### காலம் இடம்

- இந்நற்செய்தி கி.பி 90-100ஆம் ஆண்டுகளுக்கிடையில் எழுதப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- புதிய ஏற்பாட்டில் இப்போதைக்கு கிடைக்கப்பட்டுள்ள மிகப்பழைய கையெழுத்துப் பிரதி கி.பி 110-125 களுக்கிடையிலான காலப்பகுதியைச் சேர்ந்ததென்பது பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். இது யோவான் நற்செய்தியின் பிரதியாகும்.
- முதலாம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியிலும் இரண்டாம் நூற்றாண்டிலும் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளான காலத்தில் இந்நற்செய்தி எதுதப்பட்டதென்பது விவிலிய அறிஞர்களின் கருத்தாகும்.

- புரிந்துகொள்ள முடியாத மெய்யியல் மற்றும் சமயப்பின்னணியில், கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன.

**நோக்கம்**

- இந்நற்செய்தியை எழுதுவதற்கான முக்கிய நோக்கமானது கிறிஸ்தவ மக்களின் ஆன்மீக, சமய தேவைகளை வழங்குவதாகும்.
- நம்பிக்கையினால் நிலைவாழ்வு உரிமையாகும் என்பதை விளக்குவதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும். இதனை பின்வரும் விவிலியப் பகுதியில் (யோவான் 20:31) காணலாம்.

  இதற்குப் பொருத்தமானதும் இணைந்ததும் துணையானதுமான மூன்று நோக்கங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

  1) யூதர்கள், யூத சட்டதிட்டங்களுக்கமைய எதிர்பார்த்த மெசியாவாக இயேசு இருக்கவில்லை. எனகவே அவர்களுடைய சான்றுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, யூத மக்கள் மெசியா இயேசு என்றும் அவர் யூத சட்டங்களை நிறைவு செய்பவர் என்றும், இயேசு மெசியா தனித்துவமானவர் என்பதை தெளிவுபடுத்தவதும் இந்நற்செய்தி வழியாக முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.
  2) திருமுழுக்கு யோவானையே மெசியா என்று எண்ணியிருந்த யூதர்களின் பிழையான கருத்தை இல்லாமற் செய்தல். இக்கருத்தை இல்லாமற் செய்து, இயேசு மிக உன்னதர் என்பதை திருமுழுக்கு யோவான் தாமாகவே ஏற்றுக் கொண்டார் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது (யோவான் 1:8-9, 3:30).
  3) கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கைக்குத் தைரியமூட்டல்.

     கிறிஸ்தவர்கள் தமது நம்பிக்கையை பாதுகாப்பதற்கும் நம்பிக்கையில் ஆழமாக வளரவும் இயேசு இறைமகன் என்பதை உறுதி செய்து அவருடைய அன்பிலே கட்டியெழுப்பப்படும் உலகிலே அவரே உயிரானவர் எனவும் வெளிப்படுத்துகிறது (யோவான் 3:16).

**யோவான் நற்செய்தி தொடர்பான மூலங்கள்**

- யோவான் நற்செய்திக்கு அடிப்படையாக அமைந்த மூலங்கள் பற்றி பல்வேறு கருத்துவேறுபாடுகள் இருந்த போதும், அதனைப் பற்றிக் கற்கும்போது விளக்கம் தருகின்ற பின்வரும் மூலங்களை காணலாம்.

  (அ) சமநோக்கு நற்செய்தியை மூலமாக பயன்படுத்தல்.

  இயேசுவின் வாழ்க்கை, பணி, பாடுகள் பற்றிய விபரங்கள் சமநோக்கு நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

  (ஆ) இயேசுவின் புதுமைகள் பற்றி எழுதப்பட்ட மூலங்கள் வழியாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.

  இறையாட்சியின் அடையாளங்களாக இயேசு செய்த புதுமைகள் பற்றி தகவல்களை ஏதோவொரு மூலத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதற்கான காரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

  (இ) இயேசுவின் பகிரங்க வாழ்க்கையோடு தொடர்புடைய தகவல்களை அவை நிகழ்ந்த பிரதேசங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட விசேட மூலத்திருந்து திரட்டி எடுத்தல்.

  விசேடமாக எருசலேம், யூதேயா, கலிலேயா ஆகிய பிரதேசங்களோடு தொடர்புடைய மூலங்கள் வழியாக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிகிறது.

(ஈ) யோவானின் அனுபவங்கள்

இயேசுவின் சீடனாக இருந்த இவர் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மற்றும் இறை வெளிப்பாடு அடிப்படையாகக் கொண்டுள்ளதைக் காணலாம்.

**நூலின் இயல்புகள்**

1) இயேசு யாரென்பதை உறுதி செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இயேசுவின் தனித்துவத்தை மேலும் உறுதி செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதென்பது தெளிவாகும்.

   (யோவான் 10:34-36) சுய வெளிப்பாட்டுக் கூற்று

2) விசேடமாக யூத மக்களை விளித்தல்

   யூத மக்களுக்கு விளங்கக் கூடியதாக நற்செய்தியை முன்வைப்பதற்கு ஆசிரியர் செயற்பட்டுள்ளார் என்பது தெரிகிறது.

   (யோவான் 1:1-18) யூதர் இயேசுவை, இறைமகனாக நம்பாமையால் ஏற்பட்ட கலகத்தை தீர்ப்பதற்கு இதன் வழியாக செயற்பட்டுள்ளமை தெளிவாகிறது.

3) யோவான் 1ம் அதிகாரத்தில் காணப்படும் முன்னுரைப் பாடல் கிரேக்க மொழியில் ‘லோகோஸ்’ (டுழபழள - வார்த்தை) எனும் இறையியல் எண்ணக்கரு இந்நற்செய்திக்கே உரித்தான தனித்துவமான பகுதியாகும்.

4) சமநோக்கு நற்செய்தகள் அற்புத செயல்களை புதுமை என்று அழைக்கின்றன. யோவான் இவற்றை ‘அருங்குறி’ (செமயோன்) என்று அழைப்பார்.

   கானாவில் திருமண வைபவத்தில் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றுதல் (யோவான் 2:1-11).

   அரச அலுவலரின் மகனைக் குணப்படுத்தல் (யோவான் 4:46-53)

   இலாசாரை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தல் (யோவான் 11:1-44)

   ஆகிய புதுமைகளை அருங்குறிகளாக முன்வைக்கிறார்.

5) ‘நான்’, ‘நானே’ என சுயவெளிப்படுத்தல் கூற்றுக்கள் பலவற்றை முன்வைத்தல் இன்னுமொரு சிறப்பம்சமாகும். அவை முக்கியத்துவம் பெறுவது இயேசுவின் இறைமகன் தன்மையை வெளிப்படுத்தும் அவரது விசேட கூற்றுக்களாக அவற்றை எடுத்துக்காட்டியுள்ளமையாகும். மறையறிஞர்கள் எடுத்துக்காட்டும் முறையில் அவை பழைய ஏற்பாட்டில் இறைவனின் சுயவெளிப்படுத்தல் பின்னணியில் முன்வைக்கப்பட்டுள்ளது. ‘இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே’ (விப 3:13).

   1. வாழ்வுதரும் உணவு (யோவான் 6:35)

      உலகின் ஒளி நானே (யோவான் 8:12)

      ஆடுகளுக்கு வாயில் நானே (யோவான் 10:7)

      நல்ல ஆயன் நானே (யோவான் 10:14)

      உயிர்தெழச்செய்வதும் வாழ்வு தருவதும் நானே (யோவான் 11:25)

      வழியும் உண்மையும் வாழ்வும் நானே (யோவான் 14:6)

      உண்மையான திராட்சைக் கொடி நானே (யோவான் 15:1)

   இவை முக்கியத்துவம் பெறுவது இயேசுவின் இறைமகன் தன்மையை வெளிப்படுத்தி அவரது விசேட கூற்றுக்களாக அவற்றை எடுத்துக்காட்டியிருப்பதன் காரணமாகவே ஆகும்.

- நற்செய்தி ஆசிரியர்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை பரப்புவதற்காக தமது நூல்களின் வழியாக எடுத்துள்ள முயற்சிகள் அளவற்றவையாகும். இந்நற்செய்தியின் ஒளியில் வாழ்க்கையை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டியது எல்லா கிறிஸ்தவ மக்களினதும் கடமையாகும். நற்செய்தியில் வாழ்ந்து தமது வாழ்வை பிறருக்கு நற்செய்தியாக வழங்குவதையே இக்கால கிறிஸ்தவ சந்ததியிடமிருந்து இறைவன் எதிர்பார்க்கின்றார். இதற்காகவே வாழ்வது எல்லா காலத்து கிறிஸ்தவர்களது கடமையும் பொறுப்பும் ஆகும்.

### 4.2.4 சமநோக்கு நற்செய்தி

**சமநோக்கு நற்செய்தி என்பது என்ன?**

- தமக்கே உரித்தான நோக்கங்கள் இருந்தபோதிலும், தாம் சேகரித்த தகவல்கள் இருந்தபோதரிலும் நான்கு நற்செய்தி நூல்களும் மாற்கு மத்தேயு லூக்கா ஆகியோரின் நற்செய்தி நூல்களில் ஒருவகை மேலோட்ட சமநோக்கு உள்ளமையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். மூன்று நற்செய்திகைளையும் தொகுத்த ஆசிரியர்கள் ஒருமித்த கண்ணோட்டத்துடன் தங்கள் நூல்களை படைத்தனர். நிகழ்ச்சிகளின் தொகுப்பு, செய்திகளின் உள்நோக்கம், சொற்களில் வடிவமைப் ஆகியவற்றில் சமநோக்கு உள்ளது.
- தூய மத்தேயு, தூய மாற்கு, தூய லூக்கா ஆகிய ஆசிரியர்களுக்கமைய எழுதப்பட்ட நற்செய்தி மூவடிவ குழுவைச் சார்ந்ததாக கூறப்படுகின்றது. இந்நற்செய்தி மூவடிவ குழுவினால் முன்வைக்கப்படுகின்ற ஒரே கதை என்பது மனுவுரு எடுத்த இறை மகன் இயேசுவை பற்றிய நற்செய்தியாகும்.
- அவருடைய பிறப்பு முதல், மரணம் உயிர்த்தெழுதல் வரையான கதைச்செய்தி முதலாவது முறை சமமான தகவல்களை எடுத்துக்காட்டுவதன் வழியாகவும் இன்னுமொரு முறை தமக்கென உரித்தான விசேட தகவல்களை வெளிக்காட்டுவதன் மூலம் இவ் ஆசிரியர்கள் முன்வைக்கின்றனர்.
- பாலஸ்தீனத்தின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரங்களின் அடிப்படையான இயேசுவின் வாழ்க்கையும் பணியும் மிகச்சிறப்பாக நற்செய்தியின் வழியாக பிரதிபலிக்கப்பட்டுள்ளது.
- காலத்திற்கு உகந்ததாகவும் காலத்தின் தேவையின் மீதும் வெளிக்காட்டப்பட்டுள்ள இயேசுவின் பணியிலே ஏழைகளுக்கும் சமூகத்தினால் ஒடுக்கப்பட்ட குழுவினருக்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டதென இந்நற்செய்தி வழியாக தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

**சமநோக்கு நற்செய்தியின் பிரச்சினை**

- சமநோக்கு நற்செய்திகளை ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடியதாயிருந்தபோதிலும் அங்கு வேறுகாரணிகளும் உள.
- இரண்டு நற்செய்திகள் மட்டுமே கூறுகின்ற செய்தியும் உண்டு. அவ்வாறே ஒவ்வொரு நற்செய்திக்கும் உரித்தான செய்திகளும் உண்டு.
- இவ்வாறக சமநோக்கு நற்செய்தி தொடர்பாக நிலவுகின்ற இந்நிலை ‘சமநோக்கு நற்செய்திப் பிரச்சினை’ என அழைக்கப்படுகின்றது.

**சமநோக்கு நற்செய்தி தொடர்பான பல்வேறு கருத்துக்கள்**


**1. வாய்மொழிப் பாரம்பரியமாக நிலவிய கதைகள்**

ஆரம்பகாலத்தில் திருத்தூதரினால் செய்யப்பட்ட போதனைகள், அவற்றுக்கு அடிப்படையான பல்வேறு பிரதேசங்களின் நடைமுறைகளுடனான அரமேய கிரேக்க மொழிகளினால் எழுதப்பட்ட செய்திகள் பின்னர் அவை மூன்று நற்செய்திகளாக தயாரிக்கப்பட்டதென கூறப்படுகிறது.

**2. முதலாவது நற்செய்தி மத்தேயு**


மத்தேயுவின் படி எழுதப்பட்ட நற்செய்தி முதலாவதாக எழுதப்பட்ட நற்செய்தி என்பதும் அதை கைந்நூலாக பயன்படுத்தி ஏனைய நற்செய்தி எழுதப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மேலும் மத்தேயு இயேசுவின் போதனைகளை அரமெயிக் மொழியில் எழுதியபின்னர் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்த்தகாகவும் அப்போதனைகளை நற்செய்திகளாக தயாரித்து ஆக்கியதாகவும் மேலும் இங்கு குறிப்பிடப்படுகிறது. இக்கருத்துக்களை உறுதி செய்வதற்காக சான்றுகள் இல்லையென்பதை அனேகமுறை விவிலிய அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

3. முதலாவதாக எழுதப்பட்ட மாற்கு நற்செய்தியானது மத்தேயு, லூக்கா நற்செய்தின் மூலமாக பயன்படுத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஆரம்பகாலத்தில் மாற்கு நற்செய்தி 'அப்போஸ்தலர் கைநூல்' என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.





**4. இரு மூலக்கொள்கை**

மாற்குவின் நற்செய்தியை கைந்நூலாக பயன்படுத்தி மத்தேயு, லூக்கா நற்செய்தி எழுதப்பட்டுள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக இருவரும் வேறு வெளிப்பாடுகளின் வழியாக தயாரித்தபோது மூலத்திலிருந்து காரணிகளை எடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த மூலத்திற்கு விசேட பெயர் குறிப்பிடப்படவில்லை எனினும் இது Q என அழைக்கப்படுகிறது. (Quelle ஜேர்மனிய மொழியில் ஊற்று) இது கி.பி 55க்கு முன்பிருந்தே நிலவிய மூலமாக இனங்காணப்பட்டுள்ளது. 1833ல் உவயிஸ் வழியாக இது முன்வைக்கப்பட்டுள்ளது. பின்பு எவ். ஜே. கொல்ஸ்மன் வழியாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.




5. நான்கு மூலக்கொள்கை

முதல் நற்செய்தியான மாற்கு நற்செய்தியிலிருந்து மத்தேயு, லூக்கா நற்செய்தி தங்களது நற்செய்திக்காக காரணிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக இவ்விரு நற்செய்திக்கு மட்டும் பொது காரணிகளை Q மூலத்திலிருந்து பெற்றுக்கொண்டதாக நம்பப்படுகிறது. இக்காரணிகளோடு மத்தேயு நற்செய்தி தனக்கு விசேடமாயுள்ள எழுத்தாக்கமொன்றிலிருந்து காரணிகளைப் பெற்றுள்ளதாகவும், லூக்கா தனக்கு விசேடமாயுள்ள மூலத்தின் எழுத்தாக்கத்தினைப் பயன்படுத்தியதாகவும் குறிப்பிடப்படுகிறது. மத்தேயுவிற்கு விசேடமாயுள்ள எழுத்தாக்கம் M மூலம் எனவும் லூக்காவிற்கு விசேடமாயுள்ள எழுத்தாக்கம் L மூலம் எனவும் அழைக்கப்பட்டுகிறது.




இக்கருத்துக்களைக் கற்பதனால் சமநோக்குப் பிரச்சினைக்கு அடிப்படையாயுள்ள காரணங்களை சிறப்பாக விளங்கிக்கொள்ளலாம்.

**சமநோக்கு நற்செய்திக்கு இடையேயுள்ள ஒற்றுமைகள்**

1. சமநோக்கு எழுத்தாசிரியர்கள் மூவரும் இயேசுவின் பணிக்கு முக்கிய இடத்தினை அளித்துள்ளனர். விசேடமாக கலிலேயப் பணியை வலியுறுத்தியுள்ளனர்.
2. இயேசுவின் பணி, போதனைகளில் முக்கிய தொனிப்பொருளான 'இறையாட்சி' பற்றி சமநோக்கு ஆசிரியர்கள் அனைவரும் தமது நற்செய்தியின் வழியாக முன்வைத்துள்ளனர். அவ்வாறே 'இறையாட்சி' எனும் சொல்லை மூவரும் பயன்படுத்தியுள்ளனர். இறையாட்சியை முன்வைப்பதற்காக உவமைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

3. இயேசு நோய்களைக் குணமாக்குதல் போன்ற சில நிகழ்வுகள் பெரும்பாலும் ஒரே சமமாக முன்வைத்துள்ளனர். உ + ம் : முடக்குவாதமுற்றவர்

(மத்தேயு 9:1-8, மாற்கு 2:1-12, லூக்கா 5:17-26) தீய ஆவிகளை விரட்டுதல் பற்றி விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் என்பன மூன்று நற்செய்திகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. நற்செய்தியின் ஆரம்பத்தில் இயேசுவின் மானிடத்தன்மையை வெளிப்படுத்துவதோடு தொடர்ந்து அவருடைய இறைத் தன்மையை வெளிக்கொணர்கிறது.
6. மாற்குவின் நற்செய்தியானது மூன்று நற்செய்திக்கும் பொதுக் கைநூலாக இருப்பதோடு, மூன்று நற்செய்திக்கும் பொதுவான 365 கூற்றுக்கள் மட்டில் இருப்பதாக மறையறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

**சமநோக்கு நற்செய்திக்கு இடையேயுள்ள வேற்றுமைகள்.**

1. நற்செய்தி ஆசிரியர்களின் நோக்கங்களுக்கு ஏற்ப நற்செய்தி தயாரிக்கப்பட்டுள்ளது.
2. சமநோக்கு நற்செய்தியின் சில நிகழ்வுகள் சமனாக சில நற்செய்திகளில் காணக்கூடியதாக இருப்பினும் வேறு சில நிகழ்வுகள் சில நற்செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

   உ + ம்: ஞானிகளின் வருகை பற்றிய நிகழ்வு மத்தேயு நற்செய்தியில் மட்டும் குறிப்பிடப்படுவதோடு (மத்தேயு 2:1-12) மாற்கு, லூக்கா நற்செய்திகளில் குறிப்பிடப்படவில்லை. மேலும் லூக்கா 1ல் குறிப்பிடப்பட்டுள்ள புகழ்ச்சிப் பாடல்கள் மத்தேயு, மாற்கு நற்செய்தியில் குறிப்பிடப்படவில்லை.
3. சமநோக்கு நற்செய்தி மூன்றும் கிரேக்க மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, ஆசிரியர்களின் எழுத்து நடையில் வேற்றுமைகளும் மொழி அறிவுக்கேற்ப, வேறுபர்டுகளைக் காணலாம். நற்செய்தி தயாரிப்பிலும் அமைப்பு காணமுடிவதில்லை.

   உ + ம்: மத்தேயு இயேசுவின் போதனைகள் 5 பகுதிகளாக்ப் பிரித்துக் காட்டுவதோடு ஏனைய சமநோக்கு நற்செய்தியில் இவ்வாறான அமைப்பைக் காண முடிவதில்லை.
4. ஆசிரியர்கள் ஈடுபடுத்திய மூலங்களில் வேற்றுமைகளும் மேலெழும். மத்தேயுவும் லூக்காவும் இயேசுவின் பிறப்பை எடுத்துக்காட்ட, மாற்கு இயேசுவின் பிறப்பின் தகவல்கள் எதனையும் எடுத்துக்காட்டுவதில்லை. இதற்கு காரணம் மத்தேயுவும் லூக்காவும் Q மூலத்தைப் பயன்படுத்தி உள்ளனர் என்பது விவிலிய அறிஞர் கருத்தாகும்.

**சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள்**

1. சமநோக்கு நற்செய்தி, யோவானின் நற்செய்தி ஆகிய இரண்டும் திருமுழுக்கு யோவானின் பணியை முன்வைத்தல், மற்றும் முதல் அதிகாரங்களில் இயேசு தனது பணியை ஆரம்பிப்பதற்கு முன் திருமுழுக்கு யோவான் சிறைப்படுத்தப்பட்டார் என்பதையும் காட்டுகிறது.
2. சமநோக்கு நற்செயதி மூன்றும் யோவானின் நற்செய்தி ஆகிய நான்கு நூல்களிலும் இயேசுவின் முதல் சீடர்கள் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.
3. ஐயாயிரம் பேருக்கு உணவு வழங்குதல், கடல்மீது நடத்தல் ஆகிய புதுமைகள் சமநோக்கு மற்றும் யோவான் ஆகிய நற்செய்தி யாவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
4. இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் தொடர்பான நிகழ்வுகள் சமநோக்கைப் போன்று யோவானின் நற்செய்தியிலும் முன்வைக்கப்படுகின்றது.

**சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்கும் இடையேயுள்ள வேற்றுமைகள்**

1. சநோக்கு நற்செய்திகளை விட யோவானின் நற்செய்தி ஆழமான இறையியலைக் கொண்டுள்ளது என்பது விவிலிய அறிஞர்களின் கருத்தாகும். அதன்படி நிலைவாழ்வு பற்றி கிறிஸ்தவர்களுக்கு முன்வைக்கப்படுகின்றது.
2. சமநோக்கு நற்செய்தி இயேசுவின் பணி கலிலேயாவை அண்டிய பிரதேசங்களில் நிகழ்ந்தன எனக் காட்டப்பட்டாலும் யோவானின் நற்செய்தியில் அவருடைய பணியோடு தொடர்பான யூதேயாவை அண்டிய நிகழ்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
3. சமநோக்கில் குறிப்பிடப்படாத தண்ணீரை திராட்சை இரசமாக்குதல், பெத்சதாவில் உடல் நலமற்றவர் நலமடைதல், பிறவியிலே பார்வை அற்றவர் பார்வை பெறல், இலாசரை மரணத்திலிருந்து உயிர்பெறச் செய்தமை ஆகிய அருங்குறிகள் யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.
4. சமநோக்கில் குறிப்பிடப்பட்டதற்கேற்ப இறையாட்சியின் கருப்பொருளைக் கற்பிப்பதற்காக இயேசு பயன்படுத்திய ஊடகமான உவமைகள் யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்படவில்லை. அதற்குப் பதிலாக நிலைவாழ்வு பற்றி பேசப்படுகிறது.
5. 'நான்' 'நானே' என்று இயேசு முன்வைக்கின்ற விசேட வெளிப்பாடுகள் 7 யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பினும் இவை சமநோக்கு நற்செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

## 4.2.5 திருத்தூதர் பணி நூல்

- இயேசுவின் விண்ணேற்றம் தொடக்கம் ஆரம்ப கிறிஸ்தவசபை உருவாகிய பின் 30 வருடங்கள் மட்டில் அதாவது பவுல் உரோமையில் சிறையில் இருந்தது வரையான் வரலாற்றுத்தகவல்கள் திருத்தூதர் பணி நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- உலகம் முழுவதும் நற்செய்தி (திப 1:8) விசேடமாக வடமத்திய தரைப் பிரதேசத்திற்கு குறுக்கே இப்போதுள்ள சிரியா, துருக்கி முழுவதும் நற்செய்தியின் பரம்பல் திருத்தூதர்பணி நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- தூய ஆவியானவர் பேதுரு, பவுல் ஆகிய திருத்தூதர்களின் வாழ்க்கையின் வழியாக செயலாற்றிய விதம் திருத்தூதுர்பணி நூலை வாசிக்கும்போது விளங்கிக் கொள்ளலாம்.
- புதிய ஏற்பாட்டில் மீட்பு வரலாற்றை வெளிப்படுத்தும் நூல் திருத்தூதர்பணி நூலாகும்.
- உயிர்த்தெழுந்த இயேசுவின் விண்ணேற்றத்தின் பின்னர் திருத்தூதர்கள் அடங்கிய ஆரம்ப சபையிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டது.
- ஆரம்பகாலசபை அப்பணியை நிறைவேற்றிய விதம் மிகச் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- லூக்கா நற்செய்தியின் இரண்டாவது பாகம் என இந்நூலை அறிமுகப்படுத்தலாம்.
- திருத்தூதுர்பணி நூல் ஆரம்பகால சபையின் வரலாற்றினை சிறப்பாக முன்வைக்கின்ற நூலாக இருப்பதோடு சிரேஷ்ட இறையியல் நூலாகவும் உள்ளது.
- எருசலேமில் ஆரம்பமாகி யூதேயா, சமாரியா வரையிலும் இதன்பின்னர் உலகின் இறுதி எல்லை வரையிலும் நற்செய்தியைப் பரப்புவதற்காக தூய ஆவியானவரின் செயற்பாட்டினுள் திருத்தூதர்களின் வாழ்க்கை அர்ப்பணத்தின் மூலம்செயலாற்றிய விதத்தினை திருத்தூதர்பணி நூலை வாசித்து அறிந்து கொள்வதில் இக்கால மறை தூதுப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு கிறிஸ்தவர்கள் பாரிய அனுபவத்தினை பெறலாம் என்பது தெளிவு.

### ஆசிரியத்துவம்

- நான்கு நற்செய்தி நூல்களைப்போலவே திருத்தூதர்பணி நூலும் ஆசிரியரை நேரடியாக வெளிப்படுத்தவில்லை.

- லூக்கா நற்செய்தியைப் போன்றே திருத்தூதுர்பணி நூலும் ஒரே ஆளுக்கு அதாவது தியோபில் என்ற அறிஞரான உரோமைய அதிகாரியை விளித்திருப்பதால் இப்பணி நூலின் ஆசிரியர பிற இனத்தவரும் வைத்தியருமான லூக்காவே என நம்பப்படுகிறது.
- லூக்கா நற்செய்தியின் வழியாக இயேசுவின் வாழ்க்கை வரலாறு அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் திருத்தூதர்பணி நூலில் ஆரம்பகால சபை தூய ஆவியின் செயற்பாட்டினால் நற்செய்தியைப் பரப்பவதற்கு எடுத்த முயற்சியை அவருக்கு விளக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுஎன்பது தெளிவாகிறது.
- கற்றவருடைய எழுத்து நடையினை பயன்படுத்தி சிரேஷ்ட வரலாற்றறிஞரின் பண்புகளை எடுத்துக்காட்டுவதன் வழியாக இந்நூல் வரையப்பட்டுள்ளது.
- பவுலோடு மறைத்தூது பணியில் இணைந்த லூக்கா தன் சொந்த அனுபவங்களின் உதவியோடு எழுதியுள்ள சிரேஷ்ட இறையியல் நூலாகத் திருத்தூதர்பணி நூலை காணலாம்.

## காலமும் இடமும்

- லூக்கா தனது நற்செய்தியின் இரண்டாம் பாகமாக திருத்தூதர்பணி நூலை எழுதியுள்ளார் என்பது விளக்கமாய் உள்ளது.
- கிறிஸ்தவ சபைகளுக்கு கொடூரமான துன்புறுத்தல்கள் ஏற்பட்ட காலத்தில் அதாவது, கி.பி 63-70 களுக்கு இடையலான காலப்பகுதியில் இது எழுதப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.
- திருத்தூதர்பணி நூலில் இறுதிக்கட்டத்திற்கு பின்னர் இரண்டு வருடங்கள் பவுல் சிறையிலிருந்தார் என்பது தெளிவாகும்.
- அவரை விடுதலை செய்வது அல்லது நீரோவின் துன்புறுத்தல் காலத்தில் மறைசாட்சியாக மரித்தல் பற்றிய தகவல்கள் எதுவும் இங்கு உள்ளடக்கப்படவில்லை. அதனால் திருத்தூதர்பணி நூல் உரோமையில் எழுதப்பட்டுள்ளதென்பதை மறை அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## நோக்கம்

- தூய ஆவியின் வருகையோடு ஆரம்பகால சபை உருவான விதமும், இதன் பின்னர் ஆரம்பகால சபை நற்செய்தியைப் பரப்புவதற்கு எடுத்த முயற்சிகள் பற்றிய சரியான காலத்துக்கேற்ற அறிக்கையொன்றின் வழியாக இறையியல் உண்மையை ஏற்றுக்கொள்வது இங்கு முக்கிய நோக்கமென்பது தெளிவாகிறது.

## நூலின் இயல்புகள்

1. திருத்தூதர்பணி நூல் பல வரலாற்றுக் காரணிகளைக் கொண்டுள்ளது.
   லூக்கா, திருத்தூதர் பணி நூலுக்காக பல வரலாற்று அறிக்கைகளை உள்ளடக்கியுள்ளார்..
2. திருத்தூதர் பணி நூலிலே பல போதனைகளை உள்ளடக்கியுள்ளமை விசேடமாயுள்ளது.
   பேதுருவின் போதனை (திப 2:14-47)
   பவுலின் போதனை (திப 17:16-34)
3. பிற இனத்தவருக்கு மத்தியில் நற்செய்தியினைக் கொண்டு செல்வது, நற்செய்தியைப் பரப்புவது பற்றி பல அறிக்கைகள் திருமுகங்கள் காணக்கூடியதாகவுள்ளன.
   உ + ம்: திப 11:1-18, திப 15:22-30
4. எழுத்து நடையில் ‘எலனிஸ்சம்’ (கிரேக்க) பின்பற்றுதல் மிகவும் மேலெழுந்துள்ளதைக் காணலாம். திப 17:4-5
5. அனுபவ ரீதியாக எழுதப்பட்டுள்ளமை என்பதும் தெளிவாயுள்ளது.
   உ + ம்: நாம், நாங்கள், சென்றோம் ஆகிய சொற்பிரயோகம் (திப 27:1-8)
6. கற்றோருக்குரிய மொழி பயன்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

**தேர்ச்சி** 4.0 :- கிறிஸ்துவே உலகிற்கு விடுதலை அளிப்பவர் என்பதை ஏற்று, அவருக்குச் சான்று பகர்வார்.

**தேர்ச்சி மட்டம்** 4:3 **:-** தூய பவுலைப் பின்பற்றி மறைதூதுப் பணியில் ஈடுபடுவார்.

**பாடவேளை :-** 20

**கற்றல் பேறுகள் :-**

- தூய பவுலின் மறைதூதுப்பணி பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- தூய பவுலின் வாழ்க்கை முன்மாதிரியினூடாக மறைத்தூதுப்பணிக்கு அயராது உழைக்க வேண்டுமென உணர்வார்.
- தூய பவுலின் மறைதூதுப்பணி பற்றி சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- தமது வாழ்வுச் சான்றினூடாக மறைப்போதகராகத் திகழ்வார்.
- மறை பகிர்வினூடாக ஏனையோரை இறையாட்சிக் அழைத்துச் செல்வார்.

## 4.3.1 தூய பவுலின் வாழ்க்கைப் பின்னணியும் மாற்றமும் (திப 7:58, 9:1-30, 11:25-30)

- கிறிஸ்தவ சபைக்கு முதன்மையான பணியினை நிறைவேற்றிய தூய பவுல் கி.பி 510 காலத்தில் சிலிசியாவின் தர்சு நகரில் பிறந்தாரென குறிப்பிடப்படுகிறது.
- சின்னாசியாவிலுள்ள முக்கிய வர்த்தக நகரமும் கலாச்சார மத்திய நிலையமுமாக கருதப்பட்ட தர்சு பல இன, பல்மதங்களைக் கொண்ட நகரமென இனங்கான முடிகின்றது.
- பெரும்பாலான மக்களைக் கொண்ட இநத பெரிய தர்சு நகரத்தை நோக்கி அநேகமான மக்களை கவர்ந்துள்ளமையானது கல்வி, தொழில்வாய்ப்பு ஆகிய விரும்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கேயாகும்.
- பாலஸ்தீனா முழுவதும் பரவியிருந்த யூதர்கள் பலர் அந்நிய எதிரிகளின் ஆக்கிரமிப்புக்களின் காரணமாக தர்சு நகருக்கு தப்பிச் சென்றதாக குறிப்பிடப்படுகிறது.
- எனவே தூய பவுல் பிறக்கின்ற காலத்தில் தர்சு பெரும்பான்மையான யூத மக்கள் சமூகத்துக்கு வீடுகளை அமைத்த நகரமாகியது.
- யூதர்கள் கிரேக்கப் பேரரசின் ஒருபகுதியினர் எனினும் பின்னர் அவர்களில் ஒரு பகுதியினர் கிரேக்க பேரரசினுள் பரவி இருந்தனர். தாய் நாட்டை விட்டுப்பிரிந்து இம்மக்கள் நாடு, இனம், மொழி, சமயம் மட்டில் இருந்த பிணைப்பிலிருந்து விலக வேண்டியதாயிற்று.
- இப்புலம் பெயர்ந்தவர்களுக்கு கிறிஸ்தவ சபையின் அடிப்படையைக் கட்டியெழுப்புவதற்கு பவுலுக்கு இலகுவாயிருந்தது. இவர்கள் எலனிஸ்த யூதர்களாவர்.
- இவ்வாறாக பாலஸ்தீனாவிலிருந்து புலம்பெயர்ந்து கிரேக்கப் பேரரசில் பரவியிருந்த (Diaspora) யூதர் பவுலுக்குந் சமனான நிலைக்குள்ளாயினர்.
- பென்யமின் குலத்தைச் சேர்ந்த யூத இன தந்தை ஒருவருக்கு பிறந்த பவுல் கிரேக்க மொழியைப்போன்று எபிரேய மொழியையும் சிறப்பாக அறிந்திருந்தவராவார். (திப 21:39, 22:2)
- சவுல், பவுல் எனும் இரு பெயர்களிலும் இவர் அழைக்கப்பட்டார்.
- பிற்காலத்தில் பிற இனத்தவர் மத்தியில் பணியாற்றும்போது அவர் பாவுலு / பவுலஸ் எனும் கிரேக்க / உரோமையப் பெயர்களைப் பிரயோகித்ததோடு கிரேக்க கலாச்சாரத்துக்கு ஏற்ப செயற்படுத்துவதற்கும் கிரேக்க மொழியில் கடிதங்களைத் தயாரிப்பதற்கும் அதன் வழியாக பெரிய வசதியும் ஏற்பட்டது.
- அக்காலத்தில் உரோமைய பெயர் ஒருவருக்கு இருப்பின் சமூகத்திலே வரவேற்புகிடைத்ததென்பது தெளிவாகிறது.

- தர்சில் கிரேக்க கலாச்சாரத்திகமைய வளர்ந்த போதிலும் யூத இனத்தவராக பவுல் தனது பரிசேய பெற்றோரினால் யூத கலாச்சாரத்தின் மதிப்பீடுகளையும், யூத கிராமிய அடிப்படைக் கலாச்சாரங்களையும் பழக்கவழக்கங்களையும் போன்றே கிரேக்க உரோமை பின்பற்றுதல்களும் அதிகமாயிருந்தன.
- ஐந்து வயதையடைந்த யூத ஆண் பிள்ளை ஒருவர் யூத சமயக் கல்வியில் ஈடுபடுத்தப்பட்டதற்கமைய பவுல் 12 வயதில் விசேட சமயத் திருவிழாவுக்காக எருசலேம் கோவிலுக்குச் செல்வதற்கும் தூய ஏடுகளையும் சட்ங்களையும் கற்பதற்கு தொழுகைக்கூட கல்விக்கும் தேவை ஏற்பட்டது.
- இளமைப் பருவத்தில் எருசலேமுக்குச் சென்று தலைமைச்சங்க உறுப்பினரான கமாலியேல் என்ற சட்ட அறிஞரும் ஆசிரியருமானவரின் கீழ் மேலதிக கற்கையைப் பவுல் பெற்றார்.
- பவுலின் தந்தை உரோமைய குடியுரிமையைப் பெற்றிருந்ததினால் பிறப்பில் உரோமைக் குடிமகனாவதற்குமான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.
- இது அவருடைய பிற்கால பணியை கருத்துள்ளதாக்குவதற்கும் இலகுவாக்குவதற்கும் பாரிய உதவியாக இருந்தது.
- உரோமைய குடியுரிமைக்கு உரிமை கோரப்படுகின்ற ஆட்களுக்காக உரிமைகோரல், பொருளாதார இலாபம் பெறுதல் ஆகிய பல சிறப்புரிமைகள் கிடைக்கின்றன.(திப 22:25-29
- இவர் அரமேயிக், கிரேக்கம் ஆகிய மொழிகளைப் பேசினார். உரோமைய குடிமகனாக கிரேக்க மொழியை அறிந்திருத்தல் அவர் பெற்ற கொடையாகும்.
- உரோமைய அரசுக்கு அளப்பெரிய பணியினை நிறைவேற்றிய தர்சு நகர் குடும்பங்களுக்கு நான்காவது பரம்பரை வரை உரோமைய குடியுரிமை வழங்கியது.
- தனது தந்தையின் வழியாக பவுலுக்கு இந்த உரோமைய குடியுரிமை உரிமையானது. இந்த குடியுரிமையைப் பெற்றவுடன் அவருக்கு உரோமைய பெயரினால் பெற்ற சிறப்புரிமை வெளிப்படுத்தப்பட்டது.
- பிற இனத்தவரிடையே பணியாற்றும்போது உரோமைய குடியுரிமை உரிமையானது எவ்வளவு முக்கியமானதென்று பிலிப்பிலே சிறையிலிருத்தல், உரோமைக்குச் செல்லுதல் வழியாகவும் விளங்குகின்றது (பிலிப்பியர் 1:7, திப 27:1)
- மக்கள் நிறைந்த வியாபார நகரமாயிருப்பதோடு கல்வியிலும் ஊறிப்போயிருந்த தர்சு நகரத்தில் பிறந்ததோடு அங்கு நிறுவப்பட்டிருந்த மிகச் சிறப்புவாய்ந்த பல்கலைக்கழகத்தாலும் கலாச்சார மத்திய நிலையத்தாலும் கவரப்பட்டு வருகைதந்த பல அறிஞர்கள், கல்விமான்கள், தத்துவஞானிகள் ஆகியோரோடு பழகும் வாய்ப்பு பவுலுக்குக் கிடைத்தது.
- அங்கு அவர்களின் கலாசாரம், மொழி, வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியன பற்றிய பல்வகை அறிவையும் பல அனுபவப் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்வதற்கு அவருக்குக் கிடைத்த சிறப்புரிமைகயைக் காரணமாகக் கொண்டு மொழி அறிஞராக விசேடமாக கிரேக்க, உரோமைய மொழிகளில் நிபுணர்துவம் பெறுவதும் பிற இனத்தவரின் அப்போஸ்தலர் என அழைக்கப்பட்டு பணியாற்றுவதற்கு வழிகோலியது (பிலிப்பியர் 3:5).
- யூத ஆண்பிள்ளையொன்று ஏதாவதொரு கைத்தொழிலில் பயிற்சியினை பெற்றிருத்தல் வேண்டும்.
- பவுல் தனது குடும்பத்தை பின்பற்றி அவர் கூடார கைத்தொழிலில் பயிற்சியினை பெற்றார் (தி.ப. 18:13).
- தர்சு நகரம் கூடாரக் கைத்தொழிலில் மிகவும் பிரசித்தி பெற்றதாகத் திகழ்ந்தது.
- தர்சு நகரின் மலைப் பகுதியை அண்டிய பகுதிகளில் கறுப்பு ஆடுகளை வளர்த்தல் பரவலாகக் காணப்பட்டது.
- இந்த கறுப்பு ஆடுகளிடமிருந்து பெறப்படுகின்ற உரோமங்களைக் கொண்டு ‘சிலிசியம்’ எனும் கடின துணியைப் போன்ற மறைப்புகள் நெய்யப்படுகின்றன.
- அவை மேற்சட்டை, காற்றுடைப்பான், கூடாரக் கைத்தொழிலுக்காகவும் பயன்படுத்தப்பட்டன.

- தர்சு நகரில் வாழ்ந்து கூடாரக் கைத்தொழிலில் சிறந்த தேர்ச்சியும் பயிற்சியும் பெற்றதன் காரணமாக கொரிந்தில் மறைதூதுப் பணியில் ஈடுபட்டதோடு, அக்கிலா, பிறிஸ்ல்லா எனும் இத்தாலிய இன தம்பதியரோடு இணைந்து இக்கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு பவுலுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதன் வழியாக சொந்த தேவைகளை பெறுவதன் பொருட்டு அவர் பின்வாங்கவில்லை.
- இவ்வாறான பின்னணியில் வாழ்ந்த பவுலின் வாழ்க்கையும் அனுபவங்களும் பிற்காலத்தில் பிற இனத்தவரின் அப்போஸ்தலராக மாபெரும் பணியினை நிறைவேற்றுவதற்கு இவருக்கு வழி கிடைக்கப்பெற்றதென்பது தெளிவாகின்றது.
- யூத சமயத்தில் கடுமையாக ஊறிப்போனவராக செயலாற்றிய பவுல் தனது சமயத்தைப் பாதுகாப்பதற்காக பின்வாங்கத் தயங்காத ஒருவராக செயற்பட்டார். இக்காலத்தில் இருந்த சமய வழியினைப் பின்பற்றுபவர்கள் அல்லது நசரேத் கட்சியினரென அழைக்கப்பட்ட குழுவொன்று இயேசு கிறிஸ்து எனும் ஒருவரை ஆராதனை செய்து சமூகத்தில் கொண்டு சென்ற இயக்கம் யூத சமயத்துக்கு எதிராகத் தமது சமயத்தைப் பரப்புவதற்கு அவர்கள் முயன்றதை பவுல் கண்டார்.
- எவ்வாறாயினும் அவர்களது முயற்சியை பயனற்றதாக்கி, தமது சமயத்தின் புனிதத்தன்மையை பாதுகாப்பதற்காக பவுல் தைரியமாகவும் அர்ப்பணிப்போடும் முன்வந்த விதம் திருவிவிலியத்தின் வழியாக மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
- இந்த நம்பிக்கையைச் சேர்ந்த ஸ்தேவான் எனும் ஒருவர் கல்லெறிந்து கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் கற்களை எறிகின்ற ஆட்களின் மேலுடையை பார்த்தக்கொள்ளும்படியும் (திப 7:57-60) அம்மரணத்தைப் பற்றிய மகிழ்ச்சியை காட்டுவதற்கும் (திப 8:1) சவுல் தைரியத்தோடு மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்காக செயற்பட்டார்.
- மேலும் ஸ்தேவானின் மரணத்தைப் பற்றி இறைபற்றுள்ள மக்கள் துக்கத்தினால் அழுது புலம்பும் சந்தர்ப்பத்தில் சவுல் தனது ஒரே நோக்கத்தை முதன்மையாக கொள்வதற்காக வீடு வீடாகச் சென்று இந்த இறைபற்றுள்ள ஆண்களையும் பெண்களையும் பிடித்து சிறையிலடைத்து இந்த இறைபற்றை அழிப்பதற்குத் துணிவுடையவராக இருந்தாரென்பதை திருத்தூதர்பணியில் காணலாம் (திப 8:2-3). இத்தோடு நிறத்திக்கொள்ளாத அவர் இயேசுவின் சீடர்களிடம் சென்று அவர்களுக்கு மரண அச்சுறுத்தல் செய்ததாகவும் கிறிஸ்தவ மறையைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் பிடித்து எருசலேம் கொண்டு வருவதற்கு தமஸ்குவிலுள்ள தொழுகைக் கூடத்துக்கு கொடுப்பதற்காக தலைமைக் குருவிடம் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிடப்படுகிறது (திப 9:1-2).
- கிறிஸ்தவர்களை ஒழிப்பதற்காக எருசலேமிலிருந்து தமஸ்குவை நோக்கிச் செல்கையில் பவுல் எதிர்கொண்ட நிகழ்வுகள் புதுமையானவைகளாகும்.
- திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஒளி, பயத்தினால் தரையில் விழ, ‘சவுலே சவுலே’ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய் என்றதும் உடனேயே கேட்ட சத்தம் அவர் எதிர்கொள்ளப்போகும் எதிர்பாராத நிகழ்வுகள் சிறப்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அதற்குப் பதிலாக ‘ஆண்டவரே, நீர் யார்’ என்று ஒருநாளும் அறிமுகமாகாத இயேசுவிற்கு பதிலளித்தார்.
- அன்று அந்த நிகழ்ச்சியினால் கிறிஸ்தவர்கள் வழிபட்ட இயேசுவோடு தனிப்பட்ட அனுபவத்தில் ஈடுபட்ட பவுலுக்கு இயலுமாக இருந்தது.
- கிறிஸ்தவ விசுவாசிகளோடு பிணைந்து இருக்கின்ற இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு இந்த அனுபவம் அடிப்படையாய் அமைந்தது. (திப 9:3-4).
- கிறிஸ்தவ நற்செய்தி பணியை அழிப்பதற்காக புறப்பட்ட முயற்சி கணப்பொழுதில் தோல்வியடையச் செய்து அதற்காக கிறிஸ்தவர்களின் இறைவனாகிய இயேசு கிறிஸ்துவுக்காக சுதந்திர மறைதூதுப்பணியில் ஈடுபடுவதற்கு அவருக்கு வழிபிறந்தது.
- கிறிஸ்துவின் பெயரை பிற இனத்தவருக்கும், அரசர்களுக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் கொண்டு செல்வதற்கு இறைவனால் தேர்தெடுக்கப்பட்ட கருவியாக செயல்படுவதற்கு

அழைப்புப் பெற்று இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை அர்த்தமுள்ள மாற்றத்திற்கு உட்படும் விதத்தில் உண்மையான மீட்பை விளங்கிக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

- தமஸ்குவில் நேர்த்தெரு யூதாசின் வீட்டில் இருக்கையிலே அவருக்கு அனனியா என்னும் பெயருடைய சீடரினால் கைகள் வைக்கப்பட்டு கண்களிலிருந்து செதில் போன்றவை விழவே அவர் பார்வை பெற்றார்.
- அவர் எழுந்து திருமுழுக்குப் பெற்று பின்னர் உணவு அருந்தியதும் வலிமை பெற்றார்.
- தூய ஆவியின் திருமுழுக்கு வழியாக வலிமை பெற்ற பவுல், கிறிஸ்தவர்கள் வழிபட்ட இயேசு இறைமகன் என்று போதித்து, தான் அழைக்கப்பட்ட விசேட மறைதூதுப்பணி அதாவது, நற்செய்தியை பிறருக்கு கொண்டு செல்லும் கருவியாக செயலாற்றத் தொடங்கியதாக திருத்தூதர் பணி நூலின் வழியாக விபரிக்கப்பட்டுள்ளது (திப 9:15).
- கிறிஸ்தவ மறையை அழிப்பதற்காக அவருடன் இணைந்த யூத மறையினருக்கு இது பெரிய புதிரானது. பவுலிடம் காணப்பட்ட சிந்தனை மாற்றமும் அதற்கமைய அவர் செய்த செயற்களை புரிந்துகொள்ள முடியாத மக்களிடமிருந்து அவரது உயிருக்கு அச்சுறுத்தலுக்கும் இலக்கானதைக் காணலாம். எப்படியாயினும் உயிர் அச்சுறுத்தலும் ஏற்பட்டது. எவ்வாறாயினும் உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் பர்ணபாவின் துணையுடன் எருசலேம் சபைக்கு வந்தார். எருசலேம் சபையாரிடம் அவர் அறிமுகப்படுத்தப்பட்டார். கிறிஸ்தவ மறையை அழிக்கும் நோக்குடன் புறப்பட்ட சவுல், அதே மறையை போதிக்கும் நோக்குடன் மீண்டும் தர்சு நோக்கிச் சென்றார்.
- அவருடைய எதிர்கால வாழ்க்கையிலே அது பயனளித்த விதம் திருத்தூதர்பணி நூலைப் படிக்கும்போது ஐயமின்றித் தெளிவாயுள்ளது.

### 4.3.2 தூய பவுலின் மறைதூதுப் பணி (திப13-20 அதிகாரங்கள்)

- கிறிஸ்தவராக தர்சு நகரத்துக்குச்சென்ற சவுல் கற்பிப்பதிலும் போதிப்பதிலும் கிறிஸ்தவ மறையை பரப்புகின்ற மறைதூதுப் பணிக்கு தோள்கொடுத்து செயற்பட்டார்.
- பவுல் தமஸ்கு, எருசலேம் கிறிஸ்தவ சகோதரத்துவத்துக்கு அறிமுகப்படுத்திய தூய ஆவியினால் முழுமையடைந்த நம்பிக்கையாளரான பர்னபா, அவரை சிரியாவின் அந்தியோக்கியாவிற்கு அழைத்து சென்றதாக திருவிவிலியத்தினூடாக தெளிவாகிறது. (திப 13:1-3)
- சிரியாவின் அந்தியோக்கியாவில் நிலவிய யூத, யூதரல்லாத அங்கத்தவர்களையுடைய கலப்புச் சபையில் பணியாற்றுவதற்கு பவுலுக்கு கதவுகள் திறக்கப்பட்டன.
- பர்னபா, நீகர் எனப்படும் சிமியோன், சிரேன் ஊர் லூக்கியு, மனாயின் ஆகியோர் இறைவாக்கினராகவும் ஆசிரியர்களாகவும் பணியில் ஈடுபட்டிருந்த இச்சபையில் இணைந்து கொள்வதற்கு பவுலுக்கும் இதன் வழியாக இயலுமாயிற்று.
- முதல்முறையாக கிறிஸ்தவம் என்ற பெயரில் சீடர்கள் சிரியாவின் அந்தியோக்கியாவில் அழைக்கப்பட்டனர். சிரியாவின் அந்தியோக்கிய சபை நோன்பு, செபம், திருத்தூதரின் போதனைகள், பணி, வழிபாடு, பங்கேற்பு ஆகிய செயற்பாடுகள் மக்களிடம் கொண்டு சென்று மக்களை தூய ஆவியின் வழிகாட்டலில் வளமூட்டுவதற்கு எடுத்த முயற்சி பாராட்டுக்குரியதாகும்.
- பவுலும் பர்னபாவும் சிரியாவில் அந்தியோக்கிய கிறிஸ்தவ சபையிலே செபத்தில் இருந்த போது, அவர்கள் உலகம் முழுவதும் மறைப்பணிக்கு அனுப்பிவைப்பதற்கு தூய ஆவியின் வழிகாட்டல் கிடைக்கப்பெற்றது.
- இதற்குச் சரியான பதிலளித்த அந்த சபை ஒன்றுகூடி ஒற்றுமையாக நோன்பிருந்து செபித்து தூய ஆவியின் வழிகாட்டலில் அவர்கள் இருவர் மீதும் கைகளை வைத்து அவர்களை குறிப்பிடப்பட்ட பணிக்காக அனுப்பிவைத்தாக திருத்தூதர் பணிநூலில் காண்கின்றோம். (திப 13:3)

- இவ்வாறாக பவுல் மூன்று மறைதூதுப் பயணங்களில் ஈடுபட்டு மறை பரப்பு செயலில் ஈடுபட்டதாக திருத்தூதர்பணிநூல் சான்று பகர்கின்றது.

## தூய பவுலின் முதலாவது மறைதூதுப்பயணம் (திப 13-14 அதிகாரங்கள்)

| | | |
|---|---|---|
| **பயணத்தில் பங்கு பற்றியோர்** | : | பவுல், பர்ணபா, யோவான் மாற்கு |
| **காலம்** | : | கி.பி 45-49 |
| **பயணத்தின் நோக்கம்** | : | அந்தியோக்கியாவின் சபையில் தூயஆவியாரின் வழிகாட்டலை உறுதி செய்து கொள்ளல் (திப 13:2) |
| **பயணத்த இடங்கள்** | : | செலுக்கியா → சைப்பிரதீஸ் தீவு → சாலமி → பாப்போ பம்பிலியா → பிசிதியாவின் அந்தியோக்கியா → இக்கோனியா → லிஸ்திரா → தெருபை → அத்தாவியா → சிரியாவின் அந்தியோக்கியா |

### செலுக்கியா (திப 13:4)

சிரியாவின் அந்தியோக்கியா துறைமுக நகரமான இங்கு கப்பலேறி பயணத்தை ஆரம்பித்தனர்.

### சைப்பிரஸ் தீவு (திப 13:4)

பர்னபாவின் பிறந்த நாடான இத்தீவில் மறைதூதுப்பணியினர் முதலாவது முறையாக வந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இங்கு அநேகமான யூத மக்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

### சாலமி (திப 13:5)

யூத தொழுகைக் கூடங்களில் நற்செய்தியைப் போதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை. இந்த மறைதூதுப்பணியை வலுவடையச் செய்வதற்காக யோவான் மாற்கு இணைந்ததாக கூறப்படுகிறது.

### பாப்போ (திப 13:6-12)

- இது சைப்பிரசின் தலைநகரமாகும்.
- செர்கியு பவுல் எனப்பட்ட அறிஞரான உரோமைய ஆட்சியாளருடனிருந்த மந்திரவாதியும் போலி இறைவாக்கினனான பாரேசு எனப்பட்ட யூத இனத்தவன் இங்கு பவுலையும் அவர் உடனிருந்த மறைதூதுவர்களையும் சந்தித்தான்.
- செர்கியு பவுல் நற்செய்தியை ஏற்றுகொள்வதற்கு விருப்பமாயிருந்ததோடு அதனைத் தடுத்துச் செயற்பட்ட அலிமா மாகோஸ் என்ற கிரேக்க பெயரில் அழைக்கப்பட்ட பாரேசு, பவுலால் பழிபாவத்திற்கு அஞ்சாத அலகையின் மகனே என அழைக்கப்பட்டோடு இறைவனுடைய வழியை பிழையான வழிக்குத் திருப்புவதற்கு செயற்பட அவன் இருள் சூழப்பட்டான்.
- உடனே அவன் பார்வை மங்கியது. இருள் சூழ்ந்தது.
- இதனைக் கண்ட உரோமைய ஆட்சியாளன் ஆண்வருடைய போதனையில் வியப்புற்று அதனை ஏற்றுக் கொண்டு புதுவாழ்வில் நுழைந்தான்.
- தூய ஆவியாரின் வல்லமையால் தைரியமடைந்த பவுலும் பர்னபாவும் தீமையைப் புறந்தள்ளி நல்லதை வெளிக்கொணர்ந்த விதம் அனைவருக்கும் ஒரு முன்மாதிரிகையாகும்.

### பம்பிலியா (திப 13:13)

- யோவான் மாற்கு மறைதூதுப் பணியிலிருந்து பிரிந்து மீண்டும் திரும்பிப் போனார்.

- எனினும் அவர் பர்னபாவுடன் சேர்ந்து சைப்பிரசை நோக்கிச் சென்றதாக திருவிவிலியம் சான்று பகர்கின்றது (கொலோசையர் 4:10).

  முதலாவது பயணத்தில் துணிவை இழந்தபோதிலும் பின்னர் யோவான் மாற்கு பவுலோடு சேர்ந்த விதம் திருமுகத்தில் குறிப்படப்பட்டுள்ளது. யோவான் மாற்கு திரும்பிப் போனாலும் பவுலும் பர்னபாவும் கூட்டு தலைமைத்துவத்துடன் மறைதூதுப் பணியை முன்னெடுத்துச் சென்றதாகத் தெரிகிறது.

## பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியா (திப 13:14)

- பாரிய வர்த்தக நகரமாகிய இந்நகரில் பெருமளவு மக்கள் வாழ்ந்தனர்.
- முதலாவது ஓய்வு நாளில் இங்குள்ள தொழுகைக் கூடத்திற்கு வருகைதந்த பவுலும் பர்னபாவும் இஸ்ரயேல் வரலாற்றை எடுத்துரைக்கும் நீண்ட போதனையொன்றை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது.
- இறைவன் எகிப்தில் அந்நியராயிருந்த இஸ்ரயேல் மக்களை உயர்த்தி தனது கரங்களால் விடுதலை அளித்தல்.
- நாற்பது வருடங்கள் பாலைநிலத்தில் அவர்களை நடத்திச்சென்று கானான் நாட்டை அவர்களுக்கு உரிமையாக்கிக் கொடுத்தல்.
- இறைவாக்கினர் சாமுவேல் வரையான நீதித்தலைவர்களைக் கொடுத்தல்.
- அவருடைய இஸ்ரயேல் அரசாட்சியை ஆரம்பித்து அதனை சவுல், தாவீது ஆகியோரினால் அதனை முன்னெடுத்துச் செல்லல்.
- தாவீதின் பரம்பரையிலிருந்து இயேசுவை மீட்பராகக் கொடுத்தல்.
- அவருடைய வழியை ஆயத்தம் செய்ய திருமுழுக்கு யோவான் வருகைதரல்.
- இயேசு சிலுவையில் கொல்லப்படுதல்.
- அவர் இறைவனால் மூன்றாம் நாள் உயிர்தெழுதல்.
- அவரில் நம்பிக்கை கொண்டோருக்கு மீட்பு உரிமையாதல்

  ஆகிய மறைக்காரணங்களுடன் பவுலின் மறையுரை முடிவடைந்தது.
- அடுத்த ஓய்வு நாளிலும் மறையுரை நிகழ்த்துவதற்கு அவர் அழைப்பினைப் பெற்றார். பெரும்பாலானோர் மறையைத் தழுவினர்.
- மீண்டும் இரண்டாம் ஓய்வு நாளிலும் நற்செய்தியை வெளிப்படுத்தியதால் பெரும்பாலான மக்கள் அவர்களை பின்பற்றியதோடு இதன் காரணமாக யூதர் பொறாமையினால் நிறைந்து அவர்களுக்கு எதிராக எழுந்தமையால் அவர்களை துன்புறுத்துதல்களுக்கு உள்ளாக்குவதற்கு முயன்றபோதும் அவர்கள் துணிவோடு பேசியமையினால் பிற இனத்தவர் மத்தியில் செல்வதகான காரணத்தை விளங்கப்படுத்தினர்.
- தூய ஆவியாரின் வல்லமையினால் வெற்றி பெற்று முன்னோக்கிச் சென்றனர். சவால்களுக்கு தைரியத்தோடு முகங்கொடுத்ததோடு அவர்கள் நற்செய்தியை பரப்புகின்ற செயலில் ஈடுபட்டனர்.

## இக்கோனியா

- இக்கோனியாவின் தொழுகைக் கூடங்களில் நற்செய்தியைப் பகிர்ந்து கொண்ட பவுல், பர்னபா பெரும்பாலான யூத கிரேக்க மக்களின் மீட்புக்கு வழி கோரினர்.
- நம்பிக்கை கொள்ளாத யூதர்கள் கலகங்களை ஏற்படுத்தினாலும் தூய ஆவியாரின் வல்லமைக்குள் எல்லாத் தடைகளையும் வெற்றியீட்டுவதற்கு இறைவல்லமையை எடுத்துக் காட்டுகின்ற புதுமைகளை தைரியத்தோடு நிகழ்த்துவதற்கு அவர்களால் இயலுமாயிற்று.
- அந்நகரத்தின் மக்கள் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி யூதரின் பக்கமாகவும் இன்னுமொரு பகுதி பவுல் பர்னபாவின் பக்கமாகவும் இருந்தனர்.

- துன்புறுத்தல்கள் அதிகரித்தபோது தைரியத்தோடு அவர்கள் ஏனைய நகரங்களை நோக்கி பயணம் செய்து நற்செய்தியைப் பரப்பினர்.

## லிஸ்திரா (திப 14:8-20)

- லிக்கவோனியாவை சேர்ந்த நகரமான லிஸ்திராவில் பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரை நலம்பெறச் செய்ததால் பவுலுக்கும் பர்னபாவுக்கும் தெய்வங்கள் என்ற கௌரவம் வழங்குவதற்கும் லிஸ்திரா மக்கள் முயன்றனர். 'தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கிறார்கள் எனக்கூறி பர்னபாவை சேயுசு என்றும் பவுலை எர்மசு என அழைக்க முயற்சி செய்தனர்.
- அதே போன்று பலியிடவும் முயற்சி செய்தனர்.
- இச் சந்தர்ப்பத்தில், இறைவனுக்குரிய கௌரவத்தை மனிதன் ஒருபோதும் உரிமையாக்கிக் கொள்ளக் கூடாதென்று பவுல் கடுமையாக தெளிவுபடுத்தினார்.
- நாங்களும் உங்களைப்போன்ற மனிதர்களே எனக் கூறிக்கொண்டு தமது மேலுடைகளை கிழித்துக் கொண்டு இச்செயல்களின் பயனற்ற தன்மையை விளக்குவதற்கு முயற்சி செய்தார்.
- பலியிடுவதிலிருந்து கஷ்டப்பட்டு மக்களை தடுத்தெடுத்ததோடு அந்தியோக்கியா, இக்கோனியாவிலிருந்து வருகைதந்த யூதர்கள் பவுலுக்கு கல்லெறிந்து அவரைக் கொன்றதாக எண்ணி அவரை நகரிலிருந்து வெளியே இழுத்துப் போட்டனர்.
- எனினும் சீடர்கள் அவர்களை சுற்றி ஒன்றுகூடி அவர்களுக்கு பாதுகாப்பை வழங்கியதோர்டு அடுத்தநாள் பர்னபாவுடன் அவர் தெருபை நோக்கி புறப்பட்டனர்.
- இந்நகரில் பெரும்பாலான இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டபோதும் அதனால் தைரியத்தை இழக்காமல் பயணத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அவர்களால் இயலுமாயிருந்தது.
- தூய ஆவியானவருக்குள் வலிமைபெற்ற மறைதூதுவர்களுக்கு இன்னல்கள் மத்தியில் பணியாற்றுவதற்கு முடியும் என்பதை அவர்கள் மிகத்தெளிவாகத் தெரிவித்தனர்.

## தெருபை (திப 14:21)

- லிஸ்திராவில் துன்பங்களின் பின்னர் தெருபை நோக்கிச் சென்ற பவுலுக்கும் பர்னபாவுக்கும் இங்கு நற்செய்தியைப் போதித்தமையால் பலர் கிறிஸ்தவ சீடர்களாக மாறுவதற்கான வாய்ப்புக் கிட்டியது.

## மீண்டும் திரும்புதல் (திப 14:22-28)

- தெருபை → லிஸ்திரா → இக்கோனியா → பிசிதியாவின் அந்தியோக்கியா → பம்பிலியின் பெருகை
- அந் நகரங்களில் சபைகளை நிறுவி அச்சபைகளில் செயலாற்ற தலைவர்களை நியமித்தனர்.
- இவற்றின் வழியாக இறையாட்சிக்காக வேதனைகளை அனுபவிக்கும் தேவையை அங்கு விளக்குவதன் மூலம் நற்செய்தியின் வழியாக மக்களைத் தைரியப்படுத்துவதற்கு அவர் மறக்கவில்லை.
- அத்தாலியாவிலிருந்து கப்பலேறி மீண்டும் சிரியாவின் அந்தியோக்கியாவை நோக்கி வந்த பவுலும் பர்னபாவும் தம்மை மறைதூதுப் பணிக்காக அனுப்பிவைத்த சிரியாவின் அந்தியோக்கிய சபையில் மறைதூதுப் பயணத்தின்போது நற்செய்தியை பரப்புவதற்கு அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயல்கள் பற்றிய அறிக்கையொன்றினை முன்வைப்பதன் வழியாக இறைவனுக்கு நன்றி கூறினர்.

## எருசலேம் சங்கம் (திப 15:1-35)

| | | |
|---|---|---|
| காலம் | : | கிபி 50 |
| இடம் | : | எருசலேம் |
| கூடியிருந்த அங்கத்தவர்கள் | : | பேதுரு, யாக்கோபு, பவுல், பர்னபா ஆகிய திருத்தூதர்கள், சபை மூப்பர்கள், யூதர்கள், பரிசேயர் |
| சங்கத்தின் தலைவர் | : | யாக்கோபு |
| கூடுவதற்கான பிரச்சினைகள் | : | சபையில் சேர்கின்ற பிற இனத்தவர் விருத்தசேதனம் செய்யவேண்டுமா? என்பதற்கான தீர்வினைத் தேடுதல். |

முறைகள் **:** கருத்துக்களை தெரிவிப்பதற்கு நீண்ட விவாதத்திற்கான வசதி வாய்ப்புக்கள் வழக்கப்பட்டிருத்தல்.

- வாத எதிர்வாதத்திற்கான சந்தர்ப்பத்தை திட்டமிடல்
- பேதுரு சபையை விளித்தல்
- யூதர்களுக்கும் பிற இனத்தவருக்கும் இறைவன் தூய ஆவியரை வழங்கினார் என்பதையும் நம்பிக்கையை காரணமாகக் கொண்டு பிறவினத்தவரின் மனத்தினை தூய்மைப்படுத்தியதாக சபையில் முன்வைத்தல்.
- மேலும் யூதரைப்போன்று பிற இனத்தவரும் மீட்படைவது இயேசுவின் அருளால் என்பதை நம்பவதற்கு சபைக்கு அழைப்பு விடுத்தல்.
- பவுலும் பர்னபாவும் தம்மைக் கொண்டு இறைவன் பிற இனத்தவர் மத்தியில் நிகழ்த்திய மகிமையான புதுமையான விடயங்கள் அடையாளங்கள் பற்றியதுமான கருத்துக்களை வலியுறுத்தல்.
- யாக்கோபு பேதுருவின் பேச்சை ஆமோதித்து இறைவாக்கினரின் வார்த்தைகளில் அறிவுரை வழங்குதல்.

யாக்கோபுவினால் வழங்கப்பட்ட இறுதித் தீர்மானம்

- பிற இனத்தவருக்கு இடையூறு விளைவிப்பதை இறுதித் நிறுத்துதல். பிற இனத்தவர்களுக்கு அனுப்பப்படும் திருமுகங்களின் வழியாக கீழ்வரும் தீர்மானங்களை அறிவித்தல்.
- சிலைகளுக்கு படைக்கப்பட்டவைகளை உண்ணுவதைத் தவிர்த்தல். தகாத உறவுகளைத் தவிர்த்தல். கழுத்து நெரிக்கப்ப்பட்டு செத்த மிருகங்களின் இறைச்சியை உண்ணாதிருத்தல். இரத்தத்தையும் தவிர்த்தல். (திப 15:20)
- திருத்தூதுர், மூப்பர்கள் ஆகியோரின் அனுமதி கிடைக்காத போதும் சிலர் அவர்களை குழப்ப அவர்களுடைய மனதில் குழப்பத்தினை ஏற்படுத்துவது என்பனவற்றை நிறுத்துதல்.
- இது மோசே முன்வைத்த சட்டத்தையும் விட ஆழமான உடன்பாடுடையதாக விளங்குகிறது.

| | |
|---|---|
| திருமுகங்களைக் கொண்டு செல்ல தேர்ந்தெடுக்கப்பட்வர்கள். | • பவுல் பர்னபா இறைவாக்கினரான பர்சபா எனப்பட்ட யூதாஸ், சீலா |
| திருமுகத்தைப் பெறுபவர்கள் | • அந்தியோக்கியா, சிரியா, சிலிசியா ஆகிய இடங்களில் வசிக்கும் பிற இன கிறிஸ்தவ சகோதரர்கள் |
| திருமுகம் கிடைக்கப் பெற்றவர்களின் பதில் | • இத்திருமுகங்களைக் குறித்து மகிழ்ச்சியடைதல். |
| எருசலேம் சங்கம் கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய முன்மாதிரிகைகள் | • பிரச்சனைகள் முரண்பாடுகள், சவால்கள் மத்தியில் நலிவடையாது ஒற்றுமையாக அச்சவால்களுக்கு முகங்கொடுத்து கலந்துரையாடி பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளல் சரியான தீர்மானங்களை எடுக்க முயற்சி செய்தல். |

## தூய பவுலின் இரண்டாவது மறைதூதுப் பயணம் (திப 15:36-18:22)

**பயணத்தில் பங்கு பற்றியோர்** : பவுல், சீலா, திமொத்தேயு, லூக்கா

**காலம்** : கி.பி 49-52

**பயணத்தின் நோக்கம்** : முதலாவது பயணத்தின் இறுதிக்கட்டத்தில் நிறுவப்பட்ட சபைகளை மீண்டும் சந்தித்தல். இறை பற்றுள்ள-வர்களை கிறிஸ்தவ நம்பிக்கையில் வலிமைபெறச் செய்தல், எருசலேம் சங்கத்தின் தீர்மானங்களை சபைகளுக்கு அறிவித்தல்.

**பயணத்திற்கான இடங்கள்** : சிரியாவின் அந்தியோக்கியா → தெருபை → லீஸ்திரா → துரோவா → பிலிப்பி → தெசலோகிக்கா → பெரேயா → எதென்ஸ் → கொரிந்து → எபேசு → கொங்கிரேயா → சிரியாவின் அந்தியோக்கியா.
(திபா 15:36-16:7)

- முதலாவது பயணத்தில் பங்குபற்றிய பம்பிலியாவின் பெருகையில் திரும்பிச்சென்ற யோவான் மாற்கு தொடர்பாக பவுல் பர்னபாவுக்கிடையே கருத்து வேறுபாட்டின் காரணமாக, பவுல், யோவான் மாற்குவை இரண்டாவது மறைதூதுப் பயணத்தில் பங்குபற்ற செய்ய விரும்பாதமையால் பர்னபா யோவான் மாற்குவுடன் மீண்டும் சைப்பிரஸ்சை நோக்கி புறப்பட்டதோடு உரோமைய குடிமகனும் இறைவாக்கினருமாகிய சீலா பவுலுடன் சேர்ந்தார் (திபா 15:40). தெருபையில் சபையை வலிமையடையச் செய்து புறப்பட்டுச் சென்ற அவர்கள் இருவரும் லீஸ்திராவில் திமொத்தேயு எனப்படும் கிரேக்க கிறிஸ்தவரொருவர் இணைந்ததோடு (திப 16:1-3) யூதேய மறைதூதுப் பணியில் பிரச்சினைகள் எழாதவாறு பவுலால் கிரேக்க கிறிஸ்தவரான திமொத்தேயு விருத்தசேதனம் செய்யப்பட்டார்.
- ஆசியாவில் வார்த்தையைப் போதிக்வேண்டாமென தூய ஆவியாரின் வழியாக தடுக்கப்பட்டதோடு, பிரிகியா, கலாத்தியா பகுதிகளைக் கடந்துசென்று பித்தினியாவுக்குச் செல்வது தடை செய்யப்பட்டது.
- ஆகவே அவர்கள் மீசியாவைக் கடந்து சென்று துரோவாவை சென்றடைந்தனர்.

**துரோவா (திப 16:8-16)**

- பவுல் இங்கு காட்சியொன்றை கண்டார்.
- ஆசியாவுக்குப் பதிலாக ஐரோப்பாவுக்குச் செல்வதற்கு அங்கு வழிகாட்டப்பட்டது.
- பவுலின் மறைதூதுப்பயணத்தின்போது தூய ஆவியானவரின் வழிகாட்டலின்படி திட்டமிட்டவாறு அது சிறப்பான சான்றாக உள்ளது.
- பவுலின் பெறுபேறாக மாசிதோனியாவுக்கு பயணம் சென்றார். மறைதூதுப் பணிக்காக லூக்கா அவர்களோடு இணைந்தார்.
- தொழிலின் வைத்தியரான லூக்காவின் பணி சபைக்குப் பெரிய உதவியாய் இருந்தமை தெளிவாகிறது.

**பிலிப்பி (திப 16:11-12)**

- மாசிதோனியாவின் முக்கிய நகரமும் உரோமையக் குடியேற்ற நாடாகிய பிலிப்பியில் பெரும்பாலான யூத மக்கள் வாழ்ந்தனர்.

**முதலாவது நிகழ்வு (திப16:13-15)**

- லிதியா எனப்படும் தியத்திரா நகரிலிருந்து வந்த செந்நிற ஆடை விற்பதில் ஈடுபட்டிருந்த பக்தியுள்ள பெண் ஒருவர் ஆற்றங்கரையிலேயே செபிக்கும் இடத்தில் பவுலையும் சீலாவையும் சந்தித்ததோடு அவர் இறைவனில் திருமுழுக்குப் பெற்றார்.
- பவுலின் பிலிப்பிய மறைதூதுப்பணியின் மத்திய நிலையமாக அவர் கேட்டுக்கொண்டதற்கமைய அவருடைய வீடு தேர்ந்தெடுக்கப்பட்டது.
- லிதியாவின் வீடு சபையின் இல்லச்சபையாகும்வரை வளர்ச்சியடைந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

**இரண்டாவது நிகழ்வு (திப 16:16-22)**

- தனது எசமானருக்கு மிகுதியான வருவாயை தேடித்தந்த ஆவியை தமக்குள் கொண்டிருந்த குறிசொல்லும் அடிமைப் பெண்ணிணை அவர்கள் சந்தித்ததோடு, அவள் பவுலையும் சீலாவையும் உன்னத கடவுளின் பணியாளர்கள், மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறவர்க்ள என அறிமுகம் செய்தார்.
- பவுல் அந்த ஆவியை அப்பெண்ணிலிருந்து விலகிச் செல்லுமாறு கட்டளையிட்டதோடு தமது வருமான வாய்ப்புக்கள் நின்றுவிட்டதாக கண்ட அவருடைய எசமானர்கள் தமது வருமானம் வீழ்ச்சியடைந்ததைக் கண்டு பவுலுக்கும் சீலாவுக்கும் எதிராக பொய்க்குற்றம் சாட்டினர். அவர்கள் வெளிப்படுத்தியது உரோமையரான அவர்களால் ஏற்றுக்கொள்ளவும் முடியாத சட்ட விரோத பழக்கவழக்கங்களை இவர்கள் கற்பிக்கின்றனர் என்பதாகும்.
- அதனால் அவர்களை சிறையில் அடைக்க நடவடிக்கை எடுத்தனர். நற்செய்திக்காக துன்புறும் சவால்களுக்கும் அவர்கள் முகங்கொடுத்தனர்.

**மூன்றாவது நிகழ்வு (திப 16:23-34)**

- அவர்களை நன்கு அடித்து சிறையில்தள்ளி காவல் காத்தனர்.
- இறைவனுக்குள் தைரியத்தையும் வலிமையையும் பெற்று நள்ளிரவில் இறைவனுக்குப் புகழ்பாடிக்கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட நில நடுக்கத்தின் காரணமாக சிறைக்கூடத்தின் அடித்தளம் அதிர்ந்து சிறையின் கதவுகள் திறக்கபட்டு சிறைப்பட்டோரின் கட்டுகள் அவிழ்ந்தது. சிறைக்காலவர் சிறைக் கைதிகள் தப்பியோடியிருப்பார்கள் என நினைத்து தற்கொலை செய்வதற்கு முயற்சி செய்தபோது பவுல் அதனைத் தடுத்து நிறுத்தினார்.

- அப்போது சிறைக் காவலர் பவுல், சீலா ஆகியோரின் காலில் விழுந்து மீட்படைய என்ன செய்ய வேண்டுமென்று அவர்களைக் கேட்டார்.
- ஆண்வராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும்படி அவர்கள் கூறவே சிறைக் காவலரும் அவருடைய குடும்பத்தினரும் இயேசுவின் மேல் நம்பிக்கை கொண்டனர்.
- அவரும் அவரது குடும்பத்தினரும் திருமுழுக்குப் பெற்றதோடு, தூய ஆவியாரின் மகிழ்ச்சி அவ்வீட்டில் உண்டானது,

## நான்காவது நிகழ்வு (திப 16:35-40)

- வழக்கு விசாரணையிலிருந்து நீக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பவுலையும் சீலாவையும் இரகசியமாக சிறையிலிருந்து அனுப்புவதற்கு அவ்வதிகாரிகள் செயற்பட்ட சந்தர்ப்பத்தில் பவுல் தூய ஆவியின் தைரியத்துடன் அவர்களின் சொந்த விருப்பத்தின் செயற்பாட்டுக்கு எதிராக எழுந்தனர்.
- அப்பேர்து தலைமை நடுவர்கள் வந்து அவர்களிடம் மன்னிப்புக் கோரி புறப்பட செய்தனர்.
- தூய ஆவியின் வழிகாட்டல் தைரியத்தில் துன்பங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து நற்செய்திப் பணியில் ஈடுபடுதல் விசேடமாக பிலிப்பியின் மறைதூதுப் பணியின்போது வெளிப்படையாகத் தெரிகிறது.

## தெசலோனிக்கா (திப 17:1-9)

- மூன்று ஓய்வு நாள்கள் தொழுகைக் கூடங்களில் போதித்ததோடு பொறாமையினால் நிரம்பிய யூதர்களில் பெரும்பான்மையான மக்கள் இறைவனில் நம்பிக்கை கொண்டனர்.
- அத்தோடு கிரேக்க ஆண்களும் பெண்களுமாக சிலரும் அடங்குவர். எனினும் யூதரின் துனபுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க அவர்களுக்கு நேரிட்டது.
- பொல்லாதவர்களைக் கொண்டு யாசோனின் வீட்டிலிருந்து பவுலை வெளியேற்றுவதற்கு முயன்றதோடு அவ்வாறு இயலாமல் போகையில் யாசோனையும் ஏனைய சகோதரர்களையும் பிடித்துக்கொண்டு நகராட்சி மன்றத்திற்கு இழுத்துச்சென்று ‘உலகமெங்கும் கலகம் உண்டாக்குகிற இவர்களை இங்கேயும் வந்துவிட்டார்கள்’ என்று கூறினர்.
- அவ்வாறே இயேசு என்னும் இன்னொரு அரசர் இருப்பதாகக் கூறிக்கொண்டு சீசர் பேரரசனின் கட்டளைகளுக்கு எதிராக செயல்படுகின்றனர் என்று முறையிட்டனர்.
- எவ்வாறாயினும் அவர்கள் தைரியத்துடன் மறைதூதுப் பணியில் ஈடுபட்டனர்.

## பெரேயா (திப17:10-16)

- தெசலோனிக்காவில் நிகழ்ந்த யூதர்களின் கலகத்தை காரணமாகக் கொண்டு சகோதரர்களினால் அவர்களை பெரேயாவுக்கு அனுப்பி வைத்தனர். அங்கிருந்தவர்கள் பரந்த மனப்பாங்குடையவர்கள்.
- அங்கும் அவ்ரகள் அசையாது பெரும்பான்மையான மக்களை இறைபற்றுள்ளவர்களாகக் கொண்டுவருவதற்காக தொழுகைக் கூடுங்களில் போதித்தனர்.
- அங்கிருந் அநேகர் நாள்தோறும் தூய ஏடுகளை கற்பதனாலும் முழுமனதோடு மறையை ஏற்றுக்கொண்டனர்.
- கிரேக்க இனப் பெண்கள், ஆண்கள் சிலரும், யூதர்களில் சிலரும் இறைவனில் நம்பிக்கை கொண்டனர். இதனை எதிர்த்த யூதர்கள் இந்நகரிலேயும் பெரிய கலவரத்தை ஏற்படுத்தினர்.
- எவ்வாறாயினும் சீலாவும் திமொத்தேயுவும் இங்கு தங்கியிருந்து மேலும் மறைதூதுப் பணியில் ஈடுபட்டனர். பவுல் ஏதென்ஸ் நகரை நோக்கிப் பயணம் மேற்கொண்டார்.

## எதென்ஸ் (திப 17:16-34)

- சிலைகளால் நிறைந்திருந்த இந்நகரின் தொழுகைக்கூடத்தில் யூதருடனும், கடவுளை வழிபடுபவருடனும் சந்தை வெளியில் சந்தித்தவரோ்டும் பவுல் விவாதம் நடத்தினார்.
- பவுல் எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் மெய்யியல் அறிஞர்களோடு விவாதித்ததோ்டு தைரிய்தோ்டு தனது கருத்துக்களை அவர்களிடம் முன்வைத்தார்.
- அதாவது இயேசுவையும் அவரது உயிர்தெழுதலையும் பற்றியதாகும்.
- புதிய கருத்துக்கள் பற்றி கதைத்துக்கொண்டும் செவிமடுத்தும் அவர் நேரத்தை செலவிட்டார்.
- பல மறைகளைக் கொண்டதைப்போன்று வர்த்தக நடுநிலையமாகவும் கலாச்சார மத்திய நிலையமாகவும் இந்த ஏதென்ஸ் நகர மார்க்ஸ் மலைமீது நிறுவியிருந்த அரயோப்பாகு மன்றத்தில் ஒன்றுகூடிய கற்போர் முன்னிலையில் போதனையொன்றின் மூலம் அவர்போதிக்கின்ற மறையை விளக்குவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.
- இதற்காக அங்கிருந்த 'அறியாத தெய்வத்திற்கு' என எழுதப்பட்டிருந்த பலிபீடமும் ஏதென்ஸ் மக்களின் மறை மெய்யியல் கருத்துகளின் இலக்கியத்தை பயன்படுத்துவதற்கும் அவர் பின்வாங்கவில்லை.
- அவர் இடத்திற்கு தக்க ஞானத்தை எடுத்துக்காட்டுவதன் வழியாக இறைவனின் மிகப்பெரிய வல்லமையை தனது போதனையின்மூலம் மேலெழச் செய்தார்.
- உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த இறைவன் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராக இருக்கின்றதார் என்பதாகும்.
- அவர் மனித கைகளால் கட்டிய திருக்கோயில்களில் குடியிருப்பதில்லை.
- அவர் எல்லோருக்கும் உயிரையும் மூச்சையும் மற்ற எல்லாவற்றையும் கொடுக்கின்றார்.
- அவர் ஒரே ஆளிலிருந்து அனைத்து மக்களினத்தையும் படைத்துள்ளார்.
- இறைவனைப் பற்றி உணர்வுடன் அவரை சந்திக்கும் எதிர்பார்ப்புடன் அவரைத் தேடுவதற்கான காலகட்டத்தையும் இறைவன் நிர்ணயித்தார்.
- நாங்கள் இறைமக்கள் என்பதாகும்.
- இறைவன் மனம் வருந்துவதற்கு எம்மை அழைக்கிறார்.
- மனிதனனுக்கு நேர்மையான தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு நாளை நியமித்துள்ளார்.
- இறைவன் இயேசுவை மரணத்திலிருந்து உயிர்தெழச் செய்வதினால் அனைவருக்கும் உறுதியொன்று அளித்துள்ளார்.
- பவுலின் போதனை பற்றி பல்வேறு கருத்துக்கள் இருப்பினும் தாமரி, தியோனிசி ஆகிய சில ஏதென்ஸ் மக்கள் இறைவனில் நம்பிக்கை கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- தைரியத்தோடும் ஞானத்தோடும் நற்செய்தியை வெளிப்படுத்துவதற்கு பவுல் எடுத்த முயற்சி கிறிஸ்தவர்களுக்கு தங்களுடைய மறைதூதுக் கடமைகளை நிவைவேற்றுவதற்கு முன்மாதிரிகையாகும்.

## கொரிந்து (திப 18:1-17)

- பவுல் கிரேக்கத்தில் முக்கிய வர்த்தக மத்தியநிலையமான கொரிந்தில் அண்மையில் அங்கு வந்த அக்கிலா பிரிஸ்கில்லா என்ற யூத தம்பதியினரைச் சந்தித்தார்.
- பவுல் அறிந்திருந்த கூடார கைத்தொழில் அந்த தம்பதியினருடையதும் வாழ்வாதாரமாக இருந்தமையால் இருசாராரும் ஒன்றுசேர்ந்து கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.
- அவ்வாறே எல்லா ஓய்வு நாள்களிலும் தொழுகைக் கூடத்தில் விவாதம் நடத்தி யூதர்கள் கிரேக்கர்கள் ஆகிய பல சமூகங்கள் நம்பிக்கை வாழ்வுக்கு மாற்றிக் கொண்டனர். சீலாவும் திமோத்தேயுவுடன் இணைந்து பவுல் இயேசு மெசியா என்று யூதர்களுக்கு சான்று பகர்ந்தார்.

- அவர்கள் அவருக்கு எதிராக பழித்துரைத்தபோது பவுல் அவருடைய மேலுடையிலிருந்த தூசியை உதறிவிட்டு ‘உங்களுடைய அழிவிற்கு நீங்களே பொறுப்பு நான் செல்கிறேன்’ என்றார்.
- இங்கிருந்து பிற இனத்தவரிடம் செல்கின்றேன் என்று கூறினார். அவர் அங்கிருந்து தீர்த்து, யுஸ்து என்ற இறைவனை வழிபடும் ஒருவருடைய வீட்டுக்குப் போனார்.
- ஓரிரவில் அவர் கண்ட காட்சியின் வழியாக இறைவன் அவரோ்டு இருப்பதாகவும் அவரை எல்லாவற்றிலிருந்தும் உன்னைப் பாதுகாப்பேன் என்று கூறி தைரியப்படுத்தினார்.
- இதன்வழியாக வலிமைபெற்று ஒன்றரை வருடங்கள் அந்நகரிலேயே தங்கியிருந்து நற்செய்திப் பணியாற்றுவதற்கான ஆற்றல் கிடைத்ததோடு, அவ்வாறு செய்யும்போது அநேகமானோர் இறைவனிடம் நம்பிக்கை வைப்பதற்கு அவர் உடந்தையானார்.
- விசேடமாக தீத்து, யுஸ்து தொழுகைக்கூடத் தலைவரான கிறிஸ்குவும் அவருடைய குடும்பத்திலுள்ளவர்களையும் குறிப்பிடலாம்.
- எனினும் யூதர் பவுலுக்கு எதிராக எழுந்ததுதோடு அவர்கள் அக்காயாவின் ஆட்சியாளரான கல்லியோவிடம் கொண்டு சென்றதோடு பவுல் இறைவனுக்கும் திருச்சட்டத்திற்கும் எதிராக வழிபடுமாறு மக்களை தூண்டுவதாகவும் குற்றம் சாட்டினார்கள்.
- எனினும் அது திருச்சட்டத்தோடு தொடர்புடைய பிரச்சினை என்பதனால் கல்லியோ அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.
- அக்கிலாவும் பிரிஸ்கிலாவும் பவுலோடு மறைப்பணியில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டனர். அப்பல்லோவிற்கு உண்மை மறையை விளக்குவதற்காக நடவடிக்கை எடுத்த விதம் ஒரு முன்மாதிரிகையாகும். (திப 18:26).

## கெங்கிரேயா (திப 18:18)

- இங்கு நேர்த்திக்கடனுக்காக பவுல் தனது முடியை வெட்டிக்கொள்வது விசேட பண்பாகும்.

## எபேசு (திப18:19-23)

- எபேசுவில் அக்கிலா பிரிஸ்சில்லாவை அங்கு தங்கவிட்டு அங்கிருந்து கப்பலேறி செசாரியாவுக்கு வந்திறங்கி, எருசலேம் நோக்கிச் சென்று, மீண்டும் சிரியாவின் அந்தியோக்கியாவிற்கு பயணமானார்.
- இது தூய ஆவியில் வல்லமை பெற்று மறைதூதுப்பணியை கட்டியெழுப்பிய பயணமாக இது அமைந்தது.

## பவுலின் மூன்றாவது மறைதூதுப் பயணம் (திப18:23-21:30)

| | | |
|---|---|---|
| **பயணத்தில் பங்கு பற்றியோர்** | : | பவுல், சீலா, திமொத்தேயு, எரஸ்து, தீத்து |
| **காலம்** | : | கி.பி 53-58 |
| **பயணத்தின் நோக்கம்** | : | நிறுவிய சபைகளின் வளர்ச்சியை ஆராய்தல். அச்சபை அங்கத்தவர்களை தைரியப்படுத்தல். |
| **பயணத்திற்கான இடங்கள்** | : | சிரியாவின் அந்தியோக்கியா → கலாத்தியா → பிரிகியா → எபேசு (மத்திய நிலையம்) → மசிதோனியா → பிலிப்பி → துரோவா → மிலேத்து → தீர் → செசாரியா → எருசலேம் |

## கலாத்தியா, பிரிகியா (திப 18:23)

- எபேசு ஆசியாவில் உரோமைய ஆட்சிக்குள்ளான தலைநகரமாகும்
- மிக முக்கிய வர்த்தக நகரமான இங்கு உலகில் ஏழு அதிசயங்களில் ஒன்றாக கணிக்கப்படுகின்ற அர்த்தமி அல்லது டயனா என்ற தேவதையின் பெயரில் கோயில் ஒன்று கட்டப்பட்டிருந்தது.
- இதன் காரணமாக அநேகமான உல்லாசப் பயணிகள் இந்த நகருக்கு இழுபட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

## முதலாவது நிகழ்வு

- எபேசு நகரத்தில் அக்கிலா, பிரிஸ்கிலா என்பவர்களால் சொல்வன்மையும் மறைநூலில் புலமை வாய்ந்தவருமான போதனையாளரான அப்பொல்லோ எனும் அலெக்ஸ்சாந்திரியாவில் பிறந்த யூதரொருவருக்கு மறையை விளக்கிக் கூறினார்.
- அவர் இறைவனுடைய நெறிகளைக் கற்றறிந்ததோடு அவர் திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கை மட்டும் அறிந்தவராய் இருந்தார்.
- அக்கிலா, பிரிஸ்கிலா ஆகியோர் அவர் இறைவார்த்தையை போதிப்பதற்கு தகுதியுள்ளவர் என்று இறையருளால் போஷித்தார்.
- அவர் கிரேக்கத்திற்குச் சென்று இயேயவை மெசியா என எடுத்துக்காட்டி தைரியத்தோடு யூதர்களின் வாதத்தை உடைத்தெறிந்தார்.

## இரண்டாவது நிகழ்வு

- திருமுழுக்கு யோவானின் சீடர்கள் பன்னிரண்டு பேர் எபேசுவில் பவுலைச் சந்தித்தனர்.
- அவர்கள் திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தனர். தூய ஆவியாரைப் பற்றியும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. பவுல் அவர்களுக்கு நற்செய்தியை போதித்து அவர்களுக்கு திருமுழுக்குக் கொடுத்து தூய ஆவியின் செயற்பாடுகளுக்கு அவர்களை ஆயத்தம் செய்தார்.
- பவுல் தொழுகைக் கூடத்தில் நுழைந்து மூன்று மாதங்கள் தைரியத்தோடு விவாதித்து இறைவார்தையை போதித்தும், சிலர் தமது பிடிவாதத்தின் காரணமாக உண்மை வழியை கண்டுகொள்ளவில்லை.
- அப்போது பவுல் ‘திரன்னு’ மன்னறத்திற்கு தினமும் சென்று அங்கு விவாதித்ததோடு பல யூதர்களுக்கும் கிரேக்கருக்கும் நற்செய்தியை போதித்தார்.

## மூன்றாவது நிகழ்வு

- தலைமைக் குருவாகிய ஸ்கேவா என்றவரின் பிள்ளைகளும் சுற்றித்திரிந்து பேயோட்டும் யூதர்களும் தொடர்பான நிகழ்வொன்றிற்கு ஏபேசுவில் பவுலுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.
- பவுலின் கைகளினால் நிகழ்கின்ற புதுமைகளைக் கண்டு தாமும் இயேசுவின் பெயரைப் பயன்படுத்தி புதுமைகளைச் செய்ய போகும்போது பொல்லாத ஆவிகள் அவர்களுக்கு இடையூறு விளைவித்தமையால் பெரிய கலவரத்துக்கு அவர்கள் முகங்கொடுக்க நேர்ந்த விதத்தினைப் பற்றி திருத்தூதர்பணி நூல் சான்று பகர்கின்றது. இந்த நிகழ்வு எபேசுவில் உள்ள கிரேக்கர்கள் மத்தியில் பாரிய பயத்தினை ஏற்படுத்தியது. இயேசுவின் பெயருக்கு கௌரவம் அளிக்கப்பட்டது.
- அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் தெட்டத் தெளிவாகிறது. பலரும் தாங்கள் செய்த தவற்றை ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டனர். மாய வித்தைகளைச் செய்து வந்த பலரும் தாங்கள் செய்த தவற்றை ஒப்புக்கொண்டனர். நூல்களைச் சுட்டெரித்தனர். அவற்றில் விலை 50 ஆயிரம் வெள்ளிக்காசு என கணிப்பிட்டனர்.

### நான்காவது நிகழ்வு

- பவுல் மனித கைகளால் செய்தவை தெய்வங்கள் அல்ல எனப் போதித்தமையால் அர்த்தமியின் (டயனா) வெள்ளியால் செய்யப்பட்ட உருவங்களின் விற்பனை வீழ்ச்சியடைந்தது.
- இதனால் தெமேத்திரியு என்ற வெள்ளி உருவம் செய்யும் கலைஞரின் வர்த்தகத்திற்கு பெரிய இழப்பு ஏற்பட்டது.
- அப்போது பவுலுக்கு எதிராக எபேசுவில் பெரிய கலகம் ஏற்பட்டதோடு பெரு முயற்சியின் பின்னர் நிலைமைக்கேற்ப முடிவு எடுக்கப்பட்டு நகர சபை ஆணையாளரினால் கலகக் காரர்கள் அடக்கப்பட்டனர்.
- அதனால் தைரியமிழக்காத பவுல் எபேசில் சீடர்களை அழைத்து அவர்களைதைரியப்படுத்தி அவர்களிடமிருந்து விடைபெற்றார்.

## மாசிதோனியா வழியாக கிரேக்கத்திற்கு (திப 20:1-3)

- இங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்தபோது யூதரின் சதித்திட்டத்திற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

## மீண்டும் மாசிதோனியா வழியாக பிலிப்பியில் கப்பலேறி துரோவா (திப 20:4-12)

- அவர் ஏனைய சீடர்களோடு ஏழு நாட்கள் தங்கியிருந்தார்.
- வாரத்தின் முதலாவது நாள் அப்பம் பிடுவதற்காக அவர்கள் கூடியிருந்தபோது பவுல் நள்ளிரவுவரை அவர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். இரவு முழுவதும் விழித்திருந்தமையால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த யுக்திக்கு என்னும் இளைஞன் மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்தார். பவுல் அவ்விளைஞனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார்.
- இது தூய ஆவியாரின் வல்லமையால் பவுல் செய்த வல்லமையான புதுமையாகும்.
- இந்நிகழ்வின் பின்னர் மீண்டும் மேல் மாடிக்கு சென்று அப்பம் பிட்கின்ற செயலைச் செய்ய அவரால் இயலுமானதாயிற்று.

## மிலேத்து (திப 20:13-21:2)

- எபேசுவிற்கு தெற்கில் மிலேத்து உள்ளது.
- பவுல் இந்நகரை வந்தடைந்த பின்னர் எபேசின் சபை மூப்பர்களை அழைத்து நீண்ட போதனையை நடத்தி அவர்களிடமிருந்து விடை பெற்றார்.
- இப்போதனையில் அவர் பல கருத்துக்களை மேலெழச் செய்தார்.
- தான் மனத்தாழ்மையோடும், கண்ணீரோடும் யூதருடைய சூழ்ச்சிகளினால் ஏற்பட்ட துன்ப வேதனைகளோடு இறைவனுக்குப் பணிசெய்தேன் என்றார்.
- நன்மைதரும் விடயங்களைக் கூறியதோடு வீடு வீடாகச்சென்று கற்றுக்கொடுத்தும் மனம்வருந்தி இறைவன் பால் திரும்பும்படியும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை வைக்கும் படியும் யூதருக்கும் பிற இனத்தவருக்கும் கடினமாகப் போதித்தல்.
- தனது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை.
- தூய ஆவியாரினால் பெற்ற வழிகாட்டல்கள்.
- தனது வாழ்வினைப் பாராட்டி வாழ்வதை விட இறைவனுடைய இரக்கமிக்க நற்செய்திக்கு சான்று பகர்வதால் ஆண்டவராகிய இயேசுவினால் ஒப்படைக்கப்பட்ட தூதுப்பணியை பரப்புதல் முக்கியமானதாகும்.

- இது மிகவும் உணர்ச்சிமிக்க சந்தர்ப்பமாகும்.
- இதன் பின் அவர்களைச் சந்திக்கப் போவதில்லை என்று கூறுவது இதற்கான காரணமாகும்.
- சபைத் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கவும் அவர் மறக்கவில்லை.

## தீர்

- இங்கு பவுல் ஏழு நாட்கள் சீடருடன் தங்கியிருந்தார்.
- அவர்கள் தூய ஆவியின் வழிகாட்டலின்றி எருசலேமுக்குப் பேக வேண்டாமென பவுலைக் கேட்டுக்கொண்டனர்.
- பவுலிடம் விடைபெறுவதற்காக சீடர்கள் தமது குடும்பங்களோடு கடற்கரைக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

## செசாரியா

- இறைவாக்குரைக்கும் வரம் அருளப்பட்ட நான்கு பெண்பிள்ளைகளிலிருந்த திருத்தொண்டர்கள் குழுவைச்சேர்ந்த அங்கத்தவரும் மறைதூதுவரான பிலிப்புவோடு அவருடைய வீட்டில் கூடிக் குடும்பமாகத் தங்கியிருந்தனர்.
- இவ் வீட்டுக்கு அகபு என்னும் யூதேயாவிலிருந்து வந்து ஒரு இறைவாக்கினர் அவரைச் சந்தித்ததோடு, அவர் பவுலின் இடைக்கச்சையை எடுத்து தனது கைளையும் கால்களையும் கட்டி தூய ஆவியின் வழிகாட்டலுடன் பவுல் எருசலேமில் பிற இனத்தவரால் காட்டிக்கொடுக்கப்படுவாரென தீர்க்கதரிசனம் கூறினார்.
- இந்த இறைவாக்கின் காரணமாக மிக்க வேதனையடைந்த பவுலின் நம்பக்கைக்குரிய சீடர்கள் எருசலேமுக்குப்போக வேண்டாமென அவரிடம் கேட்டுக் கொண்ட வேண்டுதல் நிராகரிக்கப்பட்டமையானது நற்செய்திக்காக அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று அவருக்கள் இருந்த மிகுந்த ஆர்வத்தினாலாகும்.

## எருசலேம்

- சீடர்கள் அனைவரும் எருசலேமுக்கு வந்த பவுலை அன்போடு வரவேற்றனர்.
- அக்காலத்தில் சபையின் மூப்பராக செயலாற்றிய யாக்கோபுவைச் சந்தித்து தனது பணியைப் பற்றி விளக்கமான அறிக்கையொன்றை முன்வைப்பதற்கு பவுல் மறக்கவில்லை.
- இதற்காக அங்கு இருந்த அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறினர்.
- மறுநாள் பவுல் தூய்மைச் சடங்கை நிறைவேற்றுவதற்கு எருசலேம் கோவிலுக்கு வந்தார்.
- இங்கு அந்த தூய்மைச் சடங்கு முடிவடைந்தவுடன் ஆசியாவிலிருந்து வந்த யூதர்கள் முழு நகரையும் தூண்டிவிட்டு பவுலுக்கு எதிராக பொய்க்குற்றம் சாட்டி பவுலைக் கைது செய்தனர்.
- பவுல் உயிர்தியாகத்தோடு நற்செய்தியை பிற இனத்தவர் மத்தியிலும் அதுபோலவே யூதர்கள் மத்தியிலும் பரப்புவதற்காக எடுத்த முயற்சியானது மிகவும் மேலானதாகும்.

## பவுலின் வாழ்விலிருந்து கிறிஸ்தவர்கள் தமதாக்கிக் கொள்ளக் கூடிய பண்புகள்

1. தைரியம்(துணிவு)
2. பின்வாங்காத வீரம்
3. அர்ப்பணம்
4. பிரமாணிக்கம்
5. இறைபயம்
6. ஞானம்
7. உண்மைத் தன்மை
8. இலட்சிய நோக்கு
9. பிறருடனான ஒருமைப்பாடு
10. தியாகம்

### பவுலிடமிருந்து கிறிஸ்தவர்களுக்கு கிடைக்கும் முன்மாதிரிகைகள்

1. தைரியத்தோடு நற்செய்திக்காக அர்ப்பணித்தல்.
2. நற்செய்தியைப் பரப்புவதற்காக பின்வாங்காது வீரத்தோடு செயலாற்றுவதற்கு தனது ஆற்றல்களை அதற்காக முழுமையாகப் பயன்படுத்தல்.
3. எப்பொழுதும் இறைவிருப்பத்தைத் தேடுதல்
4. இறைவனுக்குரிய கௌரவத்தை பின்வாங்காது அவருக்கே ஒப்புக்கொடுத்தல்.
5. நற்செய்திக்காக துன்பவேதனை அனுபவிக்க நேர்ந்தாலும் அவற்றுக்குத் தைரியமாக முகங்கொடுத்தல்.
6. எப்பொழுதும், எப்பின்னணியிலும் இறைவனைப் புகழ்வதற்கும் ஆராதிப்பதற்கும் பவுல் கிறிஸ்தவர்களுக்கு முன்மாதிரிகையாகவுள்ளார்.
7. உலக காரியங்களை விரும்பாதிருத்தல்.
8. தேவைகளை சிக்கனமாக நிறைவேற்றிக்கொள்ளல்.
9. நலிவடைந்தோருக்கு உதவி செய்ய அர்ப்பணித்தல்
10. எப்பொழுதும் செபத்தில் நிலைத்திருத்தல்.

### 4.3.3 தூய பவுலின் கடிதங்கள் / திருமுகங்கள் வகைப்படுத்தல்

- சாதாரணமாக கடிதம் திருமுகம் எனும் சொற்கள் ஒரே பொருளைக் குறித்து நிற்கிறது.
- எனினும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போது ஒரு கடிதம் ஒரு திருமுகம் என்பவற்றுக்கிடையில் வேறுபாட்டை காணலாம்.வெகு தொலைவில் வாழும் இரு ஆட்களுக்கிடையே தகவல்களை பரிமாறிக்கொள்வதற்காக கடிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- ஒரு கடிதத்தில் உள்ளடக்கப்படும் தகவல்கள் பெரும்பாலும் தனிப்பட்டவையாகும்.
- எழுதுபவரையும் பெறுகின்றவரையும் அறிமுகப்படுத்துகின்றது. (பெயரில் விளித்தல்) அதிலுள்ளவை பிரசித்தப்படுத்தப்படுவதில்லை. ஒரு கடித்தின் வழியாக சுதந்திரமாகவும் எந்த அளவிலும் முன்வைக்க முடியும்.
- அங்கு கடிதமானது பொதுவாக கருத்துக்கள் படிப்பினைகள் அறிவுரைகள் ஆலோசனைகள் போன்றவற்றை முன்வைக்கின்ற ஒரு ஊடகமாக கணிக்கப்படுகனின்றது.
- சில கடிதங்கள் சுருக்கமானவை. மிகவும் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டிருக்கும். (பிலமோன்) சிலவற்றின்மூலம் ஆழமா தர்க்க ரீதியான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதை காணலாம். (உரோமையர், 1கொரிந்தியர்)
- திருமுகம் ஒன்றை முன்வைக்கும் முறையானது ஒரு கடிதத்திற்கு சமமானதாகும்.
- எனினும் கடிதத்தைப் பார்க்கிலும் அதில் இலக்கியமான மதிப்பீடுகளை எடுத்துக்காட்டுகிறது. பெரும்பாலும் போதனை, உரையாடல் அறிக்கை திருமுகத்தின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது.
- ஏதாவது ஒரு நிகழ்வு, ஒரு சந்தர்ப்பம், அல்லது ஒரு ஆளைப்பற்றிய பொதுவான செய்தி இதன் வழியாக முன்வைக்கப்படும். தனியான ஓர் ஆளுக்கு முன்வைக்கப்படுகின்ற காரணிகளை விட ஏதாவது ஒரு குழுவொன்றிற்கு ஏதாவது ஒரு விசேட நோக்கத்தின் பொருட்டு அனுப்பப்படுகின்ற பொதுச் செய்தி ஒன்று திருமுகத்தின் வழியாக காணக்கூடியதாக உள்ளது.
- அதில் அறிவுரைகள், ஆலோசனைகள், தர்க்கங்கள், விவாதங்கள் ஆகியன பெரும்பாலும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.
- இதற்கமைய பவுலின் நிருபங்களை திருமுகங்கள் எனவும் அறிமுகப்படுத்தலாம்.
- அவரால் எழுதப்பட்டதாக கருதப்படுகின்ற 13 திருமுகங்கள் புதிய எற்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- பல்வேறு நோக்கங்களின் பொருட்டு பவுல் இத்திருமுகங்களை எழுதியுள்ளார்.
- புதிய ஏற்பாட்டிலே முதலாவது நூல் பவுல் தெசலோனியருக்கு எழுதிய முதலாவது திருமுகம் என்பது விவிலிய அறிஞர் கருத்தாகும்.

## பவுலின் திருமுகங்களில் காணக்கூடிய பண்புகள்

1. ஏதாவதொரு சந்தர்ப்பம் / நிகழ்வு / ஓர் நபரை மையமாகக் கொண்டது.
2. பெரும்பாலும் பொதுக்குழுவொன்றை இலக்கு வைத்தல்.
3. சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு அறிவுரை வழங்குதல்.
4. பவுல் அவர்களோடு இருக்கின்றார் என்பதற்கான சான்றிதழை வழங்குதல்.
5. பவுலின் யூத உரிமையை வலியுறுத்தல்.
6. போதனைப் வடிவில் தோற்றத்தில் எழுதப்பட்டிருத்தல்.
7. கிறிஸ்தவ சபைகளின் பொறுப்புக்களை எடுத்துக்காட்டல்.
8. கிறிஸ்தவ உண்மைகள் நிலையான செய்திகளாக முன்வைத்தல்.
9. விசேட வேண்டுதல்களை எப்பொழுதும் முன்வைத்தல்.
10. பாடங்களையும் பாடல் பகுதிகளையும் ஈடுபடுத்தியிருத்தல். (உ + ம் பிலிப்பியர் 2:6-11)
11. சுருக்கமான அறிவுரைகள் ஈடுபடுத்தப்பட்டிருத்தல். (உ + ம்: உரோமை 1:10)
12. வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் சொற்தொடர்கள்.
    (உ + ம்: 1 கொரிந்தியர் 11:24-25)

- விசேடமான ஆற்றல் மிக்க பேச்சாளரான பவுல் தமக்கு விளங்கிய விதத்தில் தனிப்பட்ட முறையில் போக முடியாத சூழல்களுக்க எழுத்துமூலம் நற்செய்தியை முன்வைப்பதற்கு எடுத்துள்ள முயற்சியானது மிகப்பாராட்டுக்குரியதாகும்.
- தனிப்பட்ட கடிதங்கள் பொதுதிருமுகங்கள் ஆகிய இருவகைகளையும் சேர்ந்த கடிதங்கள் தற்கால கிறிஸ்தவர்களும் பயன்படுத்தக்கூடியவாறு அவர் முன்வைத்துள்ளார்.
- கிரேக்க உரோம தொடர்புடைய செமற்றிக் முறைக்கு சமமாக இக்கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

## பவுலின் திருமுகங்களின் வகைகள்

தூய பவுலினால் எழுதப்படதென எண்ணப்படுகின்ற திருமுகங்கள் / கடிதங்கள் 13 ஆகும். இவை திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் காட்டப்படுகின்ற ஒழுங்குமுறை கீழே தரப்பட்டுள்ளது.

1. உரோமையருக்கு எழுதிய திருமுகம்
2. கொரிந்தியருக்கு எழுதிய 1ம் திருமுகம்
3. கொரிந்தியருக்கு எழுதிய 2ம் திருமுகம்
4. கலாத்தியருக்கு எழுதிய திருமுகம்
5. எபேசியருக்கு எதிய திருமுகம்
6. பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம்
7. கொலோசையருக்கு எழுதிய திருமுகம்
8. தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகம்
9. தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்
10. திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகம்
11. திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்
12. தீத்துவுக்கு எழுதிய திருமுகம்
13. பிலமோனுக்கு எழுதிய திருமுகம்

பவுலால் எழுதப்பட்ட திருமுகங்கள் எழுதப்பட்ட காலத்திற்... வகைப்படுத்தல்

**13 திருமுகங்கள்**

| **கி.பி 51-53** | **கி.பி 54-58** | **கி.பி 61-6.** | **கி.பி 65-67** |
|---|---|---|---|
| ✱ 1 தெசலோனிக்கேயர் | ✱ 1 கொரிந்தியர் | ✱ பிலிப்பு | ✱ தீத்து |
| ✱ 2 தெசலோனிக்கேயர் | ✱ 2 கொரிந்தியர் | ✱ கொலோசேயர் | ✱ 1 திமொத்தேயு |
| | ✱ கலாத்தியர் | ✱ எபேசியர் | ✱ 2 திமொத்தேயு |
| | ✱ உரோமையர் | ✱ பிலமோன் | |

பவுலால் எழுதப்பட்' கடிதங்கள் - திருமுக ஆசிரியத்து... வகைப்படுத்தல்

**திருமுகங்...**

| **பவுலடியாரின் எழுதப்பட்ட திருமுகங்க...** | **... எழுத்தாளர் ...வரினால் எழுதப்ப... கருதப்படுகின்ற தி... ...ள்** | **... மரணத்தின் பனி ...எழுதப்பட்ட திருமுகங்கள்** |
|---|---|---|
| ✱ 1 தெசலோனிகேயர் | ✱ 2 தெசலோனிகேயர் | ✱ 1 திமொத்தேயு |
| ✱ கலாத்தியர் | ✱ கொலோசேயர் | ✱ 2 திமொத்தியர் |
| ✱ பிலிப்பியர் | ✱ எபேசியர் | ✱ தீத்து |
| ✱ 1 கொரிந்தியர் | | |
| ✱ 1 கொரிந்தியர் | | |
| ✱ உரோமையர் | | |
| ✱ பிலமோன் | | |

## பவுலின் திருமுகம் / திருமுகங்களின் அமைப்பு

பவுலின் கடிதங்களில் பொதுவாக கிரேக்க உரோமைய இலக்கியமான தன்மைகள் வழியாக கருத்துக்களை விளக்கும்போது ஒழுங்குமுறையை பின்பற்றியுள்ளமை தெளிவாக காணக்கூடியதாக உள்ளது.

| | | |
|---|---|---|
| (1) திருமுகத்தை விளித்தல் | : | அனுப்புபவரதும் பெறப்படுபவரதும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (2) சுருக்கமான வணக்கமும் வாழ்த்தும் | : | பெறுபவரின் சூழலுக்கு தகுந்த வணக்கமும் வாழ்த்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (3) நன்றி கூறல் அல்லது செபம் | : | திருமுகம் எழுதப்படும் நோக்கம் குறிப்பிடப்பட்டு அதைப்பற்றி செபத்தின் ஊடாக நன்றி கூற முயற்சித்துள்ளார். |
| (4) செய்தி | : | படிப்பினைகள் ஆலோசனைகள் என இரு பிரிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (5) முடிவும் வாழ்த்து | : | ஆசீர் வேண்டல் இங்கு பெரும்பாலும் முன்வைக்கப்-பட்டுள்ளது. தனிப்பட்ட தகவல்கள் ஒழுக்கம் தொடர்பான எளிய எனினும் விசேட அறிவுரைகளாகும்.இறுதி வேண்டுதலோடு விசேட ஆசீர்வாதமும் வழங்கப்படுகிறது. |

## கடிதங்கள் / திருமுகங்கள் பற்றிய தகவல்கள்

## உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகம்

இக்கடிதம் பவுலால் உரோமையில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு அவரது மூன்றாவது மறைதூதுப் பயணத்தின்போது எழுதப்பட்டதென கணிக்கப்படுகிறது. அறிவுறுத்தும் வடிவத்திலமைந்தது. இது, உரோமைக்குச் செல்வதற்கு முன்னர் இவர் எழுதிய முக்கிய ஒழுங்கமைப்பு ரீதியான திருமுகமாக பெரும்பாலானோரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது அவருடைய திருமுகங்களில் நீண்ட திருமுகமாகும். அவர் அதனை பெரும்பாலும் கொரிந்து நகரிலிருந்து எழுதியிருக்கலாம்.

### நோக்கம்

இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பதால் பிற இனத்தவருக்கு கிடைக்கும் மீட்பு பற்றி கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் உள்ள கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதனை தெளிவுபடுத்தும் நோக்குடனும் தனது வருகையை உரோமையருக்கு அறிவிப்பதற்கும் இம்மடலை எழுதியுள்ளார்.

### கருப்பொருள்

கிறிஸ்துவையும் அவருடைய நற்செய்தியில் நம்பிக்கை வைக்கும் யாராயினும் இறைவனுடைய அளவில்லாத இரக்கத்தின் வழியாக மீட்பு பெறுவர் என்பதாகும். (உரோமையர் 1:16-17)

### படிப்பினைகள்

(1) கிறிஸ்து வழியாகவே இறைவன் உண்மையுள்ளவர் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் அதனை விளங்கிக் கொள்ளலாம்.

(2) யூத மறைக்கும் கிறிஸ்தவ மறைக்கும் இடையில் இருக்கும் தொட்ரபினை நற்செய்தி விளக்குகிறது.

(3) கிறிஸ்தவ மறையின் பொருள் யாதெனில் நம்பிக்கையுள்ள அனைவருக்கும் மீட்பும், இறை வல்லமையும் கிடைக்கும் என்ற நற்செய்தி ஆகும்.

(4) இறைவனின் இரக்கம் என்றும் நிலையானதாகும். அது அனைவருக்கும் திறந் வாசலாக இருக்கிறது.

## கொரிந்தியருக்கு எழுதப்பட் முதலாவது திருமுகம்

பவுலின் மூன்றாம் மறைதூதுப் பயணத்தின்போது கொரிந்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதிய இந்த ‘மறைதூதுக் கடித’மாக அழைக்கப்படுகிறது. எபேசுவில் இருந்து எழுதியதாக நம்பப்படுகிறது. சோஸ்தேனும் இதனை எழுதுவதற்கு கூட்டாக இருந்ததாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

### எழுதுவதற்கான நோக்கம்

- பெரிய முக்கியமானதுமான வணிக நகரமாக கொரிந்து நகரம் விளங்கியது. தீய செயல்களுக்கும் ஒழுக்கக் கேடுகளுக்கும் மத்தியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியை சரியான முறையில் விளங்கிக் கொள்வதற்கு சுயநம்பிக்கை, ஒழுக்க விழுமியங்கள், திருமணத்தைப் பாதுகாப்பதும் உண்மையான மனச்சான்றுள்ள உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்வதற்காக அறிவுரை வழங்குவதற்கு இந்தத் திருமுகம் எழுதப்பட்டுள்ளது.
- பல மதங்கள் கொண்ட சூழலில் கிறிஸ்தவ படிப்பினைகளை பிழையின்றி கற்பிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாக இது கருதப்படுகிறது.

### கருப்பொருள்

இயேசு கிறிஸ்து எனப்படும் அடிப்படையின் மீது கட்டியெழுப்பப்பட்ட இறையாட்சி (1கொரிந்தியர் 3:11).

### படிப்பினைகள்

(1) தூய ஆவியாரின் கொடைகளினால் உண்மை அன்பை நோக்கி பயணம் செய்ய வேண்டும்.
(2) புதிய ஆரம்பத்தை ஏற்படுத்திய புதிய ஆதாம் கிறிஸ்துவாகும்.
(3) திருமணத்தின் புனிதத் தன்மையை பாதுகாக்க வேண்டும்.
(4) இயேசுவிலுள்ள நம்பிக்கையிலே கிறிஸ்தவ சபை உருவானது.

## கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது திருமுகம்

- மூன்றாவது மறைாதுாதுப் பயணத்தின்போது பவுல், தீத்து ஆகியோரால் எழுதப்பட்டிருக்கலாமென ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- மாசிதோனியாவின் நகரமாகிய பிலிப்பி நகரிலிருந்து எழுதுப்பட்டதாகும்.
- கொரிந்துவிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் அக்காயாவில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அனைத்து மக்களையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கொரிந்தியருக்கு எழுதிய முதலாவது திருமுகத்தினால் தோன்றிய கலகத்தை தீர்ப்பதற்காக இதன் வழியாக முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

### நோக்கம்

பவுல் கிறிஸ்துவினாலேயே அனுப்பப்பட் திருத்தூதர் என்பதை உறுதிசெய்வதற்கும், கொரிந்து மக்களைச் சந்திப்பதற்கு பவுலுக்குள் இருந்த அதிக விருப்பத்தினை வெளிப்படுத்துவதற்காகவும் இந்தத்திருமுகம் எழுதப்பட்டுள்ளது.

### கருப்பொருள்

கிறிஸ்துவுக்கு நம்பிக்கையாக பணியாற்றுவதனால் ஏற்படுகின்ற துன்ப வேதனைகள் பல என்றபோதும் அவற்றை சகித்துக் கொள்வதற்கு அவர் உதவி செய்வார் என்பதுமாகும். (2 கொரிந்தியர் 11:21-32).

### படிப்பினைகள்

(1) பவுல் நற்செய்தியை பரபுபவதற்காக தன்னிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்துள்ளார் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
(2) மனிதத்துவத்தில் இயேசுவின் மரணம் உயிர்த்தெழில் மறைபொருளை வாழவைப்பது முக்கியமானதாகும்.
(3) தூய ஆவியானவர் மனித இதயங்களில் செயலாற்றுகிறார்.
(4) மனிதனை மனிதனுடனும் இறைவனுடனும் ஒற்றுமைப்படுத்த வேண்டியது மிக அவசியமானதாகும்.

## கலாத்தியருக்கு எழுதிய திருமுகம்

- சின்ன ஆசியாவின் மத்திய பிரதேசத்தில் அமைந்திருந்த நகரமாகிய கலாத்தியில் உள்ள சில கிறிஸ்தவ சபைகளுக்கு எழுதப்பட்ட முக்கியமான மறைத்தூதுத் திருமுகமாகும்.

- மூன்றாவது மறைதூதுப் பணியுடன் தொடர்புடைய இத்திருமுகம் அந்தியோக்கியாவில் அல்லது எபேசுவில் எழுதப்பட்ருக்கலாம் என கருதப்படுகிறது. பவுலே இதன் ஆசிரியர் என ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## நோக்கம்

- யூதர்களினால் பவுலுக்கு எதிராக குறிவைக்கப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் காரணமாக நம்பிக்கை வலுவற்ற நிலையிலிருந்த கலாத்தியருக்கு உண்மையை விளக்குவதற்காக இது எழுதப்பட்டுள்ளது.
- பழைய ஏற்பாட்டிலுள்ள போதனைகளை சரியாக விளங்கிக் கொண்டு இயேசுக்கிறிஸ்துவுடைய மீட்பில் பங்கேற்க நற்செய்தியை சரியாக விளங்கிக் கொள்வதற்கு வழிகாட்டலாயுள்ளது.

## கருப்பொருள்

நம்பிக்கையினால் மட்டுமே நாம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகின்றோம்.

## படிப்பினைகள்

(1) கிறிஸ்து எம்மை பாவத்திலிருந்து மீட்டமையால் இறைமக்களுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது.

(2) கிறிஸ்துவே நற்செய்தி ஆவார்.

(3) இயேசுக்கிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பவர்கள் பாவத்திலிருந்து மீட்கப்படுவதோடு அவர்களில் தூய ஆவியார் வந்திறங்குகிறார்.

(4) கிறிஸ்துவுக்குள் எந்தவித பேதமும் இல்லை. எல்லோரும் சமமானவர்கள்.

# எபேசியருக்கு எழுதிய திருமுகம்

- எபேசியருக்கு மட்டுமல்ல சின்ன ஆசியாவில் உள்ள எல்லாச் சபைகளுக்கும் இது எழுதப்பட்டுள்ளது, என கருதப்படுகிறது.
- பவுல் உரோமைச் சிறையிருருந்தபோது இதனை எழுதியிருப்பதாக கருதப்படுகிறது. எல்லாத் திருமுகங்களினதும் கலப்பு என இது அழைக்கப்படுகிறது. உள்ளடக்கமும் மொழி நடையும் கொலோசையரின் திருமுகத்திற்கு சமமானதாக இருப்பதை காணலாம்.
- மறை போதனைகள் யாவும் சம அளவில் முன்வைக்கப்பட்டுள்ளது.

## நோக்கம்

- சின்ன ஆசியாவின் சபைகள் வலிமை பெற்று பாதுகாக்கப்பெற தேவையான இறையியல் போதனைகளை வழங்குவது கிறிஸ்துவுடன் கொண்டுள்ள உறவைத் தங்கள் வாழ்வில் வாழ்ந்துகாட்ட வலியுறுத்தல்.

## கருப்பொருள்

கடவுளின் திட்டமென்பது மனித குலத்தை மட்டுமல்ல, படைப்பு அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் கடவுளுடன் ஒப்புரவாக்குவது.

## படிப்பினைகள்

(1) உயிர்த்த இயேசு உயர்த்தப்பட்டார் என வலியுறுத்துகிறது.

(2) திருச்சபையின் வளரக்கூடிய தன்மையும் பொதுத்தன்மையும் வலியுறுத்தப்படுகின்றது.

(3) திருச்சபை இயேசுவின் மறையுடல், தலைவர் கிறிஸ்து.
(4) திருமணம், குடும்பம், வாழ்க்கைப் போராட்டம் பற்றிய ஆழமான கருத்துக்கள்.

## பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம்

பிலிப்பு நகர கிறிஸ்தவர்களுக்கு பவுல் உரோமையில் சிறைக்கைதியாக இருந்த காலத்தில் எழுதப்பட்டது.

### நோக்கம்

தமக்கு உதவி செய்த பிலிப்பியருக்கு நன்றி செலுத்துவதற்காகவும் அவர்கள் மகிழ்வோடும் மன உறுதியோடும் கிறிஸ்தவ நம்பிக்கையோடும் இலங்க வேண்டும் என்பதற்காகவும் இந்நூலை பவுல் எழுதுகின்றார்.

### கருப்பொருள்

கிறிஸ்துவுக்காக துன்பங்களை அனுபவித்தல் மகிழ்ச்சியானதாகும். (பிலிப்பியர் 1:18-19)

### படிப்பினைகள்

(1) கிறிஸ்துவுக்காக வாழ்தல் மகிழ்ச்சியானது.
(2) கிறிஸ்துவின் மீட்பின் வல்லமையினால் மனித வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
(3) இயேசுவின் தூதுப்பணியின் வழியாக அவரது இறைத் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது.
(4) கிறிஸ்தவர்கள் துன்புறுத்தல்களின் போது பொறுமையோடு நற்செய்திக்காக சான்றுபகர வேண்டும்.

## கொலோசையருக்கு எழுதிய திருமுகம்

- சின்ன ஆசியாவின் எபேசிய நகரத்துக்கு கிழக்கே 200 மைல்கள் அளவிலான தூரத்தில் அமைந்துள்ள கொலோசேயர் நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்ட திருமுகமாகும்.
- உரோமைய சிறையிலிருந்த பவுல் அல்லது அவருடைய சீடர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பவுலின் அண்மைய மறைதூதுவரான எப்பப்பிராபினால் உருவாக்கப்பட்ட கொலோசையர் சபைக்கு விசேடமாக இது அனுப்பப்பட்டுள்ளது.

### நோக்கம்

- கொலோசையம் எங்கும் பரவியிருந்த தப்பறையான நம்பிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்து இறைவன் எல்லாவற்றிற்கும் மேலான இடத்தில் உள்ளவராவார் என்பதை கொலோசையருக்கு விளக்குவதற்காக இது எழுதப்பட்டுள்ளது.
- கிறிஸ்தவ நற்செய்தியானது உலகில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விதம் விளக்கப்பட்டுள்ளது.

### கருப்பொருள்

கிறிஸ்து கடவுளின் சாயல். (கொலோசையர் 1:15-18)

### படிப்பினைகள்

(1) இறைவனின் மிக உன்னத மறைபொருள் கிறிஸ்துவில் மறைந்திருந்தது. இப்போது நற்செய்தி வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(2) அவர் ஒப்புக்கொடுதத் பலியும் உயிர்ப்பும் எதிரிகள் அனைவரையும் தோல்வியடையச் செய்கின்றது.

(3) திருமுழுக்கின் வழியாக எல்லா கிறிஸ்தவரகளும் உயிர்த்த கிறிஸ்துவின் உடலோடு இணைகின்றனர்.

(4) கிறிஸ்துவில் வாழ்வதே கிறிஸ்தவர்களின் மிக உயர்வான நோக்கமாக இருத்தல் வேண்டும்.

## தெசலோனிக்கருக்கு எழுதிய முதலாவது திருமுகம்

- இரண்டாவது மறைதூதுப் பயணத்தின்போது கொரிந்தில் தங்கியிருந்தபோது இத்திருமுகம் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- ஆசியாவிலிருந்து உரோமைவரை செல்கின்ற வழியிலே அமைந்துள்ள இந்த தெசலோனிக்க நகரம் அன்று மிக முன்னேற்றமான நகரமாகும். இது உரோமைய பேரரசின் கீழ் இருநூறு ஆண்டுகள் மட்டில் மாசிதோனியாவின் தலைநகரமாக விளங்கியது.

### நோக்கம்

கடிதத்தின் முக்கிய நோக்கம் இயேசுவின் இரண்டாம் வருகையாகும். மேலும் இறந்து போனவர்கள் குறித்து அவர்கள் கொண்டிருக்கும் தவறான கண்ணோட்டங்களை களையவும் இம்மடலை வரைந்துள்ளார்.

### கருப்பொருள்

கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய எதிர்பார்ப்பினை ஏற்படுத்துவதாகும்.

### படிப்பினைகள்

(1) கிறிஸ்தவ வாழ்வானது எதிர்பார்ப்பின் வாழ்வாகும்.

(2) கிறஸ்துவோடு ஒன்றித்து அவரின் வழியாக இறைவனிடம் செல்லவேண்டும்.

(3) கிறிஸ்துவின் மறு வருகையை எதிர்பார்த்திருக்க வேண்டும்.

(4) கிறிஸ்துவின் மறு வருகை திடீரென நிகழக்கூடியதாகும்.

## தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்

பவுலின் இரண்டாவது மறைதூதுப் பயணத்தில் கொரிந்தில் தங்கயிருந்தபோது இது எழுதப்பட்டிருக்கலாமென ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அத்தோடு சீடர் ஒருவர் பவுல் பெயரால் திருமுகமாக எழுதியிருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

### நோக்கம்

- முதலாவது திருமுகம் பல ஐயப்பாடுகளை உருவாக்கிற்று. அவை குறிப்பாக கிறிஸ்துவின் மீள்வருகையை பற்றியதாகும். அது மிக விரைவில் நிகழும் என சொல்லப்பட்டது. ஆகவே நிகழ்ந்துவிட்டது என சிலர் சொல்ல, நெருங்கிவிட்டது என இன்னொரு சாரார் சோம்பித் திரிந்தனர். இப்பிழையான கருத்துக்களை நீக்க 2ம் மடல் எழுதப்பட்டுள்ளது.

### கருப்பொருள்

கிறிஸ்துவின் மறுவருகையானது இப்போதே நிகழாதென்பதாகும்

### படிப்பினைகள்

(1) கிறிஸ்து நாம் எதிர்பாராத வேளையில் வருகை தருவார்.

(2) பொல்லாதவர்கள் அல்லது சாத்தான் உண்டாக்குகின்ற அழிவிற்கு பின் இறைவன் மகிமைமிகு மாட்சியோடு வருகை தருவார்.

(3) இது இன்னும் நிகழாதமையால் அமைதியுடன் வாழ்வது முக்கியமாகும்.

(4) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக வாழ்வது முக்கியமாகும்.

## திமொத்தேயுவிற்கு எழுதிய முதலாம் திருமுகம்

- மாசிதொனியாவிலிருந்து பவுலால் நம்பிக்கையுள்ள சீடரான திமொத்தேயுவிற்கு எழுதியதாகப் பலர் கருதுகின்றனர்.
- பவுலின் இறப்பின் பின்னர் அவருடைய கருத்துக்களை உதவியாகக்கொண்டு அவருடைய சீடர்கள் இத்திருமுகத்தை எழுதியிருக்ககூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.

### நோக்கம்

- உண்மை நம்பிக்கைக்கும் திருத்துதர்களின்போதனைக்கும் அமைய நம்பிக்கையுள்ளவர்களாக வாழ்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காடுவதற்காக இது எழுதப்பட்டுள்ளது.
- மறையை சரியாக போதிப்பதற்கு சபையில் இருக்கும் பொறுப்புக்களும் சட்ட திட்டங்களும் கிறிஸ்தவ கொள்கைகளுக்கும் ஏற்ப நிறைவேற்றுவதற்கும் வழிகாட்டலொன்று முன்வைக்கப்-பட்டுள்ளது.

### கருப்பொருள்

ஆயர் பணி

### படிப்பினைகள்

(1) கிறிஸ்தவ சபையின் ஒற்றுமையை எப்போதும் வளர்க்க வேண்டும்.

(2) தப்பறை கொள்கைகளை எதிர்க்க வேண்டும்.

(3) இறைவனுடைய இரக்கத்தை பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும்.

(4) சபைத் தலைவர்கள் நன்நெறியில் சிறந்த விளங்க வேண்டும்.

## திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாவது திருமுகம்

- பவுல் தம் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் மீண்டும் ஒருமுறை சிறையில் அடைக்கப்பட்டதாகவும் அப்பேர்து இரண்டாம் முறையாகத் திமொத்தேயுவுக்கு திருமுகம் எழுதியதாக கூறப்படுகிறது.

### நோக்கம்

பவுலின் வாழ்வை எடுத்துக்காட்டாகக் கொண்டு பல அறிவுரைகளை வழங்குவதை காண்கின்றோம்.

### கருப்பொருள்

மன உறுதியுடன் இருத்தல்.

### படிப்பினைகள்

(1) கிறிஸ்தவ தலைமைத்துவத்திறகாக நியமிக்கப்படுபவர்களிடம் விசேட பண்புகள் இருக்க வேண்டும்.

(2) கிறிஸ்துவுக்குள்ளாக வருகின்ற துன்ப வேதனைகளுக்கு தைரியத்தோடும் பொறுமையோடும் முகங்கொடுக்க வேண்டும்.

(3) இறைவனுடைய வார்த்தை எக்காலத்திற்கும் அடிப்படையாக இருத்தல் வேண்டும்.

(4) நம்பிக்கையில் உறுதியாக இருப்பதை வாழ்நாள் முழுவதும் பாதுகாக்க வேண்டும்.

## தீத்துவுக்கு எழுதிய திருமுகம்

- பிற இன கிரேக்க பின்னணியுடைய தீத்து, எருசலேமுக்வுக்குச் சென்ற பயணத்தின்போது பவுலோடு இருந்த ஒருவராவார்.
- இவர் பக்தியும் நம்பிக்கையும் உள்ள சீடன் ஆவார். பவுலால் இவர் கிறிஸ்தவ பக்தனாக நியமிக்கப்பட்டார். பின்னர் பவுல் இவரை தீர்த்துவின் சபையின் நிர்வாகியாக நியமித்தார். மாசிதோனியாவில் இருந்த பவுலால் கிரேத்துத்தீவின் தீத்துவுக்கு இது எழுதப்பட்டதாகும்.

### நோக்கம்

- கிரேத்துத் தீவில் திருச்சபை வளர்ச்சி குன்றிய சூழ்நிலையில் தீத்து சரியான உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### கருப்பொருள்

கிறிஸ்தவ சபைகளின் நிர்வாகத்தை சீரிய முறையில் நடாத்திச் செல்லுதல் அவசியமாகும்.

### படிப்பினைகள்

1. தலைவர்களை தெரிவுச் செய்யும் போது அறிவுடன் செயற்பட வேண்டும்.
2. திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர் அனைவரும் தூய ஆவியின் கொடைகளினால் வளர்ச்சி அடைகின்றார்.
3. சபையில் கிறிஸ்தவர் நல்லொழுக்கத்துடன் வாழவேண்டும்.
4. கிறிஸ்துவின் மீட்பளிக்கும் பலியே முன்மாதிரி.

## பிலமோனுக்கு எழுதிய திருமுகம் (கி.மு. 61)

- உரோமையில் சிறையிலிருந்து பவுல் பிலமோன் என்பவருக்கு அனுப்பியதாக குறிப்பிடப்படுகின்றது.
- அவர் கொலோசை சபையின் உறுப்பினர் இவர், கிறிஸ்தவத்தை தழுவ பவுல் அவருக்கு வழிகாட்டியாக இருந்தார்.
- இது ஒரு கடித்தின் வடிவில் எழுதப்பட்ட மிக குறுகிய தனிப்பட்ட ஒரு மடலாகும்.

## நோக்கம் :

புதிய கிறிஸ்தவனான ஒனேசிம் எனும் நபரை அடிமையாக அல்ல மாறாக கிறிஸ்தவ சகோதரனாக ஏற்கும்படி வேண்டிக்கொள்ளவே இது எழுதப்பட்டுள்ளது.

## கருப்பொருள்

ஒனேசிம் அடிமையல்ல என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே.

## படிப்பினைகள்

1. பிலமோனின் விசுவாசத்தையும் அன்பையும் மதிப்பர்.
2. ஒனேசிம் அடிமையில்லை.
3. ஒனேசிம்மை சகோதரத்துவத்துடன் ஏற்றுக்கொள்ளல்.
4. ஒனேசிம் ஓர் கிறிஸ்தவர்.

பவுல் தம் திருமுகங்களூடாக தனிப்பட்ட முறையில் கிறிஸ்தவரைப் போன்றே கிறிஸ்தவ சபையின் வளர்ச்சிற்காக எடுத்த முயற்சி, இறைவன் முன் மிகவும் உயர்ந்த பணியாக இருந்தமை எமக்கு புலப்படுகின்றது.

**தேர்ச்சி** 5.0 : கிறிஸ்தவ படிப்பினைகளால் ஊட்டம் பெற்று இறையாட்சியில் பங்குதாரர் ஆவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.1 : இறையாட்சியின் விழுமியங்களை தமதாக்கிக் கொள்வர்.

**பாடவேளை** : 30

**கற்றல் பேறுகள்**

- மத்தேயு நற்செய்தி தொடர்பான தகவல்களைக் கோவைப்படுத்துவார்.
- இறையாட்சி மதிப்பீடுகளுக்கு ஏற்ப வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்
- மத்தேயு நற்செய்தி தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- இறையாட்சி விழுமியங்களை அடைவதற்காக எதிர்கொள்ளும் துன்ப துயரங்களை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொள்வார்
- இறையாட்சியின் விழுமியங்களை அடைவதற்கு பிறருடன் ஒத்துழைப்பார்.

- காலங்காலமாக யூதமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மீட்பர் இயேசுவே என்பதை எடுத்துக்காட்டுவது மத்தேயுவின் நோக்கமாகும்.
- இயேசுவை, புதிய மோசே என்பதோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த மெசியா ஆகவும் ஆசிரியராகவும் முன்வைக்கின்றார். இதனை காரணியாகக் கொண்டு அவர் முன்வைக்கும் ஐந்து விடயங்கள் (பழைய ஏற்பாட்டின் ஐந்நூலைப்போல) முக்கிய போதனைகளாக விளக்கப்பட்டுள்ளன.
- சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட கட்டளைகளுக்கு மோசே மத்தியஸ்தராக இருப்பதைப் போன்று, இயேசுவும் மலைப் பொழிவில் புதிய சட்டங்களை ஏற்படுத்தியுள்ளார். (மத்தேயு 5:1). மோசேயின் பத்து கட்டளைகளைப் போன்று இயேசுவும் எட்டு பேறுகளை அளிக்கின்றார் (மத்தேயு 5:3-10).
- தூய மத்தேயு இயேசுவின் ஏனைய நிகழ்வுகளை விட அவரது போதனைப் பணிக்கு முக்கிய இடம் வழங்குவதனால் வெவ்வேறு போதனைகளை ஒன்று திரட்டி ஒழுங்கு முறையாக எடுத்துக்காட்டுகிறார்.
- இயேசு புதிய கட்டளைக்கு பங்களிப்புச் செய்பவராகவும் ஆசிரியராகவும் திருச்சட்டத்தையும் இறைவாக்குகளையும் நிறைவேற்றுபவராகவும் காட்டப்படுகிறார். (மத்தேயு 5:17). தூய மத்தேயு முன்வைக்கும் ஐந்து போதனைகள் பின்வருமாறு:

  1. மலைப்பொழிவு (அதி. 5 – 7 இறையாட்சியின் தூய்மை)
  2. மறைதூதுப்பணி (10 இறையாட்சி தொடர்பான தூதுப்பணி)
  3. உவமைகள் (13 இறையாட்சியின் தன்மை)
  4. தூய திருச்சபையும் அதன் அதிகாரமும் (18 இறையாட்சியின் அதிகாரம்)
  5. இறுதிக்காலம் (24-25 இறையாட்சியின் எதிர்காலம்)

இவ்வெல்லாப் போதனைகளினதும் முடிவு பற்றி ஒரு தெளிவான விளக்கம் தூய மத்தேயு நற்செய்தியில் காணப்படுகிறது. அவையாவன:

7:28 – "இயேசு இவ்வாறு உரையாற்றி முடித்தபோது....."

11:1 – "இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து முடித்ததும்...."

13:53 – "இவ்வுவமைகளை இயேசு சொல்லி முடித்த பின்பு ....."

19:1 – "இயேசு இவ்வாறு உரையாற்றி முடித்த பின்பு ...."

26:1 – "இயேசு இவ்வாறு எல்லாவற்றையும் உரையாற்றி முடித்த பின்பு ...."

## மலைப்பொழிவு (5:1 - 7:29)

இது ஒழுக்க விழுமியங்களின் தொகுப்பாகும். பழைய ஏற்பாட்டு மக்களுக்கு 10 கட்டளைகள் வழிகாட்டியாக அமைந்தன. இயேசு அக்கட்டளைகளுக்கு புதிய விளக்கத்தைக் கொடுத்து வாழ்வை நல்ல முறையில் அமைத்துக் கொள்வதற்கான வழிகளைக் காட்டியுள்ளார்.

- இதன் வழியாக மக்களை இறைவன்பாலும், தமது கிறிஸ்தவ கடமைகள் பொறுப்புக்கள் பாலும் ஈடுபடச்செய்தல். மலைப் பொழிவின் வழியாக பண்புள்ள நல்வாழ்வுக்கான விழுமியங்களையும் விளக்கியுள்ளார்.
- 'மக்காரியோயி' எனும் கிரேக்க சொல்லிலிருந்து மருவி உருவான இச் சொல்லுக்கு 'பெருமகிழ்ச்சியுடையோர்' 'பேறுபெற்றோர்' 'ஆசீர்வதிக்கப்பட்டடோர்' எனும் பொருள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இந்த மகிழ்ச்சிகரமான வசனங்கள் ஆழமான வாழ்வின் அமைப்பினை ஒருங்கிணைத்து முன்வைக்க உதவுகின்றது.
- எட்டுப் பேறுகளின் படி வாழும் பொழுது தூய்மையானதொரு வழியில் செல்லலாம். கிறிஸ்தவரின் வாழ்வில் எட்டு பேறுகளும் ஒரு கண்ணாடியைப் போன்றிருத்தல் வேண்டும்.
- இயேசுவைப் பின்பற்றுபவர் ஒழுக்கமுள்ளவராகவும் கிறிஸ்தவ மதிப்பீடுகளைப் பின்பற்றி வாழ்பராகவும் இருப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.
- இயேசு முன்வைத்த எட்டுப் பேறுகள் இறையாட்சியை உரிமையாக்கிக்கொள்ள ஆன்மீக வழிகாட்டியாக அறிமுகப்படுத்தப்படுகிறது.
- எளிய மனதோர் இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வர்.
- உலகில் அனைத்து மனிதர்களினதும் நோக்கம் பேறுபெற்றவர்களாக இருப்பதே. உலக வாழ்க்கையில் செல்வங்களையும் அதிஷ்டங்களையும் பெற்றிருந்தாலும் கிறிஸ்தவ வாழ்வின் பேறுகள் இதைவிட வேறுபட்டதென கிறிஸ்து முன்வைக்கின்றார். மகிழ்ச்சியாக இவ்வுலகில் வாழ்வது அதிஷ்டம் என எண்ணியிருந்தவர்களுக்கு ஏழ்மை, துன்பம், தாழ்ச்சி, நேர்மை, இரக்கம், தூய்மையான உள்ளம், சமாதானம், நீதி என்பவற்றைத் தரங்கிக் கொள்ளும் பண்புள்ளவர்கள் அவ் அதிஷ்டத்தை உரிமையாக்கிக் கொள்வர் என இயேசு வலியுறுத்துகிறார்.
- இவ்வுலக வாழ்வில் அதிகளவில் மதிப்புள்ளதென கவனத்தில் கொள்ளப்படுபவைகள் இறையாட்சியினுள் எந்தவிதமான பெறுமதியும் அற்றவைகளாகும்.
- இவ்வுலக ரீதியாக பெறுமதி அற்றவைகளுக்கு இறையாட்சிகுள் அதிக மதிப்பு உள்ளது. துன்ப வேதனைகளை அனுபவிப்பது இவ்வுலகில் துரதிஷ்டமாகும். எனினும் துன்ப வேதனைகளை நீதிக்காக அனுபவிப்பார்களாயின் அவர்கள் இறையாட்சிக்குள் பேறுபெற்வர்களாவர்.
- இயேசு எடுத்துக் கூறியுள்ள பேறுகள் இறப்பின் பின்னர் ஏற்படும் ஒரு நிலையல்ல, இவ்வுலகிலேயே அனுபவித்து இரசித்துப் பெறக் கூடிய பேறாகும். அதேபோல் இறப்பின் பின்னர் இதன் முழு நிறைவைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- முழு உலகிற்கும் இறையாட்சியை வெளிப்படுத்திய ஓர் ஆசிரியராக மத்தேயு இயேசுவை அறிமுகப்படுத்துகின்றார்.
- இயேசு இறையாட்சியில் வாழ்பவர்களின் பண்புகள், பேறுகள் மற்றும் கடமைகளை மலைப் பொழிவு அல்லது சமவெளிப் பொழிவு வழியாக முன்வைத்துள்ளார் என தூய மத்தேயு எடுத்துக் காட்டியுள்ளார்.

### மலைப்பொழிவின் நோக்கம்

1. திருத்தூதரின் அறநெறிகள், மறைநூல் அறிஞர் மற்றும் பரிசேயரின் அறநெறிகளை விட மேலானது

2. இயேசு புதிய மோசேயாக மலையின் மேல் புதிய சட்டத்தைக் கொடுத்துள்ளார்.
3. பழைய சட்டங்கள் அனைத்தும் இயேசுவின் புதிய சட்டத்தில் நிறைவுபெற்றது. (அன்பின் சட்டம்)
4. இறையாட்சிகுள் நுழைவதற்கு விரும்புவோர் உலகின் உப்பாகவும் உலகின் ஒளியாகவும் செயற்படவேண்டும்.
5. மனித உள்ளங்களில் உள்ள தீயகுணங்கள் அகற்றப்பட்டு உள்ளத் தூய்மையோடு வாழ வேண்டும்.

## 2. மறைத்தூதுப் பணி பற்றிய போதனை (10:1-42)

**10:1-15வரை பிரதான காரணங்கள் 3 குறிப்பிடப்பட்டுள்ளன.**

1. இயேசு பன்னிரண்டு திருத்தூதர்களை அழைத்தல் (10:1-4)
2. அவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி பணிக்கு அனுப்புதல் (10:5-15)
3. அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை முன்கூட்டியே அறிவித்தல் (10:16-22)

தமது பணியைத் தொடர்ந்து முன் கொண்டு செல்வதற்கு தேர்ந்தெடுத்த முதல் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேர் ஆவர். இயேசு தமது நற்செய்தியை வெளிப்படுத்துவதோடு இறையாட்சியின் அடையாளமாக வல்ல செயல்களைச் செய்வதோடு செய்முறைப் பயிற்சியொன்றை இப்பன்னிருவருக்கும் பெற்றுக் கொடுப்பது இயேசுவின் நோக்கமாயிருந்தது. அவரோடு இணைந்து உலகத்துள் இறையாட்சியை கட்டியெழுப்புவதற்கு உதவி செய்த பன்னிருவரின் பெயர்கள்:

1. பேதுரு என்னும் சீமோன்
2. பேதுருவின் சகோதரர் அந்திரேயா
3. செபதேயுவின் மகன் யாக்கோபு (பெரிய யாக்கோபு)
4. யாக்கோபுவின் சகோதரர் யோவான்
5. பிலிப்பு
6. பார்தலமேயு (நத்தானியேல்)
7. தோமா
8. வரி தண்டினவராகிய மத்தேயு (லேவி)
9. அல்பேயுவின் மகன் யாக்கோபு (சிறிய யாக்கோபு)
10. யூதா ததேயு
11. தீவிரவாதியாய் இருந்த சீமோன்
12. யூதாசு இஸ்காரியோத்து

- இயேசுவின் செய்தியாளராகவும் சபையின் முதல் அங்கத்துவ குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட இக்குழுவினரை திருச்சபையின் ஆணிவேராக ஏற்றுக்கொள்ளலாம்.
- வரி தண்டுபவரான மத்தேயுவையும், சட்டம் பற்றிய ஆசிரியருமான பர்த்தலமேயுவையும் தவிர ஏனைய அனைவரும் சாதாரண மக்கள் சமூகத்திலிருந்து அழைக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்களில் அநேகர் மீனவர்களாவர்.
- கிறிஸ்துவின் நற்செய்தியை வெளிப்படுத்துவதற்காக அழைப்புப் பெற்றவர்கள் பின்பற்ற வேண்டிய கோட்பாட்டு நெறிகள் அன்று போல் இன்றும் செல்லுபடியாகும்.

- சீடர்களுக்காக இடப்பட்டுள்ள கிரேக்க சொல் ‘மத்தாரெஸ்’ ஆகும். இதன் அர்த்தம் ‘வேறு ஒருவரிடமிருந்து கற்கின்ற ஒருவர்’ என்பதாகும்.
- இயேசுவோடு கூடவே இருந்து கொண்டும், கற்றுக் கொண்டும் அவருடைய வாழ்வில் மற்றும் பணியில் பங்காளிகளானவர்களே ‘சீடர்கள்’ என, புதிய ஏற்பாட்டில் அழைக்கப்படுகின்றனர். இங்கு கூறப்பட்ட பன்னிருவரும் ‘அனுப்பப்பட்டவர்கள்’ எனும் கருத்துள்ள ‘அப்போஸ்டோலொஸ்’ எனும் கிரேக்க சொல்லின் தமிழ்ச் சொல் அப்போஸ்தலர் (‘சீடர்’) என்பதாகும். இப்பன்னிருவரும் கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு, மரணம், உயிர்ப்பு ஆகியனவற்றைத் தமது கண்களாலே கண்ட சாட்சிகளாவர். அவர்கள் அவருடைய அதிகாரத்தைப் பெற்ற பிரதிநிதிகளாவர் (மாற்கு 3:14, திப 1:21-22, உரோ 1:1)
- இஸ்ரயேலின் காணாமற்போன ஆடுகளுக்கு மாத்திரமே மறைத்தூதுப் பணியை செய்யுமாறு இயேசு கட்டளையிட்டார். (10:5-6) மறைதூதுப் பணி தொடர்பான போதனை முழுமைபெறுவது நற்செய்தியின் இறுதியிலாகும். (28:16-20)

## மறைத்தூதுப் பணிக்கு ஆயத்தம் 10:5-15

நற்செய்தி அறிவிக்க, நோய்களைக் குணமாக்க, இறந்தவர்களை உயிர்ப்பிக்க, அலகையை அடக்க, இயேசு திருத்தூதர்களை அனுப்பினார். இறையாட்சி பற்றிய நற்செய்தியை முதலில் யூத மக்களிடம் மட்டுமே கொண்டு செல்ல வேண்டும்.

- இறைவனில் நம்பிக்கை வைத்து மேலதிகமாக பொருட்களைக் கொண்டு செல்லாது வெறுமையாகப் பயணம் செய்ய வேண்டும். ஏனெனில் திருத்தூதுர் இறைபராமரிப்பில் தங்கி வாழ வேண்டும்.
- மறைதூதுப் பணிக்கு இருவரிருவராக செல்ல வேண்டியது சாட்சி பகர்பவர்களாக இருப்பதற்காகவேயாகும்.
- வாழ்வானது எதிலும் பற்று அற்றதாகவும் எளிமையானதாகவும் இருத்தல் அத்தியவசியமான-தாகும்
- அமைதியின் தூதுவரான திருத்தூதுர் மக்கள் மத்தியில் அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்ற செல்ல வேண்டும். அதாவது ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதைப் போன்றதாகும்.
- மறைதூதுப் பணிக்கான அவர்களது செயற்பாடுகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதனால் சம்பிரதாய பூர்வமான வணக்கங்கள் செய்வதற்காக நேரத்தை செலவழித்தல் பொருத்தமற்றதாகும். உரிய கொடுப்பனவும் கிடைக்கும். பணிபுரிபவனுக்கு அதற்கான சம்பளம் கிடைக்கப்பட வேண்டும் (இணைச்சட்டம் 25:4)
- ‘அமைதி’ வாழ்த்துக் கூறுவது யூதர்களின் பாரம்பரிய வணக்க முறையாகும். அமைதி நல்லாழ்த்துக் கூறியவுடனுயே அமைதி மற்றும் நல்ல நிலையை அடைதல் அதனைக் கொடுத்துப் பெறுவதை அடைந்து கொள்வதென்பது அக்காலத்து யூத நம்பிக்கை.
- கால்களில் உள்ள தூசியைத் தட்டுதல் இறைவனின் நற்செய்தியை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைப்பதன் அடையாளமாக இருக்கின்றது.
- நற்செய்தி அறிவிப்போனை ஏற்றுக் கொள்ளாதவர்களிடமிருந்து விட்டு விலகிச் செல்ல வேண்டும்.
- நற்செய்தி அறிவித்தலை ஏற்றுக்கொள்ளாதவரின் நிலை அதனையும் விட கொடியதாக இருக்கலாம்.

## அனுப்பப்பட்டவர்கள் அடையும் துன்பங்கள் தொடர்பான காரணிகள் (10:16-25)

- நற்செய்திப் பணியில் சீடர் அடையும் துன்பங்கள் பற்றிய பகுதியில் கிறிஸ்தவத்தின் ஓர் அடிப்படைத்தன்மை விளக்கப்படுகின்றது. அதாவது துன்பங்கள், எதிர்பார்ப்புக்கள், தாக்கங்கள் ஆகியவற்றில் விளைவதுதான் திருச்சபை. இயேசுவும் பல்வேறு துன்பங்களை, எதிர்ப்புக்களை சந்தித்தார். இத்தகைய துன்பங்களைத் தாண்டித்தான் இறையாட்சி இந்த உலகில் மலர முடியும்.

## சீடத்துவத்தின் தன்மையும் சவால்களும் (10:26-42)

- ''நான் உலகிற்கு அமைதி கொணர வந்தேன் என எண்ண வேண்டாம்'' (10:14).∴ இவ்வசனம் மீக்கா 7:6ஐ நினைவூட்டுகின்றது. இயேசுவில் நம்பிக்கை வைத்து அவரைப் பின்பற்றுகின்றவர்கள், தமது குடும்பங்களில் உள்ள நம்பிக்கையற்ற அங்கத்தவர்களாலும் துன்பவேதனைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும் என அவர் இங்கு கூறியுள்ளார்.
- கிறிஸ்துவை அன்பு செய்வது கிறிஸ்தவர்களின் வாழ்வில் முக்கியத்துவம் பெற வேண்டும். இறைவனின் விருப்பத்தை தேடுவதும் மற்றும் செயலில் காட்டுவதும் இதனைத் தெளிவுபடுத்துகிறது. சிலுவை உரோமையர்களினால் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள வதைத்து துன்புறுத்தும் ஓர் முறையாகும். மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் தனது சிலுவையை அல்லது அதன் குறுக்கே உள்ள தண்டை தோளின் மேல் சுமந்து கொண்டு மரணத்துககு விதித்துள்ள இடத்தை நோக்கிச் செல்ல வேண்டும். இயேசு இந்த அவமானத்தின் வழியாக தன்னைப் பின்பற்றுபவர்களை மரணத்துக்கு முகங்கொடுக்கக் அழைப்பு விடுகின்றார் (10:38-39).
- கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் தன்னை வெறுத்து கிறிஸ்துவை பின்பற்ற அழைக்கின்றார். நான் என்ற தன்மையை அழிப்பவர்கள் மட்டுமே உண்மையான வாழ்வினைப் பெறலாம்.
- உண்மையான வாழ்க்கை என்பது ஒவ்வொருவரும் தமது சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு செல்வதே ஆகும். திருத்தூதுர்கள் இவை அனைத்தையும் அறிந்து கொள்ளவும், கேட்கவும் மற்றும் அனுபவிக்கவும் அதிர்ஷ்டமுள்ள ஒரு குழுவினராயிருந்தனர் எனக் கூறப்படுகிறது.
- இயேசு அவர்களை கற்பிக்கவும், குணமளிக்கவும் மற்றும் தீய ஆவிகளை விரட்டவும் அனுப்புகிறார்.
- இதைப் போன்று தூதுப் பணிக்காக வெளியே அனுப்பப்படுதலானது மெசியாவின் வார்த்தைகளையும் மற்றும் செயற்பாடுகளையும் நீடிக்கும் பணியாகக் காட்டுவது பொருத்தமாகும்.

## 3. உவமைகள் தொடர்பான போதனைகள் (13:1-52)

- இறையாட்சியை விளக்குவதற்காக இயேசு பல்வேறு உவமைகளை முன்வைத்தார்.
- மக்களின் சமூக வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய சிறிய கதைகளே உவமைகள் எனப்படும்.
- ஆழமான மறையினை எளிமையாக விளக்குவதற்கு இப்படியான கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் வெளிப்பொருள் வேறு. எனினும் அதனுள் பொதிந்துள்ள பொருள் இதனை விட அதிக ஆழமான ஒன்றாகும்.
- இறையாட்சியின் தன்மை விபரிக்கப்பட்டுள்ளது. இப்போதனை ஏழு உவமைக் கதைகளைக் கொண்டுள்ளன.
- இவற்றுள் விதைப்பவன், கடுகுவிதை ஆகிய இரு உவமைகளையும் மாற்குவும் லூக்காவும் குறிப்பிட்டுள்ளனர். புளிப்பு மாவு பற்றிய உவமை மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. வலை, முத்து, புதையல், களை பற்றிய உவமைகளை மத்தேயு

நற்செய்தியில் மாத்திரமே காணலாம். மனித மனங்களுக்குள்ளே இறையாட்சி வளர்ச்சியடைவது மிக நுண்ணிய விதத்திலாகும். கடுகு விதை நிலத்தில் மிகச் சிறிய செடியாக வளரத்தொடங்கி பெரிதாவதைப் போல, ஒரு கொஞ்சம் புளிப்புமாவின் வழியாக மாவு முழுவதும் புளிப்பேறுவதுபோல இறையாட்சியும் மெதுவாக வளர்ச்சியடைகிறது.

## விதைப்பவர் உவமை (13:1-23)

- விதைப்பர் விதைக்கும் விதை இறைவனிடமிருந்து வருகின்ற வார்த்தை. இது இறைவனின் ஆட்சி பற்றிய நற்செய்தியாகும். இக் குறிப்புகளுக்கேற்ப வயலின் நடுவில் காலடிப்பாதையில் விழுந்து கிடந்தன. எனவே விதைக்கப்படும் விதை வழி அருகில் விழுதல் நித்தமும் நிகழ்வதாகும்.
- பயிர் வளர்வதற்குத் தடையாயிருந்த பல்வேறு இடங்களில் விழுந்த விதைகளாக பலவீனமான நம்பிக்கையள்ளவர்கள் கணிக்கப்படுவதோடு, சோதனைகள் வரும்போது மூழ்கி வீழ்வதாகும்.
- விசேட படிப்பினையொன்றை அறிமுகப்படுத்திய சந்தர்ப்பத்தில் இயேசு ''கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்'' இச்சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார் (மத்.11:15, மாற்கு 4:23, லூக்கா 14:35). இதிலிருந்து அவர் கருதுவது, போதனையில் அடங்கியுள்ள அவரது கருத்துக்களைக் கேட்போரில் அதிக கவனம் செலுத்தும் ஒருவர் இருப்பின் அவருக்குக் கொடுக்கப்படும், அதாவது கற்பிக்கப்படுகின்ற மறை உண்மைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை மதிக்கின்றவர்களுக்கு இறைவன் அதிகம் அதிகமாய் விளக்கத்தைக் கொடுப்பார். எனினும் அவ்வுண்மைகளை வாழ்க்கையோடு தொடர்புறச் செய்யாத ஒருவரிடம் இருக்கும் விளக்கமும் இல்லாமற் போய்விடும்.
- உவமையின் விபரத்தில் குறிப்பிட்டுள்ள ''கண்டும் காணாதவர்'' என்பது எசாயா 6:9 இலிருந்து பெயர்தெடுக்கப்பட்டுள்ளது. நற்செய்தி தருகின்ற செய்தியை சிலரிடமிருந்து மறைத்து வைப்பது அல்ல, அதனை விளங்கிக் கொள்வதற்கு விரும்பாதவர்களிடம் அதன் உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

## களைகள் பற்றிய உவமை (13:24-30, 36-43)

- கோதுமை வயல்களில் நித்தமும் வளர்ந்த விஷமுள்ள காட்டுப் பயிர்களையாகும். வளரும் காலங்களில் களையும் கோதுமை பயிரும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருப்பதால் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காண்பது கடினமாகும்.
- இறைவனின் கட்டுப்பாட்டின்கீழ் உலகமொன்றில் கெட்டவர்களை நல்லவர்களிலிருந்து பிரித்துக் காண்பது எவ்வாறென்ற வினாவுக்குக் கொடுக்கக் கூடிய ஒரு விடையாக இதனைக் கருத முடியும். இவ்வுலகம் நன்மையும் தீமையும் ஒன்றாக இருக்கின்ற விதமாக திட்டமிடப்பட்டுள்ளது. அதனால் தீமையைப் பிடுங்கி எடுக்கும் முயற்சிகளின் போதும் நன்மைக்குத் துன்பங்கள் வந்து சேரலாம். இது மானிட மகனாகிய தீர்ப்பு வழங்குபவரால் நல்லோரையும் தீயோரையும் பிரித்தெடுக்கின்ற உலக முடிவு வரை காத்திருப்பதற்காகச் செய்யப்படுகின்ற ஒழுங்குமுறையாகும்.
- தீர்ப்பின் முடிவுக்கு இணங்க ஏற்றுக்கொள்ள மறுப்பதனால் ஏற்படுகின்ற அழுகையையும் அங்கலாய்ப்பையும் அத்தோடு (8:12, 22:13, 25:30) ஏற்றுக் கொள்வதனால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியும் (தானியேல் 12:3) காட்டப்படுகின்றது.

## கடுகு விதை மற்றும் புளிப்பு மாவு பற்றிய உவமை (13:31-33)

- இந்த இரு உவமைகளிலும் முக்கிய கருத்தாய் அமைவது இறையாட்சி. சிறியளவில் மற்றும் கண்ணுக்குப் புலனாகாதவாறு ஆரம்பிக்கப்பட்டபோதும் காலஞ்செல்ல செல்ல அது வெளிப்படையாகத் தெரிகிறது என்பதாகும். 8 அல்லது 10 அடியளவிலான உயரத்தில் வளர்கின்ற கடுகுச் செடியில் வானத்துப் பறவைகள் தங்குகின்றன (எசேக்கியேல் 17:23, தானியோல் 4:12-21).

### புதையல் மற்றும் முத்து பற்றிய உவமை (13:44-46)

- தங்கம் மற்றும் பெறுமதியுள்ள மாணிக்கம் போன்ற பொருட்களை பாதுகாப்புக்காக நிலத்தில் புதைத்து வைத்தல் பழைய பழக்கமாகும். இவ்விரு உவமைகளிலும் அடிப்படை படிப்பினையாய் அமைவது, விண்ணரசில் உள்ள உன்னத மதிப்பை எடுத்துக்காட்டுதலாகும். இறையாட்சியின் கீழ் வாழ்கின்ற மகிழ்ச்சி உருவாக்குகின்ற அருளை இதனால் பெற்றுக்கொள்ள முடியும்.

### வலை பற்றிய உவமை (13:47-50)

- இவ்வுவமை களைகள் பற்றிய உவமையுடன் நெருங்கிய தொடர்பினைக் காட்டுகிறது. இறுதியில் தீயோரிடமிருந்து நல்லோரைப் பிரிப்பதையே இது கற்பிக்கின்றது.

## 4. திருச்சபைப் பொழிவு (18:1-35)

- சபைத்தலைவர்கள் அதிகாரம், பதவி மற்றும் மதிப்பு போன்றவற்றிற்காக உழைக்கக் கூடாதென்றும், எவரும் இன்னொருவரை அடிமைப்படுத்தக் கூடாதென்று எடுத்தக்காட்டுவதற்கு இயேசு பின்வாங்கவில்லை (18:5).
- இவ்வாறான அறிவுறுத்தல் சபைக்கு அவசியமென்பதை மத்தேயு உணர்ந்திருந்தார். மக்கள் ஏற்றுக்கொண்ட மதிப்பீடுகளை மறுபக்கம் புரட்டி வேறுவிதமாக முன்வைப்பது இயேசுவின் போதனைகளில் வழமையாகக் காணப்பட்ட ஒரு பண்பாகும்.
- விண்ணரசில் புகுவதற்கு இறைவனது அருள், இறை உதவி தமக்குக் கிடைக்க வேண்டுமென உரிமை கோருவதல்ல மாறாக சிறு பிள்ளை ஒன்றின் முன்மாதிரிகையை அவர்கள் கற்க வேண்டும் (18:2-4).
- இங்கு ‘சிறுவர்கள்’ எனக்கருதப்படுபவர்கள் இயேசுவைப் பின்பற்றுபவர்களே அன்றி உண்மையில் சிறுவர்கள் அல்ல. அவர்கள் சமூகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்த முடியாத சாதாரண மக்களாவர் (18:6, 10, 14, 25:40).
- அவர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்வோரது கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி ஆழ்கடலில் அமிழ்த்த வேண்டும் (18:6). பொது மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் அதிகாரம் உள்ளவர்கள் பற்றிக் காட்டப்பட்ட மனப்பாங்கு இதுவாகும்.
- தலைவர்கள் அறநெறி சார்ந்த கடமைகளையே முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இச் செயற்பாட்டில் யாரும் தலையிடக் கூடாது (18:11-14).
- மன்னிப்பு வழங்குவது இங்கு முக்கியமானதாகும் (18:15-19). அதுமட்டுமல்ல மன்னிப்பு வழங்குவதற்கு எந்த வேளையிலும் ஆயத்தமாக இருக்க வேண்டும் (18:21-22). மன்னிக்க மறுத்த பணியாள் உவமையில் (18:21-35) பதவி பட்டம் வகிப்பவர்கள் எப்பொழுதுமே தங்களுக்கு இறைவனது இரக்கமும் அனுதாபமும் கிடைப்பதை நினைவிற்கொண்டு அவர்களின் சகோதரர்களுக்கு மன்னிப்பு வழங்கவேண்டுமென்பதே இங்கு விபரிக்கப்படுகிறது.
- பழைய ஏற்பாட்டிலே இறைவனை ஆயனென்று மக்கள் இறைவனின் மந்தைகள் என்று அநேக சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்டுள்ளது (எசா 40:11, எசே 34:11-31, திபா 23).
- உண்மையிலேயே இயேசு நல்லவர் என்பதால் முன்மாதிரிகையான ஆயனாக இருந்தார். மந்தையில் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைப் பற்றியும் நெருக்கமாக தெரிந்திருந்த அவர் காணாமற்போன ஆடுகளைத் தேடிச்சென்றார்.
- தனது மந்தையிலுள்ள ஆடுகளை பாதுகாத்தலும் காணாமற்போன ஆடுகளை தேடிச்செல்வதும் ஆயனின் கடமை என்பதை இயேசு வலியுறுத்தியுள்ளார். ஏனெனில் இறைவனின் விருப்பமும் அதுவே ஆகும்.

- இதிலிருந்து (18:15-20) இப்பகுதியின் அடிப்படைக்கருத்தானது குற்றம் புரிந்த இறைநம்பிக்கை உடையவர்களை அல்லது அங்கத்தவர்களை மீள வெற்றி கொள்வதும் அவர்களை நல்வழியில் வலிமைபெறச் செய்வதுமாகும்.
- யூத மறையில் ஏதாவது ஒரு செயலை அனுமதித்தல் மற்றும் தடைசெய்தல் எனும் சொல்லை 'கட்டிப்போடல்' 'மீட்டெடுத்தல்' என அழைப்பர் (18:18).
- ''உங்கள் சகோதரர் உங்களுக்கு எதிராக பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்கு செவிசாய்த்தால் நல்லது உங்கள் உறவு தொடரும்'' (18:15).
- இயேசுவின் இக்கட்டளைக்குப் பேதுரு கேள்வி ஒன்றை எழுப்புவதற்கு ஆயத்தமாக இருந்தார்.
- ஏழு முறை - எழுபது முறை மன்னித்தல், மன்னிப்பதற்கு எல்லை இல்லை என்பதாகும். மன்னிக்கும்போது கவனிக்க வேண்டிய கொள்கையை விளக்குகின்ற இந்த உவமையை (18:23-35) மத்தேயு மட்டும் குறிப்பிட்டுள்ளார்.
- உவமையில் குறிப்பிடப்பட்டுள்ள பத்தாயிரம் விலையுள்ள தாலந்து, மூலப்பிரதிகளில் பத்தாயிரம் தாலந்து என குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் பாவனையிலிருந்த மிகப்பெறுமதிமிக்க நாணயம் 'தாலந்து' ஆகும்.
- ஒரு தாலந்தின் பெறுமதி சாதாரண கூலியாள் பதினைந்து வருடங்களில் பெறுகின்ற முழுச்சம்பளத்தையும் விட அதிகம் என்பது கவனிக்கத்தக்கதாகும்.
- கடனாளி ஒருவர் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது போனால் குடும்பத்தவர்களை அடிமையாக விற்பது ஒரு பழக்கமாகும. (விப 21:2, 2அர. 4:1) 'இருநூறு' ரூபாவின் விலை மூலப்பிரதிகளில் நூறு தெனாரியம் என கூறப்பட்டுள்ளது. 'தெனாரியம்' ஒன்றின் பெறுமதி நாட்கூலிக்கு வேலை செய்த கூலியாளின் கூலியாகும்.
- இவ்வுவமையில் பிறருக்கு மன்னிப்பளித்தல் இறைவனிடமிருந்து மன்னிப்புப் பெறுவதற்கு வழிகாட்டுகின்றது எனக் காட்டுவதே இதன் நோக்கமாகும்.

## 5. நிறைவு காலப் பொழிவு (24:1-25:46)

- நிறைவுகாலம் பற்றிய போதனையும் (24:4-31) மற்றும் இறுதிக் காலத்தின் தன்மையும் 7 உவமைகளைக் கொண்டவைகளாகக் கூறப்படுகின்றன.
- அத்திமரம், வயலில் இருந்த இரு மனிதர், இரு பெண்கள், நம்பிக்கைக்குரிய அவநம்பிக்கையான பணியாளர், தோழியர் பத்துபேர், மூன்று பணியாளர்கள், செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்தல் (24:35 25:46) ஆகியவை. இவ்வுவமைகளில் கடைசி நான்கும் முக்கியமானவையாகும். இவற்றில் நம்பிக்கைக்குரிய பணியாளரின் உவமை (24:45-51) தலைவர் வந்து பார்க்கும்போது தம் பணியைச் செய்து கொண்டிருந்தால் அப்பணியாளர் பேறு பெற்றவர்.
- திருமறையைப் போதிக்கின்ற சபைத்தலைவர்களின் பொறுப்பு இதிலிருந்து விளக்கப்படுகின்றது. அவ்வாறு செய்யாதவர்கள் தொடர்பாக நிகழ்கின்றவை இங்கு (24:48-51) காட்டப்படுகின்றது.
- தோழியர் பத்துப்பேர் பற்றிய உவமை (25:1-13) மத்தேயு மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மணமகனால் மணமகளை தனது வீட்டுக்கு அழைத்துச் செல்வது பாலஸ்தீனாவில் நிலவிய பழக்கமாகும். திருமண வைபவம் மற்றும் திருமண விருந்து மணமகனின் வீட்டிலேயே நடைபெறுகின்றது. நள்ளிரவுக்குக் கிட்டிய ஒரு வேளையிலாகும்.
- இப்பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்த உவமையில் ஆயத்தமாக இருக்க வேண்டுமென்ற தேவை எடுத்துக்காட்டப்படுகின்றது.
- இத்தோழியர் மணமகனோடு அழைத்து வர மணமகளோடு ஒன்று சேர்ந்து ஊர்வலமாக அவரது வீட்டுக்கு வருகை தந்து, திருமண வைபவத்திலும் விருந்திலும் பங்குபற்றுவதற்கு ஆயத்தமாக இருப்பவர்களே ஆவர்.
- இவ்வுவமையின் வழியாக மேலும் திருத்தூதர் ஒன்றிணைந்து காலத்தில் சரியாக இதனைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது விளக்கப்படுகின்றது.

- மணமகன் தாமதமாய் வருவது மீண்டும் வருதல் நடைபெறுகின்ற காலம் நிச்சயமற்றது என்பது காட்டப்படுகிறது.
- பணியாளர் மூவர் பற்றிய உவமை (25:14-30) லூக்கா எழுதிய மினா நாணயம் பற்றிய உவமை (19:11-21) ஆகிய இரண்டு உவமைகளுக்கும் இடையில் உன்னிப்பாகக் காணக்கூடிய ஒற்றுமைகளும் மற்றும் வேற்றுமைகளும் அதிகமாக உள்ளன.
- மானிட மகனின் வருகைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டுமென இரு உவமைகளும் கற்பிக்கின்றன. மத்தேயுவால் சுட்டிக் காட்டப்படுகின்ற விசேட கருத்து யாதெனில் தலைவர் புறப்பட்டுச் செல்லல் மற்றும் மீண்டும் வருகை தரல் ஆகியனவற்றுக்குகிடையிலான காலத்தை நீண்டதாகக் காட்டுகின்றார். தாலந்தை வீணாக்குவது சபையிலுள்ள குறைபாடாகும். ஒவ்வொருவரும் தமக்குரிய தாலந்து பற்றிக் கணக்குக் கூற வேண்டும்.
- மக்களினத்தார் அனைவரினதும் தீர்ப்பு நாள் (25:31-46) இந்நிகழ்வு இறுதிப் போதனையை முடிவுக்குக் கொண்டு வருகின்றது.
- ஒருவருடைய நிலைவாழ்வின் விதியினைத் தீர்மானிப்பது அவர்கள் பசியாய் இருப்பவர்களுக்கு, அன்னியராய் இருப்பவர்களுக்கு, அனாதைகளுக்கு, நோயுற்றோருக்கு, சிறையிலிருப்போருக்கு உதவி செய்துள்ளார்களா என்பதை அடிப்படையாகக் கொண்டேயாகும். இவ்வாறானவர்களுக்கு உதவி செய்கின்ற முழு மனித வர்க்கமும் இறைவனுக்குப் பணி செய்வோராவர். இவற்றின் வழியாக இறுதித் தீர்ப்பு நிகழ்வது எதன் அடிப்படையிலென்பது விளக்கப்படுகின்றது. ஆகவே ஆன்ம சரீர இரக்கச் செயல்கள் வழியாகவேயாகும்.
- எதிர்காலத்தில் முகங்கொடுக்க நேரிடுகின்றவை பற்றி விழிப்பாய் இருக்கும்படி திருத்தூதரை அறிவூட்டுகின்ற இயேசு சபைக்குள் ஏற்றுக்கொள்ளாமை மட்டுமல்லாது அவரைச் சரியாக அறிந்து கொள்வதற்கு முடியாமையினால் ஏற்படுகிற தவறான வழிகாட்டல் ஆகியன பற்றி விளக்கப்படுகின்றது.
- எனினும் தேர்ந்து கொள்ளப்பட்டோருக்கு ஆறுதல் கிடைக்கிறது.
- கிறிஸ்துவின் மீள் வருகை மறைவாக நடைபெறுகின்ற ஒன்றல்ல, பகிரங்கமாக நிகழ்வதாகும். உரிய வேளையை இறைவன் மட்டுமே அறிந்திருக்கின்றார். விழிப்பாயிருத்தல் இவ்வாறான நிலைமைக்கு முகங்கொடுக்கக் கூடிய ஒரே வழியாகும். கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் நம்பிக்கை, நினைவு, புத்தி உள்ள பணியாளனைப் போன்று விழிப்போடு தனது செயல்களை குறைவின்றி நிறைவேற்றினால் அவர்கள் பேறுபெற்றோராவர். பொல்லாத பணியாளன் தனது கடமைகளைப் புறக்கணித்தமையாலும், விழிப்போடு தனது தலைவரின் வருகையை எதிர்பார்த்து இராதமையாலும் முடிவில்லாத தண்டனைக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்றது.

## இயேசுவின் அரும் செயல்கள் (புதுமைகள்)

- இறைவனின் இரக்கத்தை வெளிப்படுத்துகின்ற இறை வல்லமையின் செயற்பாடு அரும்செயல் என அழைக்கப்படுகின்றது.
- இறையாட்சி உதயமாக உள்ளதெனவும், மெசியாவைக் காரணமாகக் கொண்டு அவை வெளிப்படுத்துகின்றதென்தையும் இவ் அரும்செயல்களினால் விளங்கிக் கொள்ளலாம்.
- மனிதன் நான்கு விதமான அடிமைத்தனங்களுக்கு உள்ளாகியுள்ளான். அவை மரணம், நோய், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் தீய ஆவிகளுக்கு அடிமையாதல் என்பனவாகும்.
- இந்த நான்கு விதமான அடிமைத்தனங்களுக்கும் உள்ளாகி துன்பப்படும் மனிதனை மீட்டெடுப்பதற்காகவே இயேசு அரும் செயல்களைச் செய்தார்.

இயேசு செய்த அரும் செயல்களை பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

வாழ்வு மற்றும் மரணத்தின் மீதுள்ள அதிகாரத்தைக் காட்டுகின்ற செயல்கள்.

1. குணமளித்தல்
2. தீய ஆவியை விரட்டுதல்

3. இயற்கையோடு தொடர்புடையவை

4. இறந்தவர்களை மீண்டும் உயிர்த்தெழச் செய்தல்

## குணமளித்தல் : பேதுருவின் மாமியார் குணமடைதல் (8:14-17)

- இயேசு பேதுருவின் வீட்டிறகுள் சென்ற போது, பேதுருவின் மாமியார் காய்ச்சலாய்ப் படுத்திருப்பதைக் கண்டு, அவருடைய கைகளைப் பிடித்தார். அப்போது காய்ச்சல் அவரை விட்டு நீங்கியது. அவர் எழுந்து இயேசுவுக்கு பணிவிடை செய்தார்.
- அவர் நோயாய் இருப்பதை இயேசுவுக்குக் கூறத் தேவையில்லை என்பதை நாம் காண்கிறோம். அவருக்கு அது தெரியும். அதே போன்று கையைப் பிடித்தல் போதுமானது, கையைப்பிடித்து எழுப்பத் தேவையில்லை. அவர் முழுமையாகக் குணமடைந்துள்ளதை அவர் பணிவிடை செய்வதிலிருந்து விளங்குகின்றது.
- குணமாதல் என்பது பணிக்கான அர்ப்பணிப்பாகும்.

## தீய ஆவியை விரட்டுதல் : கதரேனர் பகுதியில் பேய் பிடித்த இருவரை நலமாக்குதல் (மத்தேயு 8:28-34)

- பேய் பிடித்த இருவர் இயேசுவின் எதிரில் வந்து குறித்த காலம் வருமுன்னே தங்களை வதைப்பதற்காக வந்ததையிட்டு அவரிடம் கத்தினார்கள்.
- மனிதருக்கு இயேசு யாரென்பதை இனங்காண முடியாது போயினும் பேய்கள் அவரை இனங்கண்டு கொண்டன. மிகவும் விசேட விதத்தில் 'இயேசு இறைவனின் மகன்' எனும் தன்மை இருந்தமையை 'இறைமகன்' என்னும் உத்தியோக பூர்வ பெயர் எடுத்துக்காட்டுகிறது. யூத நம்பிக்கைக்கேற்ப தீய ஆவிகளது வல்லமை முழுமையாக அகற்றப்படுவது இறுதி நாளிலாகும்.
- எனினும் அதற்கு முன்னரே இயேசு அவற்றைச் செயலிழக்கச் செய்வது பற்றி அவை குறை கூறுகின்றன. சகல தீய சக்திகளையும் தீர்ப்புக்குள்ளாக்கி தண்டனை வழங்கும் இறுதித் தீர்ப்பு நாள் பற்றிய நம்பிக்கை இங்கு பிரதிபலிக்கப்படுகின்றது.
- பேய்கள் பன்றிக் கூட்டத்துள் புகுவதற்கு கேட்டுக் கொள்வதிலிருந்து இப் பிரதேசம் பிற இனத்தவர் வாழுகின்ற ஓர் பகுதி என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.
- யூத இனத்தவருக்குப் பன்றிகள் பொருத்தமற்ற விலங்காகும். பேய்களிடமிருந்து இவ்விருவரையும் விடுவித்திருப்பதைப் பார்க்கிலும் அவர்களுக்கு நேர்ந்துள்ள பொருளாதார நட்டத்தின் மீதே, அதாவது பன்றிக் கூட்டத்தின் மீது கவனத்தைச் செலுத்துகின்றனர்.
- மக்களை தீமையிலிருந்து மீட்டெடுப்பதை விட பன்றிக் கூட்டத்தைக் காப்பாற்றுவதே அவர்களுக்கு முக்கியமானதாயிருந்தது. அதனால் தமது பகுதியை விட்டு அகலுமாறு இயேசுவை வேண்டிக் கொண்டனர்.

## இயற்கையோடு தொடர்புடையவை: காற்றையும் கடலையும் அடக்குதல் (மத்தேயு 8:23-27)

- கலிலேயக்கடல் சுற்றிவர மலைகளை வளையமாகக் கொண்டுள்ள இடத்தில் அமைந்துள்ளது. இதனால் இக்கடல் திடீரென ஏற்படும் கொந்தளிப்புக்குப் பிரசித்தி பெற்றதாகும். இயேசு தூங்கிக் கொண்டிருந்தார். சீடர்களின் பதற்றத்தினால் விழித்துக்கொண்ட அவர் காற்றுக்குக் கட்டளையிட்டபோது உடனே கொந்தளிப்பு அடங்கியது.
- சீடர்களின் நம்பிக்கையை உறுதிசெய்வதற்கு இந்நிகழ்வு காரணமாயமைந்தது.

## இறந்தவர்களை மீண்டும் உயிரத்தெழச் செய்தல் : தொழுகைக் கூடத் தலைவரின் மகள் (மத்தேயு 9:18-19:23-26)

- மத்தேயு குறிப்பிடுகின்ற தொழுகைக் கூடத் தலைவர் யாயீர் என்பதை ஏனைய நற்செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். லூக்காவிலும் மாற்குவிலும் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுக்கேற்ப யாயீர் இயேசுவை சந்திக்கையிலே நோயாளி இறக்கும் நிலையிலிருந்தாள். அவள் இறந்துவிட்டாள் என்பது பின்னர் தெரியவருகின்றது.
- எனினும் மத்தேயுவில் தொழுகைக் கூடத் தலைவர் இயேசுவிடம் அவருடைய மகள் இறந்து விட்டாள் என அறிந்த பின்பே வருகின்றார். இயேசுவிடம் அவருக்கிருந்த அளவற்ற நம்பிக்கை இதிலிருந்து உறுதியாகின்றது.
- சிறுமியின் இறப்பைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் அழுது புலம்பிக் கொண்டிருந்தனர்.''விலக்கிப் போங்கள் சிறுமி இறக்கவில்லை. உறங்குகின்றார்'' என்று கூட்டத்தினருக்கு இயேசு கூறுகையில் அவர்கள் அவரைப் பார்த்து நகைத்தனர்.
- எனினும் தொழுகைக்க கூடத் தலைவர் இயேசு கூறியதை உறுதியாக நம்பினார். அவருடைய எதிர்பார்ப்பைத் தளரவிடாது இயேசு நோயில் இருந்த சிறுமி படுத்திருந்த வீட்டின் அறைக்குள் சென்று அவளை எழுந்திருக்கும்படி கூறினார்.
- அந்த இறைவார்த்தை செயற்பட்டது. அவள் எழுந்திருந்தாள். மக்கள் பயந்தனர். அவளுக்கு உணவு கொடுக்கும்படி இயேசு கூறுவதிலிருந்து எழுந்திருந்த அவள் பூரணமாகக் குணமடைந்துள்ளாள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

## இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு மற்றும் காட்சியளித்தல் (மத்தேயு 26-28)

- மத்தேயு முன்வைத்துள்ள பாடுகள் பற்றிய கதையில் இயேசுவை கைது செய்தல் மற்றும் மரணத்திற்கு உள்ளாக்குதல் ஆகிய நிகழ்வுகளால் இந்நிலைமைகளுக்கு பொறுமையோடு முகங்கொடுக்கின்ற மெசியாவாக அவரை முன்வைக்கின்றார்.
- இந்தச் சந்தர்ப்பம் முதல் இறை விருப்பத்திற்கு தலைசாய்க்கும் கீழ்ப்படிவுள்ள மகனை அவரே யூத இனம் எதிர்பார்த்திருந்த மெசியாவாக வெளிப்படுத்தப்படுகிறார்.
- பாஸ்கா என்பது யூத மக்கள் எகிப்தில் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறுவதை நினைவூட்டுவதற்காக, நிசான் என்ற முதலாம் மாதம் (மார்ச் - ஏப்பிரல்) 14 ஆம் திகதி நிகழ்த்தப்படுகின்ற ஒரு விழாவாகும்.
- இதற்கிடையில் யூதத் தலைவர்கள் இயேசுவை சட்டரீதியாக மரண தண்டணை பெற்றுக் கொடுப்பதற்கான வழிகளில் ஈடுபட்டனர்.
- துன்ப வேதனைகள் பற்றிய முன்னறிவித்தலின் பின்பு பெத்தானியாவில் நறுமண தைலம் பூசுதல் (26:6-13) இடம்பெறுகிறது. இந்நிகழ்வு நற்செய்தி நான்கிலும் இடம்பெற்றுள்ளது.
- 'பெத்தானியா' எருசலேமுக்கு மூன்று கிலோமீற்றர் கிழக்கே அமைந்துள்ள ஊராகும். 'சீமோன்' ஒரு காலத்தில் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருந்தபோது இயேசுவால் குணமளிக்கப்பட்ட ஒருவராக நம்பப்படுகிறது. இயேசு அவருடைய வீட்டுக்கு விருந்துக்காக அழைக்கப்பட்டிருந்தார்.
- தமது கால்களை பின்புறமாக நீட்டி கட்டையான ஆசனங்களில் அல்லது மெத்தைகள் மீது சாய்ந்து உணவு உண்ணல் அக்காலத்தில் நிலவிய பழக்கமாகும்.
- ஆகையால் இந்நிகழ்வோடு தொடர்புடைய பெண்ணுக்கு இயேசுவின் இரு கால்களையும் தனது கூந்தலால் துடைப்பதற்கு இயலுமாயிருந்தது. ''ஏழைகள் எப்போதும் உங்களோடு இருக்கிறார்கள்'' (26:11). இயேசு இவ்வார்த்தைகளை (இணைச்சட்டம் 5:11) நினைவூட்டுகின்றார்.
- பெயர் குறிப்பிடப்படாத இப்பெண்ணின் செயல் இயேசுவுக்கு மதிப்பளிப்பதாகக் காட்டப்படுகிறது. விலையுயர்ந்த நறுமணத் தைலத்தினால் சீடர்களின் கோபத்தின் மத்தியிலும் இத் தைலம் பூசுதல் மெசியாவின் பணியை நிறைவடையச் செய்யும், அவரது மரணம் மற்றும் அடக்கத்திற்கான ஆயத்தப்படுத்துதலாகும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தினர். அவரை ஏற்றுக் கொள்ளாத போதும் பாவியென முத்திரை குத்தப்பட்ட பெண்ணொருத்தி அவருக்கு தைலம் பூசுகிறாள். இயேசுவைப் பின்பற்றுவதற்கு ஆண் பெண் வேறுபாடோ குடும்பப் பின்னணியோ இனமோ முக்கியமானவையல்ல. இயேசுவில் நம்பிக்கையும் மற்றும் இறைவனுடைய விருப்பத்தினை நிறைவேற்றுவதும் போதுமானது என்பது இங்கு விளக்கப்படுகின்றது.
- ஒரு அடிமையை விலைக்கு வாங்கும்போது வழக்கமாக செலுத்திய பணத்தின் பெறுமதி 30 வெள்ளிக்காசு (விப21:31). யூதாசு இயேசுவை காட்டிக் கொடுத்ததும் அவ்வாறான பணத்திற்காகும் (26:15).
- பாஸ்கா விழாவோடு ஆரம்பமாகும் புளிக்காத அப்பப்பண்டிகையும் 7 முழுமையான நாட்கள் நடைபெறும். அந்த கிழமை புளிப்பு மா பாவனை தடைசெய்யப்பட்டிருந்தது (விப12:15-20).
- பாஸ்கா விழா மேசையில் பழங்கள், பலசரக்கு மற்றும் வினாகிரியினால் தயாரிக்கப்பட்ட அச்சாறு பாத்திரம் ஆகியன வைக்கப்பட்டிருக்கும். அப்பம் அங்கு சுட்டுச்சாப்பிடுவது பழக்கமாகும். பாஸ்கா உணவு இறுக்கமாகக் கட்டிப் பிணைக்கப்பட்ட நட்பினை அடையாளப்படுத்துவதினால் யூதாசு இந்த உணவில் பங்குபற்றுவது ஒரு துரோகச் செயல் எனக் கருத முடியும்.
- இப்பாஸ்கா உணவின்போர்து இயேசு எடுத்து ‘இது என் உடல் இது என் இரத்தம்’ என்று அப்பத்தையும் இரசத்தையும் கொடுத்தார். இது பாஸ்காவிற்கு புதிய அர்த்தத்தை கொடுத்தது. இரவுணவுக்கான கிறிஸ்தவ போதனையின் அடிப்படை இதுவே ஆகும்.
- தன்னுடைய மரணத்தைக் காரணமாகக் கொண்டு நிறுவப்பட்ட இறைவன் மற்றும் மனிதனுக்கிடையில் புதிய உறவொன்றிற்கு பங்குதாரராகின்ற வரத்தை கிறிஸ்து அவரைப் பின்பற்றுபவருக்கு இதன் மூலம் பெற்றுக் கொடுக்கின்றார்.
- “நான் உங்களோடு புதிய திராட்சைப் பழ இரசத்தைக் குடிக்கும் காலம் வரும்வரை” என இயேசு வெளிப்படுத்திய வார்த்தைகள் புதிய உடன்படிக்கையின் கீழ் பெறுகின்ற மீட்பு தொடர்பாக கூறப்பட்டதொன்றாகத் தெரிகிறது.
- இந்த மீட்பினால் கருதப்படுவது யாதெனில் இம்மீட்பு முழுமையடைந்து அனைவரும் இறைவனின் ஆட்சிக்குக் கீழ்வருதல் என்பதாகும்.
- இயேசு பலியான மரணத்தை நினைவூட்டுதலின் பொருட்டு அவர் புதிய பாஸ்கா விருந்தினை நிறைவேற்றினார்.
- ‘கெத்சமனி’ ஒலிவ மரங்கள் வளர்க்கப்பட்ட பழத்தோட்டமாகும். இது எருசலேம் நகருக்கு எதிரே மற்றும் ஒலிவ மலையில் மேற்குச் சரிவில் அமைந்துள்ளது. ‘எண்ணெய் இயந்திரம்’ என்பது எபிரேய மொழியில் இதன் அர்த்தமாகும்.
- இயேசுவின் துன்பங்கள் திடீரென ஏற்பட்ட நிகழ்வோ, பிலாத்துவின் அதிகாரத்தினால் நிகழ்ந்ததொன்றோ அல்ல உலகை மீட்டெடுப்பதற்கான இறைவனின் திட்டமாகும்.
- எனினும் இயேசு இதற்கு முகம் கொடுத்த விதத்தை மறைப்பது மத்தேயுவின் கருத்தாக இருக்கவில்லை. இயேசுவின் வேண்டுதலில் இது விளங்குகிறது. ‘‘என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என்விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்’’ (26:39).
- அவர் அனைத்தையும் மீட்பின் வெற்றியைப் பெற்றுக் கொடுப்பதற்காகப் பொறுமையோடு சகித்துக்கொண்டார்.
- பல்வேறு கேள்விகளுக்கு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் மத்தேயு சபையினருக்கு இது ஒரு முன்மாதிரிகையாகும். யாராவது தமக்குப் பின்னால் வருவதானால் தனது சிலுவையை சுமந்து கொண்டு வர வேண்டுமென இங்கு விளக்கபபடுகிறது.
- ‘‘எனது நேரம் நெருங்கி விட்டது’’ இதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கிரேக்க சொல் ‘காயிரோஸ்’ அதாவது ‘மணித்தியாலம்’ அல்லது ‘வேளை’ ஆகும்.

- இவ்வேளைக்கு முகங்கொடுப்பதற்காகவே இயேசு தனது முழு வாழ்விலும் ஆயத்தம் செய்தார். தலைமைக் குருக்களுக்கும் மற்றும் மறைநூல் அறிஞருக்கும் அது விளங்காமல் இருந்திருக்கலாம்.
- சீடன் குருவை முத்தமிடுவது விசேட மதிப்பளிக்கும் ஓர் அடையாளமாகும். யூதாசு இவ்விதமாகவே இயேசுவைக் காட்டிக் கொடுக்கின்றார்.
- உரோமரின் படையணி ஆறு ஆயிரம் வீரர்களை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான படையணி பன்னிரு முறைக்கு அதிக எண்ணிக்கையெனினும் பாதுகாப்பிற்காக வழங்க முடியுமென இயேசு இங்கு நினைவூட்டுகிறார் (26:33). இவையாவும் (செக்கரியா 13:7) நிறைவேற்றபட வேண்டியனவாகும்.
- யூத தலைமைச் சங்கம் அல்லது செனத்திரின் நீதி மன்றம் யூதரின் மிக உயர்ந்த நீதி மன்றமாகும்.
- குருக்களும், மறைநூல் அறிஞரும் மற்றும் தலைமைக் குருக்களும் இச்சபையின் அங்கத்தவராவர். கைப்பாஸ் கி.பி 18-36 வரையும் முக்கிய தலைமைக் குருவாகப் பணியாற்றினார். இவர் கி.பி 6-15 வரை தலைமைக்குருவாக இருந்த அன்னாசின் மருமகனாவார்.
- இச்சபையானது யூதரின் சமய மற்றும் சிவில் பிரச்சினைகளை தீர்த்து வைத்ததோடு தண்டனை விதிப்பதற்கு அதிகாரம் இருந்தாலும் யாருக்காவது மரணத்துக்குத் தீரப்பளிப்பதற்கான அதிகாரம் உரோம ஆட்சியாளருக்கு மட்டுமே இருந்தது.
- இயேசு தொடர்பான பொய்ச் சாட்சி கொடுப்பதற்கு அனேகர் முன் வந்த போதிலும் ஒருவரைக் குற்றவாளியாக ஏற்றுக் கொள்வதற்கு சாட்சிக்காரர் இருவரை முன்வைக்க வேண்டுமென்பதை (இணைச்சட்டம் 19:15) காட்டுகின்றது. மத்தேயு இக்கருத்துக்கு உடன்பட்டாரெனத் தெரிகிறது.
- (26:64-65) இல் கூறப்பட்டுள்ள இயேசுவின் வார்த்தைகள் இறைவனது கௌரவத்திற்கு ஊறுவிளைவிக்கின்ற இறை நிந்தனையென செனெத்திரின் அங்கத்தவர்கள் ஏற்றுக் கொண்டனர். அதற்குரிய தண்டனை கல்லால் எறிந்து கொல்வதாகும் (லேவியர் 24:11-16). தமது உடையை கிழிப்பது பயம் மற்றும் அதிக கோபத்தை வெளிக்காட்டுகின்ற யூதரின் செயலாகும் (தொடக்கநூல் 37:29).
- தலைமைக்குரு இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட போது தனது ஆடைகளைக் கிழித்துக் கொள்கிறார். பின்னர் யூதேயா, சமாரியா மற்றும் இதுமேயா ஆகிய பிரதேசங்களின் உரோமைய ஆளுநராக பதவி வகித்த பிலாத்திடம் இயேசுவை கொண்டு சென்றனர்.
- இயேசுவை காட்டிக் கொடுப்பதற்காக யூதாசுக்கு வழங்கிய வெள்ளியின் விலை முப்பது இது ‘இரத்தத்தின் விலை’ என அழைக்கப்படுகிறது. ஒருவருடைய உயிரை அழிப்பதற்காகக் கொடுக்கப்படுகிற பணம் எனப்படுவதால் இது மரணத்தை மற்றும் கிட்டியதாக இருப்பதால் அவர்களது பழக்கங்களுக்கேற்ப அது தூய்மையற்ற ஒன்றாக கருதப்படுகிறது. இதனால் கோவிலின் சாதாரண செலவுகளுக்கு இப்பணத்தைப் பயன்படுத்த முடியாதிருந்தது.
- (27:19) பிலாத்துவின் மனைவியின் கனவை மத்தேயு மட்டுமே குறிப்பிடுகின்றார். இறைவனின் வழிகாட்டலைக் காட்டுகின்ற ஒரு பாதையாக இக்கனவினைப் பயன்படுத்தியுள்ளார்.
- பிலாத்து கைகளைக் கழுவுதல் ஆனது அவர் கொடுக்கின்ற தீர்ப்புப் பற்றிய பொறுப்பு இல்லாத நிலையைக் காட்டும் அடையாளமாகும். மரண தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்கு கொடிய வேதனையைத் தருகின்ற கசையால் அடித்தல் அக்கால வழக்கத்தில் இருந்ததோடு, அவர்களை பரிகசிப்பது உரோமைய வீரர்களின் தேவையாயிருந்தது. இப் பரிகாசம் கைதிக்கு எதிராக கூறப்படுகிற குற்றங்களோடு தொடர்புடையவையாகும்.
- இயேசுவின் ஆடைகளைக் கழற்றி உரோமைய படைவீரர் அணிகின்ற கையில்லாத மேற்சட்டையை அணிவித்து உரோமைய பேரரசனோ மற்போரில் வெற்றியீட்டிய விளையாட்டு

வீரன் அணிகின்ற முடியினைப் போன்ற முள் முடியினைப் பின்னி, செங்கோலைப் போன்று பரிகாசத்தை அடையாளப்படுத்துகின்ற குழாய் போன்ற ஒரு தண்டினை அவருடைய கையில் கொடுத்து எள்ளி நகையாடினர்.

- அவர்கள் அவரை 'கபால மலை' அல்லது 'மண்டை ஓடு' என கூறப்படுகின்ற இடத்திற்கு கொண்டு சென்றனர். குற்றவாளி செய்த குற்றத்தைக் காட்டுகின்ற ஆவணத்தை சிலுவையின் மேல் எழுதி பொருத்துவது வழக்கமாயிருந்தது. ஆகவே இயேசுவின் சிலுவையின் மேல் 'யூதரின் அரசன்' எனக் குறிப்பிட்டிருந்தனர்.
- ''ஏலி ஏலி லெமா சபத்தானி'' இதன் பொருள் ''என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' எனும் இயேசுவின் வேதனையாக காட்டுகின்ற இந்தச் சொல் (திருப்பாடல் 22:1) நினைவூட்டுகின்றது.
- இயேசுவுக்குக் கொடுத்த புளித்த திராட்சை இரசம் சாதாரணமாக உரோமைய படைவீரர்களும் ஏழைமக்களும் உபயோகிக்கின்ற மலிவான திராட்சை பானமாகும்.
- திருக் கோவிலின் திரை, தூய இடத்திலுள்ள தூய இடத்தை வேறாக்குவதற்காக பயன்படுத்திய திரைச் சீலையாக இருக்கலாம் (விடுதலைப்பயணம் 26:31, எபிரேயர் 9:8, 10:19) திரை இரண்டாகக் கிழிதல் இறைவனிடம் செல்லும் வழி இயேசுவால் திறக்கப்பட்டுள்ளதை அடையாளப்படுத்துகின்ற தென்பது கிறிஸ்தவ சம்பிரதாயத்துக்கமைவான நம்பிக்கை ஆகும் (எபிரேயர் 9:3, 8, 10:19-22).
- (27:51-53) வரையுள்ள அயல் சூழலில் மாற்றங்கள் மற்றும் கல்லறைகளிலிருந்து இறந்தவர்கள் எழுப்பப்படுதல் ஆகியவற்றை மத்தேயு மட்டுமே குறிப்பிடுகிறார்.
- எருசலேமிலிருந்து வடமேற்றிசைக்கு 25 கிலோமீற்றர் அளவிலான தூரத்தில் அமைந்துள்ள நகரமான அரிமத்தியாவிலிருந்து வந்த யோசேப்பு எனும் பெயருடைய செல்வந்தரான பரிசேயரொருவர் இயேசுவின் திருவுடலை அடக்கம் செய்வதற்காக கேட்டுக்கொண்டு புதிய கல்லறையொன்றில் அவரது திருவுடலை அடக்கம் செய்தார்.
- மறுபிறவி பற்றிய நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது காரணி வெறுமையான கல்லறை. இயேசு காட்சியளித்தமையால் இக்காரணம் மிகவும் வலிமைபெற்றது. உயிர்த்த இயேசு கலிலேயாவில் தனது திருத்தூதருக்கு சாட்சியமளித்தலை மத்தேயு குறிப்பிட்டுள்ளதோடு, லூக்கா எருசலேமை அண்டிய பகுதிகளில ்நிகழ்ந்த காட்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
- வாரத்தின் முதலாவது நாள் என்பது யூதர்கள் ஏற்றுக்கொள்கின்றதற்கமைய சனிக்கிழமை மாலையில் சூரியன் மறைவதிலிருந்து ஞாயிறு மாலை சூரியன் மறையும் வரையான காலப் பகுதியாகும். இயேசுவுக்கு இறுதி மரியாதை அளிக்கும் பொருட்டும் தமது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாகிய அவருக்கு நன்றியறிதலைக் காட்டுவதற்காகவும் பெண்கள் கல்லறைக்கு வந்தனர்.
- இறைவனது பிரசன்னம் அங்கு இருப்பதும் நிலநடுக்கம், இறைவனது தூதுர் ஒருவர் கல்லைப் புரட்டியிருப்பதும் உயிர்ப்பின் செய்தியை திருத்தூதருக்கு அறிவிப்பதற்கான கட்டளை இடவேண்டியிருந்ததன் காரணமாகவேயாகும்.
- இந்தச் செய்தியை எடுத்துச் செல்வதில் பெண்கள் மகிழ்ச்சியடைந்தனர். அதே போன்று செய்தியின் காரணமாக அவர்கள் பயமும் அடைந்தனர்.

**தேர்ச்சி** 5.0 : கிறிஸ்தவ படிப்பினைகளால் ஊட்டம் பெற்று இறையாட்சியில் பங்குதாரர் ஆவார்.

**தேர்ச்சி மட்டம்** 5:2 **:** தூய பவுலின் இறையியல் படிப்பினைகளுக்கமைய வாழ்வைக் கட்டியெழுப்புவார்.

**பாடவேளை** : 20

## கற்றல் பேறுகள்

- தூய பவுலின் முக்கிய படிப்பினை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.
- தாழ்மையாக வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- தூய பவுலின் முக்கிய படிப்பினைகள் தொடர்பாக சேகரித்த தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- அன்பின் கட்டளைகளின் படி தமது வாழ்வை அமைத்துக் கொள்வார்.
- குடும்பத்தில் அன்பு, ஒற்றுமையுடன் வாழ்வார்.

## அன்பு (1கொரிந்தியர் 13:1-13)

- கொரிந்திய சபை பல்வேறு வழிகளில் வருமானத்தைப் பெற்ற ஒரு சபையாகும்.இதனால் அச்சபையில் பலர் தம்மை பிரபல்யப்படுத்திக் கொள்ள விரும்பினர். இது சபையின் ஒருமைப்பாட்டிற்கு இடையூறாக அமைந்தது. இதனால் அன்பிலிருந்து விலகிச் செல்லும் எந்தவொரு கொடைக்கும் பெறுமதி இல்லையென பவுல் கூறுகிறார். அன்பின் கொடை நிலையானது. ஏனைய கொடைகள் யாவும் தற்காலிகமானவையாகும் (13:8).
- அன்பு என்றால் என்னவென்பதை பவுல் 'அகபே' எனும் கிரேக்க சொல்லினால் விளக்குகின்றார். 'அகபே' என்பது எந்தவொரு பிரிதி பலனையும் எதிர்பாராது பிறர் நமக்கு தீமை செய்தாலும், அவர்களுக்கு நன்மையைச் செய்கின்ற, நன்மையையே விரும்புகின்ற பண்பாகும்.
- பவுல் மிக வன்மையாக வலயுறுத்திக் கூறுவது அன்பிலிருந்து விலகிய எந்தவொரு கொடைக்கும் பெறுமதி இல்லையென்பதாகும்.
- அன்பில்லாத இடத்தில் இவ்வுலக அல்லது ஆன்மீக ஆற்றல்களினாலும், அதிக அர்ப்பணிப்புகளினாலும் ஒரு பயனும் இல்லை.
- இறைவாக்கு உரைப்பினும், அனைத்தையும் அறிந்திருப்பினும், நிறைநம்பிக்கை கொண்டிருப்பினும், உடைமையை வாரி வழங்கினும், உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும், அவ்விடத்தில் அன்பு இல்லையெனில் அவை யாவும் பயனற்றதாகிவிடும்.
- 'மலைகளை இடம்பெயரச் செய்தல்' ஒருபோதும் செய்யக்கூடியது அல்ல. அப்படியானால் நம்பிக்கை எதையும் செய்ய வல்லதெனவும் கருத்து முன்வைப்பப்படுவதை (மாற்கு 11:23, செக்கரியா 4:6-7) 'உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தலை' நிரூபிக்கும் இந்திய தத்துவ இயல் போன்றே யூத சம்பிரதாயத்திலும் உடலை எரிபலியாக்குதல் என்பது ஒரு உயிர்தியாகமாகவே கருதப்படுகின்றது (2 மக்கபேயர் 7).
- பொறுமை, இரக்கம், பொறாமை கொள்ளாமை, தற்புகழ்ச்சி கொள்ளாமை, இறுமாப்பு அடையாமை, இழிவானதைச் செய்யாமை, தன்னலம் நாடாமை, எரிச்சலுக்கு இடம் கொடாமை, தீங்கு நினையாமை, தீவினையில் மகிழ்வுறாமை மாறாக உண்மையில் அது மகிழும், ஆகிய மனித மதிப்பீடுகள் வழியாக அன்பு பிறர்க்கு நன்மையைத் தவிர முறையற்ற செயல்களைச் செய்யாது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

- நம்பிக்கையையும், எதிர்நோக்கையும் அர்த்தமுள்ளதாக்குவது அன்பாகும். நம்பிக்கைக்கும், எதிர்நோக்கிற்கும் எல்லை, முடிவு, தொடக்கம் ஆகியன இல்லையெனினும், அன்பு நிலையானது மட்டுமல்ல சரியானதில் மகிழ்ச்சியடைந்து பிறரின் பிழையைப் பற்றி மகிழ்ச்சி அடையாது. ஏனைய அனைத்தும் இல்லாமற் போனாலும் அவை முழுமையடையாது இருப்பினும் அன்பு அனைத்தையும் முழுமையடையச் செய்கிறது.
- வேறுபாடுகளை மறந்து பொதுவான சகோதரத்துவத்துடன் பிணைக்கப்பட்ட வாழ்வில் பங்குபற்றுவதற்கு பவுல் எல்லாரையும் அழைக்கின்றார்.

## குடும்ப வாழ்வில் நல்லுறவு (எபேசியர் 5:22-6:4)

- கிறிஸ்தவ குடும்பம் திருச்சபையின் உயிர்நாடி. கிறிஸ்தவ குடும்பங்கள் பல ஒன்று சேர்ந்து கட்டியெழுப்பிய விசேட குடும்பமே திருச்சபையாகும். இதனால் குடும்ப வாழ்க்கைக்கும் திருச்சபை வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு.
- திருமணம் என்ற பந்தத்தில் இணையும் இருவரும் உடலால் மட்டுமன்றி உள்ளத்தாலும் ஒருவரை ஒருவர் புரிந்து அர்ப்பணிப்போடு விட்டுக்கொடுத்து வாழ்தல் வேண்டும்.
- இல்லற வாழ்க்கையில் மனைவி கணவருக்குப் பணிந்திருத்தலும் கணவன் மனைவியில் அன்பு செலுத்துவதும் திருமண உறவில் இருவருக்கிடையில் மதிப்பளித்தல் வேண்டும். உடல் ஆன்மீக ரீதியாகவும் ஒருவருக்கொருவர் தம்மை அர்ப்பணிக்க வேண்டும், தியாகம் செய்ய வேண்டும்.
- கணவனின் அன்பு மனைவியைக் கவனிப்பதோடு, அவளுடைய நல் வாழ்விலும் கவனம் செலுத்தும் அன்பாக அமையவேண்டும். இந்த கணவன் மனைவி அன்பானது பணியினைப் பெறுகின்ற சுயநலமான அன்பல்ல. பணி செய்கின்ற, மற்றவருக்காக உடைந்து நொறுங்கும் அர்ப்பணிப்பான அன்பாக இருத்தல் வேண்டும்.
- கணவன் தனது மனைவிமீது செலுத்தும் அன்பானது எந்தவொரு நாளிலும் மாற்றமடைய முடியாத அன்பாகும்.
- இந்த அன்பினால் கணவன் தனது பெற்றோரை விட்டுவிட்டு தம் மனைவியுடன் ஒன்றித்திருப்பார். அந்த அன்பிற்குள் இவர்கள் இருவரும் ஒருவராகின்றனர். இருவர் ஒரே உடலாகின்றனர்.
- கணவன் தனது மனைவியை தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஊடகமாகவோ மனைவியும் தனது கணவனை தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வழியாக பயன்படுத்தக் கூடாது. அங்கு நிலவவேண்டியது அன்னியொன்னிய உறவை அடிப்படையாகக் கொண்ட பிரமாணிக்கமுள்ள அன்பாகும்.
- ஆகவே கணவனின் உடல் மனைவிக்கும், அவளது உடல் கணவனுக்கும் உரித்தானதாகும்.
- கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் இருக்க வேண்டிய உறவானது மிக உயர்ந்ததும் தூய்மையானதுமாக இருத்தல் வேண்டும்.
- பவுல் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் இருக்க வேண்டிய உறவு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலுள்ள உறவுக்கு சமமானதாகக் கூறுகிறார். இந்த உறவுக்கு அன்பே அடிப்படையானது.
- கணவன் மனைவிக்கு செலுத்த வேண்டிய அன்பு அர்ப்பணமுள்ள அன்பாகும்.
- கிறிஸ்து திருச்சபையை அன்பு செலுத்தியது போன்று கணவன் தன் மவைிக்கு அன்பு செலுத்த வேண்டும். ஒரு போதும் அது தனது தேவையை நிறைவேற்றுகின்ற அன்பாய் இல்லாதிருத்தல் வேண்டும்.
- கிறிஸ்து திருச்சபையின் வழியாக ஏதாவதொன்று கிடைக்குமென்ற எதிர்பார்ப்பில் அதனை அன்பு செய்யவில்லை.

- கணவன் தன்னைப் போன்றே மனைவிக்கும் அன்பு செலுத்த வேண்டும். மனைவியும் கணவனுக்கு எல்லா விதத்திலும் மதிப்பளிக்க வேண்டும். கிறிஸ்து திருச்சபையின் தலையாயிருப்பது போல கணவனும் மனைவியின் தலையாவார். அது அதிகாரத்தைக் காட்டும் தலைமைத்துவமல்ல. அன்பு செலுத்தும் தலைமைத்துவமாகும். திருச்சபை கிறிஸ்துவுக்குக் கீழ் உள்ளது போன்று மனைவியும் எல்லாக் வேளைகளிலும் கணவனுக்குப் பணிதல் வேண்டும். இப்பணிதலானது பயத்திற்காக வல்ல அன்பினால் ஏற்படுகின்ற பணிதலாகும்.
- கிறிஸ்து திருச்சபைக்குக் காட்டிய அன்பின் காரணமாக திருச்சபையைத் தூய்மையாக்கியது போன்று கணவனும் அன்பினைக் காரணமாகக் கொண்டு தனது மனைவியின் தூய்மையைப் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.
- எந்தவொரு மனிதனும் தனது உடலை நேசிக்கிறான். அதற்கு ஊட்டமளிக்கின்றான், அதனைப் பாதுகாக்கின்றான். கணவனும் தனது மனைவியை உடலைப்போன்று அன்பு செலுத்த வேண்டும். ஏனெனில் திருச்சபை கிறிஸ்துவின் உடலாகும். கிறிஸ்து திருச்சபையையும் இவ்வாறே அன்பு செய்கின்றார்.
- திருமணத்தின் இரண்டாவது முக்கிய நோக்கம் குழந்தைகளைப் பெற்றெடுத்தலும் வளர்த்தெடுப்பதுமாகும்.
- பிள்ளைகளின் நன்மையைக் கருதி, காலத்துக்குப் பொருந்தும் இவ்வுலக மற்றும் ஆன்மீக நிலையையும் சமூக நன்மையையும், திருச்சபையின் நன்மையையும் கருதி அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.
- பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுத்து வளர்த்தெடுப்பது பெற்றோருடைய கடமையென்பது பழைய ஏற்பாட்டின் படிப்பினையாகும் (இணைச்சட்டம் 6:6-7, நீதிமொழிகள் 22:6).
- ஆகவே பிள்ளைகளை வளர்ப்பதில் தந்தையினது கடமையும் தாயின் கவனிப்பும் முக்கியமாகும்.
- யூதேய பண்பாட்டை போன்றே கிரேக்க உரோமைய பண்பாட்டிலும் பெற்றோருக்கு மதிப்பளிக்க வேண்டுமென்பது மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
- பெற்றோருக்கு மதிப்பளித்தல் இறைகட்டளையாகும். (விடுதலைப்பயணம் 20:12, இணைச்சட்டம் 5:16).
- பெற்றோருக்கு சரியான முறையில் கொடுக்க வேண்டிய மதிப்பையும், கவனிப்பையும், அன்பையும் செலுத்தினால் மட்டுமே ஒருவருக்கு நீடிய ஆயுள் கிடைக்குமென பத்துக் கட்டளைகளும் எடுத்துக்காட்டுகின்றன.
- பிள்ளைகள், பெற்றோருக்கு மதிப்பைப் பெற்றுக் கொடுக்கும் வண்ணம் வாழ்வதற்கு வழியமைத்துக் கொள்ள வேண்டும் (இணைச்சட்டம் 21: 18-21).
- பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் போது மனிதத் தன்மையற்ற முறையில் தண்டனை கொடுத்தல் கடந்த காலத்திலும் இடம் பெற்றுள்ளது. எனினும் பவுல் இந்நிலைமையை விரும்பியதாகத் தெரியவில்லை. அவர் கூறுவதற்கேற்ப பிள்ளைகளை வளர்க்கும்போது அவர்கள் மீது கோபம் காட்டாது, ஒழுக்கம் மற்றும் அறிவுரை கூறி வளர்க்க வேண்டும்.
- மேலும் பெற்றோர் பிள்ளைகளிடையேநிலவ வேண்டிய உறவு, பொறுமை, புரிந்துணர்வு பற்றியும் தெளிவுபடுத்துகின்றார்.
- பிள்ளைகளும் மறுபக்கம் பெற்றோருக்கு எல்லாச் செயல்களிலும் கீழ்ப்படிய வேண்டியது இறைவன் பாலுள்ள அன்பிலும் மற்றும் தனது கடமை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## கிறிஸ்துவின் தாழ்ச்சியும் மகிமையும் (பிலிப்பியர் 2:5-11)

தூய பவுல் பிலிப்பிய சபைக்கு இயேசுவின் தாழ்ச்சியை இரு வழிகளில் விளக்குகிறார்.

1. கிறிஸ்து கடவுள் வடிவில் இருப்பினும் இறைவனுக் இணையாயிருக்கும் நிலையை தியாகம் செய்து அடிமையின் வடிவம் எடுத்து எமக்கு ஒப்பான மனித உருவில் தோன்றினார்.
2. மனித உருவில் இருக்கும் அவர் சிலுவைச் சாவு வரை கீழ்ப்படிந்து தனது தாழ்ச்சியை வெளிக்கொணர்ந்தார்.

- கிறிஸ்துவே ஆண்டவராவார். கடவுளின் வடிவம் அவரிடமுள்ளது.
- தூய பவுல் 'இணையாயிருக்கும்' என்ற வார்த்தை பயன்படுத்துவது 'ஈர்ஷா' எனும் கிரேக்க சொல்லாகும். எந்தச் சூழலிலும் மாற்றமுறாதது என்பது இதன் அர்த்தமாகும்.
- அவ்வாறெனில் கிறிஸ்து மாற்றமுடியாத இறைதன்மையைக் கொண்டவராவார். தனக்கு உரிமையான இறைதன்மையை தனது விருப்பத்தோடு தியாகம் செய்து எமக்கு ஒப்பான மனிதனாக அந்நிலையிலேயே வந்து அடிமையின் வடிவை எடுத்து கீழ்ப்படிந்தார்.
- அடிமை என முன்வைப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள கிரேக்க சொல் 'டுளோஸ்' என்பதாகும். அடிமைகள் தொடர்பாக உரோமையச் சட்டம் ஒரேமாதிரியானதல்ல. அடிமைகள் எசமானின் விருப்பத்திற்கேற்ப நடத்தப்படுவர்.
- அடிமைகள் நேர்மையற்ற சொத்தாகக் கருதப்பட்டமையால் குடிமக்களுக்குரிய எந்தவொரு உரிமையும் அவர்களுக்கு இருக்கவில்லை.
- கீழ்ப்படிவு மிகவும் உயர்ந்த பண்பாகும்.
- கிறிஸ்துவின் முன்மாதிரிகையினாலேயே கிறிஸ்தவனுக்கு கீழ்ப்படிவின் மிக உயர்ந்த தன்மை கிடைக்கின்றது. மானிட உரு எடுத்த இறைமகன் கீழ்ப்படிதலின் பிரதிவிம்பம் ஆவார்.
- அவர் இறைதந்தைக்கு கீழ்ப்படிவது அதன் உச்சமட்டத்திலிருந்தே ஆகும். இறைவனின் திட்டத்திற்கு தலைசாய்க்கும் அவர் மரணத்திற்கு மட்டுமல்ல நிந்தனைக்குரிய மரணமாகக் கருதப்பட்ட சிலுவை மரணம் வரை பணிந்து கீழ்ப்படிந்துள்ளார்.
- கிறிஸ்துவின் தாழ்மையினாலேயே வெறுமையாக்கலினுள் எந்தவொரு மனிதனுக்கும் கிடைக்காத தெய்வீகத் தன்மை அவருக்குக் கிடைத்தது. இறைவன் அவருடைய உடலை அழிவுக்குட்படுத்தாமல் உயிர்தெழச் செய்தார்.
- அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அளித்தார்.
- புதிய பெயரை வைத்தல் ஒருவரின் வாழ்வில் புதியதொரு ஆரம்பமாகும்.
- கிறிஸ்துவின் தாழ்ச்சி காரணமாகவே வெறுமையாக்கலின் மூலமாக எந்த ஒரு மனிதனுக்கும் கிடைக்காத பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.
- அவருக்கு அளித்த புதுப்பெயர் 'இயேசுவே ஆண்டவர்' என்பதாகும்.
- செப்துவாஜிந்து கிரேக்க பிரதியில் இறைவனை யாவே என இடப்பட்டிருந்த எபிரேய பெயர் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது இயேசு கிறிஸ்து ஆண்டவர் எனும் அதிகார பூர்வ பெயரினாலேயாகும்.
- முதல் கிறிஸ்தவர்களால் இயேசுவுக்கு இப்பெயர் பயன்படுத்தப்பட்டது (மாற்கு 1:3, திருத்தூதர்பணி 2:36, 1கொரிந்தியர் 12:3)
- அதுமட்டுமல்ல அனைவரும் இந்த உன்னதமான பெயரின் முன்னே மண்டியிடுவர் (எசாயா 45:23). மற்றும் இறைவனுக்கு கொடுக்க வேண்டிய ஆராதனையையும் மற்றும் புகழ்ச்சியையும் செலுத்த வேண்டுமென விளக்கப்பட்டுள்ளது. இயேசுவுக்கும் அதே போன்ற ஆராதனையையும் புகழ்ச்சியும் செலுத்த வேண்டுமென இங்கு குறிப்பிடப்படுகிறது.

- இந்த உயர்ந்த பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் சகலரும் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்று இறைவனின் மகிமைக்காக எல்லா நாவுமே அறிக்கையிட வேண்டும்.
- கிறிஸ்துவின் வாழ்கையில் அவர் மனிதர் மீது அதிகாரத்தை செலுத்துவதைவிட அவர்களுக்கு பணி செய்வதற்கு விரும்பினார். அவர் வாழ்ந்தது தனது விருப்பத்திற்காக அல்ல. இறைதந்தையின் விருப்பத்திற்கேற்பவாகும்.
- தன்னை உயர்த்துவதற்குப் பதிலாக மக்களுக்காக தன்னை தாழ்த்திக்கொண்டு தனக்குரிய உரிமையை கைவிட்டார்.
- கிறிஸ்துவின் இந்த உன்னதமான பண்பான தாழ்மை மற்றும் கீழ்ப்படிவு பிலிப்பியில் கிறிஸ்தவர்களை பின்பற்றும்படி தூய பவுல் அழைக்கிறார். கீழ்ப்படிதல் சமூகத்தில் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதது. தாழ்மை அதைவிட முதன்மையான பண்பாகின்றது.

**உசாத்துணை**


1. திருவிவிலியம்
2. கு.எரேனிமுஸ் திருவிவிலிய விளக்கம், மாற்கு அருள்வாக்கு மன்றம், தமிழ் இறையியியல் நூலோர் குழு - மதுரை 2006
3. தியாகு, திருவிவிலியத்தில் நான்கு வடிவ நற்செய்தி, லோயலா கல்லூரி சென்னை - 1990
4. நற்செய்தி வழிகாட்டி, புனித பேதுரு குருத்துவக்கல்லூர், தமிழ் கழகம், பெங்களுர் - 1999
5. அ.பீற்றர் அபீர், நற்செய்தி அறிமுகம், புனித பவுல் நிலையம், சென்னை - 1997
6. பிலிப்ஸ் இ.யோசுதாசன், பரிசுத்த ஏடுகளைக் கற்றல், அ.ம.தி குருமடம். அம்பிட்டிய